

# இரும்பு முள்வேலி

பேரறிஞர்
அண்ணா

XA : 2 - 11

# இரும்பு முள்வேலி

பேரறிஞர்
டாக்டர் சி. என். அண்ணாதுரை,
எம்.ஏ.,

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1
சென்னை-1

பூம்புகார் பிரசுரம் பிரஸ்
63, பிராட்வே,
சென்னை - 600 001.

விலை ரூ.: 5-90

37818

பூம்புகார் வெளியீடு எண்: 162
முதற் பதிப்பு: அக்டோபர், 1980
உரிமை: திருமதி ராணிஅண்ணாதுரை

அச்சிட்டவர்கள்: பூம்புகார் பப்ளிகேஷன்ஸ் பிரஸ், சென்னை-600001.

# பதிப்புரை

“பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்” என்று கட்டளையிட்டான் மகாகவி பாரதி.

சாத்திரமல்ல, மேனாட்டுச் சரித்திரத்தையே தமிழுக்குக் கொண்டு வந்து காட்டிய பேரறிவாளர் டாக்டர் அண்ணா அவர்களாவார்.

எல்லா நாட்டுச் சரித்திரங்களையும், அதனைத் தழுவிய சுவையான—உருக்கமான சம்பவங்களையும் தமிழ் மக்கள் அறிய வேண்டுமென்ற ஆவலின் காரணமாக பேரறிஞர் அண்ணா அவர்கள் தீட்டிய ஓவியங்கள் கொஞ்சமல்ல.

மேனாட்டு வரலாற்றைக் கதை வடிவில் சொல்வதென்பது சாதாரண விஷயமல்ல; அது ஒரு கலை. அந்தக் கலையில் வல்ல டாக்டர் அண்ணா அவர்கள் படைத்தவற்றில், ‘இரும்பு முள்வேலி’ என்னும் தலைப்பிலுள்ள அழகோவியம் தனிச் சிறப்பு மிக்கதாகும்.

இனம் கடந்த, மொழி கடந்த, மதம் கடந்த, ஏன், எல்லாமே கடந்த ஒன்று உலகில் இருக்கிறதென்றால் அது காதலாகத்தான் இருக்க முடியும். வேறு எதற்குமே அந்தச் சக்தி கிடையாது.

அப்படிப்பட்ட ஒரு புனிதமானதொரு ஈர்ப்புச் சக்தி உலகில் படும் உயிர்வதையை, இரு வேறு இனத்தைச் சார்ந்த ஆண்—பெண் இடையே கல்லும் கரையும் வண்ணம் சுவையான கதையாக்கிக் காண்பித்துள்ளார். அதுபோலவேதான் மற்ற இருவேறு கதைகளும்!

அத்தகு சிறப்பும் உயிர்த் துடிப்பும் மிக்க பேரறிஞர் அண்ணா அவர்களின் கதைகளை நாங்கள் வெளியிட்டுக் கொள்ளும் உரிமையைப் பூரணமாக வழங்கி இருக்கும் திருமதி ராணி அண்ணாதுரை அவர்கட்கு எங்களின் இதய பூர்வமான நன்றி.

—**பூம்புகார் பிரசுரத்தார்.**

# 1
# இரும்பு முள்வேலி

தமக்கு உரிய இடத்தில் பிறர் நுழையாது தடுத்திட முள்வேலி போடுகிறார்கள். இடத்துக்குப் போடப்பட்ட முள் வேலியைப் பற்றிய கதை அல்ல இது; இதயத்துக்குப் போடப் பட்டுவிடும் முள்வேலி பற்றியது. கருத்துக்களின் தோற்றம், மாற்றம், வகை, வடிவம், விளைவு, அவை ஏற்படுவதற் கான சூழ்நிலை ஆகியவை பற்றிய விளக்கமளிக்கும் இலக்கியம. 'மனிதத் தன்மை'யின் புனிதத்தை விளக்கிடும் தூய்மை மிக்க கருத்தோவியம்.

கருமேகங்கள் திரண்டுள்ள காட்சியைத் தீட்டிட திறமை மிக்க எந்த ஓவியனாலும் முடியும்.

பால் நிலவு அழகொளி தந்திடும் காட்சியினைத் தீட்டிட வும், கைத்திறன் மிக்க ஒரு ஓவியனால் முடியும்.

ஆனால் கருமேகங்கள் திரண்டிருப்பதால் காரிருள் கப் பிக் கொண்டிருக்கும் காட்சியுடன் ஓர் புத்தொளி மெள்ள மெள்ளக் கிளம்புகிறது என்பதனையும் இணைத்தளித்திட கைத்திறன் மட்டும் போதாது. கருத்துத் திறனும் இருந் திட வேண்டும், ஓவியனுக்கு.

கெட்டவனைக் காட்டிடுவது எளிதான காரியம், ஓரளவு திறமை பெற்ற எழுத்தாளனுக்கு.

நல்லவனைக் காட்டிடும் எழுத்தோவியம் தந்திடுவதும் எளிதுதான் தரமான எழுத்தாளனுக்கு.

ஆனால் 'கெட்டவன்' நல்லதும் எண்ணுகிறான்; செய்கிறான் என்று காட்டிடவும், நல்லவனிடம் புற்றுக்குள் அரவுபோல கெடு நினைப்போ செயலோ இருந்திடுவதைக் காட்டிடவும், எழுத்தாளனாக மட்டும் இருந்தால் போதாது; எண்ணங்களை ஆள்பவனாகவும் இருந்திட வேண்டும்.

எளிதான காரியம் அல்ல என்பதுடன், ஒரு துளி தவறினால், அத்தகைய முயற்சி, ஆபத்தையேகூட மூட்டிவிடக் கூடும், படிப்போரின் உள்ளத்தில்.

இந்தச் சூழ்நிலையில், இவன் இப்படித்தான் எண்ணியிருப்பான்—இவ்விதம்தான் செய்திருப்பான் என்று 'யூகித்து' எழுதுவதிலேயே தவறுகள் நேரிட்டு விடுகின்றன.

சூழ்நிலை காரணமாக ஏற்பட்டுவிடும் எண்ணத்திலிருந்தும் தன்னை விடுவித்துக் கொண்டு, முற்றிலும் வேறான, ஆனால் தூய்மையான எண்ணத்தை ஒருவன் கொண்டிருந்தான் என்பதை எடுத்துக் காட்டும் எழுத்தோவியம் தீட்டித் தருவதனை எல்லா எழுத்தாளர்களும் மேற்கொள்வதில்லை, ஆபத்தான முயற்சி என்ற காரணத்தால்.

ஆனால் சிற்சிலர், தனித் திறமை பெற்றோர், இத்தகைய எழுத்தோவியம் தருகின்றனர். இறவாப் புகழுக்கு உரியராகின்றனர்.

பகைவனிடம் கோபமும் கொதிப்பும், வெறுப்பும் எழுவதும், வஞ்சம் தீர்த்தாக வேண்டும் என்ற எண்ணம் வெறி அளவு ஓங்குவதும் இயல்பு.

ஆனால் பகைவனிடமும் பரிவு எழுகிறது—எழ முடியும் என்று எடுத்துக்காட்ட மிகச் சிலருக்கு மட்டுமே முடியும்—அது பொது இயல்புக்கு மாறானது; உலகில் ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டுள்ள முறைக்கு முரணானது. எனவேதான் அதனை கூறுவதற்குத் தனியானதோர் திறமை தேவைப்படுகிறது.

நம் நாட்டினை வேறோர் நாட்டினர் தாக்கிடும்போது—போர் மூண்டிடும்போது, நாட்டுப் பற்று உணர்ச்சிதான், மற்ற எந்த உணர்ச்சியையும்விட, மேலோங்கி நிற்கிறது.

நம் நாடு தாக்கப்படுகிறது! நமது தன்மானம் தாக்கப் படுகிறது!! என்ற எண்ணம் உள்ளத்தை எரிமலையாக்கு கிறது; வெடித்துக் கொண்டு கிளம்புகிறது கோபம், கொதிப்பு, வெறுப்பு, பழி வாங்கும் எண்ணம், பகைவனை அழித்தொழிக்க வேண்டும் என்ற துடிப்பு.

போர் மூண்டிடாதபோது எவையெவை 'வெறி' என்று கருதப்படுமோ அவை யாவும், தேவைப்படுவனவாக, வர வேற்கப்படுவனவாக, போற்றப்படுவனவாக ஆகிவிடுகின் றன.

''இப்படியா இரக்கமின்றி அடிப்பது. அவனும், பாவம் மனிதன்தானே'' என்று மனம் உருகிப் பேசிடும் நல்லோர் கூட, மெல்லியலார்கூட, ''சுட்டுத் தள்ளவேண்டும்! வெட்டி வீழ்த்த வேண்டும்! பூண்டோடு அழிக்கவேண்டும்!'' என்று பேசுகின்றனர்—போர் மூட்டிவிடும் வெறி உணர்ச்சி காரண மாக! அந்த உணர்ச்சியை வெறி என்றுகூடக் கூறிடத் துணிந் திடார்! கவிதைகள் இயற்றப்படுகின்றன, அந்த''எழுச்சி' பற்றி.

நாடு வாழ்ந்திட எதனையும் செய்திடுவேன்!—என்ற பேச்சுக்குப் பெரியதோர் மதிப்புக் கிடைக்கிறது. எதனையும் செய்திடுவேன்! படுகொலைகள்கூட! பச்சிளங் குழந்தை களைக் கொன்றிடும் பாதகம்கூட! போர்க் கோலத்தில், ''கொல்லு! இல்லையேல் கொல்லப்படுவாய்!'' என்பதுதான் ஒப்புக் கொள்ளப்பட்ட இலக்கணம்—போரிடும் இரு நாடு களிலும்!

ஒருநாடு மற்ற நாட்டின் மீதே எல்லாப் பழிகளையும், எல்லா கெடு நினைப்பினையும் ஏற்றி வைக்கும்; காட்டு மிராண்டிகள்! கொலை பாதகர்கள்! வெறியர்கள்! மனித மாண்பு அறியாதவர்கள்!—என்று கண்டனக் கணைகள் கிளம்பிடும், இருபுறமுமிருந்து.

போர் ஓய்ந்து, ஓர் புது உறவு ஏற்பட்ட பிறகுதான், உண்மை வெளியே தலைகாட்டும், தைரியமாக! போர் துவங்கியதும். உண்மை ஓடி ஒளிந்து கொள்கிறது.

வெறி பிடித்தலையும் சிலரால் மூண்டது இந்தப் போர் என்று, போர் ஓய்ந்த பிறகுதான் பேசப்படும்—போர் நடக்கும்போது அந்த நாட்டு மக்கள் அனைவரையுமே வெறியர்கள், காட்டுமிராண்டிகள், இரத்தம், குடிப்பவர், பிணம் தின்பவர், கற்பழிப்பவர், கயவர் என்றுதான் பேசுவர்—ஒருவர் தவறாமல்.

யாரேனும் ஒருவர் இவ்விதம் பொதுப்படையாக ஒரு நாட்டு மக்கள் எல்லோரையும் மொத்தமாகக் கண்டிப்பது முறை அல்ல என்று கூறிடின், அவனுடைய நாட்டுப் பற்று பற்றிய பலமான ஐயப்பாடு எழும்; அருவருப்பு கிளம்பும்; அவன் ‘தேசத்துரோகி’ ஆக்கப்பட்டுவிடுவான்.

தேசத்துரோகி—நாட்டைக் காட்டிக் கொடுப்பவன்—எதிரிக்கு உளவாளி—எதிரியைவிடக் கொடியவன்—இழி மகன்—என்றெல்லாம் அவன் கண்டிக்கப்படுவான்; தனது நிலைமையை விளக்கிட அவன் முனைந்தாலோ, மக்களின் ஆத்திரம் மேலும் வளரும்; அவனை வெட்டி வீழ்த்திடக் கிளம்புவர்.

இந்தக் கரத்தால்—இந்த வாள் கொண்டு—பகைவர் இருபதின்மரைக் கொன்றேன்.

துரத்தினேன்! அவன் ஏற்கனவே அடிபட்டவன். ஆகவே வேகமாக ஓடிட முடியவில்லை. களத்திலே இருள் கப்பிக் கொண்டிருந்தது. படை கிளப்பிய தூசியால்!எதிரில் யானை விரண்டோடி வருவது அவன் கண்களில் படவில்லை—சிக்கிக் கொண்டான; காலின்கீழ் போட்டு..ஆ! என்றான் ஒருமுறை; ...ஒரே ஒரு முறை...பிறகு...கூழ்! கூழாகிப் போனான்!

இப்படிப் பல நிகழ்ச்சிகளைத் தன் வீரத்திற்குச் சான்றுகளாகக் கூறுவான், களம் சென்று திரும்பியவன்; கேட்போர் மகிழ்வர்; அவனை நாட்டைக் காத்த நாயகன் என்று பாராட்டுவர்.

பகை உணர்ச்சி கிளம்பிவிட்டால் அது தடுப்பாரற்று வேகமாக வளரும்; வளர்த்திடுவதும் போரின்போது மேற்கொள்ளப்படும் ஒரு முறையாகிவிடுகின்றது. நாட்டு மக்கள் அனைவரும் அந்தப் பகை உணர்ச்சியைக் கொண்டு விடுகின்றனர்; பொறி ஏதோ ஓர் இடத்தில்தான் விழுகிறது; தீயோ எங்கும் பரவி, எல்லாவற்றையும் பிடித்துக் கொள்கிறது அல்லவா.

இன்முகம் காட்டுதல், நன்மொழி பேசுதல், அன்பு வழங்குதல், அறநெறி கூறுதல், இரக்கம் கொள்ளுதல் ஆகிய பண்புகள் அவ்வளவும் போர்ச் சூழ்நிலையில் அடியோடு மறைந்துபோய், 'தாக்கு! அழி! வெட்டு! குத்து!'—என்ற உணர்ச்சியை அனைவரும் பெற்றுவிடுகின்றனரே; அப்படியானால் அந்தப் பண்புகள்—மனிதத்தன்மை—அடியோடு மடிந்து போகின்றனவா? மடிந்து விடுகின்றன என்றும் கூறுவதற்கில்லை. ஏனெனில் போர் முடிந்து வேறோர் புதிய நிலை ஏற்பட்டதும், மீண்டும் மெள்ள மெள்ள அந்தப் பண்புகள் மலருகின்றன; சமுதாயத்துக்கு மணம் அளிக்கின்றன.

மடிவதில்லை; ஆனால் அந்தப் பண்புகள் மங்கி விடுகின்றன; மறைந்து விடுகின்றன.

பகைவனிடம் மூண்டுவிடும் வெறுப்புணர்ச்சி. அந்தப் பண்புகளை மூலைக்குத் துரத்திவிடுகின்றன! கண் சிமிட்டிக் களிப்பூட்டும் விண்மீன்களைக் கருமேகம் மறைத்து விடுவது போன்ற நிலை!

கப்பிக் கொண்டிருக்கும் காரிருளுக்குப் பின்னே, விண்மீன் உளது என்பதனையும், அதன் ஒளி காரிருளைக்கூடக் கிழித்தெறிந்து கொண்டு வெளிக் கிளம்பக்கூடும் என்பதனையும் எடுத்துக் காட்டுகிறார் ஹால்கெயின் என்னும் பேரறிவாளர் 'இரும்பு முள்வேலி' எனும் தமது நூலில்.

இங்கிலாந்துடன் ஜெர்மனி போரிடும் நாட்கள்; உலகையே தன் காலடி விழச் செய்திடத் துணிந்து கெய்சர், போர் நடாத்திய நாட்கள்; முதலாவது உலகப்போர்.

ஜெர்மனியில், கெய்சர் போர் வெறி மூட்டுகிறார் என்று துவங்கிய பேச்சு, ஜெர்மானியர் போர் வெறியர்கள் என்ற கட்டத்தை அடைந்து விட்டது. ஒருநாட்டு மக்களுடைய நாட்டுப் பற்றையும், 'ராஜபக்தி'யையும் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு, அந்த நாட்டு அதிபன், அவர்களைப் பலிக்கிடாக்களாக்கி, இரத்த வெள்ளம் புரண்டோடச் செய்தான்.

கெய்சர் மீதுதான் முதலில் கண்டனம், வெறுப்பு, கொதிப்பு! பிறகு ஜெர்மன் மக்கள்மீதே அந்த வெறுப் புணர்ச்சி பாய்ந்தது.

குழந்தைகளை வெட்டித் தின்கிறார்கள் ஜெர்மன் வெறியர்கள் என்று இங்கிலாந்து நாட்டு முதியவர்கள்-குறிப்பாகத் தாய்மார்கள் பேசினர்!

ஜெர்மன் மொழி, ஜெர்மன் தொழில் திறமை, ஜெர்மன் கலை என்ற எல்லாவற்றின்மீதும் அந்த வெறுப்புணர்ச்சி பாய்ந்தது.

போர் மூளுவதற்கு முன்பு இங்கிலாந்து நாட்டில் பல் வேறு துறைகளில் வேலை பார்த்து வந்த ஜெர்மானியர்கள் விரட்டப்பட்டனர் அல்லது சிறை வைக்கப்பட்டனர்.

ஜெர்மனியுடன் எந்த விதமான தொடர்பும் கூடாது என்பது தேசியக் கட்டளையாகிவிட்டது. எல்லாத் தொடர்புகளும் அறுத்தெறியப்பட்டன.

இங்கிலாந்து நாட்டு அரச குடும்பம் ஜெர்மன் கெய்சர் குடும்பத்துக்கு நெருங்கிய உறவு. அதனை வெளியே சொல்லக் கூடக் கூசினர். பகை உணர்ச்சி அந்த அளவு கப்பிக் கொண்டிருந்தது. அந்தச் சூழ்நிலையில் நடைபெறும் நெஞ்சை உருக்கும் நிகழ்ச்சிகளைக் கொண்டது. 'இரும்பு முள்வேலி'. போர் கிளப்பிவிடும் பகை உணர்ச்சிக்கும் இதயத்தின் அடியிலே மறைந்திருக்கும் அன்பு உணர்ச்சிக்கும் இடையே நடைபெறும் போர் பற்றிய கதை.

மான் தீவு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலே ஒரு பகுதி. அங்கு ஒரு விவசாயக் குடும்பம். மிராசுதாரனிடம் ஒரு பண்ணையைக் குத்தகைக்கு எடுத்துப் பாடுபட்டு வாழ்க்கையை நடத்திச்செல்லும் ஒரு குடும்பமும்,முதியவர்—அவர் மகன்——அவர் மகள்—கொண்ட குடும்பமும்.

ஜெர்மனியை அழித்தொழித்தாலொழிய, இங்கிலாந்து மட்டுமல்ல, மனித குலமே அழிந்து போகும் என்ற உணர்ச்சி எங்கும் பரவி இருந்ததுபோலவே,அந்த சின்னஞ்சிறு தீவிலும் பரவி இருந்தது.

முதியவரின் மகன், பிரிட்டிஷ் படையில் சேர்ந்தான்; முதியவர் மகிழ்ந்தார்.

'என் அண்ணன் போர்வீரன்! பொல்லாத ஜெர்மானியரை அழிக்கும் புனிதப் போரிலே ஈடுபட்டிருக்கிறான்' என்ற எண்ணம் கொண்ட அந்த எழில் மங்கை, தன் குடும்பத்துக்கே அண்ணன் பெருமை தேடிக் கொடுக்கிறான் என்ற பெருமித உணர்ச்சியில் திளைத்திருக்கிறாள்.

எங்கும் பரவி, எல்லோர் உள்ளத்திலும் பொங்கி வழிந்து கொண்டிருந்தது போலவே மோனா மனதிலும் ஜெர்மானியர் மீது வெறுப்புணர்ச்சி ததும்பிக் கிடந்தது. 'ஒரு துளியும் ஈவு இரக்கம் காட்டக் கூடாது. கொன்று குவிக்க வேண்டும் அந்தக் கொடியவர்களை; பூண்டோடு ஒழிக்க வேண்டும்' என்று கருதினாள்.

ஜெர்மானியர்களின் காட்டுமிராண்டித்தனம், கொலை பாதகத் தன்மை பற்றிய தகவல் நிரம்பக் கிளம்பியபடி இருந்தன. ஒன்றுக்குப் பத்தாக இவை வளர்ந்தன! வெறுப்புணர்ச்சி மூண்டுவிட்டிருந்தது. முதியவர்கூட அவ்வளவு கொதித்துப் பேசுவதில்லை. அவருடைய மனதிலே சிறிதளவு பழைய பண்புகள் உலவிட இடம் இருந்தது. அந்த மங்கைக்கோ உள்ளம் முழுவதும் அந்த ஒரே ஒரு உணர்ச்சிதான்; ஜெர்மானியர் மீது வெறுப்பு; அளவு கடந்த அகற்றப்பட முடியாத வெறுப்பு. அதிலும் போர்க்களம் சென்றுள்ள தன் அண்ணனைப் பற்றிய எண்ணம், அந்த வெறுப்புணர்ச்சியை வெந்தழல் ஆக்கிவிட்டிருந்தது.

ஜெர்மனி வெற்றிகளை ஈட்டிக் கொண்டு, ஆணவத்தைக் கக்கிக் கொண்டிருந்த கட்டம் முடிந்து தற்காத்துக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது; பல இடங்களிலே தோல்வி கண்டு திணறிச் கொண்டிருந்தது; ஜெர்மானியர் பலர் கைதாயினர்.

அந்தக் கைதிகளை, இந்தத் தீவிலே கொண்டு வந்து சிறை வைக்க ஏற்பாடாகிறது.

காட்டு மிராண்டிகள், வருகிறார்கள்; இங்கு நாம் இருக்கக்கூடாது என்று எண்ணி அந்தத் தீவிலிருந்து பல குடும்பங்கள் வெளியேறிவிட்டன. சில குடும்பத்தினர் தீவிலே தங்கினர்; என்றாலும் பெண்களை மட்டும் வேறு இடத்துக்கு அனுப்பிவிட்டனர்.

''இங்கு ஏன் அந்த இழிமக்களைக்கொண்டு வருகின்றனர்? கேவலம் இது, மிகக் கேவலம். அந்தக் கொடியவர்களின் நிழல் பட்டாலே இழிவாயிற்றே!அவர்களுக்கா நமது தீவிலே இடம்? அந்த வெறியர்கள் இங்கு இருக்கப் போகிறார்கள் என்றால், அதே இடத்தில் நாம் இருப்பதா? கேவலம்! மிகக் கேவலம் அது. அப்பா! நாம் இந்தத் தீவைவிட்டு வேறிடம் போய்விடலாம். அந்தக் கொடியவர்களைக் காண்பது கூடப் பெரும் பாவம்! இங்கு இருக்கலாகாது'' என்று பெண் வற்புறுத்துகிறாள். அவள்உள்ளத்தில் வெறுப்புணர்ச்சிஅவ்வளவு கப்பிக் கொண்டிருக்கிறது. முதியவர் புன்னகை செய்கிறார், அடே அப்பா! எவ்வளவு கொதிப்புடன் பேசுகிறாள் மகள் என்பதை எண்ணி.

''மகளே! மற்றவர்கள் தீவை விட்டுச் சென்றுவிட்டாலும், நாம் செல்வதற்கு இல்லை. மிராசுதாரர், நாம் இங்கேயே இருந்தாக வேண்டும்; கவனிப்பு இல்லாவிட்டால் பண்ணை பாழாகிவிடும் என்கிறார்; மேலும் இங்கு சிறை வைக்கப்பட இருப்பவர்களுக்கு, நாம்தான் பால் தரவேண்டி இருக்கிறது; வேறு வழியில்லை...''என்கிறார்.

''பால் தருவதா! அந்தப் பாவிகளுக்கா! எந்தப் பாதகர்களை ஒழித்திடும் புனிதப் போரிலே அண்ணன் ஈடுபட்டிருக்கிறாரோ, அந்தப் பாதகர்களுக்கு நாம் பால் தருவதா? அக்ரமம்! அநியாயம்! இழிசெயல்! நான் ஒருபோதும் சம்மதிக்க மாட்டேன். அந்தப் பாவிகளை வெட்டி வெட்டிப் போட வேண்டும், கழுகுக்கும் நரிகளுக்கும்; அவர்களுக்கு நமது தீவிலே இடம்! நமது பண்ணையிலிருந்து பால்! இது என்ன அநியாயமப்பா!''—என்றெல்லாம் அவள் எண்ணிக் கொதிப்படைகிறாள். முதியவர் புன்னகை புரிகிறார்.

''அதனால் என்னம்மா! அவர்களும் மனிதர்கள்தானே! ஜெர்மானியர்களாகப் பிறந்ததனாலேயே அவர்கள் மனித குலம் அல்ல என்று கூறிவிட முடியுமா!போர் மூண்டுவிட்டது, நம் நாட்டுக்கும் ஜெர்மனிக்கும். ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்கிறோம். அதனால் ஜெர்மானியர் மனிதர்களே அல்ல என்று கூறிவிட முடியுமா!''—என்று கனிவாகப் பேசுகிறார் முதியவர்; கன்னி கடுங்கோபம் கொள்கிறாள்.

போரின்போது, இரு தரப்பினருந்தான் அழிவு வேலையில் ஈடுபடுகின்றனர். எந்தச் சமயத்தில், எந்த இடத்தில் எவருடைய கரம் ஓங்கி இருக்கிறதோ அவர்கள் அதிக அளவுக்கு வெட்டி வீழ்த்துவார்கள்! இரு தரப்பினரும் ஒரே விதமான வேலையில்—கொல்லும் வேலையில் ஈடுபட்டுள்ளனர். இதிலே ஒரு தரப்பினர் மட்டுமே காட்டு மிராண்டிகள்—கொலைபாதகர்கள்—இரத்த வெறி பிடித்தலைவோர்—என்று கூறிவிட முடியுமா? போர், காட்டுமிராண்டித்தனத்தைக் கட்டவிழ்த்துவிட்டு விடுகிறது. ஒரு தரப்பினர் குண்டுகளால் தாக்குகின்றனர்; மற்றோர் தரப்பினர் மலர்கொண்டு அர்ச்சிக்கின்றனர் என்பதா போர்! கொலை நடக்கிறது, பெரிய அளவில்—சட்டத்தின் அனுமதியுடன்—சமூகத்தின் ஒப்புதலுடன்! இதிலே அதிகமான அளவு அழிவைச் செய்பவன் வெற்றி வீரனாகிறான். அவனுடைய கரம் இரத்தக் கறை படிந்தது. ஆனால் அது நாட்டைக் காத்த கரம்—வெற்றி ஈட்டிய கரம்—புகழ் தேடித் தந்த கரம் என்பதால் பாராட்டப்படுகிறது.

முதியவர் இதுபோன்ற கருத்தினைக் கொண்டவராக இருந்திருக்க வேண்டும்; அவருடைய உள்ளம் ஒரேயடியாக வெறுப்பு நிரம்பியதாக இல்லை; நியாய உணர்ச்சியும் சிறி தளவு உலவிட இருந்தது.

''இப்படி ஒரு மனமா! ஜெர்மானியர் வந்து தங்கினால் என்ன!! அவர்களுக்குப் பருகிடப் பால் தந்தால் என்ன என்று பேசுவதா? நமது நாட்டு மக்களின் இரத்தத்தைக் குடிக்கக் கிளம்பியுள்ள கொடியவர்கள் இந்த ஜெர்மானியர். இவர் களுக்குப் பருகப் பால்! நாம் கொடுப்பதாம்! என்ன நியாயம் இது! அப்பா ஏன் இப்படிக் கெட்டுக் கிடக்கிறார் - பால் தருவ தாமே பகைவர்களுக்கு!! கொடுத்தால் என்னம்மா என்று வாதாடுகிறார்! அவர்களும் மனிதர்தான் என்று நியாயம் பேசுகிறார்! அவர்கள் மனிதர்களா!! பதைக்கப் பதைக்கக் கொன்றார்கள் நம்மவர்களை! பச்சிளங் குழந்தைகளைக் கூடக் கொன்றனர் அக் கொடியவர்கள்! அவர்களும் மனிதர் கள்தான் என்கிறார் அப்பா! ஏன் இவருக்கு இப்படிப் புத்தி கெட்டுப் போய்விட்டது. அங்கே அண்ணன் துரத்துகிறான் ஜெர்மன் கொடியவர்களை—இங்கே அப்பா பால் தரச் சொல்கிறார். அண்ணன் என்ன எண்ணிக்கொள்வார், இதனை அறிந்திடின்? செச்சே! அப்பா சுத்த மோசம்!''

ஜெர்மன் கைதிகளை அடைத்து வைக்க, சிறைக்கூடம் கட்டப்படுகிறது. கைதிகள் தப்பித்துக் கொள்ளக்கூடாது என்பதற்காக, அங்கு இரும்பு முள்வேலி போடப்படுகிறது. மிருகங்களை அடைத்து வைப்பது போல ஜெர்மன் கைதி களை அடைத்து வைக்கிறார்கள். வெளியே பிரிட்டிஷ் போர் வீரர்கள் காவல் புரிகின்றனர், தப்பியோட முயற்சித்தால் சுட்டுத்தள்ள.

கைதிகளான எல்லா ஜெர்மானியருமே, போர் வீரர் கள் அல்ல; பலர் தொழிலில், வாணிபத்தில், பல்வேறு அலு வலகங்களில் ஈடுபட்டிருந்தவர்கள்; சிலர் செல்வம் படைத் தவர்கள்கூட!

எல்லாம் ஜெர்மானியர்தானே! வெறியர்கள்—கொடியவர்கள்தானே! இவர்களை இப்படித்தான் அடைத்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் மோனாவுக்கு. முதியவருக்கோ ஒரு பச்சாதாப உணர்ச்சி. ஜெர்மானியர்கள் தமக்கு அளிக்கப்படும் உணவு மோசமாக இருப்பதாகக் குறைபட்டுக் கொள்கிறார்கள் என்று கூறுகிறார். இதுகளுக்கு அப்படிப் பட்ட உணவுதான் தரவேண்டும் என்கிறாள் மோனா, அவள் இதயத்தில் வெறுப்புணர்ச்சி நிரம்பி இருப்பதால், ''வீட்டை விட்டு, குடும்பத்தைவிட்டு இழுத்துவரப்பட்டிருக்கிறார்கள்; அது போதாதா; மேலும் வாட்ட வேண்டுமா அவர்களை என்று முணுமுணுக்கிறார் முதியவர். கொடியவர்களுக்காகப் பரிவு காட்டுவது மோனாவுக்குத் துளியும் பிடிக்கவில்லை. நம்முடைய மக்கள் களத்திலே பூப்பந்தாட்டமா ஆடிக் கொண்டிருக்கிறார்கள்! விருந்தும் இசையும் நடன விழாவுமா நடக்கிறது அவர்களுக்கு. என்னென்ன இன்னலோ, ஆபத்தோ! நிலைமை எவ்வளவு மோசமாக இருக்கிறதோ? அதைப்பற்றி நினைத்துக் கொண்டால் நெஞ்சிலே நெருப்பு விழுவது போலிருக்கிறது. இவர் என்னடா என்றால், இந்தக் கைதிகளை அடைத்து வைத்திருக்கும் இடம் மோசம்! போடப்படும் சாப்பாடு மட்டம் என்று உருகுகிறார். அந்தப் பாவிகளுக்காக! அந்தப் பாதகர்களுக்காக!'' என்று மோனா கூறுகிறாள். முதியவர், 'கல்மனம் மகளே! உனக்குக் கல்மனம்!' - என்று மெள்ளக் கூறுகிறார்.

மேலும் மேலும் ஜெர்மானியர் கொண்டுவரப் படுகின்றனர். இரும்பு முள்வேலி போட்ட சிறைக்குள்ளே தள்ளப் படுகிறார்கள்.

மோனாவின் மனம் இளகவில்லை; படட்டும், படட்டும்! அனுபவிக்கட்டும்! என்றே கூறுகிறாள். என்ன செய்தார்கள் அவர்கள்? என்ன செய்ய வேண்டும்? அவர்கள் ஜெர்மானியர்கள்; அது போதாதா அவர்களிடம் வெறுப்புக்கொள்ள?

அத்தனை வெறுப்புக் கொண்டிருக்கும் மோனா! அந்த ஜெர்மானியர்களை நாளைக்கு இரண்டுவேளையாவது பார்த்துத் தொலைக்க வேண்டி வருகிறது. பால் வாங்கிக் கொண்டு

போக ஜெர்மன் கைதிகளில் சிலர் வருகிறார்கள். பிரிட்டிஷ் போர்வீரர்கள் உடன் வருகின்றனர், கைதிகள் தப்பி ஓடி விடாதபடி பார்த்துக் கொள்ள. ஜெர்மானியரைப் பார்க்கும் போதே எள்ளும்—கொள்ளும் வெடிக்கிறது மோனாவின் முகத்தில். சுட்டுவிடுவது போன்ற பார்வை! காலில் ஒட்டிக் கொள்ளும் மலத்தைக் கழுவியான பிறகும் ஒருவிதமான அரு வருப்பு இருந்தபடி இருக்குமல்லவா, அதுபோல, அவர்களைக் கண்டால் மோனாவுக்கு ஒருவித அருவருப்பு.

அந்தக் கைதிகள் அவளிடம் பேச முயற்சிக்கிறார்கள்; மோனா வாய் திறக்க மறுக்கிறாள். இதுகளுடன் பேசுவேனோ!! என்று நினைக்கிறாள்.

''மகளே! இவ்வளவு குரூரமாக இருக்கிறாயே நமது வேதம்என்னசொல்லுகிறது.பகைவனுக்கும் அருள்பாலிக்கும் படி அல்லவா கூறுகிறது. பரமண்டலத்திலுள்ள பிதாவை நோக்கி நாம் பஜிக்கும் பாடல் நினைவிற்கு வரவில்லையா என்று கேட்கிறார்.அவளுக்கு அந்த நினைவெல்லாம்இல்லை; ஒரே ஒரு எண்ணம்தான் அவள் உள்ளத்தில் இடம் பிடித்துக் கொண்டிருக்கிறது; வெறுப்பு! ஜெர்மானியர் என்ற உடன் ஒரு கொதிப்பு!அவர்கள் அழிந்துபடவேண்டும் என்ற ஆத்திர உணர்ச்சி. பகைவனுக்காகக்கூடப் பகவானிடம் பிரார்த் திக்கலாம். ஆனால் அந்தப் பகைவன், மனிதனாக இருக்க வேண்டுமே!ஜெர்மானியரைத்தான் மோனா, மனிதர்என்றே ஏற்றுக் கொள்ள மறுக்கிறாளே; மனித வடிவிலே உலவும் மிருகங்கள்; பிரிட்டிஷ் இரத்தத்தைக் குடிக்கக் கிளம்பிடும் கொடிய விலங்குகள் என்றல்லவா திடமாக நம்புகிறாள். அவர்களிடம் பச்சாதாபமா...! முடியுமா!!

பால் எடுத்துக் கொண்டுபோக பண்ணை வீட்டுக்கு வந் திடும் ஜெர்மானியரில் ஒருவன், உடல் மெலிந்து கிடந்தான். எப்போதும் இருமிக் கொண்டிருப்பான்; வெளுத்துப்போன முகம். சிலவேளைகளில், அவனிடம் சிறிதளவு பச்சாதாப உணர்ச்சி தோன்றும், மோனாவின் உள்ளத்தில். ஆனால் அந்த உணர்ச்சியை ஒரு நொடியில் விரட்டி அடிக்கிறாள். அய்யோ பாவம் என்று எண்ணுவதா! பச்சாதாபம் காட்டு

வதா! இவனுக்கா!! இளைத்திருக்கிறான். இருமிக் கொண்டிருக்கிறான்; ஆனால் இவன் யார்? இவனும் ஜெர்மானியன் தானே! மனிதகுலத்தை நாசமாக்கத் திட்டமிட்டுப் போரினை மூட்டிவிட்ட ஜெர்மன் இனத்தான்தானே!! இவனிடமா பச்சாதாபம் காட்டுவது? கூடாது! முடியாது!

மோனாவின் உள்ளத்திலுள்ள வெறுப்புணர்ச்சி வெற்றி பெறுகிறது.

ஜெர்மானியர் செய்திடும் அட்டூழியங்களைப் பற்றி இதழ்கள் செய்திகளைத் தந்தபடி உள்ளன. அவற்றினைப் படிக்கப் படிக்க, வெறுப்புணர்ச்சி மேலும் கொழுந்துவிட்டு எரிகிறது; எரிகிற நெருப்பிலே கொட்டப்படும் எண்ணெய் ஆகிறது அந்தச் செய்திகள்.

முதியவர் வழக்கம் போலப் பிரார்த்தனையின் போது, சமாதானத்தை வழங்கும்படி பிதாவை வேண்டிக் கொள்வது கூட மோனாவுக்குப் பிடிக்கவில்லை. பிதாவே! ஜெர்மானியரைப் பூண்டோடு அழித்தொழித்திடு; மனிதகுலத்தை ரட்சித்திடு!—என்பது போலப் பிரார்த்தனை இருந்திடின் மோனாவுக்குப் பிடித்தமாக இருக்கும். முதியவர் தமது பிரார்த்தனையில் ஜெர்மானியர் அழிக்கப்பட்டாக வேண்டும் என்பதனை வலியுறுத்தாமல் சமாதானம் வேண்டும் என்று மட்டும் கூறுகிறாரே, நியாயமா...நாட்டுப்பற்று உள்ளவர்கள் இப்போது சமாதானம் காணவா விரும்புவார்கள். போர்! போர்!! பகைவர் அழிந்தொழியும் வரையில் போர்! இதனை அல்லவா விரும்புவர்! பகைவனை அழித்தொழிக்கும் வல்லமையை ஆண்டவனே! எமக்கு அளித்திடும் என்பதல்லவா நாட்டுப் பற்று மிக்கவன் செய்திடத்தக்க பிரார்த்தனை! மோனா இது குறித்து முதியவரிடம் கேட்டே விடுகிறாள்.

''அப்பா! உண்மையிலேயே சமாதானம் வேண்டும் என விரும்புகிறீரா?''

''ஆமாம் மகளே! சமாதானம் நாடக்கூடாதா...''

''நான் சமாதானம் மலர்வதை விரும்பவில்லை. போர் வேண்டும்! மேலும் மேலும் போர் வேண்டும்! அந்தக் கொடிய மிருகங்கள் உலகிலிருந்தே விரட்டி அடிக்கப்படும் வரையில் போர் வேண்டும்.''

முதியவர் தன் மகளின் நிலையை உணருகிறார். ஆனால் அவள் போக்கை மாற்ற முடியாது என்று கண்டுகொள்கி றார் போலும்! திருத்த முயற்சிக்கவில்லை; வாதிடக்கூட இல்லை.

நமது மகள் மட்டுமா, நாட்டிலே அனைவருமே இப் போது இவ்விதமான போக்குடன் உள்ளனர்; இது திருத்தப் படக் கூடியதாகத் தெரியவில்லை; ஓங்கி வளர்ந்து வளர்ந்து பேருருக் கொண்டு, பெரியதோர் அழிவை மூட்டிவிட்டுப், பிறகே இந்த வெறி உணர்ச்சி மடியும்; இடையிலே இந்த உணர்ச்சியின் வேகத்தைக் குறைத்திடுவதுகூட முடியாத காரியம் என்று முதியவர் எண்ணிக் கொண்டார் போலும்.

ராபி—மோனாவின் அண்ணன் கடிதம் எழுதுகிறான், களத்தின் நிலைபற்றி; உற்சாகத்துடன், நம்பிக்கையுடன் பெரியதோர் தாக்குதலை நடத்தப்போகிறோம்; முன்னணிப் படையினில் நான் இருக்கப் போகிறேன்; இந்தத் தாக்குதல் பகைவர்களை அழித்திடும் என்று கடிதத்தில் குறிப்பிட்டிருக் கிறான்.கேட்கக்கேட்க இனிப்பாக இருக்கிறது மோனாவுக்கு.

''அப்பா! மோனாவிடம் சொல்லு, அவள் எனக்கு எழுதிய கடிதத்தின் சில பகுதிகளை. அதிகாரிகள் சிலரிடம் படித்துக் காட்டினேன். அவர்கள் மிகவும் மெச்சுகிறார்கள்; உன் தங்கை போன்ற உணர்ச்சியும் எழுச்சியும் கொண்ட வீரர் ஆயிரவர் இருந்தால் போதும்;இந்தப் போர் ஒரு திங்க ளில் வெற்றி தந்திடும் என்று கூறிப் பாராட்டுகின்றனர்.'' ராபியின் கடிதத்திலிருந்து இந்தப் பகுதியைப் படித்திடக் கேட்டபோது மோனாவுக்குப் புல்லரித்தது; பூரித்துப் போனாள்.

பிரிட்டிஷ் படைகள் பலமாகத் தாக்குகின்றன.

ஜெர்மன் படைகள் விரண்டோடுகின்றன.

ஜெர்மன் படைக்குத் தோல்விமேல் தோல்வி ஏற்படு கிறது.

இதழ்கள் தந்திடும் இந்தச் செய்தித் தலைப்புகள் மோனாவுக்குச் செந்தேனாக இனிக்கிறது.

ராபி ஏன் இந்த வெற்றிச் செய்திகளைப் பற்றித் தெரிவிக்கவில்லை; கடிதம் காணோமே என்று எண்ணிக் கவலை கொள்கிறாள்.

ஒருநாள் அஞ்சல் வருகிறது; அதை எடுத்துக் கொண்டு வருபவன் முகத்தில் ஈயாடவில்லை; குனிந்த தலையுடன் வருகிறான்; கடிதத்தைக் கொடுத்துவிட்டுப் போய்விடுகிறான்; நீளமான உறை; சர்க்கார் முத்திரை குத்தப்பட்டிருக்கிறது. முதியவர் பிரித்துப் படிக்கிறார்; 'சர்க்கார் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளும் சேதி என்னவென்றால், படை வீரன் ராபி களத்தில்...' முழுவதும் படிப்பானேன்? விஷயம் புரிந்து விட்டது; ராபி இறந்துவிட்டான். வீரமரணம்; நாட்டைக் காத்திடும் முயற்சியில் உயிரை இழந்தான்—என்றெல்லாம் பாராட்டு இணைக்கப்பட்டிருக்கிறது கடிதத்தில்; ஆனால் தந்தையின் தத்தளிப்பை, வீர மரணம் என்ற பாராட்டுதல் குறைத்திட முடியுமா...

''மகளே! படி அம்மா! பாரம்மா!''

மோனா படிக்கிறாள்! அண்ணன் இறந்துபட்டான்! ராபி மறைந்துவிட்டான்! ராபியைக் கொன்றுவிட்டார்கள்—கொடியவர்கள்—ஜெர்மானியர்! அந்தக் கொடிய ஜெர்மானிய இனத்தவரிலே ஒரு பிரிவினர் கைதிகள் என்ற பெயருடன் இங்கே உள்ளனர்! என் அண்ணனைக் கொன்றுவிட்ட கொடியவர்கள், ஜெர்மானியர்! அவர்களிலே ஒரு பகுதியினர் இங்கே! அவர்கள் பருகிடப் பால் தமது பண்ணையிலிருந்து! என் அண்ணனின் குருதியைக் குடித்துவிட்டார்கள், அந்தக் கொடியவர்கள்; அந்த இனத்தார் இங்கு பருகிட நாங்கள் பால் அளிக்கிறோம்!

இதுபோல என்னென்ன எண்ணிக் கொண்டிருந்திருப்பாள், பாவம்! ஏற்கனவே மூண்டு கிடந்த கொதிப்பு மேலும் எந்த அளவு கிளம்பிவிட்டிருக்கும்!

பிதாவிடம் பிரார்த்திக்கச் சொன்னாரே, அப்பா! இப்பொழுது என்ன சொல்லுவார்!

''அப்பா! பால்கொடுத்து வருகிறோமே பாதகர்களுக்கு! அந்த ஜெர்மன் கொடியவர்கள் உன் மகனுடைய இரத்தத்தை -என் அண்ணன் உயிரைக் குடித்துவிட்டார்களப்பா! அண்ணனைக் கொன்றுவிட்டார்களப்பா! அந்த கொடிய இனத்தவர், இங்கேயும் உள்ளனர்; நமது பண்ணையில் பால் வாங்கிப் பருகிக் கொழுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் பச்சாதாபம் காட்டச் சொன்னீர்களே! அவர்கள் ஜெர்மானியராக இருந்தால் என்ன, அவர்களும் மனிதர்கள் என்று வாதாடினீர்களே! அந்த மிருகங்கள் உன் மகனை—என் அண்ணனை-நாட்டுப் பற்று மிக்கவனை, நியாயத்தை நிலை நாட்டப் போரிட்ட மாவீரனைக் கொன்றுவிட்டனவே அப்பா! இப்போது என்ன சொல்கிறீர்? பிரார்த்தனை செய்ய வேண்டுமா, பிதாவிடம் சமாதானம் வழங்கும்படி? சமாதானமா அப்பா வேண்டும்!! அண்ணன் உயிரைக் குடித்த கொடியவர்கள் கொட்டமடித்துக் கொண்டிருப்பது; நாம் பிதாவிடம் சமாதானம் வேண்டி பஜித்துக் கிடப்பதா? சொல்லுங்கள் அப்பா! சொல்லுங்கள்!! என்ன செய்யலாம் சொல்லுங்கள்'' என்றெல்லாம் கேட்டிட அந்தக் கன்னி துடித்திருப்பாள்.

முதியவரின் நிலை? மகன் இறந்துபட்டான் என்ற செய்தியை அறிந்ததும், அவருடைய மனதிலே சிறிதளவு தலை தூக்கியபடி இருந்ததே மனிதத் தன்மைக்கே உரிய பண்பு, அன்பு காட்டுதல், பகைவருக்கும் இரங்குதல், அது மடிந்து விட்டது; அடியோடு மடிந்தே போய்விட்டது. இதயத்தில் ஒரு பயங்கரமான சம்மட்டி அடி விழுகிறது; முதியவர் கீழே சாய்கிறார், நினைவு இழந்து. மருத்துவர் வருகிறார்; இதயத்திலே அடி! என்றாலும் இப்போதைக்கு ஆபத்து இல்லை. படுத்துறங்கட்டும்; முழு ஓய்வு வேண்டும் என்று கூறிச் செல்கிறார்.

முதியவர் படுத்துக் கிடக்கிறார்; மோனாவின் உள்ளக் கொதிப்பு மேலும் ஓங்கி வளருகிறது.

ஜெர்மானியர்களை ஆண்டவன் அழித்தொழிக்க வேண்டும்.

எல்லா ஜெர்மானியரையும் ஜெர்மன் அதிபர்கள்— ஜெர்மன் கெய்சர் என்போரை மட்டுமல்ல, எல்லா ஜெர் மானியரையும் அழித்திடவேண்டும்—ஆண் —பெண்— குழந்தை குட்டி அவ்வளவு பேரும்—ஒருவர் பாக்கியில்லா மல் ஒழிந்து போகவேண்டும். ஆண்டவன் ஜெர்மன் மக்கள் அனைவரையும் அழித்தாக வேண்டும்; இல்லையென்றால் அவர் உண்மையான ஆண்டவன் அல்ல!

மோனாவின் பிரார்த்தனை இதுபோல! வேதனை நிரம்பிய உள்ளத்திலிருந்து பீறிட்டுக்கிளம்பும் பிரார்த்தனை!

முதியவர் நடத்தச் சொன்ன பிரார்த்தனை, பகை வனுக்கும் அருள்பாலிக்கும்படி. மோனா அதனை மறுத் தாள். கல் மனம் அம்மா உனக்கு என்று முதியவர் கூறினார். இப்போது?

ஆண்டவனே எழுந்தருள்வீர்! உமது பகைவர்கள் சிதறி ஓடிடட்டும். கடவுள் நெறி மறந்தோர் கொட்ட மடித்திட விடக்கூடாது. தேவதேவா! தழலென எரியும் கரித்துண்டுகள் அவர்கள்மீது பொழியட்டும்; நெருப்பிலே தள்ளிடுவீர் அந்த நாசகாலர்களை! நரகப் படுகுழியில் தள்ளிடுவீர்! மீண்டும் அவர்கள் தலைதூக்கிடாதபடி படுகுழியில் அந்தப் பாவிகளைத் தள்ளிடுவீர்!

இது முதியவரின் பிரார்த்தனை. வேதப் புத்தகத்தில், பாவிகளை ஆண்டவன் அழித்தொழித்த படலத்தில் உள்ள பிரார்த்தனையைப் படிக்கிறார். பரிவு, பச்சாதாபம், பகை வனுக்கு இரங்கல் என்பதை இப்போது அவருடைய உள்ளத் தில் இடம் பெற மறுத்துவிடுகிறது. மகனைக் கொன்ற மாபா விகள் என்று எண்ணும்போதே, ஜெர்மானியர் பூண்டோடு அழிந்துபட வேண்டும் என்ற கொதிப்பு எழுகிறது. மோனா

சொன்னதுதான் சரி; அவர்கள் அழிக்கப்படவேண்டியவர்கள் என்கிறார் முதியவர். ஆண்டவனை அழைக்கிறார் சமாதானம் வழங்கச் சொல்லி அல்ல; ஜெர்மானியர்களை அடியோடு அழித்தொழிக்கும்படி.

ஜெர்மன் கைதிகள் அடைபட்டுக் கிடந்ததால், மிருக உணர்ச்சி மேலிட்ட நிலையினராகின்றனர்.

அடிக்கடி சச்சரவு, குழப்பம், அடிதடி, அமளி.

கலகம் செய்த கைதிகள் சிலர் காவற்காரர்களால் சுட்டுத் தள்ளப்படுகின்றனர்.

நிலைமையை அறிந்து போக வந்திருந்த மேலதிகாரி, 'இவர்களை நாய்களை அடைத்து வைப்பதுபோல அடைத்து வைத்தால், நாய்க் குணம் ஏற்பட்டுவிடத்தானே செய்யும். ஒரு வேலையுமின்றி அடைபட்டுக்கிடப்பதால் வெறிகொண்டு விடுகின்றனர். ஏதாவது வேலை கொடுக்கவேண்டும்'' என்று கூறுகிறார்.

இரும்பு முள்வேலி போடப்பட்ட இடங்களிலேயே, தொழில் நிலையங்கள் அமைக்கப்படுகின்றன, கைதிகள் வேலை செய்ய.

மிருகங்களை மனிதர்களாக்க முயற்சிக்கிறார்கள் என்று கேலி பேசினாள் மோனா, இந்தப் புதிய திட்டத்தைப் பார்த்து.

வழக்கப்படி பால் வாங்கிக் கொண்டு போக வரும் இரு மல்காரனுக்குப பதிலாக வேறோர் ஜெர்மானியன் வந்தான், ஓர்நாள்.

மோனா அதனைச் கவனிக்கக்கூட இல்லை. பால் பாத்திரத்தை அவன் பக்கம் வைத்தாள். 'இது நான் எடுத்துப் போகவேண்டிய பாத்திரமா?'என்று புதியவன் கேட்டபோது தான் திரும்பிப் பார்த்தாள். 'அவன் மருத்துவ மனைக்குச் சென்றுவிட்டான்; அவனுக்குப் பதிலாக நான் வந்திருக்கிறேன்' என்றான் புதியவன், இளைஞன்; சாந்தமான முகத்தினன்.

குரலிலே கடுமை இல்லை, நடையிலே ஆணவம் காணோம், முகத்திலே வெறித்தனம் காணோம்; யார் இவன் ஜெர்மானியனாக இருக்க முடியுமா என்ற ஐயம் மோனாவுக்கு.

உன் பெயர்?

ஆஸ்க்கார்...

ஆஸ்க்கார்...?

ஆஸ்க்கார் ஹெயின்

மூன்றாம் நம்பர் சிறைக்கூடத்திலா இருக்கிறாய்?

ஆமாம்

மோனா, எதுவும் பேசாமல் அவனை ஒருகணம் உற்றுப் பார்த்துவிட்டு, 'அதுதான் நீ எடுத்துச் செல்ல வேண்டிய பாத்திரம்' என்று கூறுகிறாள்.

'நன்றி!' என்று கூறுகிறான் ஜெர்மானியன். பதிலுக்கு நன்றிகூற நினைத்தாள்மோனா. முடியவில்லை. அவன்போகிறான்; அவள் பார்க்கிறாள்; அவன் போன பக்கமே பார்த்துக் கொண்டிருக்கிறாள்; வாசற்படியில் நின்று கொண்டு பார்க்கிறாள்; பிறகு பலகணி வழியாகவும் பார்க்கிறாள்.

அன்று முழுவதும் மோனா சிடுசிடுவென்று இருக்கிறாள். ஏதோ குமுறல், மனதில்.

வழக்கப்படி பிரார்த்தனைக்கு அழைக்கிறார் முதியவர்!

''இன்றிரவு வேண்டாமப்பா, தலைவலி'' என்று கூறிவிடுகிறாள் மோனா. தலைவலியா!!

அன்றிருந்த ஒரு மனப்போராட்டம், மோனா தன் உள்ளத்திலே இடம் பெறப் பார்க்கும் புதிய உணர்ச்சியை விரட்டும் முயற்சியில் மும்முரமாகிறாள்; முடியவில்லை. முதியவருடன் அதிகநேரம் அளவளாவுகிறாள், அவர் புதிதாகப் பெற்றுள்ள வெறுப்புணர்ச்சியைத் தனக்கு ஊட்டுவார், உள்ளத்தில் இடம் பெறப் பார்க்கும் புதிய உணர்ச்சியை விரட்டிடுவார் என்ற நம்பிக்கையுடன்.

ஜெர்மானியர்களை அழித்தொழிக்கச் சொல்லி முதியவர் ஆண்டவனைப் பிரார்த்திக்கிறார். மோனா? பிரார்த்தனையில் கலந்து கொள்கிறாள்; ஆனால் வேறு ஏதோ ஒரு உணர்ச்சி அவளை வேறு எங்கோ அழைக்கிறது; இழுத்துச் செல்லப் பார்க்கிறது. அந்த ஆஸ்கார் கூடவா, ஜெர்மானியன். அத்தனைப் பணிவாக இருக்கிறான்; கனிவாகப் பேசுகிறான்; முகத்தைப் பார்த்தால் கொடியவனாகத் தெரியவில்லை. ஜெர்மானியனா இவன்; ஆஸ்க்கார் போன்றவர்கள்கூட இருக்கிறார்களா ஜெர்மன் இனத்தில்—என்றெல்லாம் எண்ணுகிறாள் மோனா.

'நரகப் படுகுழியில், பகைவர்களைத் தள்ளு' என்று ஆண்டவனைப்பிரார்த்திக்கிறார் முதியவர்; மோனாவுக்குப்பிடித்தமான பிரார்த்தனை அது; முன்பு! இப்போது? அந்தப் பிரார்த்தனை அவளுக்கு என்னமோ போல இருக்கிறது. ஆண்டவனையா இவ்வளவு கொடுமைகளைச் செய்திடச் சொல்லிக் கேட்பது! ஆண்டவன் என்றால் தயாபரன் அல்லவா! அவரிடம் இப்படியா ஒரு பிரார்த்தனை செய்வது என்றுகூட எண்ணி சிறிதளவு அருவருப்பு அடைகிறாள். கன்னியின் இதயத்திலே புதிய கருத்து கருவளவாகிறது!

மோனா, சபலத்துக்கு இடமளிக்கக்கூடாது என்ற உறுதியுடன் போரிடுகிறாள். ஜெர்மன் கைதிகளைக் கண்டால் கடுகடுப்பைக் காட்டுவது; அவர்களிடம் ஒரு பேச்சும் பேசாதிருப்பது; அவர்களிடம் தனக்கு உள்ள வெறுப்பை வெளிப்படையாகத் தெரியச் செய்வது என்ற முறையில் நடந்து கொள்கிறாள். ஆனால் அந்த ஆஸ்க்கார்!

லட்விக் இறந்துவிட்டான்?

யாரவன் லட்விக்?

முன்பெல்லாம் வருவானே, இருமிக் கொண்டு...அவன் தான் லட்விக். வயது 22! பரிதாபம்! செத்துவிட்டான்! கடிதம் எழுதவேண்டும் அவன் தாயாருக்கு.

மோனாவுக்குத் துக்கம் நெஞ்சை அடைத்துக் கொள்கிறது; கண்களில் நீர் துளிர்க்கிறது; ஆனால் சமாளித்துக் கொண்டு கூறுகிறாள்.

''மகனை இழந்த தாய் அவள் ஒருவள்தானா! போர் மூட்டி விடுபவர்கள்; அதனால் விளையும் பொல்லாங்குகளை அனுபவிக்கத்தானே வேண்டும்.''

ஆஸ்க்கார் பதிலேதும் பேசவில்லை. திரும்பிச் செல்கிறான். சுடச் சுடப் பதில் கொடுத்துவிட்டோம் என்ற திருப்தியுடன் அல்லவா மோனா இருக்க வேண்டும்? இல்லையே! போகிறவனைப் பார்த்துக் கொண்டே நிற்கிறாள், தவறாகப் பேசிவிட்டோம் என்றெண்ணி வருந்துபவள் போல! சிறிது தூரம் சென்றவன் திரும்பிப் பார்க்கிறான்! மோனாவின் உள்ளம்? தவறு செய்துவிட்டாய் என்று கூறுவதுபோலிருக்கிறது.

மற்றோர் நாள் அந்த ஆஸ்க்கார் ஒரு சிறு பெட்டியைக் கொண்டு வருகிறான். 'இது இறந்துபட்ட லட்விக்கின் தாயார் அனுப்பியது. அவன் கல்லறை மீது தூவும்படி கண்ணாடியாலான இந்த மலரினை அனுப்பிவைத்திருக்கிறார்கள். நான் கல்லறை இருக்கும் இடம் செல்ல முடியாது. அதலால், இதனைத் தாங்கள்...'

ஆஸ்க்கார் கெஞ்சும் குரலில் பேசுகிறான்: மோனா கண்டிப்பாகச் சொல்லிவிடுகிறாள்; 'என்னால் முடியாது; இதனை எடுத்துக் கொண்டு போய்விடு' என்று. அவன் போய் விடுகிறான்; ஆனால் பெட்டியை அங்கேயே வைத்துவிட்டு!

'கிடக்கட்டும் இங்கேயே, எனக்கென்ன' என்றுதான் மோனா எண்ணிக் கொள்கிறாள். அன்று பகலெல்லாம் அவள் எதிரே கிடக்கிறது அந்தப் பெட்டி! எடுத்து எறியவில்லை! முடியவில்லை! ஆஸ்க்காரின் முகம், அதிலே தெரிந்தது போலும்.

மாலையில் யாருமறியாமல்சென்று லட்விக்கின் கல்லறை மீது அந்தக் கண்ணாடி மலரைத் தூவிவிட்டு வந்து விடுகிறாள்.

மோனா, ''ஜெர்மன் இனம் முழுவதும் அழிக்கப் பட வேண்டும், குழந்தை குட்டிகள் உள்பட'' என்று கொதித்துக் கூறிடும் கன்னி, ஒரு ஜெர்மானியன் கல்லறைமீது மலர் தூவு

கிறாள்! எப்படி முடிந்தது! பகைவனிடம் பச்சாதாபம் காட்டுவதா! என்று கேட்ட மோனா செய்கிற காரியமா இது! எப்படி ஏற்பட்டது இந்த மாறுதல்? யார் புகுத்தியது அந்தப் புதிய உணர்ச்சியை? ஆஸ்க்கார்! அவன் பார்வை, அவளுடைய உள்ளத்தில் ஒரு புதிய உணர்வை எழுப்பி விட்டது. எவ்வளவோ முயன்று பார்த்தும் அவளால் அந்தப் புதிய உணர்வை உதறித் தள்ளிவிட முடியவில்லை. இடம் பிடித்துக் கொண்டது!

ராபியின் வீரதீரத்தை மெச்சிப் பிரிட்டிஷ் துரைத்தனம் அனுப்பி வைத்த வீரப்பதக்கத்தை மோனா அணிந்து கொள் கிறாள் எழுச்சியுடன்.

வீரப்பதக்கம்! அண்ணன் பெற்றது! கொடியவர்களாம் ஜெர்மானியரைக் கொன்று குவித்ததற்காக! அந்த ஜெர் மானியரில் ஒருவன் இந்த ஆஸ்க்கார். அவன் இந்த வீரப் பதக்கம் பற்றிய விவரம் கேட்கிறான். மோனா கூறுகிறாள். நமது இனத்தவர்களைச் சாகடித்ததை வீரம் என்று மெச்சித் தரப்பட்டது இந்தப் பதக்கம் என்பதனை அறிந்ததும் ஆஸ் காரின் முகம் கடுகடுப்பை அல்லவா காட்ட வேண்டும்! இல்லை! அவன், ராபியைப் புகழ்ந்து பேசுகிறான், பாராட் டுதலுக்குரிய வீரன் என்று!!

என்ன விந்தை இது! கப்பிக் கொண்டிருந்த வெறுப் புணர்ச்சி எங்கே போய்விட்டது.

தன் அண்ணனைக் கொன்ற பாவிகளாம் ஜெர்மானிய இனத்தவரில் ஒருவனாம் ஆஸ்க்காரிடம்,மோனா வெறுப்பை காட்ட முடியவில்லை, எவ்வளவோ முயன்றும்!

தன் இனத்தவரைச் சுட்டுத் தள்ளியதற்காக வீரப் பதக்கம் பெற்ற ராபியைப் பாராட்டிப் பேசுகிறான் ஜெர் மானியன் ஆஸ்க்கார்!

கப்பிக் கொண்டிருக்கும் காரிருளைக் கிழித்தெறிந்து கொண்டு விண்மீன் கண் சிமிட்டுகிறதே!!

மோனாவிடம் ஏதோ ஓர் மாறுதல் தோன்றி விட்டி ருக்கிறது என்பது முதியவருக்குத் தெரிகிறது; விவரம் புரிய வில்லை.

பிரிட்டிஷ் கப்பலை ஒரு ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல் தாக்கி அழித்தது பற்றியும், அதனால் பலர் மாண்டது பற்றியும் கூறக்கேட்ட முதியவர் கொதித்துச் சபிக்கிறார். 'ஜெர்மானியர் நாசமாகப் போகட்டும்! ஆழ்நரகில் வீழட்டும்' என்று. 'ஏனப்பா இப்படி பகை உணர்ச்சி. நமது வேதம் இதனை அனுமதிக்காது. பகைவனிடமும் பச்சாதாபம் காட்டச் சொல்லுகிறது என்று முன்பு சொல்வீரே, நினைவில்லையா?' என்று கேட்டுவிடுகிறாள் மோனா! முதியவர் திகைக்கிறார். 'மகளே! என்ன இது! இவ்விதம் பேசுகிறாய்! உன் போக்கே மாறிவிட்டிருக்கிறதே! எப்படி? எதனால்?' என்று கேட்கிறார்.

அவளுக்கே புரியவில்லை அந்தக் காரணம்! முதியவர் கேட்கிறார்; பதில் என்ன தருவாள்.

மோனா, முதியவர் மனதில் குடியேறிவிட்டாளோ?

முதியவர், மோனா மனதிலே இடம் பெற்று விட்டாரோ!

முதியவரின் முன்னாள் மனப்பான்மை இந்நாள் மோனவுக்கும், முன்னாளில் மோனா கொண்டிருந்த மனப்பான்மை இதுபோது முதியவருக்கும் அமைந்து விட்டதோ! விந்தை! ஆனால் காரணம்?

ஜெர்மானியரின் அட்டூழியம் பற்றிய செய்திகளைப் படிக்கிறார் முதியவர்; அவர் உள்ளத்திலே மூண்டுகிடந்த வெறுப்புணர்ச்சி மேலும் தடித்துக் கொண்டிருக்கிறது.

அதே இதழ்களில், போர்ச் சூழ்நிலையிலும், இதயம் படைத்தவர்கள் நற்செயல் சில புரிகின்றனர் என்பதற்கான செய்திகள் வெளிவருகின்றன. மோனா அதைப் படித்துப் பார்க்கிறாள். ஏற்கனவே மெள்ள மெள்ள அவள் உள்ளத்திலிருந்து கலைந்து கொண்டிருந்த வெறுப்புணர்ச்சி மேலும் கலைகிறது.

எப்போது கலையத் தொடங்கிற்று அந்த வெறுப் புணர்ச்சி? ஆஸ்க்கார் எனும் ஜெர்மானியனைக் கண்ட நாள் தொட்டு; அவன் பேச்சிலே குழைந்திருந்த பாசத்தை உணர்ந்த நாள்முதல்.

ஜெர்மானியரின் பாசறைப் பகுதியில், பலத்த அடி பட்ட பிரிட்டிஷ் போர் வீரனொருவன் தப்பிச் செல்ல முயற் சிக்கிறான். துரத்திப் பிடிக்க வருகின்றனர். ஒரு வீட்டுக்குள் நுழைந்து கொள்கிறான். அது ஒரு ஜெர்மானியன் வீடு!

அந்த வீட்டிலே, ஜெர்மன் படைத் தலைவர்கள் சிலர் விருந்துண்டு களிநடமாடுகின்றனர்.

வீட்டுக்கு உரியவனான ஜெர்மானியன், பிரிட்டிஷ் வீரனைக் கண்டுவிடுகிறான்.

ஒரு குண்டு! ஒரு அலறல்! ஒரு பிணம்! பிறகு கைதட் டல், பாராட்டு, வீரப்பதக்கம்!!—இப்படித்தான் நிகழ்ச்சி வடிவம் கொண்டிருக்க வேண்டும். அதுபோல நடக்கவில்லை.

உயிருக்குப் பயந்து ஒளிந்துகொள்ள வந்த பிரிட்டிஷ் படை வீரனை, அந்த ஜெர்மானியன் பிடித்து மேலிடம் ஒப்படைக்கக்கூட இல்லை. ஜெர்மன் தளபதிகள் கண்களில் பட்டுவிடாதபடி மறைந்து கொள்ள வழிசெய்து தருகி றான். அந்தத் தளபதிகள் சென்றான பிறகு, பிரிட்டிஷ் வீர னைத் தப்பி ஓடிவிடும்படிச் சொல்லுகிறான்!

பிரிட்டிஷ் வீரன் உயிரை ஜெர்மானியன் காப்பாற்று கிறான்! தீராத பகை! ஓயாத போர்! பயங்கரமான பழி வாங்கும் உணர்ச்சி! எங்கும் வெறுப்புணர்ச்சி கப்பிக் கொண் டிருக்கிறது. என்றாலும் ஒரு ஜெர்மானியன் இதயம் படைத் தவனாகிறான்; இரக்கம் காட்டுகிறான்; பகைவனுக்கே துணை செய்கிறான்.

இந்தச் செய்தியை மோனா இதழிலிருந்து முதியவருக் குப் படித்துக் காட்டுகிறாள்.

'புரிகிறதா அப்பா, எந்த இனத்திலும் நல்லவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். இதோ இந்த 'ஜெர்மானியன் நல்லவனல்லவா?' என்று கேட்கிறாள், முதியவர் மனதில் மூண்டுள்ள வெறுப்புணர்ச்சியைக் குறைத்திடலாம் என்ற எண்ணத்துடன்.

முதியவர் அதற்குத் தயாராக இல்லை.

''இவன் நல்லவனாக இருக்கலாம் மகளே! ஆனால், என் மகன் உயிரைக் குடித்த குண்டு வீசியவன், இவனுடைய மகனாக இருந்திருந்தால்...மகளே! ஜெர்மானியரில் நல்லவர் என்று ஒரு பிரிவும் உண்டா? வெறியர்கள்! அழிந்துபட வேண்டியவர்கள்! மனித குல விரோதிகள்!'' என்று முதியவர் பேசுகிறார்.

அந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை மோனாவினால்; அந்த இடத்தைவிட்டுச் செல்கிறாள்.

முதியவர் காண்கிறார்! என்னமோ நேரிட்டுவிட்டிருக்கிறது! என் மகளின் மனதிலே ஓர் மாறுதல் புகுந்துவிட்டிருக்கிறது, என்ன காரணம் இந்த மாறுதலுக்கு? என்றெண்ணித் திகைக்கிறார்.

போரினில் ஈடுபட்டு இதயம் இரும்பாகிவிடும் நிலையிலேகூட, மனிதத்தன்மை பளிச்சிட்டுக் காட்டத் தவறுவதில்லை என்பதற்கான சான்றுகள் ஒன்றன்பின் ஒன்றாக மோனாவுக்குக் கிடைக்கின்றன. அதன் காரணமாக ஜெர்மானியர் அனைவருமே கொடியவர்கள் என்ற எண்ணம் தகர்ந்துபோய் விடுகிறது.

அவர்களிலேயும் நல்லவர்கள் உண்டு என்ற எண்ணம் பிறக்கிறது.

ஜெர்மானியர் எல்லோருமே கொடியவர்கள் என்றால் இவ்வளவு நல்லவனான ஆஸ்க்கார் எப்படி அந்த இனத்திலே பிறந்திருக்க முடியும் என்ற கேள்வி எழுந்தது. மோனாவின் மனமாற்றம் வேகமாக வளர்ந்த வண்ணம் இருந்தது. ஆனால் அவளைச் சுற்றிலும் சூழ்ந்து கொண்டிருந்ததோ,

வெறுப்புணர்ச்சிதான். முதியவரே ஒவ்வோர் நாளும் 'பிதா'வை வேண்டிக் கொண்டிருக்கிறார், கொடிய ஜெர் மானியரைக் கொன்றொழி என்று.

ராபி களத்திலே கடும் போரில் ஈடுபட்டிருந்தபோது பிரிட்டிஷ் படை வரிசையினால் தாக்கப்பட்டு, குற்றுயிராகிய ஒரு ஜெர்மன் போர் வீரன், ராபி இருந்த 'குழிக்கு' அருகே துடித்துக் கொண்டிருந்தான். அந்தக் காட்சியைக் கண்ட ராபி உருகிப் போனான். இவனை இப்படி இம்சைப்பட விடக் கூடாது என்ற இரக்க உணர்ச்சி எழுந்தது. பாய்ந்தோடிச் சென்று துடித்துக் கிடந்த ஜெர்மானியனை தன் வரிசையினர் பதுங்கிக் கிடந்த 'குழி'க்கு இழுத்துக் கொண்டு வந்தான். ஆனால் அந்த முயற்சியில் ஜெர்மன் படை வரிசையினரின் குண்டுகள் அவனைத் துளைத்தன; துடித்துக் கிடந்தான்.

ஒரே குழியில், ஒரு ஜெர்மன் போர் வீரன், பிரிட்டிஷ் படையினரின் குண்டடிபட்டு; ஒரு பிரிட்டிஷ் போர்வீரன், ஜெர்மன் குண்டடிபட்டு! ஜெர்மானியன் துடிப்பது கண்டு மனம் தாளவில்லை பிரிட்டிஷ் ராபிக்கு! ஜெர்மன் வீர னைக் காத்திடச் சென்றபோது ஜெர்மன் குண்டு தாக்கு கிறது பிரிட்டிஷ் ராபியை! குண்டடிபட்ட இருவரும் ஒரே குழியில் கிடக்கிறார்கள்.

பிரிட்டிஷ் படை வேறிடம் செல்கிறது, அடிபட்ட இரு வரையும் விட்டுவிட்டு.

ஜெர்மானியன் மரணத்தின் பிடியிலிருந்து தப்பிவிட் டான்; பிரிட்டிஷ் ராபியோ மரணத்தின் பிடியில் சிக்கிக் கொண்டான்.

கடைசி நேரம் நெருங்குவது அறிந்த ராபி, தன் கைக்கடி யாரத்தைக் கொடுக்கிறான் ஜெர்மானியனிடம். 'நீ உயிர் தப்பி ஊர் திரும்பினால், இதனை என் தங்கையிடம் சேர்த்து விடு' என்று கூறிவிட்டு.

ராபி இறந்துவிடுகிறான்; அந்த ஜெர்மானியன் பிழைத் துக் கொள்கிறான்.

அவன், ஆஸ்க்காருக்குப் பள்ளித் தோழன்! விவரம் தெரிந்துகொண்டு அந்தக் கைக்கடிகாரத்தை ஆஸ்க்காருக்கு அனுப்பிவைக்கிறான். 'ராபியின் தங்கையிடம்' கொடுத்து விடு. அதுதான் ராபியின் கடைசி விருப்பம் என்பதைக் கூறு' என்று.

ஆஸ்சகார் இந்தத் தகவலையும் கைக்கடியாரத்தையும் மோனாவிடம் கொடுக்கிறான். அவள் மனம் பாகாய் உருகி விடுகிறது.

கடும்போர் நடைபெறும் களத்திலேகூட இப்படி ஒரு நட்புணர்ச்சி பூத்திட முடிந்ததே!

ஒரே பதுங்குமிடத்தில் அடிபட்ட இருவர்; ஒருவர் ஜெர்மானியர்; மற்றவர் பிரிட்டிஷ்.

அவர்கள் வெட்டிக் கொள்ளவில்லை. சுட்டுக் கொள்ள வில்லை; ரணப் படுக்கையிலே வீழ்ந்து விட்டிருந்த அந்த இருவரும் நட்புணர்ச்சி பெற்றனர்.

இந்த மனிதத் தன்மைதான் இயற்கையானது.

போர், இந்த இயற்கையான பண்பை அழித்து விடுகிறது.

ஒருவரிடம் ஒருவர் நட்புணர்ச்சி காட்டிடப் பிறந்த மக்களை, ஒருவரை ஒருவர் சுட்டுத் தள்ளிக் கொள்ளச் செய்கிறது; வெறி ஊட்டுகிறது; மனிதத் தன்மையை மாய்க்கிறது. போர்! ஏன்தான் போர் மூட்டிக் கொள்கின்றனரோ! என்றெல்லாம் எண்ணி உருகுகிறாள் மோனா.

மோனா ஒரே சமயத்தில் இரண்டு போர் முனைகளில் ஈடுபட வேண்டி நேரிட்டுவிட்டது.

ஒரு முனையில், தன் தகப்பனாரின் உள்ளத்தில் வளர்ந்த வண்ணம் இருந்த வெறுப்புணர்ச்சியைப் போக்கிடப் போரிட வேண்டி இருந்தது. வெற்றி கிட்டவில்லை.

மற்றோர் முனையில், ஆஸ்க்கார் நிற்கிறான், இதயத்தில் இடம் கொடு என்று கேட்டபடி; மறுத்திடவும் முடியவில்லை; கொடுத்திடவும் துணிவில்லை. போர் மூள்கிறது; நாளாகவாக மோனாவின் போரிடும் ஆற்றல் குறைந்து கொண்டு வருகிறது.

எப்போதும் ஆஸ்க்கார் பற்றிய நினைவு; இரவிலும் பகலிலும்; பார்க்கும்போதும் பார்க்காதிருக்கும் போதும்! அந்தப் பாசம் நிறைந்த கண்கள் அவளைப் படாதபாடு படுத்துகின்றன.

வாய் திறந்து அவன் தன் காதலைக் கூறிடவில்லை. ஆனால் அவன்? அவன் கண்கள் வேறென்ன பேசுகின்றன! ஜெர்மானியர்களை வெறுத்த நிலை மாறி, அவர்களிலும் நல்லவர் இருக்கின்றார் என்ற அளவுக்குக் கருத்து மாற்றம் கொண்டு, ஆஸ்க்காரிடம் பச்சாதாபம் காட்டத் தொடங்கி, பிறகு பரிவு கொள்ளத் தொடங்கி, இறுதியில் காதலே அல்லவா அரும்பத் தொடங்கிவிட்டது. நெஞ்சிலே நெருப்பு மூண்டு கிடந்தது; அங்குக் காதல் மலருகிறதே: எப்படி? எண்ணுகிறாள்; விம்முகிறாள்; குமுறுகிறாள்; எப்படியாவது தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகப் போராடுகிறாள்; துடிக்கிறாள்.

''கேட்டாயா பெண்ணே! அக் கொடியவர் செயலை. பள்ளிக்கூடத்தின்மீது குண்டு வீசி, பச்சிளங் குழந்தைகளைக் கொன்றுவிட்டனர். இந்தப் பாவம் சும்மா விடுமா! ஆண்டவன் இதைச் சகித்துக் கொள்வாரா! நமது அரசாங்கம் பழிக்குப் பழி வாங்காமலிருக்குமா! உடனே கிளம்ப வேண்டும்; ஜெர்மன் குழந்தைகள் கொல்லப்படவேண்டும்! ஒன்றுக்கு ஓராயிரம்! பழிக்குப் பழி''—என்று பதறுகிறார் முதியவர்.

''அவர்கள் செய்த கொடுமையை நாமும் செய்வதுதான் நியாயமா! குழந்தைகள் தூய்மையின் சின்னம்! ஜெர்மன்

குழந்தைகளாக இருந்தால் என்ன!'—இவ்விதம் பேசிப் பார்க்கிறாள் மோனா; முதியவரின் கோபம் அதிகமாகிறதே தவிர பழிவாங்கும் உணர்ச்சி மாறுவதாக இல்லை.

அதே சம்பவம் பற்றிய சேதி அறிந்த ஆஸ்க்கார், பச்சா தாபம் காட்டுகிறான். 'என் நாட்டவர் இந்தக் கொடுமை செய்ததைக் கேள்விப்பட்டு நான் வெட்கப்படுகிறேன்; வேத னைப்படுகிறேன்' என்கிறான். மோனாவின் மனம் சாந்தி அடையவில்லை. மிகக் கடுமையான முறையில் பேசுகிறாள்.

''நீ வெட்கப்பட்டு என்ன பயன்? வேதனைப்பட்டு என்ன பயன்? எங்கள் நாட்டுக் குழந்தைகளுக்கு நேரிட்டது போன்ற கொடுமை, உங்கள் நாட்டுக் குழந்தைகளுக்கு நேரிட வேண்டும். அப்போது புரியும்'' என்று மோனா கூறிவிட்டுப் போகிறாள். ஆஸ்க்கார் திகைத்துப் போகிறான்.

சில நாட்கள் வரையில் மோனா ஆஸ்க்காரைப் பார்க்க முயலவில்லை. ஜெர்மானியரிடம் வெறுப்புணர்ச்சி கொள்ள முயற்சிக்கிறாள்.

கிருஸ்மஸ் பண்டிகை! கைதிகள் முகாமிலேயும், இசை விருந்து விழாக் கோலம்.

அன்றிரவு ஆஸ்க்கார் வருகிறான், வீடு நோக்கி.

வீட்டுக்குள்ளேயே வந்தமருகிறான்; காரணம், தனக்கு ஏற்பட்ட வேதனையை மோனாவிடம் கூறி ஆறுதல் பெற. அவனுடைய வீட்டின் மீது பிரிட்டிஷ் குண்டு வீசப்பட்டதில், அவனுடைய தங்கை பத்து வயதுச் சிறுமி இறந்து விட்டிருக் கும் செய்தி அன்று அவனுக்குக் கிடைத்திருக்கிறது; வேதனை தாளமாட்டாமல் வந்தேன்; ஆறுதல் அளித்திட வேறு யாரும் இல்லை. அதனால் இங்கு வந்தேன். தங்கச் சிலை என் தங்கை! பத்தே வயது! சின்னஞ் சிறு சிட்டு! என் உயிர்! எங்கள் குடும்பத்துக் கொடிமலர்—என்றெல்லாம் கூறிக் குமுறிக் குமுறி அழுகிறான் ஆஸ்க்கார்.

வேதனை நிரம்பிய இந்தச் செய்தி பற்றி அவனுக்குக் கிடைத்த கடிதத்தைப் படித்துவிட்டு மோனா கலங்குகிறாள். அருகே செல்கிறாள் ஆறுதல் கூற! அணைத்துக் கொள்கி றாள்! அவன் மெய்மறந்த நிலை அடைகிறான். எவருமே பிரிக்க முடியாததோர் அணைப்பு! காலமெல்லாம் இதற் காகத்தானே காத்துக் கிடந்தோம் என்று ஒருவருக்கொரு வர் கூறிக்கொள்ளவில்லை. ஆனால் அந்த அணைப்பின் பொருள் அதுவாகத்தான் இருந்தது.

ஜெர்மானியரும் பிரிட்டிஷாரும் ஒருவரை ஒருவர் வெட்டி வீழ்த்திக்கொள்கின்றனர். இங்கு ஓர் ஜெர்மன் வாலி பனைத் தழுவிக் கொள்கிறாள் ஓர் பிரிட்டிஷ் கன்னி; காமவெறியால் அல்ல, கயமைக் குணத்தால் அல்ல, எந்தத் தடையும் தகர்த்தெறியும் காதலின் தூய்மை தந்திடும் வலிவு காரணமாக. இரண்டு உள்ளங்கள் கலந்துவிட்டன; இன பேதம், மூண்டுள்ள பகை, நடைபெறும் போர், கப்பிக் கொண்டுள்ள வெறுப்புணர்ச்சி எதுவும் அவர்களைத் தடுக்க முடியவில்லை. அவர்கள் ஜெர்மனி—பிரிட்டன் என்ற நாட் டுக் கட்டுகளை மீறியதோர் காதலால் கட்டுண்டு கிடந்தனர். ஒரு நிமிடமா, ஓராயிரம் ஆண்டுகளா, எவ்வளவு நேரமாக ஒருவரை ஒருவர் ஆரத்தழுவி நின்றனர் என்பது இருவருக்கும் புரியாத நிலை. நாடு இனம் எனும் உணர்ச்சிகளைக் கடந்த நிலை மட்டுமல்ல, காலத்தையும் கடந்ததோர் நிலை! காதல் உணர்ச்சி அவர்களைப் பிணைத்துவிட்டது.

கீழே ஏதோ பேச்சுக் குரல் கேட்ட முதியவர், தள் ளாடித் தள்ளாடி வந்து பார்க்கிறார், ஜெர்மானியனுடன் தன் மகள் குலவுவதை! திகைத்தார்! துடித்தார்! பதறினார்! கதறினார்! ''அடி கள்ளி! உன் அண்ணனைக் கொன்றவர் ஜெர்மானியர்; நீ அணைத்துக் கொண்டிருப்பது ஒரு ஜெர் மானியனை! விபச்சாரி! குடும்பத்துக்கும், நமது இனத்துக்கும் இழிவு தேடிவிட்டாயே! இந்தக் கள்ளக் காதல் காரணமாகத் தான் உன் போக்கு மாறிவிட்டிருந்ததா! பாவி! இந்தப் பாவம் உன்னைச் சும்மா விடுமா! உன் அண்ணனின் ஆவி உன்னைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுச் சித்திரவதை செய்

யாதா! அண்ணன் உயிர் குடித்த அக்ரம ஜெர்மானிய இனத்தானுடன், அடிப் பாதகி! விபச்சாரி...''-முதியவரால் அந்த அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மகனைக் களத்திலே சாகடித்தான் ஒரு ஜெர்மானியன்! மகளின் கற்பையே அழிக்கத் துணிந்தான் மற்றோர் ஜெர்மானியன்! இதனைக் கண்ட பிறகுமா உயிர் தங்கும் உடலில்! கீழே சாய்ந்தார். கூக்குரல் கேட்டு அங்கு வந்த பண்ணையாட்கள், முதியவரைப் படுக்கையில் கிடத்தினர். மோனாவின் இழி செயலைப் பற்றி முதியவர் பதறிக் கூறியது அவ்வளவையும் அவர்கள் கேட்டுவிட்டிருந்தனர். மோனா இனி அவர்களிடமிருந்து தப்ப முடியாது. 'அவள் பாதகி! காதகி! விபச்சாரி'என்று கூவிடும் அந்த ஊர் முழுதும். திரும்பிப் பார்த்தாள். ஆஸ்க்காரைக் காணோம். நடந்ததை நினைத்துக் கொண்டாள்; அவளுக்கே நடுக்கம் எடுத்தது. படுக்கையில் பார்க்கிறாள், முதியவர் மரணத்தின் பிடியில் தன்னை ஒப்படைத்து விட்டதை. சுற்றிலும் பார்க்கிறாள், சுட்டுவிடுவது போல பார்வையைச் செலுத்தும் பண்ணையாட்களை. முதியவர் இறந்துவிட்டார்.

ஊரே அவளைத் தூற்றுகிறது; பண்ணையாட்கள் அவளிடம் வேலை செய்வது இழிவு என்று கூறி விலகிக் கொள்கிறார்கள்.

அப்பனைச் சாகடித்தவள்!
ஜெர்மானியனுடன் குலவினவள்!
கெட்ட நடத்தைக்காரி!
காம சேட்டைக்காரி!

என்றெல்லாம் தூற்றுகிறார்கள்; இதயத்தைத் துளைக்கிறார்கள். நான் என்ன தவறு செய்தேன் என்று கேட்கமுடியுமா? இனத்தவர் முழுவதும் ஜெர்மானியரிடம் வெறுப்புணர்ச்சியைக் கக்கிடும்போது இவள் ஒரு ஜெர்மானியனுடன் காதல் கொண்டால் சகித்துக் கொள்வார்களா! இனத் துரோகி! நாட்டுத் துரோகி! பெண் குலத்தின் பெருமையையே அழித்தவள் என்று பேசத்தான் செய்வார்கள். ஜெர்மானியன் பிரிட்

டனைத் தோற்கடித்து, பொன்னையும், பொருளையும்தான் கொண்டு போயிருப்பான்! இந்தப் பொல்லாதவள் ஜெர்மானியனிடம் கற்பையே அல்லவா பறிகொடுத்தாள் மனமொப்பி!

பண்ணை முழுவதும், முதியவர் மோனாவுக்கே சொந்தமாக்கி வைத்திருந்தார். தூற்றுவோர் தூற்றட்டும் என்று எண்ணிக் கொண்டு மோனா பண்ணை வேலைகளைப் பார்த்துக் கொண்டு வந்தாள்!

மோனாவும் ஆஸ்க்காரும் பல நாட்கள் சந்திக்கக்கூட இல்லை.

அவர்கள் இருவரும் கள்ளக் காதல் நடத்திக் கொண்டிருந்தனர்; அதனை ஒருநாள் முதியவர் கண்டு பிடித்து விட்டார் என்று ஊர் பேசிற்று; நடைபெற்றதோ ஒருகணம் தோன்றி அவர்கள் இருவரையும் பிணைத்துவிட்ட காதல் உணர்ச்சி. அதனை அவள் விளக்கிடத்தான் முடியுமா. ஊரே தூற்றுகிறது, அவளை விபச்சாரி என்று.

வெறுப்புணர்ச்சிக்கும் மனிதத் தன்மைக்கும் நடைபெறும் கடும்போர், உள்ளத்தை உலுக்கிவிடத் தக்கது. பலருடைய வாழ்க்கையிலே விபத்துக்களை மூட்டிவிடக் கூடியது என்பது 'இரும்பு முள்வேலி' போன்ற ஏடுகள் மூலம் விளக்கப்படுகின்றன.

ஆனால் இதிலே எடுத்துக் காட்டப்படும் 'மக்கள் மனப் போக்கு' எளிதிலே மாற்றப்படுவதில்லை. மூட்டிவிடப்பட்ட வெறுப்புணர்ச்சியிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள மக்களில் பெரும்பாலோரால் முடிவதில்லை.

வெறுப்புணர்ச்சி சூழ்நிலை கப்பிக் கொண்டிருக்கும் போதும் மோனா போல் ஒருவரிருவர் அதிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்கின்றனர்—என்றாலும் வெறுப்புணர்ச்சியின் பிடியில் தம்மை ஒப்படைத்துவிட்ட மக்கள், 'மோனா' போன்றவர்கள் மீது சீறிப் பாய்வர்.

மோனா, பிரிட்டிஷ் இனம்; ஆஸ்க்கார், ஜெர்மன் இனம்; இருந்தால் என்ன? காதல் அவர்களைப் பிணைக்கிறது! அதிலே என்ன தவறு என்று எண்ணிட முடியவில்லை, வெறுப்புணர்ச்சி கொண்ட மக்களால்.

எந்த நாட்டிலும் இவ்விதமான உணர்ச்சியின் பிடியில் சிக்கிக் கொண்ட மக்களின் தொகையே மிக அதிகம்.

பெர்ல் பக் எனும் உலகப் புகழ் பெற்ற ஆசிரியர், தமது படைப்புகளில், இதுபோன்ற உணர்ச்சிக் குழப்பங்களை விளக்கிக் காட்டியுள்ளார்.

மோனாவுக்கு ஏற்பட்ட பிரச்சினை தன் மனதிலே இடம் பெற்ற ஜெர்மானியனை மணம் செய்து கொள்வது தவறல்ல என்பதை நாட்டவர் ஒப்புக் கொள்ளச் செய்திட வேண்டும் என்பதாகும்.

மற்றோர் 'முனை'யைக் காட்டுவது போல, பெர்ல் பக் ஓர் கதையைத் தீட்டி அளித்துள்ளார்.

ஜப்பானியர்களுக்கும் அமெரிக்கர்களுக்கும் போர் நடந்திடும் நேரம். இரண்டாவது உலகப் போர்! இட்லர் மூட்டிவிட்ட போர்!

ஜப்பானியரைக் கண்டதும் சுட்டுத் தள்ள வேண்டும் என்ற உணர்ச்சி அமெரிக்கர்களுக்கு; அது போன்றே ஜப்பானியருக்கும்.

இது 'தேசிய உணர்ச்சி' என்ற மதிப்புப் பெற்றுவிட்டிருந்த நேரம்.

அவனும் மனிதன்தான்!—என்று பேசுவதே தேசத் துரோகம்!

அவன் ஜப்பானியன். ஆகவே கொல்லப்பட வேண்டியவன் என்ற எண்ணம், ஏற்புடையது என்று ஆக்கப்பட்டு விட்டிருந்த சூழ்நிலை.

அந்நிலையில், ஏதோ விபத்திலே சிக்கி, குற்றுயிராகிக் கிடந்த நிலையில் ஒரு அமெரிக்கன், கடலோரம் கிடத்தப் பட்டிருப்பதை ஒரு ஜப்பானியன் காண்கின்றான்.

அந்த ஜப்பானியன் ஒரு டாக்டர். அமெரிக்கனோ, உயிருக்கு மன்றாடுகிறான்!

டாக்டரின் கடமை என்ன! விபத்திலே சிக்கி உயிர் துடித்துக் கொண்டிருப்பவனைக் காப்பாற்றுவது! இனம், ஜாதி, எனும் எதனையும் கவனிக்கக்கூடாது; நோயாளி— டாக்டர் என்ற தொடர்பு மட்டுமே அதுபோது தெரியவேண் டும்.

வீட்டுக்கு எடுத்துச் சென்று சிகிச்சை செய்கிறான். அமெரிக்கன் பிழைத்துக் கொள்கிறான்.

எந்த அமெரிக்கனைக் கொல்வது, 'தேசியக் கடமை' என்று கொள்ளப்பட்டிருக்கிறதோ, அந்த அமெரிக்கனைச் சாவின் பிடியிலிருந்து மீட்டுவிட்டான்!

மருத்துவன், தன் கடமையைச் செய்தான்! ஆனால் ஜப்பானியன் என்ற முறையில் செய்ய வேண்டியதை மறந்து!

இது தேசத் துரோகம் என்று கருதப்படுமே. தன் மீது பழி வருமே என்ற பயம் பிடித்துக் கொள்கிறது ஜப்பானிய மருத்துவரை.

அதே ஊரில் இருந்த மேலதிகாரியிடம் சென்று, ஒரு அமெரிக்கன், பிடிபட்டிருக்கிறான் என்றும், தன் வீட்டில் அடைபட்டுக் கிடக்கிறான் என்றும் கூறுகிறான்.

அந்த அதிகாரி, அமெரிக்கனை இரவு இரண்டு ஆட் களை ஏவிக் கொன்றுவிடச் செய்வதாகக் கூறி அனுப்பு கிறான்.

ஏந்த அமெரிக்கன் உயிரைக் காப்பாற்றினானோ, அதே அமெரிக்கன் உயிரைப் போக்க ஏற்பாடு செய்வதாக அதிகாரி கூறுகிறார்; அதற்கு இந்த ஜப்பானிய மருத்துவர் உடந்தை!

இது கொலைபாதகச் செயல்! ஆனால், இரக்கமற்ற வனா இந்த ஜப்பானியன் என்றால், இல்லை! உயிர் காத்த வன்! மருத்துவன்! எனினும் இதற்கு இணங்குகிறான். ஏன்? தன்னை ஒரு ஜப்பானியன் என்று மெய்ப்பித்துக் கொள்ள வேண்டுமே, அதனால்.

நாமாக அவனைக் கொல்லக்கூடாது; வேறு யாராவது கொன்றால் கொன்று கொள்ளட்டும் என்று எண்ணுகிறான்.

இதற்கிடையில் அவன் மனதில் எவ்வளவு கடுமையான போராட்டம் நடந்திருக்க வேண்டும்!

ஜப்பானியனாக இருந்தாலும் தன் உயிரைக் காத்தானே இந்த உத்தமன் என்று எண்ணிக் கொண்டு படுத்துக் கிடக்கிறான் அந்த அமெரிக்கன்.

அவன் கொல்லப்படுவதற்கான ஏற்பாட்டினுக்கு அதே ஜப்பானியன் உடந்தையாகிறான் என்பதை அறியவில்லை.

சாகக் கிடந்தவனை நாம்தானே காப்பாற்றினோம்; இப்போது அவனைக் கொல்வதற்கு நாம்தானே காரணமாக இருக்கிறோம்; அவனைச் சாகடிக்கவா பிழைக்க வைத்தோம் என்று எண்ணாமலிருந்திருக்க முடியுமா!!

ஓரிரவு, ஈரிரவு ஆகிறது; அமெரிக்கன் கொல்லப்படவில்லை.

மேலதிகாரி, சொன்னபடி கொலை செய்யும் ஆட்கள் வரவில்லை.

கடைசியில், ஜப்பானியன், அமெரிக்கனை ஒரு படகில் ஏற்றி, தப்பிச் சென்றுவிட ஏற்பாடு செய்துவிடுகிறான். வேறோர் தீவில் அமெரிக்க முகாம் இருக்கிறது; அங்குபோய் விடச் சொல்கிறான்.

மனிதத் தன்மை எனும் உணர்ச்சியின் வெற்றி என்பதா இதனை!

மேலதிகாரியிடம் சென்று, நீங்கள் சொன்னபடி ஆட்களை அனுப்பவில்லை; அவன் தப்பியோடி விட்டான் என்று கூறுகிறான் ஜப்பானியன்.

மேலதிகாரி பதறவில்லை! அவரும் உள்ளூற அந்தக் 'கொலை' கூடாது என்று எண்ணினார் போலும்! அவர் உள்ளத்திலும் மனிதத் தன்மை மேலோங்கி நின்றிருக்கும் போல் தெரிகிறது.

37818
MARAIMALAI ADIGAL LIBRARY

'உன் கடமையை நீ செய்தாய்; அமெரிக்கன் பிடிபட்டிருக்கிறான் என்பதை அறிவித்துவிட்டாய்; நான் அனுப்பிய ஆட்கள் தங்கள் கடமையைச் செய்யத் தவறிவிட்டார்கள். சரி! நடந்தது நடந்துவிட்டது! நடந்தது வெளியே தெரிய வேண்டாம்!' என்று மேலதிகாரி கூறிவிடுகிறார்.

ஆக இரு ஜப்பானியர். தம்மிடம் சிக்கிய ஒரு அமெரிக்கனைக் கொன்றுபோட வாய்ப்பு இருந்தும் அவனைச் சாவின் பிடியிலிருந்து மீட்டதுடன், தப்பியோடிடவும் செய்துவிடுகின்றனர்.

இதுபோன்ற உணர்ச்சிகளின் மோதுதல், பலரால் சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

வெறுப்புணர்ச்சி இயற்கையானது அல்ல; மூட்டிவிடப்படுவது; மனிதத் தன்மைதான் இயற்கையானது. அதனைப் போர் மாய்த்துவிடுகிறது என்பதை விளக்கிட.

'இரும்பு முள்வேலி'யில் மோனா, மனிதத் தன்மையின் எடுத்துக் காட்டாக விளங்குகிறாள், மெத்தப் பாடுபட்டு தன்னை வெறுப்புணர்ச்சியிலிருந்து விடுவித்துக்கொண்டவளாக!

அவள்மீது வெறுப்புணர்ச்சிக் கொண்டோர் பாய்கின்றனர்.

இது, காவல் புரிய வந்திருந்த ஒரு பிரிட்டிஷ் வீரனுக்குத் துணிவைக் கொடுத்தது; மோனாவைச் சுற்றி வட்டமிடத் தொடங்கினான்.

ஜெர்மானியனுக்கே இணங்கியவள், நாம் தொட்டால் பட்டா போய்விடுவாள் என்று எண்ணிக் கொண்ட அந்த இழிமகன், ஓரிரவு அவள் வீடு சென்று கற்பழிக்கவே முயலுகிறான். அவள் போரிடுகிறாள்; அலறுகிறாள்; எங்கிருந்தோ வந்த ஒருவன், அந்தக் கயவனைத் தாக்கித் துரத்துகிறான், தக்க சமயத்தில் வந்திருந்து தன் கற்பினைக் காத்த வீரன் யார் என்று பார்க்கிறாள் மோனா. ஆஸ்க்கார்! அரும்பு மலர்ந்தே விட்டது!

நிகழ்ச்சிகள் பலப்பல உருண்டோடுகின்றன.

கற்பழிக்க வந்த கயவனை ஜெர்மன் கைதிகள் சூழ்ந்து கொண்டு தாக்குகின்றனர். ஒருநாள் மோனாதான் அவனைக் காப்பாற்றுகிறாள்.

தன்னைத் தாக்கியவர்களைத் தூண்டிவிட்டவன் ஆஸ்க்கார் என்று பழி சுமத்துகிறான் காவலாளிகளின் தலைவன். விசாரணை நடத்த மேலதிகாரிகள் வந்தபோது, ஆஸ்க்கார் குற்றமற்றவன் என்பதை விளக்கிக் காட்டுகிறாள் மோனா. தன் கற்பைக் கெடுக்க காவலர் தலைவன் முயன்ற போது, காப்பாற்றியவன் ஆஸ்க்கார் என்பதைக் கூறுகிறாள். ஆஸ்க்கார் குற்றமற்றவன் என்பது மெய்ப்பிக்கப்படுகிறது.

இனிக் களைந்தெறிய முடியாத அளவு வளர்ந்துவிட்ட காதல் உணர்ச்சியைத் தாங்கிக் கொண்டு இருவரும் தத்தளித்துக் கொண்டிருந்தனர். களத்திலே போர், ஜெர்மானியருக்கும் பிரிட்டிஷாருக்கும்; இங்கு காதலா! ஒப்புமா உலகு! ஊரோ, மோனா ஜெர்மானியனுக்குக் கள்ளக் காதலி ஆகிவிட்டாள் என்று ஏசுகிறது. சபிக்கிறார்கள்—வெறுப்பைக் கக்குகிறார்கள். 'அண்ணன் நாடு காக்க உயிரைக் கொடுத்தான்; இவள் பகைவனுக்குத் தன்னையே கொடுத்து விட்டாள்! பிறந்தாளே இப்படிப்பட்டவள் ஒரு வீரக் குடும்பத்தில்! இவளையும் நாடு தாங்கிக் கொண்டிருக்கிறேதே' என்றெல்லாம் ஏசினர்.

மோனாவுக்கு இந்தத் தூற்றலைப் பற்றியெல்லாம் கவலை எழவில்லை; அவளுடைய கவலை முழுவதும், அவள் உள்ளத்தில் இடம் பெற்றுவிட்டிருந்த காதல் பற்றியே! என்ன முடிவு ஏற்படும் இந்தக் காதலுச்கு! இந்தக் காதல், நாடு இனம் எனும் கட்டுகளை உடைத்துக் கொண்டு பிறந்து விட்டது. போர்ப் புகையால் அரும்பை அழித்துவிட முடியவில்லை. மலரே ஆகிவிட்டது! ஆஸ்க்காருடன் கடிமணம் செய்துகொண்டு வாழ்ந்தாக வேண்டும். இந்தப் போர்ச் சூழ்நிலையில் நடைபெறக்கூடிய காரியமா! அனுமதி கிடைக்குமா? சமுதாயம் ஒப்புக் கொள்ளுமா?

தத்தளிக்கிறாள் மோனா—திகைத்துக் கிடக்கிறான் ஆஸ்க்கார்.

காரிருள் நீங்குமா, பொழுது புலருமா, புது நிலை மலருமா என்று எண்ணி எண்ணி ஏங்கிக் கிடக்கின்றனர், காதலால் கட்டுண்ட இருவரும்.

விடிவெள்ளி முளைக்கிறது. பல இடங்களில் செம்மையாக அடிவாங்கி நிலைகுலைந்து போய்விட்டது ஜெர்மன் படைகள். கெய்சரின் வெறிக்கு நாம் பலியாக்கப்பட்டோம் என்ற உணர்ச்சி ஜெர்மன் மக்களிடம் பீறிட்டுக் கொண்டு கிளம்பிற்று. நம்மை அழிப்பவர், உண்மையான பகைவர் பிரிட்டனிலே இல்லை; ஜெர்மனியிலே இருக்கிறார். போர் மூட்டிவிட்ட கெய்சரே நம்மை அழித்திடத் துணிந்தவர். நாம் அழிவைத் தடுத்துக் கொள்ள வேண்டுமானால் கெய்சரை விரட்ட வேண்டும்; போர் நிறுத்தத்தைக் கோரவேண்டும் என்று ஜெர்மன் மக்கள் துணிகின்றனர். சமாதானம் ஏற்படுகிறது. பீரங்கிச் சத்தம் நிற்கிறது; இரும்பு முள்வேலிகள் அகற்றப்படுகின்றன. கவலை தோய்ந்த முகங்களிலெல்லாம் ஒரு களிப்பு பூத்திடுகிறது. போர் முடிந்தது! அழிவு இனி இல்லை! பகை இல்லை, புகை எழாது! களம் நின்று குருதி கொட்டினர் எண்ணற்றவர்;ஆயிரமாயிரம் வீரர் பிணமாயினர்; இனி வீரர் வீடு திரும்பலாம்; பெற்றோரை மகிழ்விக்கலாம்; காதற் கிழத்தியுடன் கொஞ்சி மகிழலாம்; குழந்தைகளின் மழலை கேட்டு இன்பம் பெறலாம்; உருண்டோடி வரும் பீரங்கி வண்டிகள் கிளப்பிடும் சத்தம் வீழ்ந்து வீழ்ந்து வேதனைத்தீயால் துளைக்கப்பட்ட செவிகளில் இனி 'மகனே! அப்பா! அண்ணா! மாமா! தம்பி! அன்பே! கண்ணாளா'— என்ற அன்பு மொழி இசையெனப்புகும்; மகிழ்ச்சி பொங்கும்.

சடலங்கள் கிடக்கும் வெட்டவெளிகள், இரத்தம் தோய்ந்த திடல், அழிக்கப்பட்ட வயல், இடிபாடாகிவிட்ட கட்டிடங்கள், ஆழ்குழிகள், அதிலே குற்றுயிராகக் கிடந்திடும் வீரர்கள் இவைகளையே கண்டு கண்டு புண்ணாகிப் போயிருந்த கண்களில், இனி வாழ்வு தெரியும். மாடு மனை தெரியும்; மக்கள் சுற்றம் தெரிவர்; விருந்து மண்டபம் தெரியும்; விழாக்கோலம் தெரியும்; பூங்கா தெரியும்; ஆங்கு உலவும் பூவையின் புது மலர்முகம் தெரியும்; கண்கள் களிநடமிடும்.

மோனாவுக்கும் ஆஸ்க்காருக்கும்கூடப் புதுவாழ்வு பிறந்திடுமல்லவா!

பகைவனிடமா காதல், ஜெர்மன் வெறியனிடமா காதல் என்ற பேச்சுக்கு இனி இடமில்லை அல்லவா?

சமாதானம் ஏற்பட்டுவிட்டது; இனி ஜெர்மானியரும் பிரிட்டிஷ் மக்களும் பகைவர்கள் அல்லர்; வெவ்வேறு நாட்டினர்; நேச நாட்டினர். இனி மோனாவை ஆஸ்க்காரிடமிருந்து பிரித்து வைக்கும் பேதம் ஏது?

கைதிகளை விடுதலை செய்து ஜெர்மன் நாட்டுக்கு அனுப்பிவிடும்படி உத்திரவு வந்துவிட்டது. சிறுசிறு அளவினராக அவர்கள் ஜெர்மனிக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர். ஆஸ்க்கார்? அவனையும்தான் போகச்சொல்லுவார்கள் ஜெர்மனிக்கு. அவன் போய்விடுவதா! நான்! என் கதி!— என்று எண்ணுகிறாள் மோனா.

பிரிட்டிஷ் பெண்ணை மணம் செய்து கொள்பவன் ஜெர்மனி போகத் தேவையில்லை என்றோர் விளக்கம் கிடைக்கிறது; மோனா மனதிலே ஒரு நம்பிக்கை எழுகிறது.

ஆஸ்க்காரைத் திருமணம் செய்து கொண்டு தீவிலேயே வாழலாம்; பண்ணை வேலைகளை இருவரும் கவனித்துக் கொள்ளலாம். கள்ளி என்றும் விபச்சாரி என்றும் ஏசிப் பேசினவர்கள் கண்முன், நாங்கள் காதலித்தோம் கடிமணம் புரிந்து கொண்டோம் காண்பீர்! ஏதேதோ கதைத்தீர்களே முன்பு. இப்போது புரிகிறதா! நாங்கள் எந்த முறைகேடான செயலிலும் எங்களை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை; முறைப்படி திருமணம் செய்துகொண்டோம் என்று கூறிடலாம்; வீசப்பட்ட மாசுகூட துடைக்கப்பட்டுவிடும் என்று எண்ணிக் கொண்டாள் மோனா. பேதைப் பெண்! இந்த உலகம் உண்மைக் காதல் வெற்றிபெற அவ்வளவு எளிதாக அனுமதி கொடுத்து விடுகிறதா! துளியும் எதிர்பாராதிருந்த இன்னல்கள் தாக்கிடக் கிளம்பின.

மிராசுதாரர், குத்தகைக் காலம் முடிந்துவிட்டது; இனி பண்ணையை விட்டு வெளியேறு என்று உத்திரவு பிறப்பித்தார்.

''மறுபடியும் குத்தகைக்குக் கொடுமய்யா! எப்போதும் போலத் தொகை கொடுத்து வருகிறேன். பாடுபட்டு, பண்ணையை நடத்தி'' என்கிறாள் பாவை. ''உனக்கா! ஊர் என் முகத்திலே காரித் துப்பும்! ஜெர்மானிக்காரனுடன் திருட்டுத்தனமாக தொடர்பு கொண்டவளல்லவா நீ! உன் அப்பனே அதைக் கண்டு அதிர்ச்சி அடைந்து செத்தானே! நீதானே அவனைக் கொன்று போட்டாய்! உனக்கு என் பண்ணையைக் குத்தகைக்குத் தரமுடியாது. விரைவில் வெளியேறு'' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டான் மிராசுதாரன்.

ஊர் மக்கள் கொண்டிருந்த வெறுப்பு மாறவில்லை. இங்கு எவரும் ஆதரிக்கமாட்டார்கள்; தங்கும் இடமும் தரமாட்டார்கள்; தொழிலும் நடத்தவிடமாட்டார்கள் என்பது புரிந்துவிட்டது. மோனாவின் மனம் உடைந்து விடுவது போலாகிவிட்டது. ஆஸ்க்கார் கூறினான்: ''கலக்கம் வேண்டாம்! நாம் வாழ வழி இருக்கிறது. நான் ஜெர்மானியன் என்றாலும், பிரிட்டனில்தான் ஒரு தொழில் நிலையத்தில் வேலை பார்த்து வந்தேன். போர் மூண்டதும் ஜெர்மானியன் என்பதால் என்னைச் சிறைப்பிடித்தார்கள். நான் தவறேதும் செய்தவன் அல்ல என்பதும் ஜெர்மனியில் கெய்சர் மேற்கொள்ளும் போக்கினைக் கண்டிப்பவன் என்பதையும் நான் வேலை பார்த்த தொழில் நிலையத்தார் அறிவர். அப்போதே எனக்கு உறுதி அளித்தார்கள், 'போர் முடிந்து புது உறவு மலர்ந்ததும் நீ இங்கேயே வேலைக்கு வந்து அமரலாம்; உனக்காக அந்த வேலை காத்துக் கொண்டே இருக்கும்'' என்பதாக. இப்போது அதை நினைவுபடுத்திக் கடிதம் எழுதுகிறேன். வேலை கிடைத்துவிடும்; பிரிட்டன் சென்று வாழ்ந்திடலாம்; போர்க்காலத்து நிகழ்ச்சிகள் கெட்ட கனவுபோல கலைந்தோடிப் போய்விடும். இல்லறம் எனும் நல்லறத்தில் இன்பம் பெறுவோம்; இனத்தைக் காட்டி ஒன்றுபட்டுவிட்ட இதயங்களைப் பிரித்திட முடியாது என்பதை உலகு உணரட்டும்'' என்றான். இசையென இனித்தது அவன் பேச்சு. ஆனால் சின்னாட்களில் இடியெனத் தாக்கிற்று. பிரிட்டிஷ் தொழில் நிலையம் அனுப்பி வைத்த பதில் கடிதம். 'வேலை இப்போ

னைக்கு இல்லை! போர் முடிந்துவிட்டது என்றாலும் ஜெர் மானியர்கள், பரவிவிட்டுள்ள வெறுப்புணர்ச்சி குறைய வில்லை. இந்நிலையில் தொழில் நிலையத்தில் ஒரு ஜெர்மானி யனை வேலைக்கு அமர்த்துவது ஆபத்தாக முடியும்' கடிதம் இந்தக் கருத்துடன். ஆஸ்க்கார் அழவில்லை; சிரித்தான்! வெறுப்புணர்ச்சியின் பிடியிலே உலகே சிக்கிவிட்டிருப்பதை எண்ணிச் சிரித்தான்! போர் எங்கே நின்றுவிட்டது! ''சமா தானம் மலர்ந்துவிட்டது என்கிறார்களே, எங்கே அதன் மணம்! பகை உணர்ச்சி ஒழியா முன்பு போர் நின்றுவிட்டது என்று கூறுவது பொருளற்ற பேச்சு. மோனா! போர் நடந்தபடி இருக்கிறது! வெறுப்புணர்ச்சி தாண்டவமாடியபடியேதான் இருக்கிறது. இதோ பார் கடிதத்தை! ஒரு ஜெர்மானியனை வேலைக்கு வைத்துக் கொள்ள முடியாதாம்! ஆபத்தாம்!'' ஆஸ்க்காரின் பேய்ச் சிரிப்புக் கேட்டு மோனா பயந்துவிட் டாள்! நிலைமையை அறிந்து கண்கலங்கினாள்.

அமெரிக்கா, இனவெறி அற்ற இடம்; யாரும் சென்றிட லாம்; தாயகமாகக் கொண்டிடலாம் என்ற செய்தி அறிந்த னர் காதலர். கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் ஒரே வெள் ளக் காடாக இருக்கையில் தொலைவிலே ஒரு பசுமையான இடம் தெரிந்தால் மகிழ்ந்திடும் புள்ளினம் போலாயினர். புறப்படுவோம் அமெரிக்காவுக்கு; புதிய உலகுக்கு; இனபேத மற்ற சமுதாய நெறி தவழ்ந்திடும் நாட்டுக்கு என்று எண்ணி னர். ஆனால் அந்த எண்ணத்திலும் மண் விழுந்தது. 'எந்த இனத்தவரும் அமெரிக்கா வந்து குடியேறலாம். ஆனால் குறிப்பிட்ட அளவு பணத்தோடு வந்தால் மட்டுமே இடம் கிடைக்கும். ஒரு வசதியுமின்றி புகுந்துகொண்டு நாட்டுக் குப் பாரமாக இருக்கக் கூடாது' என்ற நிபந்தனை குறுக் கிட்டது.

பண்ணை நடத்தியதில் ஏற்பட்ட நஷ்டங்களுக்காக மோனா தனக்குச் சொந்தமான பசுக்களை விற்றுவிட் டாள். அவளிடம் இருந்த செல்வம் பசுக்கள் மட்டுமே! ஆகவே இப்போது அவள் பரம ஏழை! ஆஸ்க்காரோ 'கைதி' யாக இருந்தவன்! இருவரும் பணத்துக்கு என்ன செய்யமுடி யும்? அமெரிக்காவை மறந்துவிட வேண்டியதுதான்.

அது பொருள் உள்ளவர்களை மட்டுமே ஏற்றுக்கொள்ளும் பொன் விளையும் பூமி. ஏழைக்கு அங்கு இடமில்லை! வேறு என்ன செய்வது? வாழ இடம்? வாழ வழி?

தயங்கித் தயங்கிக் கூறினான் ஆஸ்க்கார்: ''மோனா! நீ மட்டும் சம்மதித்தால், நாம் நிம்மதியாக வாழ, மதிப்புடன் குடும்பம் நடத்த வழி இருக்கிறது. போரை மறந்து, போர் கிளறிவிட்ட பகை உணர்வை மறந்து ஜெர்மனிக்கு வந்திருக்கச் சம்மதித்தால் நாம், இருவரும் அங்கு சென்று வாழ்ந்திடலாம். அம்மா அன்புள்ளம் கொண்டவர்கள். என் வாழ்வை தன் வாழ்வு என்பவர்கள். உன்னைக் கண்டால் பூரித்துப் போவார்கள்! போகலாமா!'' என்றுகேட்டான். மோனா சம்மதித்தாள். இடம் எதுவாக இருந்தால் என்ன, அவருடன் இருந்திடும் இடமே எனக்குத் திருஇடம் என்று கருதினாள். ஆர்வத்துடன் கடிதம் எழுதினான் ஆஸ்க்கார் தன் அன்னைக்கு. பதில் வந்தது, இருவர் நெஞ்சிலும் நெருப்பை வாரிக் கொட்டுவது போல.

'எப்படியடா மனம் துணிந்தது, நம்மை நாசமாக்கிய பிரிட்டிஷ் இனத்தின் பெண் ஒருவளைக் காதலிக்க? அவர்கள் நமக்குச் செய்த கொடுமையை எப்படி மறந்துவிட முடிந்தது. உன் தங்கை, பத்து வயதுச் சிறுமியைக் கொன்றது பிரிட்டிஷ் குண்டு என்பதையும் மறந்தனையா? காதல் கண்ணை மறைக்கிறதா! என் மகனா நீ! ஜெர்மானியன் தானா நீ? நாட்டைவிடப் பெரியவளோ உன்னை மயக்கி விட்ட கள்ளி' என்றெல்லாம் கண்டனச் சொற்களைக் கொட்டியிருந்தாள் மூதாட்டி அந்தக் கடிதத்தில்.

போர் முடிந்துவிட்டது என்றால் புது நேசம் பிறந்து விட்டது, பகை அழிந்துவிட்டது, பாசம் பிறந்துவிட்டது என்பதல்ல பொருள்; பீரங்கி ஓசை இல்லை, படை கொண்டு தாக்குதல் இல்லை. ஆனால் ஜெர்மானியர் ஜெர்மானியர் தான்! பிரிட்டிஷார் பிரிட்டிஷார்தான்—வெவ்வேறு இனம்! என்ற கருத்து பீடித்துக் கொண்டிருக்கிறது என்பதனை இருவரும் உணர்ந்தனர். வெறுப்புணர்ச்சியற்ற ஒரு நாடே கிடையாதா! இனத்தை மறந்து இதயங்கள் ஒன்று பட்டதால்

கடிமணம் புரிந்து கொண்டு வாழ்ந்திட இடமளிக்கும் நாடே கிடையாதா என்று எண்ணி ஏங்கிக் கிடந்தாள்.

'ஒன்று இருக்கிறது! போரும் பகையும் அற்ற இடம்; விரோதமும் குரோதமும் அற்ற இடம்; மனிதர்களாக வாழக் கூடிய இடம்; வெறுப்புணர்ச்சி நுழைய முடியாத இடம் ஒன்று இருக்கிறது மோனா!' அவன் கூறுகிறான்; அவள் திடுக் கிட்டுப் போகிறாள்; மறுகணம் உறுதி பெறுகிறாள்; 'உண் மைதான் ஆஸ்க்கார்! அந்த இடமே பகைப்புயல் வீசாத இடம்; நிம்மதியாக வாழ்ந்திட ஏற்ற இடம். அதனால் அங்கு நீ மட்டுமா செல்வது; எனக்கும் அதே இடம்தான்; இரு வருமே செல்வோம். நமக்கு ஏற்ற அந்த இடத்துக்கு' என்கி றாள் மோனா. அவர்கள் தேர்ந்தெடுத்த இடம், கொந்தளிக் கும் கடல்! மரணபுரியில் மட்டுமே நாம் வாழ்ந்திட முடியும்; மக்களை மாக்களாக்கிடும் வெறுப்புணர்ச்சி தீண்டாத இடம் அதுவே. வேறு எந்த இடமும் நம்மை ஏற்றுக்கொள்ளாது! உன் இனம் என்ன? என்று கேட்கும்! உன் மரபு என்ன? என்று கேட்கும். மரணபுரியில் மட்டுமே அந்தக் கேள்விகள் எழுவ தில்லை. மான் தீவிலே இடம் இல்லை! பிரிட்டன் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. அமெரிக்காவிலே தங்கிட அனுமதி இல்லை. ஜெர்மனி துரத்துகிறது, 'உள்ளே நுழையாதே; இடம் கிடையாது' என்று. அதோ ஆழ்கடல்! கொந்தளித்தபடி இருக்கிறது. அலைக்கரம் நீட்டி வா! வா! என்று அழைக்கிறது; காதலால் கட்டுண்ட என் மக்களே! 'நாடு பலவும் உங்களை வாட்டுகின்றனவா, இனபேதம் கிளறிவிடும் வெறுப்புணர்ச்சி யால். கவலைப்படாதீர்கள்! இதோ நான் இருக்கிறேன், உங்களை ஆரத்தழுவி வரவேற்றிட! இங்கு இனபேதம், கிளறி விடும் பகை உணர்ச்சி கிடையாது. வந்திடுவீர்! என்று கூவி அழைக்கிறது. பல நாடுகள் இடமளிக்க மறுத்து விட்டன இந்தக் காதலருக்கு; காதலின் மேன்மையினை அறிந்திடும் திறனற்று. இதோ இந்த இடமே நமக்கு ஏற்ற இடம் என்று வருகின்றனர்! என் பெருமை உணர்ந்து வருகின்றனர்!— என்ற மகிழ்ச்சிப் பெருக்கில்தான் கொந்தளிக்கிறதோ!

உறுதி பிறந்துவிட்டது; புது உற்சாகமே வந்துவிட்டது; இருவரும் புறப்படுகின்றனர், தமக்கு ஏற்ற நாடு நோக்கி.

குன்றேறுகிறார்கள்! மேலே செல்கின்றனர்! பகை உணர்வும் வெறுப்புணர்ச்சியும் நெளியும் இடம், அதோ கீழே, காலடியில்! அவர்கள் உயரச் சென்றுவிட்டனர்! குன்றேறிப் பார்க்கின்றனர்; கீழே ஆழ்கடல்! அலைக்கரங்கள் அழைக்கின்றன.

ஆரத் தழுவிக் கொள்கின்றனர். மேலே வானம்! கீழே கடல்! மணமேடையோ சிறு குன்று!! இயற்கையோ எழி லளிக்கிறது மணவீட்டுக்கு! எதிர்ப்பார் இல்லை! ஏளனம் பேசுவார் இல்லை! இனம் வேறு வேறு அல்லவோ என்று குளறுவார் இல்லை. காதலரிருவர் கருத்து ஒருமித்து ஆதரவு பட்டதே இன்பம்! அந்த இன்பத்தில் திளைத்திருந்தனர், புது வாழ்வு பெற்ற இருவரும்.

ஆஸ்க்கார், தனது இடுப்பில் கட்டியிருந்த பெல்ட்டை எடுத்து, மோனாவையும் சேர்த்துத் தன்னுடன் பிணைத்துக் கொண்டான். ஈருடல் ஓர் உயிர்! அந்த ஈருடலும்கூட ஒன் றாகப் பிணைக்கப்பட்டிருக்கட்டும் என்று எண்ணினான் போலும்.

கண்களைக் கண்கள் கவ்விக் கொண்டன.

அந்த கண்கள் என்னென்ன பேசிக் கொண்டனவோ! ஒரு புன்னகை பூத்திருக்கும்! இதழமுது சுவைத்திருப்பர்! நம் காலடியில் கிடக்கிறது குள்ள மனம் படைத்தோர் இருக் கும் இடம்! அவர்கள் தொட முடியாத உயரத்தில் நாம் நிற்கிறோம்; காதலின் சிகரத்தில்! இனி...சென்றுசேர்ந்தனர் கடலடி. மரணபுரி அவர்களை வரவேற்றுக் கொண்டது. மாதாகோயிலின் மணி ஓசை கிளம்புகிறது. போர் முடிந்தது; பகை ஒழிந்தது; சமாதானம் மலர்ந்தது என்று அந்த ஓசை கூறுகிறது என்பர்!

இல்லை! போய்ச் சேர்ந்தனர்; போரற்ற, பகையற்ற, பேதமற்ற, வெறுப்பற்ற இடம் போய்ச் சேர்ந்தனர் என் றல்லவா ஒலி அறிவிக்கிறது!

காதற் பயணம் முடிந்தது.போய்ச்சேரவேண்டிய இடத் திற்குப் போய்ச் சேர்ந்தனர்! வாழ்க காதல் என்று ஒலிக் கிறதோ!!

★

# 2
# இதயம் இரும்பானால்

**ஊ**ர்வலம் புறப்பட்டுவிட்டது! உலகம் அதுவரை கண்டறியாத அருமைமிகு ஊர்வலம்! இதைவிடத் திரளான மக்கள் கொண்ட ஊர்வலம் நடைபெற்றதுண்டு. கோலாகலம் அதிகம் இருந்ததுண்டு! மகிழ்ச்சி கொந்தளித்த ஊர்வலங்கள் நடைபெற்றுள்ளன. முடிதரித்த மன்னனை, ''ஆண்டவனின் பிரதிநிதி'' என்ற முறையில், பயபக்தியுடன் வரவேற்று, வழிபட, மக்கள் இருமருங்கும் கூடிநிற்க, அருளாளன் அளித்த அதிகாரம் நமக்கு அரணாக இருக்கிறது என்ற எண்ணம், பார்வையில் தெரிய, அடிபணிந்து கிடக்க, ஆணைகளை நிறைவேற்ற, கேட்டதைக் கொடுக்க, காத்துக் கிடக்கும் இந்தப் பெருங்கூட்டத்துக்கு, நாமன்றோ கண்கண்ட கடவுள் என்று எண்ணி இறும்பூதெய்திய நிலையில், மன்னர்கள் ''பவனி'' வந்ததுண்டு.

பிடிபட்ட நாட்டிலிருந்து காணிக்கையாகவும், சூறையாடியும் கொண்டு வந்த பொருட் குவியலைச் சுமந்து கொண்டு, அடிமை நிலையைப் பெற்ற முன்னாள் வீரர்கள் அஞ்சி அஞ்சி நடந்துவர, களத்திலே கடும் போரிட்டு வெற்றிக்கு உழைத்த வீரர்குழாம், மகிழ்ச்சி உமிழும் விழிகளுடனும், குருதி தோய்ந்த வாளுடனும் கெம்பீரமாக நடந்துவர, 'வாழ்க, வீரரே! வாழ்க! வெற்றி பெற்றளித்த எமது தீரரே வாழ்க!' என்று மக்கட் கூட்டம், வாழ்த்தொலி முழங்கி, இருபுறமும் நின்றிட, அதற்கென்று அமைக்கப்பட்டதும், அடக்க அரிதான புரவிகள் பூட்டப்பட்டதுமான, 'தேரிலே' அமர்ந்து, புன்னகையை இங்கும் அங்கும் வீசியபடி, நமது வாள் வலிவால் வாழுகின்றனர் இந்த மக்கள்! நமது வீரம் தரும்

வெற்றியால் ஏற்றம் பெற்றுவிட்டனர் இந்த மக்கள்! மனைகளில் மகிழ்ச்சியும், தொழிலிலே வளர்ச்சியும், வயலிலே செழிப்பும், யாரால் ஏற்படுகிறது என்பதை அறிந்துதான், இன்று வாழ்த்தி வரவேற்கிறார்கள். களத்திலே, நாம் கொட்டிய இரத்தம், இன்று இவர்களுக்கு வாழ்வு தருகிறது; அங்கு செந்நீர் கொட்டினோம்; இதோ களிப்புக் கண்ணீரைச் சிந்துகிறார்கள! நன்றி காட்டுகிறார்கள்! நல்ல மக்கள! நமது மக்கள்! நம் நாட்டவர்! என்று எண்ணிக் களிப்படையும் வெற்றி விருது பெற்ற வீராதி வீரன், படை அணிவகுப்புடன் ஊர்வலம் வந்ததுண்டு! கண்கொள்ளாக் காட்சிகள்! சிந்தைக்குச் செந்தேனாய் அமைந்த இசை நிகழ்ச்சிகளுடன், ஊர்வலங்கள்! கண்களைப் பறிக்கும் அணி மணியுடன் 'அலங்காரவல்லிகள்'' அன்னமோ, பேசும் சொர்ணமோ, அல்லிக் கூட்டமோ, அழகு மயில் ஆட்டமோ என்று கவி அறியாதாரும் களிப்பால் கவிஞர் நிலை பெற்றுச் கூறிக் குதூகலிக்கும் விதமான காட்சிகளாக அமைந்த ஊர்வலங்கள் நடைபெற்றுள்ளன. ஆனால் இதுபோன்ற ஊர்வலம் உலகிலே, இதற்கு முன்பும் நடைபெற்றதில்லை; இனி என்றும் நடைபெறாது என்று கூறத்தக்கதாக அமைந்திருந்தது.

மன்னன் ஆள்கிறான்; மக்கள் மாள்கிறார்கள்! அரண்மனை இருக்கிறது; அங்கிருந்து கிளம்பும் அழிவுப்புயல், வயலை அழிக்கிறது. வனிதையரை அழிக்கிறது. தொழிலை நாசமாக்குகிறது; தோழர்களைத் துடிக்க வைக்கிறது! அரசன் தலைக்கு முடி கொடுத்தோம். அவன் நம் குரல் வளையை நெறிக்க ஆட்களை ஏவுகிறான்!—என்று மனம் நொந்து, பேசிப் பேசி, அழுது அழுது, கண்ணீரும் வற்றிப் போன பிறகு, கனல்கக்கி, எதிர்ப்பட்டதெல்லாம் இனிப் பிடி சாம்பலாகும்! என்று எக்காளமிட்டுக் கொண்டுள்ளனர், ஏதுமறியாதவர்கள்! எதற்கும் தலையாட்டக் கூடியவர்கள்!—என்று கருதப்பட்டுவந்த மக்கள்!

அந்த மக்கள், வீறிட்டெழுந்திருக்கும் வேளையிலே, ஊர்வலம்! மன்னன் வருகிறான் ஊர்வலமாக! இராணியுடன், பெற்றெடுத்த செல்வங்களுடன்!

கடும்புயல் வீசுகிறது; காகிதப்பூ என்ன ஆகும்? பிய்த் தெறியப்பட்டு, காற்றோடு காற்றாகி, மண்ணோடு மண்ணாகி உருவம் தெரியாமல் மறைந்து போகும்; அழிந்து போகும்! அதுவன்றோ இயற்கை.

கடும்புயல் வீசிடும் போது, ஆலும் வேலும் அடியற்று வீழுமே! காகிதப்பூ கணப்பொழுதுதான் நிற்க இயலுமோ!

ஆனால், என்னென்பது அதிசயத்தை! கடும் புயலும் அடிக்கிறது, காகிதப்பூவும் இருக்கிறது! அம்மட்டோ! காகி தப் பூவை, உடன் அழைத்து வருகிறது கடும்புயல்! ஆத்தி ரம் கொண்ட மக்கள், அழைத்து வருகிறார்கள், ஆற்றலிழந்த அரசனை, ஊர்வலமாக!! அவன் கண்டறியாக் காட்சி!

மன்னன் வருகிறான் ஊர்வலமாக! மக்கள் முழக்கமிடு கிறார்கள், 'வாழ்க! வாழ்க!' என்று. ஆனால் யார் வாழ்க என்கிறார்கள்? மக்கள் 'வாழ்க!' என்று முழக்கமிடுகிறார்கள்.

தாய்மார்கள், தமது குழந்தைகளுக்குக் காட்டுகிறார் கள், ''அதோ, பார்!பார்! அவன்தான் மன்னன்!மிரள மிரள விழிக்கிறானே அவன்தான்! மண்ணில் போட்டெடுத்த பொம்மை போல இருக்கிறானே,அவன்தான்!'' என்று கூறிக் கெக்கலி செய்கிறார்கள்.

''என்ன கனிவு! எவ்வளவு குழைவு! கண்ணைப்பார் கண்ணை!'' என்று கோபத்தைக் கேலியில் குழைத்து, வழித் தெடுத்து வீசுகின்றனர்; கூடை சுமந்து கூலி பெற்றுக் கும்பி நிரப்பும் பெண்டிர் கூட்டம், இராணியைப் பார்த்து, ''இராணியாம், இராணி! அவளுக்கு என்ன அப்படி ஒரு பட்டம். அரசன் மனைவி என்று சொல், அதுபோதும்—அந்த அழிவு தேடிய ஆணவக்காரிக்கு'' என்று பேசுகின்றனர் சிலர்.

''எதற்கெடுத்தாலும் கோபம்தானா? எப்போதும் சச் சரவு செய்தபடி இருக்கத்தான் வேண்டுமா? கஷ்டப்படு கிறோம், உண்மைதான்! கண்ணீர் பொழிகிறோம்; கர்த்தன் அறிவார். அவருடைய அருட்கண் திறந்தால், எல்லாத் தொல்லையும் தொலைந்து போகும். அதை விட்டு விட்டு

அரசனை எதிர்ப்பது, அவன் ஆட்களை எதிர்ப்பது என்ப தெல்லாம் முறை அல்லவே. ஏன் வீணாக ஆபத்தையும் பாபத்தையும் தேடிக் கொள்ளுகிறீர்கள்?'' என்று ஆடவர் களுக்கு அன்பு கலந்த அறிவுரையை, அழுத கண்களைத் துடைத்துக் கொண்டு கூறிவந்தவர்கள்தான், ஆரணங்குகள்!

'விதியே எல்லாத் தொல்லைகளுக்கும் காரணம்' என்ற தத்துவத்தைத் தேவாலயத்தார் மறந்தாலும், இந்தத் தையலர் மறப்பதில்லை!

''உழைப்பைத் திருடி உல்லாசமாக வாழுகிறார்கள், உலுத்தர்கள்'' என்று ஆடவர் பேசிடும்போது, உள்ள கஷ்டம் போதாதென்று இந்தப் பாபமும் வேறு வந்து சேரு கிறதே'' என்றெண்ணிக் கன்னத்தில் கைவைத்துக் கொண்டு கவலைப்பட்டுக் கிடந்தவர்கள்தான் அந்தப் பெண்கள்.

ஆனால், அவர்களும் மாறிவிட்டார்கள், ஆடவரே கண்டு ஆச்சரியப்படத்தக்க விதத்தில். ஏன் மாற மாட்டார்கள்!

கசையடியால் உடலெங்கும் இரத்தம் பீறிட்ட நிலையில், பண்ணைமேட்டிலே வீழ்ந்து கிடந்த தகப்பனை, துடிக்கத் துடிக்க, அலற அலறத் தாக்கி, சிறைக்கு இழுத்துச் செல்லப்பட்ட கணவனை, முளையிலேயே இந்தப் போக்கிரித் தனமா என்று ஏசி முரட்டுப் பணியாட்கள் தாக்க, 'ஐயோ! அம்மா! கொல்லுகிறார்களே!' என்று கதறி ஓடிவந்து காலடி வீழ்ந்தமகனைக்கண்டபிறகு, மாறாமல்எப்படிஇருப்பார்கள்? மாறிவிட்டார்கள்! எந்த அளவுக்கு என்றால், இந்த ஆடவர் கள், சந்துமுனை நின்று பேசுவார்கள், உருட்டுவிழி காட்டினால் ஊராள்வோர் வழிக்குவந்துவிடுவார்கள் என்றெண்ணி ஏமாந்து கிடப்பார்கள்; செயல்படத் தயங்குவர் என்று கேலி பேசிவிட்டு, பெண்டிரெல்லாம், திரண்டு ஒன்றுகூடி, ''இதென்ன பேயாட்டமாடுகிறார்களே''என்று அரண்மனை யுள்ளோரும் மாளிகைக்காரரும் மருண்டு கூறிடத் தக்க விதத்தில், கிடைத்ததைக் கரத்தில் எடுத்துக் கொண்டு, ஆத்திரம் தீர ஏசிக் கொண்டு, அரண்மனை நோக்கிப் படை எடுத்துச் சென்று, துப்பாக்கி காட்டியவரைத் தூ! தூ! என்

நேசிவிட்டு, உள்ளே நுழைந்து, கிடந்ததை எடுத்து வீசி, நொறுக்கித் தூள் தூளாக்கி, அரண்மனையை அல்லோலகல் லோலப் படுத்திடும் அளவுக்கு மாறிவிட்டார்கள்!

அந்த அளவு மாறிவிட்ட பெண்கள், அரசனும் அரசி யும், முன்பு அடங்கிக் கிடந்த மக்களால், அடக்கப்பட்ட நிலையில் 'ஊர்வலம்' வரக்கண்டால், ஏசாமலா இருப்பர்! கண்டபடி ஏசத்தான் செய்வர். வெற்றிக் களிப்புடன் கூச்ச லிட்டனர்.

சீற்றம்! கேலி! மகிழ்ச்சி!—எல்லாம் கலந்த இரைச்சல்!

யாராருக்கு என்னென்ன தோன்றுகிறதோ, அவை எல்லாம் பேசுகிறார்கள்! பேசுகிறார்களா? கூவுகிறார்கள்! வார்த்தைகள் மட்டுந்தானா, கிளம்பின! பார்வைகள், வார்த்தைகளைவிடக் கடுமையாக, வேகமாக! தேக்கிவைக்கப் பட்டிருந்த பெருவெள்ளம், அணையைப் பல இடங்களிலே, ஒரே நேரத்தில், பிளந்துவிட்டால், என்ன ஆகும்! அதுதான் இது! மன்னனை ஊர்வலமாக, மக்கள் அழைத்து வந்த காட்சி! 'அழைத்து வந்த' என்பதை நீக்கிவிடுங்கள். 'இழுத்து வந்த' என்று கொள்ளுங்கள்!

அரசனுடைய காவற்படை கூட வருகிறது! அரசனைக் காத்திடும் ஆற்றலுடன் அல்ல, தமது தலை தப்பினால் போதும் என்ற அச்சத்துடன். மக்களின் பாதுகாப்புப்படை, எண்ணிக்கையில், வலுவில், துணிவில், அதிக அளவில் வந்து கொண்டிருக்கிறது. அந்தப் படை, ஏது? மக்கள், பன்னெடு நாட்கள் சிந்திய கண்ணீர்த்துளிகள், அந்த வடிவம் கொண்டு விட்டன! கொடுமைகளைத் தாங்கித் தாங்கித் தவித்த மக் கள் ஈன்றெடுத்த பயங்கரக் குழவி, அந்தப் படை!

போர்ப் பயிற்சியை முறைப்படி பெறவில்லை! உண்மை. ஆனால் முறைப்படி போர்ப் பயிற்சிபெற்ற படைகளையும் சின்னாபின்னமாக்கும் துணிவு இருக்கிறது, இந்த மக்கட் படைக்கு! ஏன்? இது, சாக அஞ்சாத கூட்டம்!

'கற்பழிக்கப்பட்ட தங்கையின் பிணத்தருகே அமர்ந்து, காதகன் கணவனாக இருக்கிறானே, நான் என்ன செய்ய இயலும்' என்று கதறிய அண்ணன் இருக்கிறான் அந்தப் படையில்!

''சாகக்கிடக்கிறாளய்யா, என் தாய்! இந்தப் பழக் கொத்து அவளுக்காக, ஐயா!''—என்று கெஞ்சியபோது, இடியெனச் சிரிப்பொலி கிளப்பி, பழக் கொத்தைப் பறித்துக் கீழே வீசி, தன் குதிரையின் குளம்பு, பழக்கொத்தை மிதித்து துவைத்திடக்கண்டு,''இதுதான் உனக்கு! ஓடி, உயிர்பிழைத் துக் கொள்'' என்று, ஆர்ப்பரித்து அமுல் செய்தவனை எதிர்த்து நின்று, அவன் வாளுக்கு இரையான, அண்ணனைக் கட்டிப் புரண்டு அழுத, தம்பி இருக்கிறான்!

வீடு வாசல் இழந்தவர்கள், வேலை இழந்து தவித்தவர் கள், களஞ்சியம் கொளுத்தப் பட்டதைக் கண்டு பதைத் தவர்கள், காலில் வீழ்ந்த போதும் கடுகளவு இரக்கமும் காட் டாதவர்களின் போக்கினால், நொந்தவர்கள் இருக்கிறார் கள், அந்தப் படையில். அவர்களுக்குப் பயிற்சி ஏன்? பயிற்சி இல்லை என்றுதான் எப்படிக் கூறிட முடியும்? நிரம்பப் பெற்றுவிட்டார்கள் பயிற்சி! கொடுமைகளைக் கண்டு கண்டு, கொடுமையைக் கொன்றொழித்தாலன்றி, நாம் வாழ முடியாது என்பதைக் கண்டு கொண்டார்கள்! இரத்தக் கறையைப் போக்க இரத்தம் கொண்டுதான் கழுவவேண்டும் என்ற பாடம் தெரிந்து கொண்டார்கள்! இரத்தம் தேடி அலைகிறார்கள்! உழைக்காமல் அலுத்திடாமல் ஊர் சொத்தை உண்டுகொழுத்து, உல்லாசம் தேடி அலைந்து, முத்துக் கலந்த பானமும், மோகனாங்கியின் அதரமும் ஒரு சேரச்சுவைத்து, அனுபவித்தவர்களின் இரத்தம் தேடி அலை கிறது, இந்தப்படை! உழைப்பாளியின் இரத்தம், மண்ணில் உறைந்து கிடந்ததைப் பார்த்த கண்களால், உலுத்தர்களின் இரத்தம் எப்படி இருக்கிறது என்று பார்க்கத் துடிக்கிறது, இந்தப் படை!

ஓநாய்களைத் துரத்திக் கொண்டு வரும் வேட்டைக் காரர்கள் என்று சொல்வது முறை! இல்லை, இல்லை! வேட்

டைக்காரர்களைத் துரத்திக் கொண்டு வரும் ஓநாய்கள் என்று கூறவேண்டும் என்பர், அரசர் பெருமானின் அடிவருடிகள்! கூறட்டுமே! அதனால் என்ன!! இப்போது வேண்டியது இரத்தம்!—என்று கூச்சலிடுகிறது, பெருங்கூட்டம்.

அந்தப் பெருங்கூட்டம் புடை சூழத்தான், பவனி வருகிறான், மன்னன், குடும்பத்துடன்.

பீரங்கி வண்டிகளை இழுத்து வருகிறார்கள்; அதன் மீது நின்றுகொண்டு, ஆர்ப்பரிக்கிறார்கள்—பெண்கள்!

துப்பாக்கி தூக்கிக்கொண்டு வருகிறார்கள்! அதன்முனையில் ரொட்டித்துண்டு, செருகப்பட்டிருக்கிறது!

செடி கொடிகளைப் பறித்தெடுக்கிறார்கள்; பீரங்கி வாயிலே திணிக்கிறார்கள்.

இரண்டு இலட்சம் இருக்கும் என்கிறார்கள், பெருந்திரள் கண்டு!

இவ்வளவு பேரும், நமக்கு விரோதிகள்!-என்று எண்ணி நடுங்குகிறாள், மன்னனை மணந்தவள்! ''இவ்வளவு பேரும், என் குடிமக்களாக இருந்தவர்கள்!''-என்று எண்ணி ஆயாசப் படுகிறான் மன்னன்.

''முன்பெல்லாம், இந்தக் கூட்டத்தவர் வந்தால், ''அப்பாவின் ஆட்கள்'' அடித்துத் துரத்துவார்களே, இப்போது மட்டும் ஏன், இவர்கள் கூவுகிறார்கள், அப்பா தலை கவிழ்ந்தபடி இருக்கிறார்!'' என்று எண்ணித் திகைக்கிறான், அழிவை வரவழைத்துக் கொண்ட அரசனின் மகன்!

''நள்ளிரவில் புகவேண்டும்; குடித்துக் கூத்தாடி, அலுத்துப் படுத்துக் கிடப்பான், மரக்கட்டைபோல! கட்டாரியால் ஓங்கி, மார்பில் குத்தவேண்டும்! உயிர் போகுமட்டும்!''— என்று நண்பனிடம், அரசனைப்பற்றி ஆத்திரத்தோடு பேசியவன், இருந்திருக்கக் கூடும், அந்த ஊர்வலத்தில்! ''ஏ! முட்டாள்! நீ ஒரு யோசனை சொன்னாயே, யாருமறியாமல், அரசனைத் தீர்த்துக்கட்ட வேண்டுமென்று! இதைப் பாரடா, ஏமாளி! இதைப் பார்! இது ஆகுமா அது!!''

என்று மற்றவன் கேட்டிருக்கக்கூடும். ''ஆமாம்! ஒரே அடியாகச் சாகடித்து என்ன பலன்! இதோ, மன்னன்,விநாடிக்கு விநாடி கொல்லப்படுகிறான்; மறுபடியும் உயிர் தரப்படுகிறது, மீண்டும் கொல்ல! மானமிழந்து, மதிப்பிழந்து, மக்களால் இழுத்து வரப்படுகிறான், மன்னன்! இது அல்லவோ, வெற்றி! மகத்தான வெற்றி! நான், மன்னனைக் கொல்லப் பார்த்தேன்! இப்போது மக்கள், மன்னனுக்கு மரண தண்டனை தருகிறார்கள்!! இதுதான் மாபெரும் வெற்றி!'' என்று அவன் கூறிச் சிரித்திருக்கச் கூடும்.

மக்கள், என்னென்ன பேசுகிறார்கள் என்று மன்னனுக்குப் புரியவில்லை! அவனுக்குத்தான் மக்களே, புரியவில்லையே! என்ன செய்வான், பாவம்!!

மகுடாபிஷேகத்தின்போதும் ஊர்வலம்; இப்போதும் ஊர்வலம்! எல்லாவற்றுக்கும் நான்தான், கிடைத்தேன்!— என்று எண்ணிக் கொண்டான், போலும்!

பாரிஸ் பட்டினத்தை நோக்கிச் செல்கிறது, ஊர்வலம்! பட்டத்தரசன் தலைநகர் வரவேண்டும் என்று மக்கள் அழைத்தனர்; 'தலைநகரா அது? தலைபோகும் நகரம்!' என்று கூறி, மன்னனை அங்கு செல்லவிடாமல் தடுத்தனர், கொலு மண்டபத்துக் கொடியோர்! மக்களின் கை ஓங்கிற்று! அரசன் இருக்கும் இடம் நோக்கிப் பாய்ந்தது மக்கள் வெள்ளம்! அதிலே சிக்கினான் மன்னன், குடும்பத்துடன்! வெள்ளம், பாரிஸ் நோக்கிப் பாய்கிறது! அதிலே, மிதந்து வருகிறான், மன்னன், உல்லாச ஓடத்தில். அமர்ந்து பழக்கப்பட்டவன்!

பாரிஸ் பட்டினத்து மேயர், மன்னனை வரவேற்கிறார். ''மன்னரே! தங்கள் வரவு நல்வரவாகுக!'' என்று; அவருக்கும் தெரியும்; அனைவரும் அறிவர் அதன் பொருள். ''பிடிபட்ட பேயனே! இனி நீ எங்கள் கைதி!'' என்பதுதான் என்று. மன்னனும், உணர்ந்திருக்கிறான், ''கைதியாக்கி விட்டீர்கள். இனி, என் கதி, உங்கள் தீர்ப்பைப் பொறுத்து இருக்கிறது'' என்று.

ஆயினும், சம்பிரதாயத்துக்காக மன்னன் பேசுகிறான்.

''மகிழ்ச்சியுடன் வருகிறேன்; மக்களிடம் நம்பிக்கை வைத்து வருகிறேன்'' என்று அரசன் கூற, மேயர் அதை மக்களுக்கு அறிவிக்கிறான். அறிவிக்கும்போது, 'மக்களிடம் நம்பிக்கை வைத்து' என்ற வார்த்தைகளையே, சொல்லாமல் விட்டுவிடுவது கண்ட, இராணி நினைவுபடுத்துகிறாள், 'நம்பிக்கையுடன்' என்ற வார்த்தையைக் கூறும்படி!

அரசனை எந்த அளவுக்கு அச்சம் பிடித்தாட்டிற்று என்பது இதிலிருந்து நன்கு தெரிகிறதல்லவா.

''அழைத்தீர்களே என்று வந்திருக்கிறேன். முடியாது என்று கூறிடும்;ஆற்றலை இழந்துவிட்டேன்; வந்திருக்கிறேன். இழுத்து வந்தீர்கள்—இங்கு நிற்கிறேன். எனக்குக் கெடுதி எதுவும் செய்யாதீர்கள். கெஞ்சுகிறேன். கெடுதி செய்யமாட்டீர்கள் என்ற நம்பிக்கையுடன் வந்திருக்கிறேன்.

திக்கற்றவன்! வலிவிழந்தவன்!உங்கள் மன்னன் உங்களிடம் தஞ்சம் புகுந்து விட்டேன்!'' என்றெல்லாம், விளக்கமாகப் பேச நேரமில்லை, பேசிப் பழக்கமில்லை! எனவேதான், மன்னன், சுருக்கமாகக் கூறினான்,'நம்பிக்கையுடன் வந்திருக்கிறேன்' என்று.

அந்த மக்கள்,எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார்கள், மன்னனிடம்! மகேசன் அருள் அவனை மன்னனாக்கிற்று! அவனுக்கு அடங்குவது ஆண்டவனுக்கு அடங்குவதாகும்! மன்னன், நாடு வாழ நல்லாட்சி செய்வான்; மக்கள் வாழ்வே என் மகிழ்ச்சி என்று எண்ணுவான். வெளிப்பகையும், உள்நாட்டிலே பசியும் பிணியும் தாக்காமல் பாதுகாப்பு அளிப்பான்!—என்றெல்லாம் நம்பினர்!

மக்களின் நம்பிக்கையை நாசமாக்கிவிட்டான் மன்னன்! இப்போது மக்களிடம் மன்றாடுகிறான், 'உங்களிடம் நம்பிக்கை வைத்துத்தான் வந்திருக்கிறேன்' என்று.

''ரொட்டி கேட்டோம்; இவன் படை விரட்டி அடித்தது! கருணை கேட்டோம், கசைஅடி கொடுத்தனர். இந்தப் பாவம் சும்மா விடாதய்யா என்று பேசினர். 'பாஸ்ட்டிலி

சிறையில் தள்ளினர், அதிகாரிகள்! இப்போது, நம்மிடம் நம்பிக்கை வைத்து வந்திருக்கிறாராம்,இந்த நல்லவர்!எப்படி இருக்கிறது, வேடிக்கை!! என்று அல்லவா, மக்கள் கேலி பேசியிருப்பர்.

பஞ்சம் தாக்கிற்று மக்களை; பவனி நடத்துகிறார்கள்! அதிலே, மன்னன் மட்டுமல்ல,அவன் இருந்த இடத்திலிருந்து எடுக்கப்பட்ட, 'ஐம்பது வண்டி தானியங்கள்' உடன்கொண்டு வரப்பட்டன.

தங்கமும், தந்தமும், பரியும் கரியும், முத்தும் அங்கியும் பவளமாலையும் - இப்படிப் பொருள்கள் கொண்டு வருவர்; வெற்றிபெற்ற படையினர், வேற்று நாட்டிலிருந்து.

இங்கு, அரண்மனையை நோக்கிக் கிளம்பிய படை ஐம்பது வண்டி தானியத்தைக் கொண்டு வருகிறது!

அன்று நாடு இருந்த நிலையை ஆத்திரம் மட்டுமன்றி, அறிவும் ததும்பிய உள்ளத்தினன் ஒருவன் எடுத்து விளக்கினான்.

'நண்பர்களே! தைரியமாக இருங்கள்! ரொட்டி! ரொட்டி! என்று ஏங்கித் தவிக்காதீர்கள்! இனி ரொட்டிக்குப் பஞ்சமில்லை!'

மக்களுக்கு மகிழ்ச்சி! அவர்கள், ஆட்சி முறை மாற வேண்டுமென்று விரும்பக் காரணமேகூட அரசியல் முறைகளுக்கான தத்துவ ஆராய்ச்சி அல்ல;அந்த ஆட்சிமுறையால், அவர்களைப் பட்டினி வாட்டியது! அதுதான் காரணம்.

ஆகவே, இனி 'ரொட்டிக்குப் பஞ்சம் இல்லை!' என்று தமது நண்பனொருவன் கூறக்கேட்டதும் மகிழ்ச்சி பிறந்தது. மறுகணம், கவலை குடைந்தது. ''ஐம்பது வண்டி கோதுமை, எத்தனை நாளைக்குக் காணும்! இவன், இனி ரொட்டிக்குப் பஞ்சம் இல்லை என்கிறானே! எப்படி?'' என்று எண்ணித் திகைத்தனர். அவர்களின் திகைப்பை அறிந்தவன்போல, அவன் தொடர்ந்து பேசினான்.

''ரொட்டிக்கு இனிப் பஞ்சம் இல்லை. ஏனெனில், இதோ ரொட்டி சுடுபவன், ரொட்டிக்காரன் மனைவி, ரொட்டிக்காரன் பிள்ளை, இவர்களை எல்லாம் அழைத்துக் கொண்டு வந்துவிட்டோம்.''

எல்லா ஒலியையும் மீறி அல்லவா, கை ஒலி கிளம்பி இருக்கும், அவன் பேச்சு கேட்டு.

ஆணவம் கலந்த கேலிப்பேச்சா அது!

கேலி இருந்தது; ஆணவம் கூடத்தான்! ஆனால், அது மட்டுமல்ல, அதன் ஊடே மறுக்கமுடியாத ஒரு அரசியல் தத்துவமும் இருந்தது. அரசன் கடமை, மக்களுக்கு உண வளிக்கவேண்டியது; வாழ வைக்க வேண்டியது; அதற்குத் தான் அரசன்! அதைச் செய்யத் தவறினால், கேட்க, தண்டிக்க, நீக்க, ஒழிக்க, மக்களுக்கு அதிகாரம் உண்டு!— என்ற ரூசோ போன்ற அரசியல் அறிவாளிகளின் ஆழ்ந்த கருத்துகள் அவ்வளவும், அந்தக் கேலிப்பேச்சிலே குழைந்து இருந்தது.

1789ம் ஆண்டு, அக்டோபர் திங்கள், ஆறாம் நாள், நடைபெற்றது, அந்த அரிய ஊர்வலம். மன்னன் புதிய இடம் வந்தான்! மக்கள் புதிய பலம் பெற்றனர்.

அன்று, இரவு பதினொரு மணி ஆகிவிட்டதாம், அரச குடும்பம், மாடி செல்ல!

வழிகாட்ட, தீப்பந்தம் பிடித்து நின்றனர், மக்கள் படையினர்!

தீப்பந்தம்! வழிகாட்டவும் உதவும்; கொளுத்தவும் பயன்படும்.

மன்னன் தலையில் சிகப்புத் தொப்பி! அந்தத் தொப்பியில் மக்கள் தயாரித்த கொடிச் சின்னம்!

சொந்த உடையைப் பறித்துக் கொண்டு, சிறை உடை கொடுத்துக் கைதிகளை உள்ளே தள்ளிப் பூட்டுகிறார்களல்லவா!

மன்னன், மாடி சென்றான்; மக்கள் களிநடம் புரிந்தனர்.

'இது சிறைதானே!' என்று எண்ணினான் மன்னன்; 'இவன் நமது கைதிதானே' என்று எக்காளமிட்டனர் மக்கள் 'துலியர்ஸ் அரண்மனை' என்ற பெயருடைய, அந்தக் கட்டிடம் கற்களாலானவை! அவை என்ன பேசும்?

இனி வரப்போகும் பயங்கரத்தை அறிவிப்பது போல, அரச குடும்பம், நடந்தபோது, எழுந்த காலடிச் சத்தம் இருந்திருக்கும்.

வரலாற்றுச் சுவடியிலே, காலம் ஒரு புதிய வரியைச் சேர்த்தது, 'மக்கள் கொதித்தெழுந்தால், மன்னன் சிறைப் படுவான்' என்று.

அதுதானா, கடைசி வரி? இல்லை! மேலும் எழுதக் காலம் துடித்துக் கொண்டிருந்தது. 'இது எங்கள் காலம்!' என்று எக்காளமிட்டபடி, மக்கள் திரள் திரளாக, பாரிஸ் பட்டினத்தில் உலவி வந்தனர்.

இழந்ததை எண்ணிய திகைப்பு, அரச குடும்பத்துக்கு; தூக்கம் வரவில்லை!

பெற்ற புதிய வெற்றியை எண்ணும்போது கட்டுக்கடங் காத களிப்பு மக்களுக்கு; அவர்களுக்கும் தூக்கம் வரவில்லை!

வேதனையும் வெட்கமும் அதிகப்படும் என்ற பயத் தால், அரச குடும்பத்தினர், ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளக் கூசினர்.

ஒருவருக்கொருவர் பேசிப்பேசி, களிப்பைப் பன்மடங்கு பெருக்கி மகிழ்ந்தனர், மக்கள்.

பாறையின் இடுக்கில், அடிபட்ட கருநாகம், ஊர்ந்து கிடக்கிறது.

கடலலை, பாறைமீது பாய்கிறது; திவலைகள், பதுங் கிக் கிடக்கும் பாம்பின்மீது விழுகின்றன.

எந்த நேரத்திலும், அலையின் அளவும் வேகமும் அதி கரிக்கக் கூடும்; பாம்பு, அடித்துக் கொண்டு போகப்படக் கூடும்.

இந்த நேரத்துக்கு, இந்த இடம் என்ற அளவிலே, பாம்பு பதுங்கி இருக்கிறது.

அடிபட்டதால் ஏற்பட்ட வலி, சீறிடக்கூட வலிவு இல்லை; மூச்சு சற்றுப் பலமாக இருக்கிறது.

அன்றைய நிலைமை அது போன்றதே! ஆனால் ஒரு வித்தியாசம். பாம்பு பதுங்கி இருக்கும் இடம் அலைக்குத் தெரிய முடியாது; ஆனால் மக்கள் நன்றாக அறிவார்கள், மன்னன் இருக்கும் இடம், நிலை இரண்டையும்!

'பாரிஸ் பட்டினத்தோரே! அறிவிழந்தபாரிஸ் பட்டினத்தோரே! மன்னனையும் அவன் மகனையும் உங்கள் கோட்டைக்குள்ளேயே காவல் வையுங்கள் என்று சொல்லிச் சொல்லி அலுத்துப் போய்விட்டது. அரச குடும்பம், தப்பித்துக் கொண்டோடத் திட்டமிட்டிருக்கிறது. மந்த மதியினரே! அதை அறியாமல் உறங்கிக் கிடக்கிறீர், திறமையாகக் காவலிருங்கள்! அந்த ஆஸ்ட்டிரியா நாட்டவளை, அவள் மைத்துனனை, மக்களை, குடும்பத்தை, அரண்மனையில் அடைத்துப் பூட்டி வையுங்கள். தவறினால், இலட்சக்கணக்கான பிரான்சுக் குடிமக்களுக்குக் கல்லறை தோண்டியவர்களாவீர்கள்! எச்சரிக்கிறேன்! ஏமாளித்தனத்தால், எல்லாவற்றையும் கெடுத்து விடாதீர்கள்! மன்னன் தப்பி ஓட முயற்சிக்கிறான். திட்டம் தயாராகிவிட்டது!

''மக்கள் நண்பன்'' என்ற இதழில், மாராட் எனும் மக்கட் தலைவன், இவ்விதம் எழுதினான்.

படித்தனர்; பதைத்தனர்; பயந்தனர். ஆமாம்! அரசன் தப்பிச் சென்றுவிட்டால் அழிவு அல்லவா நமக்கு! ஐரோப்பாவில் உள்ள பல அரசுகளும், அவன் கண்ணீர் கண்டு, படையுடன் வருவார்களே, இங்கு. எப்படி நாம் தடுத்து நிறுத்த முடியும் என்று எண்ணினர். அச்சம் மனதை வாட்டலாயிற்று.

''தப்பி ஓடவா! திட்டமா! யார்? மன்னனா? பைத்யம், பைத்யம்! விழித்த கண் மூடாமல் காவல் புரிகிறார்கள், தெரியுமா? இதற்கென்றே, ஒரு தேர்ச்சிபெற்ற படை இருக்கிறது. கீர்த்திமிக்க தலைவன் இருக்கிறான். அரச குடும்பத்தில் ஒவ்வொரு நடவடிக்கையையும் உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கும், கூர்மையான கண்கள், பலப்பல நூறு! ஒருதுளி சந்தேகம் ஏற்பட்டாலும், மிகக் கூர்மையான வாட்களை உருவிக் கொண்டு தாக்கக் கிளம்பத் தயாராக உள்ள

வர்கள் ஆயிரவருக்குமேல்! மன்னனாவது தப்பி ஓடுவதாவது! நடைபெறாது நண்பர்களே! ஒருநாளும் நடைபெறாது.'' என்று சிலர் பேசினர்.

ஆனால், எச்சரிக்கையாக இருக்கும்படி. எழுதியவர், மாராட்! மக்கள் எப்படிப் பொருட்படுத்தாமலிருப்பர்? மக்களின் நல்வாழ்வுக்காக எதையும் அழிக்கலாம் என்று துணிந்து பேசியும் எழுதியும் வந்த மாராட், தெளிவு அதிகம் பெறமுடியாத மக்கள் இடையிலே அளவற்ற செல்வாக்கு பெற்றிருந்தான். கொடியோரைக் கொன்று குவித்தால் என்ன தவறு? அவர்களைக் கொல்லாது விட்டாலோ, அவர்கள் ஏழை எளியோரைக் கொன்று குவிப்பார்கள்!—என்று பேசுவதும் எழுதுவதும், மாராட்டின் வாடிக்கை.

சுவிட்சர்லந்திலே, ஒரு மருத்துவருக்கு மகனாகப் பிறந்த மாராட், பிரான்சிலே, மருத்துவத் தொழிலில் ஈடுபட்டு மன்னரின் காவற்படையின் மருத்துவனாகப் பணியாற்றிப் புரட்சி இயக்கத்துக்காகத் தொழிலை விட்டு விட்டுப் பொறி எனக் கிளம்பி, பெரு நெருப்பாக மாறிவிட்டவன். இரத்தத்தைக் கண்டு அஞ்சாதவர்களும் மாராட் பேசுவது இரத்த வெறி ஊட்டுகிறது என்று கூறி அருவருப்படைவார்கள்! ஆனால் ஏழைகளோ, எங்கள் சார்பாக, துளியும் தயக்கமின்றிப் பேச மாராட் தவிர வேறு யார் இருக்கிறார்கள் என்று புகழ்ந்து கூறுவர். ஆதிக்கக்காரர்களை மட்டுமல்ல, அரசியல் விரோதிகளையும் அழித்தொழிப்பதிலே, மாராட் தயக்கம் காட்டியதில்லை. அதுபோன்றே ஆபத்துக்களில் சிக்கிக் கொண்டபோது சாகசம் பல செய்து தப்பித்துக் கொள்வதிலும் திறமைமிக்கவனாக இருந்தான்.

இத்தனைக்கும் நோய் அவனை வாட்டியபடி இருந்தது.

அவனே பிரான்சைப் பிடித்துக் கொண்டுள்ள ஒரு நோய்தானே!—என்று அவனை அருவருத்தோர் கூறினர். ஆனால் எதிரே அவனைக் கண்டால் அஞ்சுவர். காரணம் எண்ணற்ற மக்கள் அவனிடம் அளவற்ற பற்று வைத்திருந்தனர்.

எனவே, மன்னன் தப்பி ஓடத் திட்டமிட்டிருக்கிறான் என்று மாராட் எழுதியதும், அந்தச் செய்தி, காட்டுத் தீயெனப் பரவிற்று.

மற்ற யாரும் கண்டறியா முன்பு, மாராட், இதைக் கண்டறிந்து கூறியது, அவனுடைய திறமைக்கு ஒரு சான்றாகிவிட்டது. மன்னன் நடத்தத் திட்டமிட்ட 'சதி' மாராட்டுக்குத் தெரிய நேரிடச் செய்ததும், ஒரு விசித்திரமான நிகழ்ச்சியினால்தான்.

மாராட் நடத்தி வந்த 'மக்கள் நண்பன்' என்ற இதழுக்கு, செய்திகள் திரட்டித் தருபவர்களில், ஜாவார்தின் என்பவனும் ஒருவன். புரட்சி இயக்க ஏட்டுக்குப் பணியாற்றிக் கொண்டிருந்ததோடு, இவன் ஓர் காதலியையும் பெற்றிருந்தான். மாளிகைக்காரர் பலரை வாடிக்கைக்காரராகப் பெற்றுத் துணி வெளுக்கும் தொழில் நடத்தி வந்தவள், இவன் காதலி.

மாளிகையிலே இருந்து அனுப்பப்பட்ட சட்டை ஒன்றில் நைந்த நிலையில் ஒரு கடிதம் இருந்திடக் கண்டு, படித்துப் பார்த்தாள் அந்தப் பெண். கடிதத்தில், 'அனுமதிச் சீட்டுகள் தயாராகிவிட்டன. வண்டிகள் ஏற்பாடாகிவிட்டன' என்று எழுதப்பட்டிருந்தது. ஜாவார்தீனிடம் இந்தக் கடிதத்தைக் கொடுத்தாள்; மாராட்டிடம் அவன் தந்தான். தீப்பொறி பறக்க, மாராட் இதழில் எழுதினான்; மக்கள் பதைத்தெழுந்தனர். என்ன செய்கிறது காவற்படை? என்ன செய்கிறான் காவற்படைத் தலைவன் லாபாட்டி என்று முழக்கமிட்டனர். பாரிஸ் பட்டினம் முழுதும் இதே பேச்சாகிவிட்டது.

வெறும் வதந்தியுமல்ல இது; உண்மையில் மன்னன் தப்பி ஓடத் திட்டமிட்டிருந்தான்.

மன்னன் இருந்துவந்த இடத்தை ஆறு நூறு வீரர்கள் கண்காணித்து நின்றனர். உள்ளே, எப்பக்கம் திரும்பினாலும், துப்பாக்கி ஏந்திய வீரர்கள்! மன்னன் அறைக்கும் இராணியின் அறைக்கும் இடையே உள்ள தாழ்வாரத்தில்

கூடக் காவல்! அரச குடும்பத்தினர் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ளக்கூடப் பயந்தனர்—அவ்வளவு கண்டிப்பு, காவல்! ஆயினும், இவ்வளவுக்கும் இடையே, அரச குடும்பத்தார், தப்பித்துக் கொண்டு போய்விடத் திட்டம் தயாரித்திட முடிந்தது.

மன்னன் ஆட்சி இருந்தால் மட்டுமே, தமக்குச் 'சுக போக' வாழ்வு உண்டு என்பதால், பதுங்கிக் கிடந்த பிரபுக்களில் சிலரும், ஜெபமாலை காட்டி மக்களை மயக்கித் திரிந்த மதத் தலைவர் சிலரும், மன்னன் தப்பி ஓட வழிவகுத்துக் கொண்டிருந்தனர். மன்னன் வெளிநாடு சென்றால், படை திரட்டுவான்; படை வந்தால் புரட்சியை ஒழித்துக் கட்டலாம்—பிறகு...பிறகா! மது, மங்கை, மகிழ்ச்சி—என்று அவர்கட்கு எண்ணம்.

லூயி மன்னன் ஆட்சி நடத்த வேண்டுமா? அல்லது விலக்கப்படவேண்டுமா? மக்களின் நல்வாழ்வுக்கான முறையில் சட்டதிட்டம் தீட்டப்பட்டு அதற்கு அடங்கி மன்னன் நடந்து கொள்வதாக இசைவு தந்தால் ஆள அனுமதிக்கலாமா?

ஏன் மன்னராட்சி முறை இருக்க வேண்டும்—அதைக் கட்டுப் படுத்தவும் ஒழுங்குபடுத்தவும் ஓயாமல் மக்கள் கண் விழிப்பாக இருக்க வேண்டுமா? ஏன் இந்த வீண் தொல்லை? முறையையே மாற்றிவிட்டால் என்ன?

பலர் பல்வேறு கோணங்களிலிருந்து, பிரச்சினையை ஆராயத் தலைப்பட்டனர்; விவாதம் வலுவாகிக்கொண்டு வந்தது.

அரசியல் சட்டம், என்னென்ன உரிமைகளை மக்கள் பெறத்தக்கதாக அமைய வேண்டும் என்பது பற்றியும் பேச்சுப்புயல் வீசிக்கொண்டிருந்தது.

''ஆளப்பிறந்தவன்'' என்ற விருதுகொண்டவன் அரண்மனையில் இருந்துவர அனுமதி அளித்த மக்கள், ஆட்சிமுறை எப்படி இருப்பது என்பதைப் பேசி வகுத்துக் கொள்ளலாம்; பிறகு, மன்னனைப் பற்றிய பிரச்சினை எளிதாகிவிடும் என்று எண்ணினர்.

பிரான்சு எப்படி ஆளப்பட வேண்டும் என்பது பற்றி மட்டுமல்ல, வெளிநாட்டவரின் பகையையும் தாக்குதலையும் எவ்விதம் எதிர்த்து நின்று வெற்றி காண்பது என்பது பற்றியும், மக்கட் தலைவர்கள், கவனிக்க வேண்டி வந்தது.

''நாம் அறிவிக்கிறோம்'' என்று மன்னன் முறையில், மக்கட் தலைவர்கள், எவரும் பேச முடியாதல்லவா!

கருத்துக்கான காரணங்களை விளக்க வேண்டும், கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டும், ஐயப்பாடுகளைப் போக்க வேண்டும், மறுப்புக்களுக்கும் எதிர்ப்புக்களுக்கும் பதிலளிக்க வேண்டும், ஏளனத்தைக் கேட்டு எரிச்சலடையக்கூடாது. எதிரிகளை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது!—இப்படி எத்தனை எத்தனையோ உள்ளனவே முறைகள்! காலம் வேண்டும் அதற்கு! நெஞ்சில் உரமும் தெளிவும் வேண்டும்! நேசங்கள் முறிந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கண்டதற்கெல்லாம் கடுமையான மொழியால், எதிர்ப்புக் கூறிக் கொண்டே இருப்போம், கேட்டுக் கேட்டு மனம் வெதும்பித் தானாக ஓடிவிடட்டும். பிறகு விரட்டிவிட்டோம் என்ற மனத்திருப்தி பெறுவோம் என்ற போக்கினர் இருப்பர்; நிலைமையை அறிந்து நடந்து கொள்ளவேண்டும். எது கவனிக்கப்பட வேண்டியது? மனதுக்குச் சரி என்று பட்ட திட்டமா? அல்லது மனதை நோகச் செய்யும் போக்குடையாருடன் கூடிக் காரியமாற்றல் இயலுமா, இயலாதா என்ற பிரச்னையைத் தீர்த்துக் கொள்வதா? எது முக்கியம்—என்பதைத் தீர்மானிக்கவேண்டும். இப்படி எத்தனையோ சிக்கல்கள், மக்கள் மன்றத்தில் அமர்ந்து, புதிய திட்டம் தேடிக் கொண்டிருந்தவர்களுக்கு.

கவிழ்க்கப்படுவதற்கு முன்பு வரையில் மன்னனுக்கு எல்லா மக்களிலும் தான் மேம்பட்டவன் என்ற அழுத்தமான நம்பிக்கை இருக்கிறது; மக்களில் பெரும்பாலாருக்கும் அந்தப் பயம் இருக்கிறது. மக்கட் தலைவர்கள் விஷயம் அப்படி அல்ல! இவன் எப்படித் தலைவனானான்? எனக்குத் தெரியாதா!—என்று ஆணவம் கக்கி நிற்போரும், 'இவனெல்லாம்

தலைவனாம்!' என்று ஏளனம் பேசுவோரும், 'இவனை ஒழித்துவிட்டு மறுவேலை பார்க்கிறேன்' என்று சூளுரைப் போரும் மக்கள் மன்றங்களிலே இருப்பர்!

'என்னால்தான் எல்லாம் ஆகும்!எனக்குத்தான் எதுவும் தெரியும்! என்னைத்தான் எவரும் நம்புவர்! எனக்கு மட் டுமே எல்லா ஆற்றலும் உண்டு'—என்ற எண்ணத்தை நோயளவுக்கு முற்றவைத்துக் கொண்டவர்கள் இருந்திடுவர்.

சமரச நோக்கம் சாகசமாகவும், கூடிப் பணியாற்ற வேண்டும் என்ற போக்கு ஒட்டிக் கொள்ளும் வித்தை என்றும் பொறுமை சொரணை கெட்ட தன்மை என்றும் திரித்துக் கூறப்படும்.

இங்கிருந்து அங்கு செல்ல வேண்டும்—என்ற ஆசை எழக்கூடும்.

இடம் பிடிக்கும் இயல்பும், இன்னொருவருக்கு இட மளிக்க மனமில்லாத தன்மையும் ஏற்பட்டுவிடக் கூடும்.

இவருடன் கூடினால் இது கிடைக்கும், அவரை ஒழித் தால், இவருக்கு நம்மிடம் பற்று ஏற்படும் என்ற கணக்குகள் போட வைக்கும்.

அப்பப்பா! எத்தனை 'ஆபாசங்கள்' எழும், எத்துணை எண்ணங்கள் கிளம்பும், என்னென்ன வகையான எரிச்சல் கள் மூட்டப்படக்கூடும்!—மக்கட் தலைவர்கட்கிடையில்!

இவை யாவும், எழுச்சி பெற்ற பிரான்சிலே, மக்கள் மன்றத்திலே, தலைவிரித்தாட ஆரம்பித்தன. இவை தவிர்க்க முடியாதவை என்ற போதிலும், பிரான்சிலே, மிக அதிகமான அளவு தோன்றி, நாட்டை அலைக் கழித்தன என்பதை எவரும் மறுக்க முடியாது.

மன்னனின் கொட்டம் அடக்கப்பட்டதும், சீமான்களின் ஆணவம் தகர்க்கப்பட்டதும், மதப்போர்வைக்குள் இருந்து வந்த மதோன்மத்தர்களின் மமதை மட்டந்தட்டப்பட் டதும், என்னால்தான், என் முறையினால்தான் என்று பெருமை பேசி, உரிமை கொண்டாடிக் கட்சி கட்டினர் பலரும்.

'என்னால்தான், எனது முறையினால்தான் என்ற பேச்சு வளர்ந்து வளர்ந்து, இனியும் என் முறைப்படி நாடு நடத்தப்பட்டால் மட்டுமே நலன் கிடைக்கும்; மற்ற முறை அவ்வளவும் நாசமே ஏற்படுத்தும்' என்று கூறிடவும், அந்தக் காரணம் காட்டி நாடாளும் பொறுப்பை என்னிடம் விட்டு விடுங்கள் என்று கேட்கும் போக்கும் கொக்கரித்தது.

மன்னன் மனம் மகிழும்படி நடந்துகொண்டு, பட்டமும் பதவியும் பெற்றனர், பலர் முன்பு.

மக்கள் மன்றத்திலும், இதே போன்றார் கிளம்பினர்! பொறிபறக்கப் பேசுவதாலும், தீவிர திட்டங்களைத் தீட்டுவதாலும், செல்வாக்குப் பெற முயற்சித்தனர். அதற்காகப் பலர், சிறுசிறு முகாம் அமைத்துக் கொண்டனர். முகாமுக்கு முகாம் சண்டை! முகாமுக்குள்ளாகவே சண்டை!! வெட்டு, குத்து ஏராளம்! வீண்கலாம் அதிக அளவில்!

மந்தமதியும், எதையும் சாதிக்கத் தெரியாத போக்கும் கொண்டவனாக மன்னன் பதினாறாம் லூயி இருந்ததால், விபரீதம் ஏற்படவில்லை. தருணமறிந்து வேலை துவக்கக் கூடிய தந்திரக்காரன், மன்னனாக இருந்திருப்பின், மக்கட் தலைவர்களுக்குள்ளே கிளம்பிவிட்ட, வேறுபாடுகளையும் முரண்பாடுகளையும், தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு, ஆதிக்கத்தைக் கைப்பற்றி இருந்திருப்பான். ஒரு கட்சி மீது மற்றோர் கட்சியை ஏவி விட்டும், கட்சிக்குள்ளேயே, சிண்டு முடிந்துவிட்டும், தனக்கு வலிவு தேடிக் கொண்டிருப்பான். பதினாறாம் லூயி, அப்படிப்பட்ட மன்னனல்ல.

எப்படித் தப்பித்துக் கொண்டு ஓடிவிடலாம்? எந்தெந்த மன்னர்கள், உதவி செய்ய வருவர்?—என்ற இவை பற்றியே, எண்ணமிட்டுக் கொண்டிருந்தான். அரசியோ, ''இந்த நாட்டு எல்லையைக் கடந்தால், எல்லாத் தொல்லையும் ஒழிந்துபோகும். பழி தீர்த்துக் கொள்ள முடியும். படுகுழி வெட்டிப் புரட்சி செய்த புல்லர்களைப் போட்டுப் புதைத்திட முடியும். மன்னனை எதிர்க்கும் துணிவு, என்றென்றும் ஏற்படமுடியாதபடி, ''பயங்கர'' முறைகளைக் கையாண்டு,

ஸ்வீடன் நாட்டுச் சீமான் மகன், வண்டியோட்டியாக வடிவம் பூண்டான். மன்னனோ, பணியாள்! அரசி, தோழி! தோழி, சீமாட்டி வேடத்தில்! இப்படி ஏற்பாடுகள்!

அரச குடும்பத்தார் அந்தச் சமயத்திலும், தமது 'அட்ட காச' போக்கை மட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. வெளியே சென்றதும், அந்தஸ்துக்கு ஏற்ற உடை வேண்டுமே என்றாள், அரசி. பணிப்பெண் சென்று, பல கடைகளிலே, விலையுயர்ந்த ஆடைகளாக வாங்கினாள், மிக அதிகமான அளவு. கடைக்காரருக்கே சந்தேகம். தப்பிப் பிழைத்தோடும் வேளையிலும், 'தர்பார்முறை' கெடக்கூடாதாம்! அதனால் பல ஏற்பாடுகளைச் செய்து முடிக்க வேண்டி வந்தது. நேரம் வீணாக்கப்பட்டது. கடைசியில், காவலர்கள் கவனிக்காமல் விட்டிருந்த பக்கமாக, வெளி ஏறினர். ஸ்வீடன் நாட்டுச் சீமான் மகனல்லவா, வண்டி ஓட்டுகிறான்! அவனுக்கு, பாரீஸ் பட்டினத்துப் பாதைகள் சரியாகத் தெரியவில்லை; சுற்றிச்சுற்றி வருகிறது வண்டி.

அரசகுடும்பம் அறியுமா, தலைநகரின் வீதிகளை.

இல்லை! தோழிகள்? அவர்கட்கு மட்டுமென்ன?

அரண்மனை தெரியும், அலங்காரச் கடை தெரியும், நாட்டிய அரங்கம் தெரியும், பூந்தோட்டம் தெரியும், மற்ற இடம் தெரியாதே! ஒவ்வொரு நிமிடமும் ஆபத்து வளரும் நேரம்! வழி தெரியாமல் திண்டாடுகிறார்கள், அரச குடும்பத்தார். கடைசியில், ஒரு காவலாளியைக் கேட்டு வழி தெரிந்து கொண்டனர். வண்டி கிளம்பிற்று. பாரிஸ் பட்டினத்தைக் கடந்தாயிற்று.

பொழுது புலர்ந்தது; விஷயம் வெளிவந்தது. தப்பி விட்டார்கள்! ஓடி விட்டார்கள்! காவலிருந்தோர் ஏமாந்தனர்! கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு ஓடிவிட்டனர். சூது சூழ்ச்சி செய்ய மாட்டேன், சதி ஏதும் புரியமாட்டேன் என்று ஆயிரம் சத்தியம் செய்தான், அரசப் பதவியில் உள்ள அந்த அற்பன்! ஓடிவிட்டானே இப்படி—என்று மக்கள் கூறிக் கொதித்தனர். தேடலாயினர், ஓடலாயினர்.

அரச குடும்பமோ, வேறோர் ஊர்ப் போய்ச் சேர்ந்தது!

பாரிஸ் அல்லோலகல்லோலப் படுகிறது! மாறு வேடமணிந்த மன்னன், தன் குடும்பத்துடன் வருகிறான், வேறு நகருக்குள். அந்த ஊர், அஞ்சல் நிலைய அலுவலரின் மகன், அரசனை அடையாளம் கண்டு கொண்டான்.

''யார் நீ! எடு, அனுமதிச் சீட்டு!'' அவன் கேட்கிறான்.

அந்த நேரத்தில், அஞ்சா நெஞ்சம் காட்டவோ, ஆற்றலுடன் காரியமாற்றவோ, இயலவில்லை மன்னனால்! எந்த நேரத்தில்தான் முடிந்தது, பாவம்! இளித்தான்; விழித்தான்; குளறினான்!

''சரி! இனிப் பயன் இல்லை. நாங்கள்தான். எங்கு போக வேண்டும், வழி காட்டு'' என்று மன்னன் கூறி விட்டான்.

பலநாள் பாடுபட்டுத் தீட்டிய திட்டம், நொடிப்பொழுதில் பொடிப் பொடியாகி விட்டது. அரசியின் உள்ளம் எப்படி இருந்திருக்கும்! மன்னன், அதிகமாகக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அதிகாரியின் வீட்டு மாடிக்கு மன்னனை அழைத்துச் சென்றனர்; சென்றதும், மன்னன் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்யச் சொன்னான்! ரொட்டியும் வெண்ணெயும் தந்தான் அதிகாரி. பருக, பர்கண்டி திராட்சை ரசச்சாராயம் கொடுத்தான். மன்னன், அதைப் பருகி மகிழ்ந்து, 'இவ்வளவு நல்ல, பர்கண்டி பானத்தை நான் இதற்கு முன் பருகினதில்லை!'—என்று கூறிக் களித்தானாம்.

அரச குடும்பத்தின் இரத்தத்தைக் குடிக்க வேண்டும் என்று, பாரிசில் மக்கள் கொக்கரிக்கிறார்கள்; இங்கு மன்னன் பர்கண்டி பானம் அருந்தி மகிழ்கிறான். தன்னைப் பற்றிய கவலை துளியும் அற்ற போக்கா, அது? அதுகூட அல்ல, நிலைமை நமது சக்திக்கு மீறிச் சென்றுவிட்டது. இனி அதைப் பற்றிச் சிந்தித்து என்ன பயன்? ஏன், சிந்தித்துச் சிரமப்பட வேண்டும் என்ற நினைப்பு. அவ்வளவு சுறுசுறுப்பான இயல்பு!

'பிடிபட்டு விட்டான் மன்னன்!'—என்ற செய்தி பாரி சுக்கு எட்டிற்று. மட்டற்ற மகிழ்ச்சி மக்களுக்கு. படைகள் கிளம்பின, அரச குடும்பத்தை, மீண்டும் பாரிஸ் பட்டணம் அழைத்துக் கொண்டுவர.

முன்பு நடந்த ஊர்வலத்தில், மன்னன் கைதியாக அல்ல, மன்னனாகவே அழைத்து வரப்பட்டான்.

இம்முறையோ, மன்னன் 'கைதி' ஆக்கப்பட்டு, கட்டுக் காவலுடன் அழைத்து வரப்பட்டான்.

மன்னன் அமர்ந்திருந்த வண்டியிலேயே, காவல் அதி காரியும் ஆயுதத்துடன்.

அடக்க முடியாத துக்கம் கொண்ட நிலையில், அரசி.

சூழ மக்களும் படையும்! இப்புறம் அப்புறம் திரும்பிக் கூட வேடிக்கை பார்க்காமல், இமை கொட்டாது, அரசன் இருந்த வண்டியைப் பார்த்தபடி!

முழக்கமும் இல்லை; மகிழ்ச்சியும் இல்லை. பயங்கரமான ஒலியற்ற சூழ்நிலை.

வழிநெடுக மக்கள் பார்க்கிறார்கள்! கண்களிலே நெருப்பு மில்லை; நீரும் இல்லை!

'மன்னனை ஏசுவோர் தாக்கப்படுவர். மன்னனைப் புகழுவோர் கொல்லப்படுவர்!' என்று எழுதப்பட்ட அட்டை கள் பாரிசில் எங்கும் காணப்பட்டன. எனவே, மக்கள் வாய் மூடிக் கண்திறந்து நின்றனர்! அரச குடும்பம், கண்களையும் மூடிக் கொண்டுதான் இருந்திருக்கும்.

கைது செய்யப்பட்ட அரச குடும்பம், பாரிஸ் வந்ததும் அரண்மனையில் சிறை வைக்கப்பட்டனர்.

பிரான்சுக்கு முன்பு மன்னன் இருந்தான்! அவனை என்ன செய்வது என்று மக்கள் மன்றத்தில் கூடிப் பேசிக் கொண்டிருந்தனர். இப்போது பிரான்சுக்கு மன்னன் இல்லை; இருப்பது 'கைதி'—என்ன தண்டனை தருவது என்று மக்கள் பேசுகிறார்கள்.

தப்பிச் சென்று, வெளிநாட்டு உதவியுடன் நுழைந்து, மக்களை வெட்டி வீழ்த்தத் திட்டமிட்ட அரச குடும்பம் 'இடுகாடு' செல்லும் போதாகிலும் துக்ககீதம் பாடப்படும். அதுவுமின்றிப் பாழ்வெளியின் அமைதி போன்றதோர் நிலையில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டுச் சிறையில் தள்ளப் பட்டனர்.

தப்பி ஓடியது திங்கட்கிழமை! பிடித்து மீண்டும் பூட்டி விட்டனர், சனி அன்று! ஒரு கிழமை! அரசன் என்ற அந்தஸ்து அடியோடு அழிந்துவிட்டது. அரசன் கைதியானான். மக்கள் கூடுகின்றனர் தீர்ப்பளிக்க! அந்தத் தீர்ப்பு நிறைவேற்றப்படும் நாளிலும் ஊர்வலம் உண்டு! விதவிதமான ஊர்வலம், இந்த விந்தை வேந்தனுக்கு!

"அரசர்கள் மடியவேண்டும் அல்லது பிரான்சு மக்கள் மாள வேண்டும். இரக்கம் காட்டுவது மிருகத்தனம்! பகைவர் அனைவரும் வாளுக்கு இரையாகவேண்டும்-சட்டம் சமைத்தளிக்கும் வாளுக்கு!"

ராபஸ்பயரி பேசிவிட்டான்—மன்னனுக்கு மரண தண்டனை தந்துவிட்டான். மன்றம் கூடி, அதே தீர்ப்பை எழுதப் போகிறது பிறகு. முன் கூட்டியே, ராபஸ்பயரி முழக்கமெழுப்பி விட்டான். அவன் பேச்சு, சட்டமாகும் காலம் அது.

மன்னனை என்ன செய்வது? பிரச்சினை, பல விளைவுகளை, மனக் குழப்பங்களை ஏற்படுத்தியபடி இருந்தது. 'மன்னித்து, மக்களின் பெருங்குணத்தை உலகுக்கு எடுத்துக் காட்டுவோம்' என்று கூறினர் சிலர். 'முடி பறித்துக் கொண்டு, விரட்டிவிடுவோம். எங்கோ சென்று ஏதோ செய்து பிழைக்கட்டும்' என்றனர் ஒரு சிலர். 'மக்களே அதிகாரத்தின் பிறப்பிடம்; முதலிடம். மன்னன் அவர்களின் குறிப்பறிந்து நடந்து கொள்ளட்டும்' என்று பேசினர் மற்றும் சிலர். ராபஸ்பயரி நெளிவு ஏன் குழைவு ஏன், உள்ளதை உரைப்பேன் என்று கூறி, 'மன்னன் அல்லது மக்கள்!' என்றான். அந்தவிநாடியே, பதினாறாம் லூயி இறந்துபட்டான் என்று பொருள். பிணமாக்கிப் புதைக்க வேண்டிய, சடங்கு மட்டும், பாக்கியாக

இருக்கிறது. அது பிறகு, விரைவில். அதற்கு முன்பே பிரான்சு நாட்டின் ஆத்திரம், தீர்ப்பளித்துவிட்டது, ராபஸ்பயரியின் மூலமாக மன்னன் மடியவேண்டும் என்று!

மன்னனிடம், பாபம், எது இருந்தது மடியாமல்! அரசு இழந்து, நிலைகுலைந்து, ஆதரவு மறைந்து ஆண்டியும் படாத பாடுபட்டு, அடைபட்டுக் கிடக்கிறான்; மன்னன் சிறையில் இருக்கிறான்! ஒரு நாளைக்கு அவனைக் கொல்லப் போகிறோம்! என்று எவனெவனோ கூறுவதைக்கேட்டுக்கொண்டு! மடியாமலா இருக்கிறான் மன்னன்!

மன்னன் பிழைத்துப் போகட்டும் என்று மனிதாபிமானத்துடன் பேசுபவர், நாட்டுக்குத் துரோகிகள் என்று ஏசப்படுகிறார்கள். பரிதாபமாக இருக்கிறது பார்க்க—என்று கூறுவோர், மக்களின் பகைவர் ஆகிவிடுகின்றனர். மன்னனிடம் பரிவு காட்டியதால் கட்சிகளே கலைகின்றன; வீரர்களுக்குக் கோழைப் பட்டம் சூட்டப்படுகிறது; நாட்டுக் குழைத்தவர் விரட்டப்படுகிறார். அந்த நிலையில், மன்னன் மடிய வேண்டும் என்று ராபஸ்பயரி சொன்னான்! மடிந்து விட்டான் மன்னன்—பழைய நினைவுகள் குடைவதால் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு மனிதன் மட்டுமே இருக்கிறான்.

''மன்னனைப் பாருங்கள், அவனிடம் சமரசம் பேசி வருகிறீர்களே, எவ்வளவு அறிவற்ற தன்மை! அரசன் எவ்வழியோ, அவ்வழியேதான், பிரபுக்கள் கூட்டம். அவர்கள், நம்மை என்றும் மன்னிக்கமாட்டார்கள்! நாம் செய்ததை மறக்கவும் மாட்டார்கள். அவர்கள் உள்ளவரை, புரட்சிக்குப் பகை வெளிப்பட்டுக் கொண்டுதான் இருக்கும். அடைத்து வைத்துவிடலாம் என்கிறீர்களா! எவ்வளவு பேர்களை? எங்கே? அவர்களிடம் மயங்கித் துரோகம் செய்யாத காவலாளிகளை எங்கே கண்டுபிடித்து அமர்த்தப் போகிறீர்கள்? நான் கூறட்டுமா, பாதுகாப்பான சிறைச்சாலை! மக்களின் பகைவர்கள் அனைவரையும் அடைத்து வைக்கக் கூடிய, பெரிய பாதுகாப்பான சிறைச்சாலை, சொல்லட்டுமா! சுடுகாடு. ஆம்! அதுதான் அவர்களுக்கு ஏற்ற சிறைச்சாலை!

அங்கு சென்றால்தான், தப்பிவந்து நமது உயிர் குடிக்காம லிருப்பார்கள். அவர்களை ஓடிவிடாமல் தடுக்கக் கூடிய ஒரே காவலாளி சாவு! கொல்ல வேண்டும்! கொல்ல வேண்டும்! அதுதான் உண்மையில் பலனளிக்கும் கொள்கை. படை திரட்டு வீர்; பயன் இல்லை! பகை அழியாது!! குத்தீட்டியுடன் இரு நூறு வீரரைத் தாருங்கள்; கொன்று குவிக்கிறேன், பகை வர்களை! புரட்சி வெற்றிபெறச் செய்கிறேன்.''

மாராட் பேசுகிறான் அவ்வளவு இரத்தவெறியுடன். மறுப்பார் இல்லை! மறுக்கக்கூடிய சிலர் மாண்டனர்; பலர் தலைமறைவு ஆகிவிட்டனர். இப்போது குத்தீட்டி, கொடு வாள், வெட்டுப்பாறை—இவைதானிருக்கின்றன.

கொலையைத் தொழிலாக்கிக் கொண்டவர்கள், குதூ கலப்படுகிறார்கள், தங்களுக்கு வேலை கிடைக்கப் போகிறது என்று அறிந்து; போர் முரசு ஒலிக்கக் கேட்டதும் பிணத்தைப் பிய்த்துத் தின்னலாம் என்று பெருங்கழுகுகள் வட்டமிடுமாம்! வெட்டிக் குவிப்போம் என்று மாராட் பேசிவிட்டது கேட்டுச் சொல்லக் கூசாத கொடுமை செய்வதைத் தொழிலாகக் கொண்ட கும்பல் குதூகலப்பட்டது. 'இது அல்லவா அரசு! நமது அருமை அறிந்த அரசு' என்று.

நாட்டை ஆபத்து சூழ்ந்து கொள்ளும்போது ஆர அமர யோசித்துக்கொண்டு, அறிவுரைகள் பேசிக்கொண்டு, அருளா ளர் கூறுவதைக் கேட்டுக் கொண்டு, காலங்கடத்த முடியுமா என்று எக்காளமிட்டனர், இதயத்தை இரும்பாக்கிக் கொண்டவர்கள்.

அதற்கு ஏற்றாப்போல வெளி நாட்டவர், வேகமாகப் பிரான்சைத் தாக்கிடத் தொடங்கினர். கடும் போர் மூண்டு விட்டது. மன்னர் பலர் கூடினர், பிரான்சு நாட்டைத் தாக் கிட-புரட்சியைப் பொசுக்கிட-மன்னனை மீட்க.

'அடைபட்டுக் கிடக்கும் போதே, அவனால் வந்திடும் ஆபத்தைப் பார்த்தீர்களா? ஆதிக்க வெறி பிடித்தலையும் இனம், அவனுக்காகக் கிளம்புகிறது காணீர்! இனியுமா உங்கட்குத் தயக்கம்? மன்னன் அல்லது மக்கள்!' என்று பேசி னர் மாராட்டுகள், ராபஸ் பயரிகள்!

மக்களின் உரிமைகளைக் காக்கவும், மக்களிடையே ஒருவனோ, ஒரு கூட்டமோ கிளம்பி பொது உரிமையை, நலனை அழித்திடாதபடி பாதுகாக்கவுமான 'புனித'க் காரியத்துக்காகவே மன்னன் இருக்கிறான். அந்தக் கடமையை மறந்து அரசபீடம் கிடைத்தது தனக்காக சுகபோகத்துக்காக என்று எண்ணிடும் கணமே புனிதம் போய் விடுகிறது; மன்னன் மக்களின் பகைவனாகி விடுகிறான். பகைவரை வீழ்த்த வேண்டியவனே பகைவனாகிவிட்டால், அவனை ஒழிப்பதுதான் முறை. ஒழித்தாகவேண்டும் என்றெல்லாம் 'தத்துவம்' பேசியும், செயலில் காட்டியும் வந்த இங்கிலாந்திலேயே, செல்வாக்குள்ள ஒரு கூட்டம் கிளம்பி, 'பிரான்சு நாட்டிலே நடப்பது அரசியல் மாறுதல் அல்ல, பயங்கரமான படுகொல, குத்திக் குடலறுப்போன், வெட்டி வீழ்த்துவோன், பச்சிளங் குழந்தைகளைக்கூடக் கழுத்தைத் திருகிக் கொன்றிட அஞ்சாத பாவிகள் கூடிக் கொண்டு படுகொலை செய்து கொண்டு வருகிறார்கள். அங்கு எல்லாம் அழிந்து படுகிறது. அறம் அழிகிறது! அன்பு அழிகிறது! பண்பு அடியோடு அழிந்து விட்டது! பக்தி பூண்டோடு களைந்தெறியப்படுகிறது. இதை அனுமதிப்பது கூடாது. இதனால் பிரான்சு மட்டுமல்ல, உலகே கெடும்; மனிதகுலமே நாசமாகும். கற்றறிந்த வித்தகரும், காலத்தை வென்ற பேரறிவாளரும், நமக்களித்த, போற்றற்கரிய பொன்னான கருத்துக்களும், முறைகளும் பாழாக்கப் படுகின்றன. அவை பாருச்கு உள்ள பொதுச் சொத்து. மனிதரை மிருகத்தினின்றும் வேறுபடுத்திக் காட்டுவதற்காக ஆன்றோரும் சான்றோரும், அருளாளரும், நமக்களித்த நெறி; அது பாழாக்கப்படுகிறது. அறமறிந்தோரே! ஆண்டவனை மறவாதோரே! பண்பினை இழக்காதிருப்போரே! பாபத்தைக் கண்டு அஞ்சிடும் நல்லோரே! பிரான்சிலே தலை தூக்கி ஆடும் 'பாபத்தை' ஒழித்துக் கட்டிட முனைவீர், முன் வருவீர்! ஆபத்தில் சிக்கி இருப்பது அரசப் பதவி அல்ல; அறம்! அறம் தாக்கப்படுகிறது! அறம் அழைக்கிறது, அன்பர்களை! அஞ்சா நெஞ்சுடையோரை! அறத்தின் குரலைக் கேளீர்! அதனைக் காத்திட வாரீர்'—என்றெல்லாம் பேசியும் எழுதியும் வந்தது.

பல்வேறு நாடுகளிலேயும், பகைக்கும் கும்பல், பாயத் தயாராக இருந்தன.

யாரேனும், 'துணிந்த பேர்வழி' ஒருவன், முனைந்திருந் தால், பிரான்சிலே முளைத்த புரட்சியை அழித்திட, பண மும் படையும் ஏராளம் திரட்டிவிட முடியும். அத்தகைய சூழ்நிலை, லூயி மன்னன் முயற்சி ஏதும் முறைப்படி செய்யாமலேயே, உருவாகிக் கொண்டு வந்தது.

இனி இங்கு இருந்தால் சுட்டுச் சாம்பலாக்குவர் என்ற அச்சம் கொண்ட, பிரபுக்களில் சிலர், பிரான்சிலிருந்து தப்பித்துக் கொண்டு, இங்கிலாந்து முதலிய நாடுகளுக்கு ஓடி விட்டனர். அங்கு அவர்கள், கதை கதை'யாகக் கூறினர், பிரான்சிலே நடக்கும் பயங்கரம் பற்றி.

''வெறி பிடித்த மக்கள் இரத்தத்தைத்தான் குடிக்கி றார்கள், மனித இரத்தத்தை'' என்பான் ஒரு பிரபு.

அவன் மனைவி, ''குழந்தையின் இரத்தத்தை!''என்று கூறி அழுவாள். கேட்போர் துடிப்பர். துணிவுள்ளோர், 'என்ன நேரிடினும் சரி; இந்தப் புரட்சியை எதிர்த்தாக வேண்டும்' என்று பேசுவர்.

அமெரிக்க சுதந்திரத்தை ஆதரித்து 'நேர்மையாளன்-பாங்காளன்', என்று பெயரெடுத்த பர்க் எனும் ஆங்கில அறிஞனே, பிரான்சிலே நடக்கும் புரட்சி மனித குலத்துக்கு மாபெரும் நாசம் விளைவிப்பதாகும் என்று எழுதினான்.

டாம்பெயின் போன்ற உரிமை உணர்ச்சியை மதித்திடும் ஒரு சிலர் மட்டும், தடுத்து நிறுத்தி இராவிட்டால்,புரட்சிக்கு எதிர்ப்பு, வேகமாகவும் வலிவுள்ளதாகவும் உருவாகிவிட் டிருந்திருக்கும்.

''தக்க சமயம் இது! தலைவெட்டத்தானே தெரியும் இதுகளுக்கு! படை எடுத்துச் சென்றால், தடுத்திடும் ஆற்றல் ஏது? முறை என்ன தெரியும்! கூனும் குருடும்,மொண்டியும் நொண்டியும் கூடிக்கொண்டு கொக்கரிக்கின்றன! வீரமும் போர் முறையும் கருவியும் நிரம்ப நம்மிடம் இருக்கின்றன.

நாம் படை எடுத்துச் சென்றால், பயந்தோடிப் போவர். பத்து நொண்டிகள் கூடி எதிர்த்தாலும், ஒரு வீரனிடம், என்ன நடக்கும்? பார்ப்போம்!'' என்று எண்ணினர்.

படை திரட்டினர், பாய்ந்தனர் அன்னியப் படைகளைத் தாக்க; பாயுமுன், உள்நாட்டிலே துரோகிகளையும், சதிகாரர்களையும், அரசனிடம் கைக்கூலி பெற்று மக்களைக் காட்டிக் கொடுக்கக் கூசாத கயவர்களையும் விட்டு விட்டா நாம் களம் செல்வது! நாம் அங்கு இருக்கும்போது இந்தக் கும்பல் பின்புறமிருந்து தாக்கினால் நமது கதி என்ன ஆகும்? என்று கேட்டனர் சிலர். ''ஆமாம்!முக்கியமான பிரச்சினை'' என்றனர் பலர். 'இதிலென்ன சிக்கல்! சீவுங்கள் தலைகளை!' என்றனர் மாராட்டுகள். கொன்றனர், கொன்றனர்! எங்கும் குருதி! அதைக் கண்ட பிறகே, மனதுக்கு ஒரு நிம்மதி ஏற்பட்டது; களம் சென்றனர்.

களத்திலே கடும்போர்! அங்கு தோற்றால், எல்லாம் அழிந்துவிடும்—என்ற எண்ணம் அவர்களைப் புலியாக்கி விட்டது. வெற்றி பல பெற்றனர். அடியோடு எதிரிகள் அழிக்கப்படவில்லை என்றாலும், பலம் முறியடிக்கப்பட்டு விட்டது.

வெளிப்பகை ஒருவிதமாக அடக்கப்பட்டு விட்டது. இனி மன்னனைக் கவனிப்போம் என்று கூறினர். மீண்டும் விவாதம்! ''குற்றத்தை விசாரிக்கலாம்; தீர்ப்பளிக்கும்படி மக்களைக் கேட்கலாம்.''—என்று சிலர் வாதாடினர். 'சிறையில் இருந்தாலும், மன்னன் எவ்வளவு பேர்களைத் தன் வலையில் விழச் செய்கிறான் பார்த்தீர்களா!' என்றனர், அரச பரம்பரை பூண்டோடு அழிக்கப்படவேண்டும் என்ற கொள்கை கொண்டோர்.

அரச குடும்பமோ, அரண்மனையில்கூட அல்ல, வாட்டம் தரும் ஒரு கோட்டத்தில் அடைக்கப்பட்டு, வசதிகள் பலவும் குறைக்கப்பட்டுக் கிடந்தது.

அரசி, பலகணிவழியாக எட்டிப் பார்ப்பாள், சிலவேளைகளில்! வெட்டப்பட்ட தலையை ஈட்டியில் செருகித் தூக்கிக் காட்டிக் கூச்சலிடுவான், புரட்சியில் ஈடுபட்டவன்.

''இது நடக்கிறது வெளியே! உள்ளே இருக்கிறீர்கள் நீங்கள். உம்! எத்தனை நாளைக்கு?'' என்று கேட்கிறது அவன் பார்வை. அரசியின் கண்களில் நீர் ததும்புகிறது. ''அழுகிறாளப்பா அரசி! மக்களை அழ வைத்த அம்மணிக்கு இப்போது கண்ணீர் எப்படி இருக்கும் என்பது புரியுமல்லவா?'' என்கிறான் அவதி பல கண்டவன்.

மன்னன், மக்கள் மன்றத்திலே நிறுத்தப்பட்டான்; குற்றப்பத்திரிகை படித்தனர். வாதாட யாராவது தேவையா என்று கேட்டனர்; 'ஆம்' என்றான் அரசன். இருவர்முன் வந்தனர், மன்னன் சார்பில் வாதாட; அவர்களைச் சுட்டுத் தள்ளுவதுபோலப் பார்த்தனர் மக்கள் மன்றத்தினர். இரக்கம் காட்டச் சொல்லித்தான் அவர்கள் கேட்டனர்! சட்டம் பேசவில்லை. கருணை காட்டும்படி கூறினர்; காவலன் மீது குற்றம் ஏதும் இல்லை என்று பேசவில்லை. மன்னனுக்காக வாதாடவில்லை; மனிதனுக்காக வாதாடினர்! மக்கள் மன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை; அவ்வளவு கல் நெஞ்சமா என்றே எவருக்கும் கேட்கத்தோன்றும்! ஆனால் ஆண்டு பல, பிரான்சு மக்கள் கொடுமைப்படுத்தப்பட்டபோது, சட்டம் பேசி அவர்களைச் சாகடித்தபோது, குற்றமற்றவர்களைக் கொன்றபோது, வழக்கறிஞர்களே கிடைக்கவில்லையே, மக்களுக்காக வாதாட! ஒருவரிருவர் வாதாடியபோதும், சட்டத்தின் புனிதத் தன்மையும், மதத்தின் மாண்பும், மன்னராட்சியின் மேம்பாடும் நிலைத்திட வேண்டுமானால், கண்ணீர் கண்டு கடமையினின்றும் தவறக்கூடாது. இரக்கம் பேசிச் சட்டத்தைக் குலைக்கக் கூடாது. கர்த்தர் இருக்கிறார் இரட்சிக்க! சட்டம் இருக்கிறது தண்டிக்க!'' என்று எத்தனை நீதிபதிகள் பேசினர்—பிறகு பிரபுக்கள் கெக்கலி செய்தனர்.

மன்னன் மக்களுக்கு எதிராகச் சதிபுரிந்தான் என்று குற்றம் சாட்டி, மரண தண்டனை விதிக்கப்பட்டது மக்கள் மன்றத்தால். 721 பேர் உறுப்பினர் இருந்தனர்! 361 பேர் மரணதண்டனை விதித்தனர். நிபந்தனையின்றி மரணதண்டனை. மேலும் சிலர், சில நிபந்தனையுடன், மரண தண்டனை தரலாம் என்றனர்.

மொத்தத்தில், மன்னனுக்கு மரணதண்டனை தர வேண்டும் என்று 387 உறுப்பினர்களும், மற்ற 334 உறுப்பினர்கள் போர் முடியுமட்டும் சிறையில் வைத்திருந்து விட்டுப் பிறகு நாட்டைவிட்டு ஓட்டிவிடுவது என்றும் கூறினர்.

மரண தண்டனை உறுதிப்படுத்தப்பட்டு, மன்னனுக்கு அறிவிக்கப்பட்டது. பதறாமல் கேட்டுக் கொண்டு, சாக மூன்று நாள் அவகாசம் கேட்டான் மன்னன்.

அவ்வளவு மனஉறுதி கொண்டவனா இந்த மன்னன்! சாகப்போகும் போதுதானா, இந்த நெஞ்சு உரம் வர வேண்டும்! ஆண்டுகொண்டிருந்தபோது, காட்டாத உறுதி இப்போது தெரிகிறதே! அணையுமுன் ஒளிவிடுமாமே விளக்கு. அதுபோலப்போலும் என்று கருதினர் மன்னனைக் காவல் காத்து நின்றவர்கள்.

1793 ஜனவரி 21–ம் நாள்! வெட்டுப் பாறைக்கு அழைத்துச் செல்கிறார்கள் மன்னனை. அடைபட்டுக் கிடந்த தோட்டத்திலிருந்து, அரண்மனைக்கு எதிரே அமைக்கப்பட்ட 'கில்லட்டின்' எனும் வெட்டுப் பாறைக்கு அழைத்துச் செல்கிறார்கள்.

தளபதிகள் வந்திருக்கிறார்கள், பணிவு காட்ட அல்ல; பயணத்துக்கு ஏற்பாடு செய்ய! போர் வீரர்கள் அணிவகுத்து நிற்கிறார்கள், மரியாதை காட்ட அல்ல; தப்பி ஓடிவிடாமல் பார்த்துக் கொள்ள.

பாரிஸ் பட்டணத்திலே ஒரே அமைதி! தெருக்களிலே நடமாட்டம் இல்லை. போர் வீரர்கள் தவிர, மக்கள் இல்லை. பலகணிகள் திறக்கப்படவில்லை, கதவுகள் தாளிடப்பட்டுக் கிடந்தன. வெட்டுப்பாறை அருகே நின்று, போர்வீரர்கள் முரசு கொட்டியபடி இருந்தனர். இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. மன்னன் அழைத்துச் செல்லப்பட்டான், புரட்சி அரசு அனுப்பி வைத்த வண்டியில்.

ஆடலையும் பாடலையும், அணிவகுப்புகளையும், வெற்றி ஊர்வலங்களையும், வெறியாட்டத்தையும் பலமுறை காட்டிய பாரிஸ் பட்டினம் அன்று ஒரு புதிய பயங்கரத்

தோற்றத்தைக் காட்டி நின்றது. மன்னனைத் தூக்கிலிட மக்கள் கட்டளையிட்டுவிட்டார்கள். மக்கள் ஆணையை நிறைவேற்ற வீரர், அழைத்து வருகிறார்கள் மன்னனை. மன்னன் காணும் மூன்றாவது ஊர்வலம் - கடைசி ஊர்வலம்! வெட்டுப் பாறை! வண்டி நின்றது. மன்னன் அமைதி குலையாமல், 'சாக'த் தயாரானான். மக்களிடம் 'நான் குற்றமற்றவன்' என்று கூறத் தொடங்கினான்! 'முரசுகள் ஆர்ப்பரிக்கட்டும்' என்று உத்தரவிட்டான் அதிகாரி. மன்னன் பேசியது நின்றது; வெட்டரிவாள் கழுத்தில் விழுந்தது. துண்டிக்கப்பட்ட தலையை ஒரு போர் வீரன் தூக்கிக் காட்டினான், அங்கு இருந்தோருக்கு. 'வாழ்க குடி அரசு!' என்று கூறினர்; மக்கள் கலைந்தனர்; மன்னன் கதை முடிந்தது.

''உன் பெயர்.''

''ஆஸ்ட்ரிய அரச குடும்பத்தைச் சார்ந்த மேரி அன்டான்னய்ட் என்று என்னை அழைப்பார்கள்.''

''இப்போது உன் நிலைமை?''

''முன்பு பிரான்சு மன்னராக இருந்த லூயியுடைய நான்.''

''வயது?''

''முப்பத்து ஏழு!''

1793 அக்டோபர் திங்கள், பதினாலாம் நாள், மக்கள் மன்றம் அமைத்த வழக்கரங்கில் நடைபெறுகிறது இந்த உரையாடல். அரசியை மக்கள், ஊர் பெயர் கேட்கிறார்கள்; உற்ற வயது என்ன என்று கேட்கிறார்கள்; அருகே நெருங்கவே முடியாதே, அரசியை—சீமானாகவோ, சீமாட்டியாகவோ இருந்தாலொழிய! சாமான்யர்கள் புரட்சி அரசு அமைத்தனர்; அவர்கள் கேட்கிறார்கள், குற்றவாளியைக் கேட்கும் முறைப்படி ''உன் பெயர் என்ன?'' என்று.

குற்றங்களை மெய்ப்பிக்கச் சாட்சிகள் பேசினர்; அரசியின் மறுப்புரை கேட்டனர்; கடைசியில் மரண தண்டனை தரப்பட்டது.

அரசனிடம் இருந்ததைவிட அரசியிடம் மக்களுக்கு ஆத்திரம் அதிகம். எனவே, வெட்டுப் பாறைக்கு அழைத்துச் சென்றபோது, கைகளைப் பின்புறமாகக் கட்டி, அனைவரையும் ஏற்றிச் செல்லும் வண்டியில்தான் அழைத்துச் சென்றனர். வழிநெடுக மக்கள்—குறிப்பாகப் பெண்கள் நின்று கேலி செய்தனர்—கேவலப்படுத்தினர். அக்டோபர் 15! அரசியும் வெட்டுப் பாறையில் வீழ்ந்துபட்டாள். 'வாழ்க, குடியரசு' என்று மக்கள் முழக்கமிட்டனர்.

இரத்தவெறி பிடித்தல்லவா அலைந்திருக்கிறார்கள்! துளியும் ஈவு இரக்கம், மனிதாபிமானமற்றல்லவா, படுகொலைகள் புரிந்திருக்கிறார்கள். சமத்துவம், சகோதரத்துவம், விடுதலை என்றெல்லாம், சுவை தரும் பேச்சு பேசினரே தவிர, அவர்களின் கரங்களை இரத்தத்திலல்லவா தோய்த்து எடுத்தனர்—என்றுதான் எவருக்கும் கேட்கத் தோன்றும்.

புனிதமான கொள்கைகளுக்காக என்று கூறினாலும், படுகொலை படுகொலைதான்! முறையைத் தள்ளுங்கள், முடிவைக் கவனியுங்கள் என்று கூறுவது சமாதானமே தவிர, சன்மார்க்கத்துக்கும் சரி, அறிவுடைமைக்கும் சரி, சான்றாகாது.

புரட்சியின் பயங்கரம், அளவில் அதிகம்; மறுப்பதற்கில்லை. கொடுமைகள், கேட்கக் கூசக்கூடியவை; இல்லை என்று வாதிடுவது வீண்.

ஆனால், எண்ணிப் பார்க்க வேண்டிய மிக முக்கியமான வேறோர் பிரச்சினை இருக்கிறது.

**அன்பு, அறம், ஈவு, இரக்கம், பற்று, பாசம், பயம், பக்தி, தயவு, தாட்சணியம்-இவைபோன்ற குணங்கள் கொண்டவர்கள், எப்படி இரத்த வெறிபிடித்து அலையும் நிலை அடைந்தனர்? ஆட்டுக்குட்டிகள் போலக் கிடந்தார்களே, இவர்கள் எப்படி ஓநாய்களாக மாறினர்? அந்த மாறுதலுக்குக் காரணம் என்ன?**

பார்க்கப் பச்சைப் பசேலென்று இருக்கிறது, மலரும் கனியும் குலுங்குகிறது, சுவையும் பயனும் அளிக்கிறது, மரம். அதைக் காயவிட்டு, விறகு ஆக்கிவிட்டால், கவர்ச்சி அடியோடு போய்விடுகிறது. பிறகு நெருப்பெரிக்க மட்டுமே பயன்படுகிறது! நெருப்பில் விறகைப் போடும் வரையில் பயம் இல்லை. விறகு நெருப்பாகிவிட்டாலோ, தொடக்கூட அச்சம்; பட்டால் தொல்லை; சுட்டால் புண் ஏற்பட்டுவிடு கிறது.

பச்சையாகத்தான் இருந்தது. ஒடித்து நாசமாக்கி, உலரவிட்டு விறகாக்கிப் பிறகு நெருப்பாக்கி விட்டு, தீ சுடு கிறதே, பெரு நெருப்புச் சூழ்ந்து கொண்டதே என்று கூறு வதில் என்ன பயன்?

பிரான்சு மக்கள் இதயம், எல்லாப் பண்புகளும் பூத்துக் குலுங்கும் இடமாகத்தான் இருந்தது—அக்கிரம அரசுகள் அமைத்துக் கொண்டவர்கள், அந்த இதயத்திலிருந்த பண்பு கள் வற்றிப் போகும் அளவுக்கு, கொடுமை புரிந்தனர். விற காகிவிட்டது, பச்சைக் கொடி! இரும்பாகிவிட்டது, மக்கள் இதயம். மலர் குலுங்கிற்று கொடியாகக் கிளையாக இருந்த போது; நெருப்பாகிவிட்டது, விறகு ஆக்கப்பட்டதால் 'ராஜ பக்தி'—'தெய்வபக்தி'—எல்லாம் ததும்பும் மனம்தான் இருந்தது. கொடுமைப்படுத்திக் கொடுமைப்படுத்திப் பழி தீர்த்துக் கொள்ளவேண்டும் என்ற உணர்ச்சி தவிர வேறு எதுவும் இருக்க முடியாத நிலைக்கு மாற்றிவிட்டனர் மக்கள் இதயத்தை, மன்னர்களாக வந்த மமதையாளர்கள்.

இதயம் கொதித்தபோது, ஏளனம் செய்தனர். வேத னையை வெளியிட்டபோது கேலி பேசினர். இரத்தம் கேட்ட போதுதான் ஆதிக்கக் கூட்டம் அச்சப்பட்டது. பிறகு கேட்க லாயிற்று, ''ஈவு இரக்கம் துளியும் இல்லையா?'' என்று.

''சீமானே! உன் தந்தை வயதிருக்கும் எனக்கு! உங்கள் குடும்பத்துக்காகவே உழைத்து உழைத்து, சருகு ஆகிப் போனேன்! என்னைச் செருப்புக் காலால் உதைத்தாய், என் மனைவி எதிரில்! நினைவிருக்கிறதா? அப்போது பண்பு

இருந்ததா உனக்கு? அதைக் கண்டு சிரித்தாள் உன் சிங்கார மகள்! பண்பா அது? இப்போது எம்மிடம் பண்பு இல்லையே என்று கேட்கிறாய், உமது இல்லந்தோறும் பண்புப் பயிர் வளர்த்து வைத்தவர்போல!! என்று கேட்பான், புரட்சியால் ''பொல்லாதவன்'' ஆகிவிட்டவன். ஆனால் சீமான் இல்லை எதிரில்! பலர் இறந்தனர்; மற்றும் பலர் மறைந்தனர்! கேட்க முடியவில்லை.

உழைப்பவனைச் சுரண்டினர்; அதற்குப் பெயர் வரி விதிக்கும் முறை என்றனர். வயல்களை அழிக்கிறோம் என்றனர்; காரணம் கேட்டால் வேட்டைக் கலை வளர்க்கிறோம் என்றனர். அகப்பட்டவைகளை வாளுக்கு இரையாக்கினர். 'ஏன் ஐயா!' என்றால், 'வாளின் கூர்மை எப்படி இருக்கிறது என்று பார்த்தோம்' என்றனர். இது பிரபுக்கள், அரச குடும்பத்தினர் காட்டிய பண்பு! மறுக்க இயலுமா?

''என்ன செய்தான் உன்னை.''

''எப்படிப் பிரபுவே! அதைச் சொல்வேன்.''

''சொல்லடி கள்ளி! என்ன செய்தான்?''

''என்னைக் கெடுத்தான்.''

''பத்தினித் தங்கம் இவள்! போக்கிரிப் பெண்ணே! நீ என்ன பரிசுத்தமானவளோ? கெடுத்தானாம், கெடுத்து... இளித்துக் கொண்டு எதிரே வந்திருப்பாய், என்னமோ போலிருந்திருக்கும். சரி! சரி! எங்கே நடந்தது...?''

''எது...?''

''உம்! உற்சவம்...''

''மாதாகோயிலில்...''

''பாதகி! மாதா கோயிலிலா? எப்படி உனக்கு அந்த இடத்தைப் பாழ்படுத்த மனம் துணிந்தது?''

'ஐயையோ! நான் உண்மையாகவே உற்சவத்தைப் பற்றித்தானே கேட்கிறீர்கள் என்று நினைத்துக் கொண்டேன். கர்த்தரே! மன்னித்துவிடு. என்னை அவர் குதிரைக் கொட்டில்...''

''குதிரை என்ன செய்து கொண்டிருந்தது...''

'கொல்' என்ற சிரிப்பொலியல்லவா கிளம்பி நாச மாக்கப்பட்டு நங்கைக்கு வேதனையைத் தந்தது இவ்விதமான வழக்கு விசாரணையின் போது.

அரசியைப் போய் துளியும் பண்பில்லாமல் ஊர் என்ன, பெயர் என்ன என்றா கேட்பது, மக்கள் அமைத்த விசார ணைக் கூடத்தில் என்று கேட்பர், கேட்கிறார்கள்; ஆனால் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த நாட்களிலே, பிரபுக்கள் நடத்திய விசாரணைக் கூடங்களிலே நடந்தன பற்றிக் கேட் டனரா? இல்லை! பண்பு யாரால் எப்போது எந்த விதத்தில் அழிக்கப்பட்டது? மக்களா அழித்தனர்?

சீமானின் தூக்கத்தைத் தவளைகள் சத்தமிட்டுக் கெடுக் குமாம். இரவெல்லாம் கண்விழித்து ஏழைகள் தவளைகளைப் பிடித்து அடிக்க வேண்டுமாமே! எத்தனை நேர்த்தியான பண்பு!

''சீமானின் வயலிலே எலிகள் அழிவு உண்டாக்கும். அந்த எலிகள் உன் வயலிலே உள்ள வளைகளிலே இருந்துதான் வருகின்றன. ஆகவே, நஷ்டத்துக்கு நீதான் பொறுப்பு'' என்று நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கிய அநியாயக்காரர்களை யார் அடக்க முன் வந்தார்கள்? 'இரத்தம் வேண்டும்!' என்று கேட்ட பிறகுதான் புழுவும் போரிடும் என்று புரிந்தது.

குடித்துவிட்டுக் கூத்தாடுவது, அதற்குப் பெயர் கலை!

ஆலயச் சொத்துக்களை அபகரித்துக்கொள்வது—அதற் குப் பெயர், அருளைப் பெற்று அளிக்கும் புனிதப்பணி.

சூறையாடுவது—அதற்கு வீர விளையாட்டு என்று பெயரிடுவது.

எச்சிற் பண்டங்களைப் பசிக் கொடுமையால் தாக்குண் டவர் எதிரே வீசுவது; அவர்கள் பாய்ந்தோடிச் சென்று எடுத் துத் தின்னப்போகும்போது வேட்டை நாய்களை அவிழ்த்து விட்டுக் கடிக்க வைத்து கை கொட்டிச் சிரிப்பது! சீமானே! உனக்கு இது பொழுது போக்காக இருந்ததே! இப்போது தத்துவப் பேராசிரியனாகி பண்பு பாழாகலாமா என்றா கேட்கிறாய்—என்று கேட்பான் புரட்சிவீரன். எதிரே வர, சீமானுக்குத்தான் நடுக்கம்.

பதினாறாம் லூயி, கொடுமைக்காரனல்ல; ஆனால் கொடுமைக்காரர்களை அடக்கும் திறனற்ற மன்னன். செயல் புரியச் சங்கடம்! சிந்திக்க அதைவிடச் சங்கடம்! மக்கள் மனம் எரிமலையாகி இருந்த வேளையில் அரசனானான்; நிலைமையை அறிந்து கொள்ள முடியவில்லை. மன்னன் செய்ய வேண்டிய வேலை முடிதாங்கிக் கொள்வது, அடி வருடிகளை ஆனந்தப்படுத்துவது, ஆட்சி நடத்த அமைச்சர் களை நியமிப்பது, அவர்கள் 'கைவிரித்தால்' வேறு ஆட் களை அமர்த்துவது—இவ்வளவுதான் என்று எண்ணிக் கிடந் தான்.

அவனை மணக்க வந்த மங்கைக்கோ, ஆடம்பரம் என்றால் கொள்ளை ஆசை! நேரம் இடம் கூடப் பார்க்கத் தேவையில்லை என்ற அளவுக்கு ஆடலிலும் பாடலிலும் விருப்பம். விருந்துகள் நடத்துவர். பணம் விரயமாவது பற் றிய கவலையற்று விலை உயர்ந்த ஆபரணங்களை வாங்கு வாள். தேவைக்காக அல்ல; பிறர் பார்த்து ஆச்சரியப்பட! சூதாட்டச் சாலைகளிலே அரசியைப் பார்க்கலாம்! வெறி யாட்டங்களிலே அவள் நடுநாயகமாவாள்.

இவ்வளவு வீண் செலவுக்கும் பணம் தரும் பாட்டாளி கள் பஞ்சைகளாகிப் பராரிகளாகிக் கிடக்கின்றனர் என்பது குறித்துக் கவலை கொள்ளவில்லை; நேரமும் இல்லை; நினை வும் எழவில்லை.

''ரொட்டி கிடைக்காவிட்டால் என்னவாம்! 'கேக்' சாப்பிடட்டுமே!'' என்று சொன்ன காலமல்லவா அது!

'பசித்தால், புல் தின்னட்டுமே! வலிவு கிடைக்கும், மாடுகளுக்குக் கிடைப்பது போல!' என்று கொக்கரித்த அமுல் நிரம்பிய நாட்களல்லவா. பண்பு வளர்க்கும் பல்கலைக் கழகங்களா அமைத்தனர்? பஞ்சமாபாதகம் நெளியும் படு குழிகளைப் பளிங்குமாடங்களில் அமைத்துக்கொண்டனர்.

காற்றில் சிக்கிய மலரின் இதழும், கனவான் விருந்திலே கலந்து கொண்ட காரிகையரின் இதழும், பட்டபாடு கொஞ் சமா—அதற்குப் பெயர்தான் பண்பா?

உழைத்து அலுத்த மக்கள் உணவின்றி வாட, உலுத்தர் கூட்டம் எத்துணை அளவு பணத்தைப் பாழாக்குவது? கோடி கோடியாக! பரிவாரங்களின் செலவு கொஞ்சமா! பாழாக் கப்படும் பண்டங்கள் எத்துணை, நத்திப் பிழைப்போர் கொத் தித் தின்று ஏப்பம் விட்டபடி இருந்தனர் பெரும்பொருளை, காமவல்லிகள் கண்காட்டுவர்; கட்டித் தங்கத்தை அவர்கள் காலடியில் கொட்டுவர்! இடையொன்று அசையும்; சில இலட் சங்கள் அவள் இரும்புப் பெட்டியில் போய்ச் சேரும்.

''உன் கண்ணொளி, வைரத்துக்கு ஏது?'' என்பான் அரச குடும்பத்து இளைஞன்!

''கொடுத்துப் பார்த்தால்தானே தெரியும்'' என் பாள் கைகாரி!

வைரமாலை அவள் கழுத்துக்குப் போய்ச் சேரும்.

அவள் யார்? என்ற கேள்வி கிளம்பியதும் இவ்வளவு பணம், இந்த இடம், இந்த நேரம், என்று பதிலளிக்க ஆட்கள் அரண்மனையில் உண்டு.

சேடிக்குப் பணம் கொடுத்துச் சீமாட்டியின் துணை கொண்டு அரண்மனைக்குள் நுழைவது! அங்கு சென்றதும், அழகும் அப்பாவித்தனமும் ஒருங்கே கொண்ட அரச குடும்பத் தவளைத் தேடிப் பிடிப்பது, தேனொழுகப் பேசுவது, தேவ லோகம் போக வேண்டும் என்றோர் ஆசை, உன்னைக் காணும்வரை இருந்தது என்று கூறுவது; அவள் ''போதுமே கேலி'' என்பாள். ''அதோ அந்த மலர்ப்புதர்'' என்பான் இவன்; ஐயையோ! அது அந்தச் சீமாட்டியின் சொந்தமா யிற்றே'' என்பாள் இவள். பிறகு இடத்துக்கா பஞ்சம்! இப்படிப்பட்ட கோலாகலத்தில் மூழ்கி, நாட்டுச் செல்வத்தை ஒரு சிறுகூட்டம் பாழாக்கிக் கொண்டிருந்தது. பார்த்துப் பார்த்துப் பதைத்த மக்கள், பண்பு ஆராய்ச்சியா நடத்திக் கொண்டிருப்பர்.

ஏழையின் கண்ணீரைக் கண்டு, பெருமூச்சைக் கேட்டு, காய்ந்த வயலைப் பார்த்து, தேய்ந்து கிடக்கும் உடலைப் பார்த்து, கண்களிலே, ''கடுமை'' குடி ஏறுவது பார்த்து, ஆட்சி நடத்தினோர் பாடம் பெற்றிருந்தால், திருத்தம் ஏற்பட்டிருக்கும்; தீ பரவாதிருந்திருக்கும்.

ஒரு சமயம், பதினைந்தாம் லூயி அலங்கார வண்டியில் போய்க் கொண்டிருக்கிறான். உடன் வந்த சீமானை மன்னன் 'இந்த வண்டி என்ன விலை போகும்? சொல்லு பார்ப்போம்' என்று கேட்டான்? சீமான், '8000 லிவரி (பிரான்சு நாணயம்) இருக்கும்' என்றான். மன்னன் சிரித்துவிட்டு, 'இதற்கு 30,000 லிவரி கொடுக்கப்பட்டது. கொள்ளையே அடிக்கிறார்கள், என்னைச் சூழ இருப்பவர்கள்' என்றான்.

வழக்கு மன்றத்திலே, கோழி திருடியதாகக் கூண்டிலேற்றப்பட்ட ஏழைக்கு, நியாயம், தர்மம் இரண்டையும் மதிக்காத கயவனுக்கு எட்டாண்டு தரப்பட்டது என்று நீதிபதி கூறுகிறார்! மன்னனைச் சுற்றிக் கொள்ளைக்காரர்கள், பட்டுச் சட்டை போட்டுக் கொண்டு நிற்கிறார்கள்!

பிரபுக்களின் கோலாகல வாழ்வைக் கண்டிக்கும் துணிவு, மதத்தலைவர்களுக்கு இல்லை—ஏன்? அவர்களே பிரபு குடும்பத்தினர்! உடையிலே மாறுபாடு இருந்தது; நடவடிக்கையில் அல்ல!

ஜெபமாலை, கூர்வாள், செங்கோல் — மூன்றுமே ஏழைக்கு வாழ்வு அளிக்கவில்லை. எனவே அவனுக்கு எதிலும் நம்பிக்கை நசிந்துவிட்டது.

மாண்டவர் போக மீதமிருந்தவர்களின் மனப்போக்கு மாறிக்கொண்டு வந்தது. பணிவு குறைந்தது; துணிவு துளிர்த்தது! கண்ணீர்விட்டுக் கிடந்த மக்கள், சீமான்களைக் கண்டால், காறித் துப்பலாயினர். கசையடியால் மாண்டிருப்பான் தகப்பன், அவன் மகனோ, கல்லெடுத்து வீசுவான் சீமான் மீது. எரிச்சல், எதிர்ப்பு உணர்ச்சியை ஊட்டிற்று. இந்தக் குறியைக் கண்டு கொள்ளவில்லை, ஆட்சி நடத்தினோர்! ''இதுகள்'' எப்போதும் இதுபோலத்தான் கிடக்கும் என்று எண்ணினர்; ஏமாந்தனர்! 'பசியைத் தாங்கிக் கொள்வார்கள்; பாபம் புரியமாட்டார்கள் பாமரர்' என்றார் மதகுரு. 'அந்தப் பைத்யக்கார எண்ணம் எங்களை விட்டுப் போயே விட்டது' என்றான், கொடுமைக்கு ஆளான ஏழை. கடல் கொந்தளிக்கத் தொடங்கிற்று. கலத்திலிருந்தோர் அந்த ஒலியை அறியவில்லை; வெறிக்கூச்சல் செவியில் சங்கீதமாக வீழ்ந்து கொண்டிருந்ததால்.

மேரி அன்டாயினட், பிரான்சு நாட்டுக்கு அரசியாவதையே அந்த நாட்டு மக்கள் வெறுத்தனர்—அவள் ஆஸ்ட்டிரிய நாடு என்பதால்.

வந்த மேரியும், மக்கள் மனதைக் கவர முயலவில்லை; வசீகரத்தைக் கண்டு புகழும் சீமாட்டிகளைத்தான் தேடிக் கொண்டாள்.

மன்னன் அத்துணை அட்டகாசம் ஆடம்பரம் தேடுவதில்லை; அரசிக்கு அஃதன்றி மகிழ்ச்சி தரும் வேறு பொழுது போக்கு இல்லை. தரம் கெட்ட கொட்டகை செல்வாள்! தாறுமாறாக நடனமாடி மகிழ்வாள்! கோமாளி வேடம் பூண்டு நாடகமாடுவாள்! மக்கள் அருவருப்புக் கொள்ள என்னென்ன செய்ய வேண்டுமோ, அவ்வளவையும் சிரமப்பட்டுப் பொருள் செலவிட்டுச் செய்துவந்தாள்.

அரசி மேரியின் அணிமணிகள் உடை வகைகள் புதிது புதிதாக வடிவம், வண்ணம், மாறும். உடனே உல்லாச உலகு அந்த 'தரத்தை'ப் பின்பற்றும்.

தலையணியில் இறகுகளைச் செருகிக்கொள்ளும் வழக்கத்தை அரசி புகுத்தி இறகுகளின் விலையே ஏறிவிட்டதாம்.

இந்த அழகைத் தன் தாய் காணவேண்டுமென்று, படம் தயாரித்து அனுப்பினாளாம் அரசி. அவள் தாய் மெரயா, தெரிசா படத்தை திருப்பி அனுப்பிவிட்டு ''நான் பிரான்சு நாட்டு அரசியின்படத்தை எதிர்பார்த்தேன். இந்தக் கடைசித் தரமான நாடகக்காரியின் படத்தை எதிர்பார்ப்பதே; இந்தக் கடைசித் தரமான நாடகக்காரியின் படத்தையல்ல'' என்று கடிதமே அனுப்பினார்களாம்.

பிரான்சு நாட்டுச் செல்வவான்களுடன் லியான்சு நகரப் பட்டிலே ஆடைகள் தயாரித்து அணிவது வாடிக்கை. பெரும் பொருள் போட்டுப் பலர் அந்தத் தொழிலை நடத்தி வந்தனர். பல ஆயிரக்கணக்கான நெசவாளர் பிழைத்து வந்தனர்; திடீரென்று அரசி, லயான்சு பட்டாடையை விட்டுவிட்டு, பிரசல்ஸ் நகரில் தயாரிக்கப்பட்ட வெள்ளை வண்

ணத் துணியில் ஆடைகள் தயாரித்து அணியலானாள். அரசி அணியவே அனைவரும் அதனையே தேடினர். லயான்சு நகரில் தொழில் கெட்டது. பிழைப்பு கெட்டது. அரசி ஏன் இப்படி எம்மைக் கெடுக்கிறாள் என்று கேட்டனர் தொழிலாளர். இது தெரியாதா? பிரசல்ஸ் நகர வெள்ளை ஆடை தயாரிக்கும் தொழிலால் இலாபம் அடைவது, அரசியின் அண்ணன்! அவனுக்கு இலாபம் தேடத் தான் நமது வயிற்றில் மண் போடுகிறாள்'' என்றனர் வெகுண்ட மக்கள்! அவர்கள் கூறியதில் உண்மை இல்லாமற் போகவில்லை.

வெறுப்பு நிரம்ப ஏற்பட்டுவிட்ட நிலை. மக்களின் நிலையை எடுத்துக்கூறிடப் பலர் முன்வந்தனர்.

பகுத்தறிவு வால்டேர் மூலம் பரவிற்று, ரூசா அரசியல் தெளிவு அளித்து விட்டார்; உரிமைக்காக அஞ்சாது போரிட்டால், எத்தகைய ஆதிக்க அரசையும் வீழ்த்தலாம் என்பதை அமெரிக்கா நடத்திக் காட்டிய 'விடுதலைப் போர்' எடுத்துக் காட்டிவிட்டது.அமெரிக்கா சென்று திரும்பியவர்கள்,'கதை, கதை'யாகக் கண்டவைகளைக் கூறினர். முச்சந்திகளிலும், உணவுக் கடைகளிலும், வயலோரத்திலும், தொழிலிடங்களிலும், இதே பேச்சு!

''ஆமாம், அமெரிக்கரின் வீரம் அப்படிப்பட்டது. நம்மைப்போலவா,குட்டக் குட்டக் குனிந்து கொடுப்பார்கள். அவர்கள் மனிதர்கள்! நாம் நடைப்பிணங்கள்!'' என்று கூறுவான் ஒருவன் 'இரு, இரு; பொறு, பொறு' என்பான் இன்னொருவன். ''எது வரையில்? நமது எலும்புகளை எடுத்து இசைக் கருவி அமைத்து நரம்புகளை அறுத்தெடுத்து அதிலே குளிரச் செய்யும் வரையில் பொறுத்திருக்க வேண்டுமா?'' என்று குத்திக் கேட்பான் இன்னொருவன். 'என்னதான் செய்வது'என்பான் வேறொருவன். 'சாகுமுன் கொடுமையை எதிர்ப்பது' என்பான் அமெரிக்கா சென்றுவந்தவன்.'வலிவு?'

என்று கேட்பான் இளைத்தவன். அவன் இதயத்தைக் காட்டி 'இங்கு இருந்தால் போதும்' என்பான் அமெரிக்கக் காட்சி கண்டவன். அமெரிக்க விதைப் பண்ணையிலிருந்து புரட்சிக் கான தரமான வித்து கிடைத்தது.

இதற்கிடையில் கவலையற்ற மன்னனையும் கலங்கச் செய்யும் விதமாகப் பொருளாதார நெருக்கடிகள் கிளம்பின. அமைச்சர்கள் மாறி மாறி அமர்த்தப்பட்டனர். நெக்கர் போன்றவர்கள் தமது நிபுணத்தனம் நாட்டைக் காத்திடும் என்று நம்பி உழைத்தனர். ஆனால் மூண்டு கிடந்தவைகளைக் களைந்திட முடியவில்லை. அமைச்சர்கள் மாறினர், அவதி கள் வளர்ந்தன; மக்களின் ஆர்ப்பரிப்புக் கிளம்பிற்று. தீர்க்க முடியாத சிக்கலும், அடக்கிட முடியாத தொல்லையும், போக்கிட முடியாத நெருக்கடியும் ஏற்படும்போது மட்டுமே, ஸ்டேட்ஸ் ஜெனரல் எனும் கூட்டு மன்றத்தைக் கூட்டுவது வழக்கம். பிரான்சு மன்னர்கள் இதைக் கூட்டுவது என்றால் தயங்குவர்.

கூட்டு மன்றம் என்பது, மக்களின் பிரதிநிதிகள், மதத் துறை உறுப்பினர், பிரபுக்கள் எனும் மூன்று பிரிவின ரும் ஒன்றாகக் கூடி, நாட்டுக்கு வந்துற்ற கேடு போக்க வழி காண ஏற்பட்ட அமைப்பு.

படை பலமும், சட்டத்தின் துணையும் போதுமான தாக இல்லை; மக்களின் கூட்டுச் சக்தி திரட்டப்பட்டாலன்றி நெருக்கடி தீராது என்பதை அறிவிக்கும் சம்பவம், கூட்டு மன்றம் கூட்டுவது.

கூட்டு மன்றம் கூடினால் மன்னரின் ஆட்சி முறையைத் தகர்த்திடும் ஆற்றல் கிளம்பிவிடும் என்பது மன்னர்களுக்கு இருந்து வந்த அச்சம்.

அச்சப்பட்டுப் பயன் இல்லை. எனவே பதினாறாம் லூயி, கூட்டு மன்றம் கூட்டச் செய்தான். கூட்டு மன்றம் 1789ம் ஆண்டு மே 5ம் நாள் கூடிற்று.

மக்கள் உழைத்துப் பொருள் தருவர். பிரபுக்கள் வீரத் தால் நாட்டுக்குப் பாதுகாப்புத் தருவர்; மதத் தலைவர்கள் ஜெபம் செய்து மக்கள் உய்வுக்கான அருள் தேடித் தருவர் என்பது தத்துவம்.

நடைமுறை அடியோடு மாறிவிட்டது. மக்கள் தமது 'பங்கினை' தேவைக்கு அதிகமாகவே செலுத்திக் கொண்டு வந்தனர்; பிர்புக்களும் பூஜாரிகளும், பெயர் கண்டு திருப்திப்படச் சொன்னார்கள். செயலோ சீர்கேடானவை.

கூட்டுமன்றம் கூடுவதென்பது, பிரான்சு நாட்டிலே புனிதமான நிகழ்ச்சி.

மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. ஏற்கனவே ஏற்பட்டு விட்டிருந்த விழிப்புணர்ச்சியும் எழுச்சியும் பன்மடங்கு வளர்ந்தது.

பிரான்சு நாட்டிலே, உரிமை வேட்கையையும் ஊராளும் முறை பற்றிய தெளிவையும் ஊட்டப் பல கழகங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவைகளில் மிக அதிகமான செல்வாக்குடன் விளங்கியது ஜாகபின்ஸ் என்பவர்களின் சங்கம். இந்தச் சங்கம் புரட்சிக் காலத்தில், மிகத் தீவிரமாகப் பணியாற்றிற்று. இதிலே பயிற்சி பெற்றவர் பலர் மக்கள் மன்றத்தில் இடம் பெற்றனர்; ஆட்சிக் குழுவிலும் பணியாற்றினர். பேதமும் உட்பூசலும் ஏற்பட்டுப் பிறகு கலகலத்துப் போய்விட்டது என்றாலும், 'ஜாகபின் சங்கம்' மக்களிடையே உரிமைக் கனலை மூட்டி வெற்றி கண்டது.

வர்சேல்ஸ் நகரில் மே 2—ம் நாள் கூட்டுமன்ற உறுப்பினர்களை மன்னருக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது.

நாலாம் நாள் கூட்டு மன்றத்தினர் 'அருளைப் பெற' மாதாகோயில் சென்றனர். சாமான்யர்களே தேவாலயம் செல்லும் ஊர்வலத்தில் முன்வரிசையில் செல்ல வேண்டும் என்பது முறை. அதன்படி மக்களின் பிரதிநிதிகள் முன்னால் நடந்தனர். இரண்டாவது வரிசையில் ஆடம்பர உடையுடுத்திய பிரபுக்கள்; பிறகு மத அமைப்புக்களிலிருந்து வந்தவர்கள்; கடைசியில் மன்னன்!

மக்கள் ஊர்வலத்தின் முன்வரிசையில் வந்த, தமது 'பிரதிநிதி'களைக் கண்டதும் களிப்புடன் ஆரவாரம் செய்தனர்; பிரபுக்களை ஏற இறங்கப் பார்த்தனர். வரவேற்கவில்லை; மதத்தலைவர்களை வெறுப்புடன் பார்த்தனர்; மன்னனை அருவருப்புடன் பார்த்தனர்.

வரலாறு எவ்வாறு அமையப் போகிறது என்பதற்கான அறிகுறி அன்றே தெரிந்துவிட்டது.

பணம் பெற வழிகூறும் கூட்டு மன்றம் என்று மன்னனும் அவன் பரிவாரமும் எண்ணினர்; ஆட்சி முறை எப்படி இருக்கவேண்டும்? மக்களின் உரிமைகள் எவ்வாறு பாதுகாக்கப்படவேண்டும் என்பதற்கான திட்டம் வகுத்துக்கொள்ள இதுதான் நல்ல வாய்ப்பு என்று விடுதலை விரும்பிகள் தீர்மானித்தனர்.

அரியணையில் அரசன் அமர்ந்தான்; குடும்பத்தினர் படிகளில் அமர்ந்தனர்; வலப்புறம் மதத் தலைவர்கள், இடதுபுறம் பிரபுக்கள், கோடியில், சற்றுத் தாழ்வாக இருந்த இருக்கையில், மக்களின் சார்பிலே உறுப்பினரானோர் உட்கார்ந்தனர்; அன்றைய அரசியல் அமைப்பு அது; அதனை மாற்றத் துணிவும் வலிவும் கொண்டோர், 'முன்னிடம்' பிடிக்கவில்லை. பிடித்துக் கொள்ளப் போகிறார்கள் என்பது பார்வையால், பேச்சால் தெரிய வந்தது

மத அமைப்புக்களின் உறுப்பினர் எண்ணிக்கை 290. பிரபுக்கள் சார்பில் இடம் பெற்றோர் 266. மக்கள் சார்பில் வந்திருந்தோரின் எண்ணிக்கை 584! சமூகத்தின் படப்பிடிப்பு போல் இருந்தது, அந்தக் கணக்கு. அந்த 584 பேர்களில் 212 பேர் வழக்கறிஞர்கள், 16 மருத்துவர், 162 பேர் வணிகர்கள் அல்லது சிறு பண்ணைகளின் சொந்தக்காரர்கள்.

மன்னர், கூட்டு மன்றத்தின் கடமை குறித்துச் சொற்பொழிவு நிகழ்த்தினார். அலுவலைக் கவனிக்கச் சொல்லிவிட்டுச் சென்றனர்.

அலுவலைக் கவனிக்க, மக்களின் உறுப்பினர் துடிக்கின்றனர். பிரபுக்களும் மதச்சார்பினரும் ஒத்துழைப்புத் தரவில்லை; முன்னவர் மறுக்கின்றனர், பின்னவர் தயங்குகின்றனர்.

'நாமே அலுவலைக் கவனிப்போம்' என்று மக்களின் பிரதிநிதிகள் தீர்மானித்தனர்; மதச் சார்பினரும் ஒத்துழைக்கத் தயாராயினர். இதை நாடு வரவேற்று மகிழ்ந்தது.

பால்தரும் கொழுத்த பசுவைக் கொண்டுவந்து கட்டியிருக்கிறோம்; தொழுவத்தில் என்று ஆட்சி நடாத்தியோர்

எண்ணிக் கொண்டனர்; நாட்கள் செல்லச் செல்ல, புலி உறுமுவது கேட்டது!

தமது பிரதிநிதிகளை, மன்றத்திலும் வெளியிலும் கூடி மக்கள் உற்சாகமூட்டினர்.

''எமது அரசு ஏற்படப் போகிறது, எத்தர்களே! அறிமின்! தீர்த்துக் கட்டுமுன் திருந்துமின்!'' என்று மக்கள் கூட்டம் மமதையாளரை நோக்கி முழக்கமிட்ட வண்ணமிருந்தது. எங்கும் எழுச்சி! உரிமைப் பேச்சு! எதிர்த்து நிற்கும் போக்கு! எவரும் எமக்கு நிகர் இல்லை என்ற நோக்கம்! புயல் கிளம்புகிறது என்பது புரியலாயிற்று.

நெக்கர், மன்னன் தன் ஆட்சி முறையைத் திருத்தி அமைக்க வேண்டும் என்று வற்புறுத்திப் பார்த்தான். மற்றவர்கள் மன்னனை உசுப்பிவிட்டனர். கூட்டு மன்றத்தை மன்னன் மீண்டும் சந்திப்பது என்று ஏற்பாடு செய்யப்பட்டது. ஜூன் மாதம் 22ம் நாள் அதற்காகக் குறிக்கப்பட்டது! ஆனால் 20ம் நாளே, 'அரசனின் ஏவலர்கள் மன்றம் நுழைந்து அரசன் வருகைக்கான அமைப்புச் செய்யவேண்டும்; அனைவரும் வெளியேறுக!' என்று உத்தரவிட்டனர்.

இதுபோன்ற அட்டகாசத்தை அழித்தொழிக்கத்தான் மக்களின் உறுப்பினர் கூடினர்; அவர்களிடமே ஆட்சியாளரின் அம்புகள் வம்புக்கு நின்றன.

எதிர்ப்பு எழுந்தது. இடையில் பந்தாட்ட அரங்கிலே கூடலாம் என்ற யோசனை கூறப்பட்டது. அங்கு சென்று, கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தலாயினர்.

கூட்டு மன்றத்தைக் கூட்டிவிட்டுக் கேவலப்படுத்துவது எத்தகைய அறிவீனம் என்பதை அரசன் உணரவில்லை. அரசனை அண்டிப் பிழைத்துவந்த ஆள் விழுங்கிகள், அரசனுக்குத் தவறான பாதையைக் காட்டினர். 23ம் நாள், மன்னன் மன்றம் வந்தான். மக்களின் உறுப்பினர்களை, பக்கவாட்டத்தில் உள்ள கதவருகே நிறுத்திவைத்தனர், பிரபுக்கள் முன் வாயிற்படி வழியாகச் சென்று அமரும் வரையில்! பிறகு மக்கள் பிரதிநிதிகள் உள்ளே விடப்பட்டனர்! அவர்கள் உட்கார இடமே இல்லை. பிரபுக்களும், மதத்தலைவர்களும், இருக்கைகளைப் பிடித்துக் கொண்டனர். தம்மைக் கேவலப்

படுத்துகிறார்கள் என்று அறிந்து, வேதனைப்பட்டனர்; இருப்பினும் பொறுத்துக் கொண்டனர்.

மன்னன், அறிவுரை கூறலானான்; ''ஆகாத வழி செல்லாதீர்; அரசாள நானறிவேன்; உரிமை தேடி அலையாதீர்! வரம்பு அறிந்து வாழுங்கள். மக்களின் நல்வாழ்வை நான் கவனித்துக் கொள்வேன். இனி, மூன்று பிரிவினரும் தனித்தனி இருந்து, அலுவலைக் கவனியுங்கள்.'' என்ற கருத்துப்பட மன்னன் பேசினான். மக்கள் உறுப்பினருக்குப் பெருத்த ஆச்சரியம். இத்துணை கண்டிப்பு மன்னனுக்கு எங்கிருந்து வந்தது என்ற ஆச்சரியம். மன்னனைப் பிரபுக்கள் ஏவிவிட்டிருக்கிறார்கள் என்பது புரிந்துவிட்டது.

மன்னன் புறப்பட்டான் அரண்மனைக்கு—பிரபுக்கள் புடைசூழ! மதத்தலைவர்களில் சிலர் சென்றனர்; சிலர் மக்களோடு கூடிக் கொண்டனர். மன்றத்தைத் தொடர்ந்து நடத்தலாயினர். மன்னனின் ஆணை பெற்ற அதிகாரி, ''அரசன் உம்மைக் கலைந்து போகச் சொல்லி உத்தரவிட்டதைக் கேட்டீர்களல்லவா?'' என்று கேட்டான். ''மன்னன் கருத்தைக் கூறினார். நாங்கள் மக்கள் கட்டளையை நிறைவேற்றக் கூடினோம். அந்த வேலையை வெற்றிகரமாக முடித்திடாமல் கலையமாட்டோம், என்பதைப் போய் உன் எஜமானனுக்குச் சொல்'' என்று முழக்கமிட்டான், மிராபோ! விடுதலைப் போரின், முதல் முரசு ஒலித்துவிட்டது!!

அரண்மனையிலிருந்து உத்தரவுகள் கிளம்பின. மக்கள் மன்றம் அவைகளை ஏற்க மறுத்தது. ஆதிக்கம், ஆள்அடிமை கொள்ளும் முறை யாவும் ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்ற திட்டம் பற்றி மன்றம் பேசிற்று. நாடு மன்றத்தை வாழ்த்திற்று; மக்களின் போர்க்கோலம் கண்டு, பிரபுக்கள் பதுங்கினர். அரண்மனைக்குள் அச்சம் படை எடுத்தது. அணி அணியாக மக்கள் கிளம்புவர், எதிர்ப்படும் ஆதிக்கக்காரரை அடித்து நொறுக்குவர். விடுதலைக்குப் பாடுபடுவோரின் வேண்டுகோளின்படி, பாதுகாப்புப் படை திரண்டது. பாஸ்ட்டிலி சிறைச்சாலை தூளாக்கப்பட்டது ஜூலை 14ல்! மக்கள் அதனை விழாவாக்கி மகிழ்ந்தனர்.

# 3
# இரத்தம் பொங்கிய இருபது ஆண்டுகள்

இருபது ஆண்டுகள் இரத்தம் பொங்கிற்று—காலடி பட்ட இடமெல்லாம்! களம் பலப்பல! கடுவேகமாகப் போரிட்டவண்ணம், நாடுபல வென்றான்; நானிலம் நடுங் கிடப் போரிட்டான். எங்கும் இரத்தவெள்ளம்; பிணமலை; எலும்புக் குவியல்!! போர்! போர்! போர்! என்று முழக்கம் எழுப்பியபடி, இருபது ஆண்டுகள், எங்கும் எவரும் இவன் நடாத்தும் செயல்கள் பற்றியே பேசித் தீரவேண்டிய நிலையை ஏற்படுத்திவிட்டான்; இரத்தம் பொங்கிற்று-மலை முகடுகளில், பெரு நகரங்களில், சாலைகளில், சோலைகளில், கடலோரங்களில்.

கிளம்பிவிட்டது இவன் நடாத்திச் செல்லும் பெரும் படை என்று செய்தி வெளிவந்தவுடன், அரண்மனைகளிலே அச்சம்! மாளிகைகளிலே மருட்சி! இல்லங்களிலே திகைப்பு ஏற்பட்டுவிடும்.

எப் பக்கம் பார்த்துப் பாய்ந்திடுமோ, எவர்மீது தாக்கு தல் நடத்திடுமோ, என்ன நிபந்தனை விதித்திடுமோ என்ற ஏக்கம் குடிகொண்ட நிலையில், பேரரசர்கள் பீதி கொள்வர்.

'நேற்றுத்தானே கிளம்பிற்று! இதற்குள்ளாகவா, காடு மலை கடந்து, ஆறுகளைத் தாண்டி, அழகு நகர் மீது தாக்கு தலை நடாத்துகிறது அந்தப் படை' என்று வியந்து கேட் பர்—அவ்வளவு வேகமாக, எத்தகைய இடுக்கண்களையும் கண்டு கலங்காமல், எதிர்ப்புகளை முறியடித்தபடி, அவனு டைய படைகள் பாய்ந்திடும்.

பெருங் காற்றைத் தடுத்து நிறுத்திவிடத் தருக்களால் முடிவதுண்டோ—வேரறுந்தன்றோ பெரு மரங்கள் சாய் கின்றன, பெருங் காற்றின் முன்பு! இப்படையும் அது போன்றே, எதிர்ப்புகளை முறித்துக் கீழே சாய்த்துவிட்டு, இடியோசை போன்ற வெற்றி முழக்கமிட்டபடி, முன்னேறும் வேகவேகமாக, குறித்த இடம் நோக்கி, விட்ட கணைபோல

தாக்கும் சக்திமட்டுமல்ல, தாங்கிக் கொள்ளும் சக்தி யும் நிரம்பக் கொண்ட படை; வெட்டி வீழ்த்த மட்டுமல்ல, வீழ்ந்துபடவும் அஞ்சாது நடமிடுகிறது படை.

பயம்கொண்டு பதுங்க மறுக்கிறது; பசி, தூக்கம், அதனைத் தொட அஞ்சுகின்றன! பாய்வோம், பாய்வோம், மடைகளை உடைத்தெறிந்திடும் வெள்ளம்போல, தீயைப் போல என்று கூறாமற் கூறிக்கொண்டு செல்கிறது; இரத்தம் பொங்குகிறது! இருபது ஆண்டுகள், இதுபோல!

''எதிரியின் படைபலம் மிக அதிகம்.''

''பொருள் என்ன? விளங்குகிறதா? நம்மிடம் எதிரிக்கு உள்ள பயம் அவ்வளவு. பெரும்படை திரட்டித்தான், தனக்கு வர இருக்கும் ஆபத்தைத் தடுத்துக் கொள்ள முடியும் என்று கருதுகிறான். வீரதீரமாகப் போரிடுபவர்கள் என்பதை உணர்ந்துகொண்டு விட்டனர் மாற்றார் என்பதற்கு இதை விடச் சான்று வேண்டுமோ! படை வருகிறது என்றதும் தொடை நடுக்கம் ஏற்பட்டுவிடுகிறது மாற்றார்களுக்கு. இந்த நிலை கண்டு, கெக்கலி செய்திட வாரீர்! கிலிகொண்டு ஒரு பெருத்த கும்பல் கூடிவிட்டிருக்கிறது. விரட்டி அடித் திடக் கிளம்புவீர், வெற்றி நம்மை அழைக்கிறது! வீரர் களுக்கு அழைப்பு, கோழைகளுக்கு அல்ல! கோழைகளா!! கோழைகள், இந்தக் கொடியின் கீழ் ஏது!! இது வீரர் படை, வெற்றிப்படை; தீரர் படை, தியாகப் படை!!''

களம் நோக்கிப் பாயும்போது படை வரிசையிலே, பாடி வீடுகளிலே இதுபோன்ற உரையாடல்!

எதிரியின் படைபலம் அதிகம் என்று கேள்விப்பட்ட வுடன் என்ன ஆகுமோ நமது கதி என்ற ஏக்கம் கொள்வ தில்லை. எதிரியின் படை அதிகமாகவாக, வேட்டை மும்முர

மாகும், விருதுகள் விதம்விதம் பெறலாம், விருந்தின் சுவை மிகுதியாகும் என்று எண்ணிக் களித்திடுவர், அந்தப் படையினர்.

கிளம்பிற்றுகாண் சிங்கக் கூட்டம்! கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக் கூட்டத்தை!!—என்று கவிகள் சிந்து பாடிடுவர்,அத்துணை வீரம் கொப்பளிக்கும் படையினரிடம்! வீரம் கொப்பளிக்கும் நிலையினர் பாய்ந்திடும் இடமெங்கும், இரத்தம் பொங்கும்!

வெறியோ? மண்டலங்களைத் தாக்கிட வேண்டும், மாடுமனை அழித்திட வேண்டும், இரத்தச் சேற்றிலே புரண்டிட வேண்டும் என்ற வெறியோ எனில், வெறி அல்ல! எமது கொடி எங்கணும் பறந்திட வேண்டும்! எமது ஆணைக்கு எவரும் அடங்கிடுதல் வேண்டும்! எமக்கு நிகர் எவரும் இல்லை என்ற பேருண்மை நிலை நாட்டப்பட வேண்டும் என்றனர் எழுச்சி கொண்டிருந்த படை வீரர்கள்—கொண்டிருந்தனரா! எழுச்சி ஊட்டப்பட்டிருந்தது அவர்களுக்கு!

வெறி—எழுச்சி—ஆர்வம்—ஆவல்--இவை வெவ்வேறு வார்த்தைகள்—வெறும் வார்த்தை மாற்றங்கள் மட்டுமா இவை! நிலைமை மாற்றங்கள்? நினைப்பிலே ஏற்படும் மாற்றங்கள்! போக்கிலே மூட்டப்படும் மாற்றங்கள்! அந்த மாற்றங்களுக்கு ஏற்ப விளைவுகள் வெவ்வேறாகின்றன.

தாயகத்தைத் தருக்கர் தாக்கிடும்போது, நாட்டுப் பாதுகாப்புக்காக, நாட்டு உரிமைப் பாதுகாப்புக்காகப் போரிடும் படையினர் காட்டிடும் வீரம், எழுச்சியை அடிப்படையாகக் கொள்கிறது.

பிறிதோர் நாட்டின்மீது, படை எடுத்துச் சென்று, தாக்கிப் பிடித்திடலாம், தாள் பணியச் செய்திடலாம், கொன்று குவித்திடலாம், கொள்ளை அடித்திடலாம், சிட்டுப்போல, மல்லிகை மொட்டுப்போல, உள்ள மெல்லியலார் கிடைப்பர்; அலறித் துடித்திடுவர் அதரம் சுவைத்திடும் போது என்ற எண்ணம் கொண்டிடுவோர் வெறிகொண்டலைகின்றனர் என்னலாம்.

நீதிக்காக, நேர்மைக்காக, உரிமை காத்திட, அநீதியை அழித்திடக் கிளம்பும் படை வீரதீரத்துடனும், தியாக உணர்வுடனும், தாளின்கீழ் வீழ்ந்து தாசராவதைக் காட்டிலும், மண்ணிலே மாற்றான் வாளால் வெட்டுண்டு நம் தலை உருளட்டும், கழுகு உடலைக் கொத்தித் தின்னட்டும், செத்துத் தொலைந்தான் சீறிப் போரிட்டவன் என்று கூறிக் கேலி பேசட்டும், தாக்க முனைந்தோம், தாள் தொழுதான், உயிர்ப்பிச்சை தாரும். உமக்கு நான் எதனையும் உடைமையாக்குகிறேன் என்று கெஞ்சினான் என்று எதிரி பேசிடும் பேச்சைவிட, சாவு, கொடுமையுள்ளது அல்ல என்ற உணர்ச்சியுடன் போரிடும் படை, மண்ணுக்காக அல்ல, மானங்காத்திட, மாண்பு நிலைத்திடப் போரிடும் படை என்றும் நிலைத்த புகழ் பெறுகிறது. பாவாணர்களின் புகழாரம் சூட்டப்பட்டு, பலப்பல தலைமுறைகளுக்குப் பின்பும், வீடுதோறும் வீடுதோறும், பேசப்படும் காதைகளுக்கும் பாடப்படும் கவிதைகளுக்கும் உறுபொருளாகிறது, அவர் காட்டும் வீரம்!

படைகளைக் கொன்று குவித்து, மண்டலங்களை மண்மேடுகளாக்கி, மணிமுடிகளைக் காலால் உதைத்து விளையாடி, நகர்களைக் கொளுத்தி, நாசத்தை நடமிடவிட்டுக் கொள்ளை அடித்துக், குமரிகளைக் கற்பழித்து, அடிமை கொண்டு, எஞ்சியோரைச் சித்திரவதை செய்து, சரிந்துவிழும் கட்டிடம், அதன்கீழ் சிக்கிக் கூழானோர் தொகை, பற்றி எரியும் வீடுகள், ஆங்கு பதறிக் கருகிடும் மக்கள்—இவை போன்ற நெஞ்சம் உருக்கும் நிலைமைகளைக் கண்டு, கை கொட்டிச் சிரித்திடும்போக்கு, வீரம் அல்ல—வெறி!

எழுச்சி கொண்டவன் வீரன்!

தியாக உணர்வுடன் போரிடுபவன் மாவீரன்!

வெறி உணர்ச்சியால் ஆட்டி வைக்கப்படும் நிலையிலே போரிடுபவன், மாவீரன் ஆகான்—மனிதன் மிருகமாகிறான்.

ஒரு நாட்டுப் படைபற்றி எதிரி நாட்டுப்படை கூறிடும் கருத்தினை ஆதாரமாகக் கொண்டு பெறப்படும் எண்ணம், முற்றிலும் உண்மையானது என்று கூறுவதற்கில்லை. போர்

நடந்திடும்போதும், அதை அடுத்துச் சில ஆண்டுகள் வரையிலும்கூட, உலவிடும் கருத்துக்களைக் கொண்டு, உண்மை என்ன என்பதனைக் கண்டறிதலும் முடியாத காரியமாகும்.

போர் குறித்துப் பல ஆண்டுகளுக்குப் பிறகு, பொது நிலையினர், ஆய்வாளர்கள், விருப்பு வெறுப்பற்ற நிலையிலே வெளியிடும் கருத்துக்களே, பெரும் அளவு உண்மை நிலையை எடுத்துக் காட்டுவனவாக இருக்க முடியும்.

ஒரு நாட்டுக்கும் மற்றோர் நாட்டுக்கும் ஏற்பட்டுவிடும் தொடர்புபற்றி, மூண்டுவிடும் போர்பற்றி, எல்லாக் காரணங்களும், எல்லா உண்மைகளும், எப்படியும் வெளிவந்தே தீரும் என்றுகூடக் கூறுவதற்கில்லை. எத்தனையோ உண்மைகள் வெளிவராமலே போய்விடக் கூடும். மூச்சடக்கி மூழ்கி மூழ்கி எடுத்தாலும், கடலிலே உள்ள எல்லா முத்துக்களையுமா எடுத்து விடமுடிகிறது!!

போர் என்பதே வெறிதான்—மனிதன் நிலைதடுமாறிடும்போதும்—அறநெறி மறைந்திடும்போதும் விளைவதே போர்! போர் எந்த நோக்கத்துக்காயினும் சரி, காரணம் எத்துணை உண்மையானதாக இருப்பினும், நோக்கம் எவ்வளவு தூய்மையானதாக அமையினும், போர் வெறுக்கத்தக்கதே! கண்டிக்கத்தக்கதே! ஒருநாடு இழைக்கும் கொடுமை, கொண்டிடும் அநீதியான போக்கு என்பவைகளைக் கண்டிக்க, களைந்தெறிய நடத்தப்படும் போர் எனினும் கூடப், போர் மனிதகுலத்துக்கு இழைக்கப்படும் துரோகம் என்பதிலே ஐயமில்லை. எத்துணை புனிதத்தன்மையுடையது என்று எடுத்து விளக்கப்பட்டாலும், போர்ச்சூழ்நிலை ஏற்பட்ட பிறகு, மக்களிடம், விரும்பத்தகாத வெறுப்புணர்ச்சிகள், கிளம்பி விடுவதைத் தடுக்க இயலுவதில்லை—அதனைக் கவனிக்கும்போது போர் மனித குலத்துக்குக் கேடு பயக்கும் என்பதை மறுக்க இயலாது என்று பொது நீதி பேசுவோர் உளர்; அந்தப் பொது நீதியை நிலைநாட்டுவது முடியாததாக இன்று வரை இருந்துவருகிறதே தவிர, அதன் மாண்பினை, உண்மையினை, மறுத்துப் பேசுவார் எவரும் இல்லை.

இந்த வையகம் வலிவுள்ளவனுக்கே! எவன் வலிவுள்ள வன் என்பதனை அவ்வப்போது எடுத்து விளக்கியாக வேண்டி நேரிட்டுவிடுகிறது; போர் அக்காரணம் பற்றியே தேவைப்படு கிறது; போரின்போது வலிவு மிக்கவன் வாகை சூடுகிறான்; ஆற்றல் அற்றவர்கள் அடிபணிகின்றனர்; அவனிக்குப் புதிய தோர் ஆற்றலரசு கிடைக்கிறது—போரின் விளைவு இஃதே என்று கூறுவோரின் தொகை மிகக் குறைந்துபட்டுவிட்டது. உள்ளனர், இப்போதும் ஒரு சிலர்—போர் தவிர்க்க முடியா தது—என்று கூறிட! தேவைப்படுகிறது என்றுகூடக் கூற முனைவர், அறிவுத் தெளிவு பெற்றநிலை இன்று அவனியில் இல்லாதிருந்தால்.

போரற்ற, புகைச்சலற்ற ஓர் உலகு, பொன்னுலகாகும் —ஐயமில்லை!

மலர்தரும் செடி கொடிகளும், கனி தரும் மரங்களும் கொண்டதாகவே தோட்டங்கள் இருத்தல் வேண்டும்—பூங்காக்கள் கொண்டதாகவே புவி இருக்க வேண்டும் என்று விரும்புவதும் கூறுவதும், தவறு அல்ல—அந்த நிலைக்காகப் பாடுபடுவது தேவையானதுங்கூட! ஆனால் மலர்த்தோட்டத் துக்குப் பக்கத்திலே கள்ளிக் காளான் முளைத்துவிடுகிறது—பக்கத்திலா?—தோட்டத்திலேகூட!! என்ன செய்யலாம்? கனி குலுங்கும் மரத்தைக் கருமந்தி பிடித்தாட்டுகிறது; கடுங் காற்றுக் கிளம்பி மரங்களைப் பெயர்த்தெடுத்து விடுகிறது!! என் செய்வது?

கேடுகள் முளைக்கும்போது, அவற்றினை எதிர்த்து வீழ்த்தி, நல்லனவற்றைப் பாதுகாத்துத் தீர வேண்டும்!

அது மட்டும் போதாது—கேடுகள் மீண்டும் எழாதபடி, பாதுகாப்பு ஏற்படுத்திக் கொண்டாக வேண்டும்.

இது தேவையானதுதான்—இதனை வற்புறுத்த, விளக்கம் அளிக்க, இதற்கு ஆதரவு திரட்டிடத் தேவையா—எவரும் இசைவரே என்று கூறத்தோன்றுகிறது. ஆனால் இதிலே உள்ள சிக்கல் யாதெனில், களைந்தெறியப்பட வேண் டிய கேடு எது—என்ன இலக்கணம் கண்டு ஒன்றினைக் கேடு என்று சொல்ள முடிகிறது என்பதுதான்.

இரத்தம் பொங்கிய இருபது ஆண்டுகள், நாடு பல வற்றைத் தாக்கி, அரசு பலவற்றைக் கவிழ்த்து, பல இலட்சக் கணக்கான மக்களைக் கொன்று குவித்தது; கொடுமை என் பதற்கு வாதங்கள் தேவையா? மகனை இழந்த தாயின் கண் ணீர் போதாதா! தந்தையை இழந்த மதலையின் கதறல் போதாதா! தாலி இழந்த தையலாின் தவிப்புப் போதாதா! எனின்—எத்தகைய போரிலும்—அறம் காத்திட, உரிமை பெற்றிட—மானம் காத்திட—நடத்தப்படும் போரிலும், நெஞ்சு நெக்குருகச் செய்யும் இவை காணப்படுகின்றன! எனவே, இவைகள் காணப்படும் போர் கொடுமை நடத்தப் பட்டிருக்கிறது என்பதற்குப் போதுமான சான்று என்றால், எல்லாப் போரிலும் இவை நேரிட்டு விடுகின்றன. எனவே இவைகளைக் கொண்டு, கேடு எது என்று கண்டறிய இயல வில்லை.

எனவே, சிக்கல் நிரம்பிய பிரச்சினை, கேடு எது என் பதனைக் கண்டறிவதே!

இருபது ஆண்டுகள் இரத்தம் பொங்கிடச் செய்ததே கேடன்றோ, கொடுமையன்றோ, அக்ரமமல்லவோ, அநீதி யன்றோ!—என்போருக்கு, ஆம்! ஆம்! இருபது ஆண்டுகள் இரத்தம் பொங்கிற்று! மறுக்கவில்லை! ஆனால், கேடுகளைக் களைய, மீண்டும் கேடுகள் ஏற்படாமலிருக்கும் வலிவான ஓர் நிலைமையைஏற்படுத்தவேண்டும் என்றநோக்கத்துடனேயே, இரத்தம் பொங்கிட இருபது ஆண்டுகள் போர் நடாத்தி னேன்—வெறும் வெற்றிகளுக்காக அல்ல—விருதுகள் பெற அல்ல—வெறியினால் அல்ல! போர் நடாத்திப், பொல்லாங்கு மூட்டவல்லவர்களை அடக்கி ஒடுக்கி, ஒருபெரும் பேரரசு அமைத்து, அந்தப் பெரும் பேரரசின் கீழ் எல்லா மக்களும் வாழ்ந்து, வளம்பல பெற்று, நீதி நிலைத்திட, நிம்மதி ஒங் கிடத்தக்க நன்னிலை பெறவேண்டும் என்ற நோக்கமே கொண்டேன்—என்றுதான், இருபது ஆண்டுகள் இரத்தம் பொங்கிட வைத்த இணையில்லாப் போர் வீரன், தளர்வு காட்டாத படைத்தலைவன், அச்சமற்ற பெருவீரன், ஆற்ற லுக்குத் தனி இலக்கணம் வகுத்துக் காட்டிய அருந்திறன்

மிக்கோன் நெப்போலியன் கூறினான். இருபது ஆண்டுகள் இரத்தம் கொட்டப்பட்டதற்காகத் தன்னை மன்னிக்கும் படி கேட்டானில்லை. என் நோக்கம் நல்லது; கணக்குப் பொய்த்துப்போய்விட்டது; அவ்வளவுதான்!-என்று மட்டுமே கருத்தறிவித்தான்.

''இருபதாண்டுகள் இரத்தம் பொங்கச் செய்தவனா? ஐயோ! அத்துணைகொடியவனா! மனிதகுலத்தைக்கருவறுக்க வந்த மாபாவியா!—என்று சண்டித்து, அவன் கல்லறைமீது காரித்துப்புகின்றனரோ, இன்று? இல்லை! கல்லறையைக் காணும்போது, கண்களில் நீர் துளிர்க்கிறது. அவன் நடாத்திய போரிலே கொட்டப்பட்ட இரத்தம் பற்றி அல்ல, அவன் காட்டிய வீரம்பற்றி, போர் முறைகளை வகுத்த நேர்த்தி பற்றி, பெற்ற வெற்றிகளைப் பற்றி, அவனைச் சுற்றி அமைந்திருந்த புகழொளி பற்றி எண்ணுகின்றனர்—எண்ணியதும், நீர் துளிர்க்கிறது, கண்களில்! நானிலத்தை நடுங்க வைத்த ஓர் மாவீரன் கல்லறைமுன் நிற்கிறோம் என்ற உணர்வு; வலிவு பெறுகிறது; வாழ்த்தத் தோன்றாவிட்டாலும், வசைபாட முடியவில்லை, வணக்கம் கூற முனைகிறோம்.

இந்தக் கல்லறையிலா உள்ளான், கடும்போர் பல புரிந்த நெப்போலியன்—காவலர் பலரைக் கவிழ்த்தவன்—புதிய காவலர்களை நொடிப்போதிலே உண்டாக்கிக் காட்டியவன். இந்தக் கல்லறைக்குள்ளா அடைபட்டுக்கிடக்கிறது, பல நூற்றாண்டுகளாக எங்கும் எவரும் கண்டறியாத வீர உணர்ச்சி—போர்த்திறன்!! என்று வியப்படைகின்றனர்.

கல்லறை காட்சிப் பொருளாகிவிட்டது.

கல்லறையைக் கவனிக்கத் தொடங்கி விட்டோம்—கடைசியாகக் காணவேண்டிய கல்லறையை; முதலிலேயே!!

உலகினரில், அரசு நடாத்துவோர் ஆற்றல் அறிவோர், படை நடாத்துவோர், போர்முறை வகுப்போர் என்பவர் பலரும், சுட்டிக் காட்டிக் கல்லறை காண்மின்! கல்லூரிகள் பலவும் கற்பிக்க இயலாத கருத்துக்களைப் பெற்றிடலாம்—அத்தகைய கல்லறை இது, என்று சுட்டிக்காட்டிடத்

தக்கதாகிவிட்டது—நெப்போலியனின் கல்லறை! ஆனால், காலத்தை வென்று நிற்கும் கல்லறைக்கு உரியவனாகிவிட்ட நெப்போலியன், படுத்துறங்கிய தொட்டில்?

தங்கத்தாலானது அல்ல! மணிகள் இழைக்கப்பட்டது அல்ல! மாளிகைக் கூடத்திலே அதனை ஆட வைத்து மதுர கீதமிசைத்துத் தாதிமார் பாடவில்லை—எத்தனையோ ஏழைக் குழந்தைகளிலே அதுவும் ஒன்று. கைகளை ஆட்டுகிறது! கால்களால் உதைக்கிறது! உற்றுப் பார்க்கிறது! கலகலவெனச் சிரிக்கவில்லை; பார்ப்பவர், மறுபடியும் பார்க்க விரும்புவர்—அதுபோன்றதோர் கவர்ச்சித் தோற்றம் இருக்கிறது. ஆனால் எத்தனையோ குழந்தைகள் உள்ளன, அந்தத் தீவினில்!! கார்சிகா எனும் தீவில்!

தீவினில் பிறந்தவன் வேறோர் தீவினில் அடைபட்டு இறந்துபடப் போகிறான் என்றா கண்டார்கள்!

தீவினில் பிறந்த இவன், நாடுபல ஆளப்பிறந்தவன் என்றும் அன்னை எண்ணவில்லை; முடிவிலே எலினா தீவிலே சிறைவைக்கப்பட்டு, இறந்து படப்போகிறான் என்ற எண்ணம் எழக் காரணமும் இல்லை.

கார்சிகா தீவிலிருந்து கிளம்பி, எலினா தீவு போய்ச் சேர்ந்தான்—எத்தகைய பயணம்! இடையிலே என்னென்ன வகையான தங்குமிடங்கள்! பெரும் படைகள் போரிட்ட களங்கள்! கோட்டை கொத்தளங்கள்! கொட்டும் குளிர் சூழ்ந்த சதுப்புகள்! பயங்கரச் சரிவுகள்! மலையுச்சிகள்! பெருநகரங்கள்! அரண்மனைகள்! உல்லாசக் கூடங்கள்! பூங்காக்கள்! புலவர்குழாம் கூடும் கழகங்கள்! கூடாரங்கள்! குழலியர் கொலுவிருக்கும் மணிமாடங்கள்!!

எங்கெங்கெல்லாமோ சென்றான்—எத்துணை எத்துணையோ நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்டான்!

கடைசியில், ஒரு தீவிலே பிறந்தவன் மற்றோர் தீவிலே இறந்துபடுகிறான்!

அன்னையின் மடியிலே தவழ்ந்திருந்தான் பிறந்த தீவில் கார்சிகாவில்! இறந்துபோது, பிடித்தடைத்த மாற்றாரின் முகாமுக்குப் பக்கத்திலே, இறுதிவரை அவனுடன் இருக்கும்

வாய்ப்புப் பெற்ற ஆருயிர் நண்பர்கள் அருகிருந்து கண்ணீர் மல்கிட இறந்துபட்டான்—நீங்காத துயிலுற்றான் என்றனர் உடனிருந்தோர்.

மண்டலங்கள் பலவற்றை மருட்டிய மாவீரனான மகன் இறந்துபட்ட இடத்துக்கு நெடுந்தொலைவிலே, பெற்ற மாது இருந்தாள். நெப்போலியனைச் சிறைப்படுத்தியது மட்டுமல்ல, அவன் உடன் சென்றிருக்க, அன்னைக்கு அனுமதி அளிக்க, அதிபர்கள் கூட்டுக் கழகம் மறுத்துவிட்டது.

நெடுந்தொலைவிலே கண்ணீர் சிந்தியபடி, தாய்!

துணைவி? அரண்மனையில்!! அரசகுமாரி, மேரி லூயி ஆஸ்ட்ரியாவில்!

மகன்? இளவரசன்!!—அவனும் ஆஸ்ட்ரியாவில்.

தாய் இல்லை! மனைவி இல்லை!! மகன் இல்லை! நெடுந்தொலைவிலே இருக்கிறார்கள். எலினா தீவிலே அவன இறந்துபடுகிறான்—ஓர் நீர் ஊற்றுப் பக்கத்தில் மரங்கள் அடர்ந்த சிறு தோட்டத்தில், புதை குழி!! அந்த இடத்தைக் கூட, நெப்போலியன், முன்னதாகவே கண்டு வைத்திருந்தான்—காவல் காத்திருந்த அதிகாரிகளுக்குத் தெரிவித்திருந்தான்.

''என் உடலை, பாரிஸ் பட்டினத்துக்கு அனுப்பச் சொல்லிக் கேளுங்கள். மறுப்பார்களானால், நமக்குப் பருகும் நீர் கிடைத்து வந்ததே, நீர்ஊற்று, அதற்கு அருகாமையில், என் உடலைப் புதைத்துவிடச் சொல்லுங்கள்''—என்று, நெப்போலியன், உடனிருந்த நண்பர்களிடம் கூறினான்.

''இந்த நாட்டுக்கு இவனை மன்னனாக்கினேன்! இந்த மன்னனை இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் மண்டியிடச் சொல்லு! இத்தனை இலட்சம் வீரர்கள் புறப்பட்டாக வேண்டும்!'' என்ற இதுபோன்ற ஆணைகளைப் பிறப்பித்து வந்த நெப்போலியன், நான் இறந்துபட்டதும், என் உடலை இன்ன இடத்திலே புதைத்து விடுங்கள் என்றும் ஆணை கூறிய பிறகுதான் ஆவி பிரிந்தது.

தீவிலே பிறந்தான்—தீவிலே இறந்தான்! ஆனால் புதைகுழியினின்றும் உடலை எடுத்துச் சென்று, பாரிஸ் பட்டணத்திலே,அரச விருதுகளுடன், மற்றோர் கல்லறையில் அடக்கம் செய்தனர், பிரான்சு நாட்டு ஆளவந்தார்கள்—சில ஆண்டுகளுக்குப் பிறகு, தீவிலேயே உடலம் இருந்துவிட வில்லை—புகழொளி மிகுந்த பாரிஸ் பட்டினம் கொண்டு செல்லப்பட்டது.

தீவிலே பிறந்தான்—தீவிலே இறந்தான்! ஆனால் கார்சிகா தீவு போதுமானதாக இருக்க இயலுமா, அள வற்ற ஆற்றல் கொண்டோனுக்கு! பிரான்சு சென்றான்! ஐரோப்பா அழைத்தது! எகிப்து அழைத்தது! வீரக் கோட் டங்களில் உலவினான்!

தீவிலே இறந்தான்—எலினா தீவில்! ஆனால், அவனி போர் கண்டு அதிசயிக்கத்தக்க ஆற்றலரசனுக்குப் போது மான இடமா, எலினா தீவு!எப்படிப்பட்ட கல்லறை!அதற்கு ஏற்ற இடம், பாரீஸ் அல்லவா? அங்குதான் கொண்டு போகப் பட்டது, நெப்போலியனின் உடல்.

கார்சிகாவிலிருந்து பாரிஸ்; பாரிசிலிருந்து எலினா தீவு; எலினா தீவிலிருந்து பாரிஸ்! இந்தப் பயணம், கேட்போர் வியப்படையத்தக்க நிகழ்ச்சிகள் கொண்ட காப்பியமாகி விட்டிருக்கிறது.

''புறப்பட்டு வருகிறேன் மகனே! நெடுந்தொலைவு என்கிறார்கள். வழியிலே இறந்துவிடுவேன் என்று சொல்கி றார்கள். இறந்தாலும் பரவாயில்லை; பயணத்திலே இறந் தால், இப்போது இருப்பதைவிட உனக்கு அருகாமையில் இருப்பேனல்லவா! அதுபோதும் மகனே! புறப்படுகிறேன்'' —என்று, நெப்போலியனுடைய தாயார் லெடிசா அம்மை யார் கடிதம் அனுப்பினார்கள்—எலினா தீவுக்கு.

கடிதம், எழுதப்பட்ட ஓராண்டுக்குப் பிறகு நெப்போலி யனுக்குக் கிடைத்தது. படித்துப் படித்துப் பாகாய் உருகி னான். அன்னையோ, நெடுந்தொலைவில், ரோம் நகரில்! எலினா தீவு சென்று மகனுடன் தங்கி இருக்க அனுமதி கிடைக்கவில்லை. மகனைப் பிரிந்து மனமுடைந்த நிலையில் லெடிசா, இருந்துவர நேரிட்டது.

குடும்ப பாசம் மிகுதியும் கொண்டவர்கள், கார்சிகா தீவு வாழ் மக்கள். கார்சிகா தீவு, பிரான்சு நாட்டு ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது—ஆனால், அது தனியாக தீவு! அந்தத் தீவு, அரசுரிமை பெறவேண்டும் என்ற விடுதலைக் கிளர்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த நாட்களில்தான், நெப்போலியன் பிறந்தான். அவனுடைய தந்தை, விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தவர். அந்தக் கிளர்ச்சியை நடாத்திவந்த பாயொலி எனும் தலைவனுக்குத் துணை நின்று போரிட்டவன்.

தொட்டிலிலே நெப்போலியன் கிடந்தபோதே, போர்ச் சூழ்நிலை, அந்தத் தீவிலே.

தாலாட்டாக அமைந்த பாட்டே, விடுதலைப் போர் குறித்ததாக இருந்தது என்று கூறலாம்.

தொட்டிலிலே படுத்திருக்கும் குழந்தை, கால்களால் உதைக்கிறது! எதை? வெறும் காற்றுத்தானே தட்டுப்படுகிறது! ஆனால் எதிர்காலத்திலே, மணிமுடிகளைப் பந்தாடப் பழகிக் கொள்கின்றன போலும், அந்தக் கால்கள்! கைகளை ஆட்டுகிறது, எதனையோ, பிடித்துக் கொள்ள முனைவதுபோல! என்ன வேண்டும் இந்தக் குழந்தைக்கு? விளையாட்டுக்கான பொம்மைகளா! தின்னப் பழமா!—இப்போது அவை போதும். ஆனால், அந்தக் கரங்கள், போரிடப் போகின்றன பல அரசர்களுடன்—வலிவு பெற்றதும்—அதற்கு இது ஒத்திகை போலும்.

லெடிசா, குழந்தையிடம் கொஞ்சிக் குலவாமலிருந்திருக்க முடியாது—ஆனால், அதற்கு அதிக நேரம், ஓய்வு கிடைத்திருக்க முடியுமா என்பது சந்தேகந்தான், விடுதலைக் கிளர்ச்சியிலே ஈடுபட்டிருந்த கணவன்; குடும்பம் நடந்திட வழி தேடும் பொறுப்பினை ஏற்றுத் தீரவேண்டிய நிலையிலே லெடிசா. மிகச் சிக்கனமாகக் குடும்பத்தை நடத்தி இருக்க வேண்டும்—நெப்போலியனுடன் சேர்ந்து எட்டு குழந்தைகள் லெடிசாவுக்கு.

குடும்பத்துக்குச் சிறப்புப் பெயராக, போன பார்ட்டி என்பது அமைந்திருந்தது. அந்தப் பெயரின்படி பார்த்தால், இத்தாலிய மேட்டுக் குடியினர் இக் குடும்பத்தினர் என்று தெரிகிறது.

நெப்போலியனுக்கு, வெற்றிமேல் வெற்றி கிட்டிய நாட்களில், இந்த உணர்ச்சி மேலோங்கியும் காணப்பட்டது. 'பிரபு வம்சம்' என்று கூறிக் கொள்வதிலே ஒரு சுவை இருக்கத்தான் செய்தது. ஆனால் புகழ்பாடி மயக்க விரும்பிய சிலர், குடும்பத்தின் பூர்வீக பெருமைகள் பற்றி அதிகம் கதைத்த போது, நெப்போலியன், விரும்பவில்லை. பொய்யுரை கேட்டு ஏமாறுபவன் அல்ல என்பதால் மட்டுமல்ல, இந்தக் குடும்பத்துக்கு, வேறு எந்தக் குடும்பத்துக்கும் ஏற்பட இயலாத பெரும் புகழ் ஈட்டியிருக்கும்போது, பழைய நாட்களிலே என்னென்ன பெருமைகள் இருந்தன என்று கண்டறிந்து கூறத்தான் வேண்டுமா? வைரம் ஒளிவிட்டு, அதன் மதிப்பைத் தானே எடுத்துக் காட்டும்போது, அது எத்தகைய ஆழமான சுரங்கத்திலிருந்து எடுக்கப்பட்டது என்பதைக் கூறியா, புதிய மதிப்புத் தேடவேண்டும்! நெப்போலியன் இவ்விதம் எண்ணாமலிருந்திருக்க முடியாது.

கார்சிகா தீவில், அஜாசியோ எனும் சிற்றூரில், 1769ஆம் ஆண்டு, ஆகஸ்டுத் திங்கள் 15—ம் நாள், நெப்போலியன் பிறந்தான். அஜாசியோ எனும் ஊர், கார்சிகா தீவுக்குத் தலைநகரம்கூட அல்ல. கார்ட்டி எனும் இடமே தலைநகரமாக இருந்தது.

நெப்போலியன், புகழேணியின் உச்சியில் இருந்தபோது குடும்பத்தினர், உற்றார் உறவினர் அனைவருக்கும், புதிய புதிய பதவிகள் வழங்கினான்—நிலைகளை உயர்த்தினான். தாய், லெடிசாவை அன்பாகக் கேட்டான்; விரும்பி இருந்தால் ஏதாவதொரு நாட்டுக்கு அரசியாக்கிவிட்டிருக்க முடியும்; அரசுகள் அவன் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வந்தனவே! ''மகனே! எனக்கு வேறு எதுவும் வேண்டாம். நம்முடைய சொந்த ஊரான அஜாசியோ, கார்சிகாவுக்குத் தலைநகரானால் போதும்'' என்று தாயார் சொல்ல, நெப்போலி

யன், 'அப்படியே ஆகுக!' என்றான்; அதற்கான ஆணையும் பிறப்பித்தான்.

கார்சிகா தீவினருக்கு, தங்கள் நாடு, தங்கள் ஊர், தங்கள் குடும்பம் என்ற உணர்ச்சி மிகுதியாக உண்டு. நெப்போலியனுடைய தந்தை, சார்லஸ் போனபார்ட்டி, இந்த உணர்ச்சி காரணமாகத்தான், விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட நேரிட்டது; நெப்போலியனுக்கும் இந்த எண்ணம் இளமைப் பருவத்தில் மிகுதியும் இருந்தது. பிரான்சுமீதே நெப்போலியனுக்கு வெறுப்பு, கோபம், பழி வாங்க வேண்டும்—கார்சிகாவை விடுவிப்பதன் மூலம்—என்று எண்ணம் கொண்டான். அதற்கு ஏற்றபடிதான், பிரான்சு நாட்டினரும், கார்சிகா மக்களைப் பற்றி மிகத் துச்சமாக மதித்துப் பேசி வந்தனர்; ஏளனம் செய்து வந்தனர்.

ஏழைக் குடும்பம் என்பதற்காக ஒரு ஏளனப் பேச்சு!

அடிமைப்பட்டுக் கிடந்த கார்சிகா தீவினன் என்பதற்காக மற்றோர் கேலிப் பேச்சு.

இந்த இருவித ஏளனக் கணைகளைத் தாங்க வேண்டி இருந்தது, நெப்போலியனுக்கு—மாணவப் பருவத்தில்.

''வீராதி வீரர்கள் என்கிறாயே! உன்னுடைய கார்சிகா மக்களை, அது உண்மையானால், எப்படி அவர்கள், பிரான்சுக்கு அடி பணிய முடிந்தது!''

''அதுவா! ஒன்றுக்குப் பத்து என்ற அளவில், உங்கள் பிரான்சுக்காரர், எங்கள் கார்சிகா மக்களைத் தாக்கினர். வீழ்ந்தது அதனால்தான்; வீரம் இல்லாததால் அல்ல.''

''மீசையில் மண் ஒட்டவில்லையாம்...கேட்டீர்களா...''

''பொறு! பொறு! நான் பெரியவனான பிறகு பார்! அப்போது தெரியப் போகிறது, கார்சிகாக்காரர் எப்படிப்பட்டவர்கள் என்பது.''

மாணவர்களின் உரையாடல் இந்தக் கருத்துப்பட. மாணவனாக இருந்தபோதே, நெப்போலியனுக்கு, வீரத்தின்மீது, வெற்றியின்மீது நினைப்பு! அப்போது அவன் கண்களுக்கு, கார்சிகா பிடிபட்டு, பிரான்சுடன் பிணைக்கப்பட்டிருப்பது தான் மிகப் பெரிதாகத் தெரிந்தது. அதனால்தான், கார்சிகா விடுதலை பெறவேண்டும், பிரான்சு நாட்டுக்குப் பாடம் புகட்ட வேண்டும் என்ற எண்ணம் துடித்தது. முயற்சிகளிலும் ஈடுபட்டான்—வெற்றி கிட்டவில்லை?

உன் ஆற்றலுக்கு ஈடான வெற்றி, சின்னஞ்சிறு தீவான கார்சிகாவை விடுவிப்பதாகவா இருக்க வேண்டும்? உன் ஆற்றல் மிகப்பெரிது! கார்சிகாவை அடிமைகொண்ட பிரான்சு நாடே உன் காலடியில் விழப்போகிறது! உன் தீவைப் பிடிக்கப் பாய்ந்துவந்த,பிரான்சுப் போர் வீரர்களே, உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு, உன் சுட்டுவிரல் காட்டும் திக்கு நோக்கிப் பாயப் போகிறார்கள். பிரான்சுக்கு அதிபனே ஆகப்போகிறாய்! உன் ஆற்றல் உன்னை அந்தச் செயலுக்கு அழைத்துச் செல்லப்போகிறது. இடையிலே கார்சிகா விடுதலைக்காக வேலை செய்யவேண்டுமா!—காலம் கூறிற்று போலும் இது போல.

கார்சிகா, பிரான்சுடன் பிணைக்கப்பட்டிருந்தது. என்றாலும், என்ன காரணத்தினாலோ, ரூசோ ,''ஐரோப்பாவையே ஆச்சரியத்தில் ஆழ்த்தப் போகிறது இந்தக் கார்சிகா—என்றோ ஓர் நாள்.'' என்று எழுதினார்.

கார்சிகா விடுதலைக்காகப் போராடி, நாடு கடத்தப்பட்ட தளபதிக்கு நெப்போலியன் எழுதிய கடிதத்தில், மாணவனின் மனக்கொந்தளிப்பு நன்கு தெரிந்தது.

''என் நாடு இறந்து கொண்டிருக்கும்போது நான் பிறந்தேன். உரிமையை அழித்திட 30000 பிரான்சுக்காரர்கள் இங்கு கொட்டமடிக்க வந்த நேரம். நான் தொட்டிலில் கிடந்தபோது அதைச்சுற்றி, இறந்து படுவோரின் அழுகுரல், கொடுமைக்கு ஆளானோரின் குமுறல், கண்ணீர் இவையே இருந்தன.''

நெப்போலியன், போர் வீரன் மட்டுமல்ல; உள்ளத்தைத் தொடத்தக்க உணர்ச்சிகளைத் தொடுத்திடும் ஆற்றலும் மிக்கவன் என்பது, அவன் எழுதிய கடிதங்கள் மூலமும், போர் துவக்கப் பேச்சுக்களின் மூலமும் மிக நன்றாகத் தெரிகிறது.

மாணவப் பருவத்திலே, நெப்போலியன், கதைகள் கட்டுரைகள் எழுதுவதிலே ஆர்வம் கொண்டிருந்தான். 'நாடக பாணி'யில் எழுதுவதிலே நெப்போலியனுக்குப் பெருவிருப்பம். உணர்ச்சிகளை உரையாடல்கள் வடிவிலே எழுதிவந்திருக்கிறான்.

காதல்—கடமை—இந்த இரண்டு உணர்ச்சிகளுக்கும் ஏற்படும் மோதுதல்—அதனால் விளையும் சிக்கல்—இவை பற்றி ஒரு உரையாடல் எழுதினான் மாணவன் நெப்போலியன். ஒருவன் காதலுக்காக—மற்றவன் கடமைக்காக வாதாடும் முறை.

''உன் நாடு தாக்கப்படும்போது, உன் கடமை என்ன? நீ என்ன செய்வாய்?''

''நாடு! கடமை! வெறும் வார்த்தைகள். எனக்கென்ன கவலை, அரசு கவனிக்க வேண்டிய பிரச்சினை பற்றி''

''கோழையின் மனப்பான்மை இது. களியாட்டக்காரனின் போக்கு. சுயநலம். மக்களை மறந்திடும்போக்கு. மகிழ்ச்சியாக வாழத்தான் பிறந்தோம். ஆம்! ஆனால், சமுதாயத்தில் வாழும்போது, சில பொறுப்புகள் மேற்கொண்டாக வேண்டும். ஆட்சிப் பொறுப்புச் சிலரிடம் ஒப்படைக்கப்படுகிறது. அவர்கள், மதத் தரகர்களுடன் கூடிக் கொண்டு, கடமையை மறந்து காட்டுப் போக்கிலே நடந்து கொள்கிறார்கள். உன் கடமை என்ன? சமூக வாழ்வில் உனக்குள்ள பொறுப்பு என்ன? கொடுமைக்கு ஆளானவர்கள் கூவி அழைக்கிறார்கள், உதவிக்காக! கொஞ்சிக் குலவிக் கொண்டிருப்பதா, குமரியுடன் அந்த நேரத்தில்.''

மாணவப் பருவத்திலே, இலட்சியம் பற்றிய உணர்ச்சி மேலிட்ட நிலையிலே இதுபோல எழுதுவது இயல்பு. பலர் இந்த இயல்பு கொள்கின்றனர். ஆனால் வயது ஆக ஆக,

இலட்சிய ஆர்வம் மங்கிவிடுகிறது; மறைந்தே கூடப் போய் விடுகிறது. ஆனால் நெப்போலியனுக்கு அவ்விதம் இல்லை.

கடமை அழைக்கிறபோது, காதற் களியாட்டத்திலே ஈடுபடுவதா? என்று கேட்ட அதே போக்கில், தானே நடந்து காட்டவும் முற்பட்டான். போர் வீரனாவதற்கான பயிற்சிக் கூடத்திலே பயிலும்போது மற்ற மாணவர்கள், மலர் விழியாளைத் தேடுவதும், மது அருந்தி ஆடுவதும், கண்ணழகியின் கருத்து என்ன? கனி, துவர்ப்பா இனிப்பா? புன்னகை போதுமா, பொன்னகை கேட்பாளா, பட்டுப்பூச்சியா? வெட்டுக்கிளியா? கட்டுக்காவல் அதிகமா? தொட்டால் ஒட்டிக் கொள்ளுமா?—என்று பேசிக் காலத்தைப் பாழாக்கிக் கொண்டிருந்தனர்—நெப்போலியன், கோட்டை கொத்தளங்களின் அமைப்பு, போர் முறைகளின் நுணுக்கங்கள், நாடுகளின் இயல்புகள், நாடாள்வோரின் போக்கு எனும் இவை பற்றிய ஏடுகளைப் படிப்பதிலே ஈடுபட்டுச், சிறப்பறிவு எனும் செல்வத்தைத் தேடிப்பெற்றுக் கொண்டிருந்தான். வரலாறும், பூகோளமும் நெப்போலியன் படித்துக் கொண்டிருப்பான்; அவனுடைய தோழர்களோ, வடிவழகு இயற்கையா செயற்கையா என்பது பற்றிய கருத்துக்களிலே மூழ்குவர்.

கணக்குப் பாடத்திலே நெப்போலியனுக்கு மிகுந்த அக்கறை! படைத்துறைக்கு இந்தப் பயிற்சி மெத்தப் பயன்படக்கூடியது.

காதலிக்கத் தெரியாதா என்றால், தெரியும்; கண்மண் தெரியாமல் அதிலே சிக்கிக் கொள்வதில்லை—வேறு கடமையிலே ஈடுபடும்போது காதல் விளையாட்டிலே நுழைவதில்லை.

நெப்போலியன் மனதைக் கொள்ளை கொண்ட ஜோசபைன், வியக்கத்தக்க பேரழகி—விதவை—விரும்பத்தக்க சல்லாபி. அவளிடம் கட்டுண்டான் நெப்போலியன்—அவளைப் பற்றிப் பல்வேறு வதந்திகள் உலவின—''அந்த மதுக் கோப்பையா! சுவைமிகுதிதான்—ஆனால் எச்சிற் கலமா

யிற்றே'' என்று கூடப் பேசுவர். ஆனால் நெப்போலியன் கண்களுக்கு, காதற் கலையின் அழகத்தனையும் திரண்டெழுந்து வடிவமெடுத்து ஜோசப்பைனாக வந்ததாகத்தான் தெரிந்தது. நெப்போலியன் தன் நேரத்தையும் நினைப்பையும், படிப்பிலேயும் பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திப்பதிலேயும் ஈடுபடுத்தியதால், அவனால் குயிலுக்கும் கருங் குருவிக்கும், மயிலுக்கும் வான் கோழிக்கும், பருவமெருகுக்கும் பூச்சு மினுக்குக்கும், முகமலர்ச்சிக்கும் பாவனைச் சிரிப்புக்கும், மயக்கும் மொழிக்கும் மயக்க மொழிக்கும், தளிர்மேனிக்கும் ஆபரணத் தகத்தகாயத்துக்கும் உள்ள வேறுபாடுகளைக் கண்டறியும் கலை கற்க இயலாதிருந்தது என்று கூறலாம்.

வயதிலே தன்னைவிட மூத்தவள் என்றால் என்ன? —வசீகரிக்கத் தெரிகிறது அவளுக்கு! எனவே நெப்போலியன் ஜோசபைனை மணமுடித்துக் கொண்டான்.

தீர்ந்தது அவனுடைய இலட்சியங்கள்—திட்டங்கள்—கனவெல்லாம் கலைந்தது—இனி ஒரே களம்தானே நெப்போலியனுக்கு, ஜோசபைன் மாளிகை! ஒரே ஒரு ஆணைக்குத்தான் அவன் எழுவான்—அவளுடைய புன்னகை—அடிமூச்சுக் குரல்! போரிலே புலிதான்—ஆனால் இனி...! என்றுதான் எவரும் எண்ணிக் கொள்வர்—ஜோசபைனை அறிந்தவர்கள்.

சிக்கலுள்ள அரசியல் பிரச்சினைகளை எல்லாம் மறந்துவிட்டு, முதுபெரும் அரசியல்வாதிகள் அந்தச் சிங்காரியின் சிரிப்பொலியிலே மயங்கிக் கிடந்திட, மாலை வேளைகளிலே அவளுடைய மாளிகையைத் தேடி வருகிறார்கள்—நெப்போலியன் எம்மாத்திரம்! டோவ்லான் சண்டையிலே திறமையைக் காட்டினான்—உண்மை—வெற்றிபெற்றான்—உண்மைதான்—ஆனால் அவை, ஜோசபைனிடம் சிறைப்படுவதற்கு முன்பு! இனி?

நெப்போலியனுடைய பாசம் நிறைந்த பார்வையையும் அவளுடைய பாகு மொழி கேட்டதால் சொக்கிவிட்ட தன்மையையும் கண்டவர்கள், வீரன் காதலைப் பரிசாகப் பெற்றான்! இனி அவன் காதலன்—அவ்வளவுதான்!!—என்று தீர்மானித்தனர்.

ஆனால், கடமை அழைக்கிறபோது காதலியுடன் கொஞ்சிக் கிடப்பதா? என்று கேட்டானே, மாணவப் பருவத்தில் அந்த நெப்போலியன், அழகி ஜோசபைனை அடைந்ததால், மறைந்துவிடவில்லை. 'இத்தாலி நாட்டின்மீது தாக்குதல் நடத்தப் பெரும் படையொன்று கிளம்பட்டும்—உன் தலைமையில்' என்று அரசு ஆணை பிறப்பித்தது. 'கண்ணாளா!' என்று அவளும், 'கட்டித்தங்கமே!' என்று வீரனும், 'மலரா, இதழா?' என்று அவனும், 'கேலியா போதையா?' என்று அவளும் பேசி மகிழும் காலம்—மணமாகி இரண்டு நாட்கள் முடிந்ததும் இந்த அழைப்பு—கடும் போரிடச் செல்லும்படி.

'என் இதயம் என்னிடம் இல்லையே! அதனைத் தங்களுக்குக் காணிக்கையாக்கி நாட்கள் பல ஆகிவிட்டனவே!' என்று கூறி, தன்னை அவன் அணைத்துக் கொள்ளும் உரிமையை ஜோசபைன் அளித்தபோது ஏற்பட்ட மகிழ்ச்சியைவிட எந்த அளவிலும் குறைவான களிப்பல்ல—இத்தாலி மீது போரிடப் புறப்படுக!'-என்று அரசு அழைத்தது கேட்டு.

நாட்கள் இரண்டுதானே ஆகியுள்ளன-நெஞ்சிலே உலவும் எண்ண அலைகளைப் பற்றிப் பேசி மகிழக்கூட நேரம் காணாதே—பூங்காவிலே உலவி, புதுவித இன்பம் சுவைத்திடுவதற்கு ஏற்ற மணக்கோலம் கொண்டுள்ள போதா, களம் நோக்கிச் செல்ல ஆணை— கட்டழகியை மறந்து!—நெப்போலியன் இதுபோல எண்ணி ஏங்கினானில்லை. இத்தாலியைத் தாக்குவது எப்படி? என்னென்ன முறைகளைக் கையாள வேண்டும்? எவ்வளவு வலிவு திரட்ட வேண்டும்?—என்ற இவை பற்றிய எண்ணம்தான் அவனை ஆட்கொண்டது. அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டான். 'அன்பே! உன் காதலன் எத்தகையவன்—எத்துணை ஆற்றல் மிக்கவன்—என்னென்ன விருதுகள் பெறப்போகிறான்—பார்! நீ மகிழத்தக்க, பெருமைப்படத்தக்க வெற்றிகளைப் பெற்றிடக் கிளம்புகிறேன்; பற்பல நூற்றாண்டுகளாகப் பாரோர் மெச்ச விளங்கி வரும் இத்தாலி செல்கிறேன்! உலகப் பெருவீரன் ஜூலியஸ் சீசர் உலவிய இடம்! அங்கு

செல்கிறேன் அழகு மயிலே! உன்னை அடைந்ததால் நான் பெற்ற மகிழ்ச்சியைத் துணைகொண்டு செல்கிறேன்!! வெற்றிச் செய்திகளுக்காகக் காத்திரு—உன் வேல்விழி, நான் செல்லும் பக்கம் எப்போதும் இருக்கும் என்பது அறிவேன்—நான் என் இதயத்தில், நீ அளித்த காதலைக் கருவூலமாகக் கொண்டு செல்கிறேன்!''—என்று நெப்போலியன் சொல்ல முனைந்தானேயன்றி, மணமாகி இருநாட்கள் முடிந்ததும், மலரணை மறந்து களம் செல்வதா என்று கவலை கொண்டானில்லை.—இங்கு பாவை பன்னீர் தெளித்திடுகிறாள்—அங்கு?—இரத்தம் பொங்கும்! ஆம்! ஆனால் இரத்தம் பொங்குவதுடன் என் வீரம் பொங்கும்; வெற்றி பொங்கும்; கீர்த்தி பொங்கும். தன் காதலிக்கு இந்தக் கீர்த்தியைப் பெற்றுத் தருவதைக் காட்டிலும் ஒரு காதலன் தரத்தக்க பெருமைமிகு பொருளும் உண்டா!—என்ற எண்ணம் எழுகிறது; இத்தாலி செல்கிறான்.

நெப்போலியனுடைய உறுதிப்பாட்டுக்கு இது போன்ற எடுத்துக்காட்டுகள் பல உள.

களத்திலே கடும் போரிடும் கடமையை மறந்து வேறு எந்தச் செயலிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்பவனல்ல, இளமைப் பருவத்திலேயே, இந்த இணையிலா வீரன்.

1796ஆம் ஆண்டு மார்ச் 9ஆம் நாள் திருமணம்—12ஆம் நாள் இத்தாலி நோக்கிப் பாய்கிறான்.

ஜோசபைன் வயது சிறிது அதிகமல்லவா?

நெப்போலியன், அவளைவிட இளையவன்—நிச்சயமாக.!

இவ்விதம் பேசுவது தெரியும் இருவருக்கும். எனவே பதிவாளரிடம் சென்று திருமணத்தை நடத்திக் கொண்டபொழுது, நெப்போலியன் தன் வயதை ஒன்றரை ஆண்டு கூட்டி அதிகமாக்கிச் சொன்னான்— ஜோசபைன்? தன் உண்மை வயதிலே நான்கு ஆண்டு குறைத்து, கணக்குக் கொடுத்தாள். வயது பொருத்தம் கிடைத்துவிட்டது, திருமணத்துக்கு! இருமனம் ஒன்றான பிறகு திருமணம்

தானே! பொருளற்ற கேள்விகள் எழுப்புகிறார்கள்—வயது என்ன? என்று! வயதாம் வயது! எனக்கு அதை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் உள்ள வயது! வேறு என்ன தெரிய வேண்டும்?—சாகசப் பேச்சிலே திறமைமிக்க ஜோசபைனால் இதுபோலெல்லாம் பேசவா முடியாது. ஆனால், நெப்போலி யன் அவளைத் திருமணம் செய்துகொண்டபோது, ஜோசபை னுக்கு, ஒரு மகன்—ஒரு மகள்! மகனுக்கு வயது பன்னிரண்டு! மகனைத்தான் நெப்போலியன் முதலிலே கண்டான்—அவ னுடைய பேச்சும் போக்கும் மிகவும் பிடித்தது. பிறகு அவள் வந்தாள்—நன்றி கூற.

நெப்போலியன், தன் திறமையை டோவ்லான் களத் திலே காட்டிய பிறகு, பிரான்சு ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்திக் கொண்டு வந்த குழுவினருக்கு, நெப்போலியன் மீது ஒரு பற்று; நம்பிக்கை.

ஆட்சிக் குழுவினருக்கு பாரிஸ் நகர மக்களிலே ஒரு சாரார் எதிர்ப்பு மூட்டியபோது, நெப்போலியன், ஆட்சி மன்றத்துப் பாதுகாப்புப் பொறுப்பு ஏற்று, ஆபத்தை முறி யடித்தான். எதிர்ப்பாளர்களைத் தாக்கி விரட்டி அடித்து. ஆட்சிக் குழுவினருக்கு நம்பிக்கை மேலும் வளர்ந்தது. அந்தப் படைப் பிரிவுக்கு நெப்போலியனைத் தளபதியாக்கினர்.

எந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டாலும், அக்கரை காட்டித் திறம்படப் பணியாற்றுவது நெப்போலியனுடைய இயல்பல்லவா? அந்த இயல்பின்படி, குடிமக்களிடம் இருந்த ஆயுதங்களைப் பறிமுதல் செய்தால்தான், கலக உணர்ச்சி ஏற்படும்போது தாக்குதலில் ஈடுபடாமலிருப்பார்கள் என்று தீர்மானித்தான்—ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அப்படிப் பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்களிலே, சீமான் ஒருவனுடைய வாளும் ஒன்று.

ஒருநாள், அவசரமாகத் தன்னைப் பார்க்க விரும்புகி றான் ஒரு இளைஞன் என்று நெப்போலியனுக்கு அறிவிக்கப் பட்டது.

''இளைஞனா? என்னைக் காணவா?''

''ஆமாம், பன்னிரண்டு வயது இருக்கும்.''

"பன்னிரண்டு வயதுப் பொடியனா! என்ன வேலை அவனுக்கு, என்னிடம்...?"

"கூற மறுக்கிறான்;நேரிலே கண்டுதான் கூறுவானாம்."

நெப்போலியன் அந்தப் பன்னிரண்டு வயதினனை விரட்டிவிடவில்லை; வரச்சொன்னான், தன்னைக் காண.

"என்ன வேலையாக..."

"ஒரு வேண்டுகோள்...தாங்கள் பலருடைய ஆயு தங்களைப் பறிமுதல் செய்தீர்கள்..."

"ஆயுதம் ஏந்தும் வயதினனல்லவே, நீ..."

"என்னுடையது அல்ல! என் தந்தையின் வாள் பறி முதல் செய்யப்பட்டுவிட்டது..."

"அரசுப் பாதுகாப்புக்கான நடவடிக்கை. உன் தகப் பனார், யார்...அவர் எங்கே..."

"அவர் இறந்துவிட்டார்...கொல்லப்பட்டுவிட்டார்... புரட்சியின்போது, வாள், எம்மிடம் இருந்தது...குடும்பத் தின் பெருமைப் பொருளாக..."

"குடும்பப் பெருமையிலே அவ்வளவு விருப்பமா..."

"நியாயமற்ற உணர்ச்சி அல்லவே..."

"கூர்மையான புத்தி உனக்கு..."

வாள், திருப்பித் தரப்பட்டது; மகிழ்ச்சியுடன் அத னைப் பெற்றுக் கொண்டு சென்றான், பன்னிரண்டு வயதி னன். எத்தனையோ விந்தையான சம்பவங்களிலே இது ஒன்று என்று எண்ணினான், நெப்போலியன்—இல்லை— அது தொடர்கதையாகிவிட்டது.

"தங்களைக் காண ஒரு மாது..."

"என்னைக் காண ஒரு மாதா ...?"

"ஒரு சீமாட்டி..."

"சீமாட்டிக்கு இங்கு என்ன வேலை? என்னிடம்."

"தங்களுக்கு நன்றி தெரிவிக்க வந்திருக்கிறார்கள்..."

"எதற்கு நன்றி...புரியவில்லையே..."

"பறிமுதல் செய்த வாளைத் திருப்பித் தந்தீர்களே..."

"ஆமாம்; உணர்ச்சிமிக்க பன்னிரண்டு வயதினன்..."

"அவனுடைய தாயார்—வந்திருக்கும் சீமாட்டி."

"அப்படியா! வரச் சொல்லு."

வந்தாள் ஜோசபைன்! நெப்போலியன், முதுமைக் கோல விதவையை எதிர்பார்த்தான்—அவன் எதிரில் வந்ததோ, புன்னகை பூத்த முகத்தழகி, புதுமலர் போலும் எழிலுடையாள், ஜோசபைன்.

''வாளைத் திருப்பித் தந்ததற்கு என் நன்றி...'' என்றாள் வனிதை! ஒரு வாளா, ஓராயிரம் வாட்களைத் திருப்பித் தரச் சொன்னாலும் தரலாமே—இவ்வளவு சுவை மிகு பார்வையோடு, கேட்டால்!

வாளைப் பறித்தவனை, வேல் விழியால் அவள் வென்றாள். சீமாட்டி எனும் நிலைக்கு ஏற்ற கெம்பீரம்—அதே போது அதிலே ஓர் தனிக் கவர்ச்சி—அதிகம் பழக்கமில்லாதவரிடம் பேசும்போது காட்டவேண்டிய கூச்சம்! தயக்கம்! —அதேபோது பேச்சிலே ஒரு இனிமை, குளுமை! களம் கண்டவனானால் என்ன, வெற்றிபெற நெப்போலியனால் மட்டுந்தானா முடியும். ஜோசபைன் என்ன, போர் முறை தெரியாதவளா? கட்டழகி விட்ட பார்வை, அவன் கட்டுடல் எங்கும் பாய்ந்தது—அவள் வென்றாள்!

இவ்விதம் தொடங்கிய காதல்தான், கடிமணமாகி மலர்ந்தது. ஆனால் மணத்தை நுகர்ந்து கொண்டிருந்த வேளையிலே போர் நடாத்த அழைப்பு வந்தது. மாவீரன், இத்தாலி நோக்கிச் சென்றான்.

நெப்போலியன் கட்டழகி ஜோசபைனிடம் கட்டுண்டதிலே வியப்பில்லை—அந்த வசீகரத்தின் முன்பு வீழாமலிருக்க இயலாது. ஆனால், மற்றோர் காரணமும் உண்டு. நெப்போலியன், ஏற்கெனவே ஒரு மங்கைக்காக ஏங்கிக் கிடந்து, அது எட்டாக் கனியாகிவிட்டதால், மனதிலே வாட்டமுற்றுக் கிடந்தவன். மாடப்புறா கிட்டவிட்டால், மணிப் புறா கிடைக்கட்டும் என்று எண்ணி, வேட்டையாடிடும் போக்கினன் அல்லவே. எனவே காதல் முயற்சியிலே ஏற்பட்ட தோல்வி நெப்போலியனுக்குப் பெருத்த வேதனையைத் தந்தது. தன் மனநிலையை விளக்கி, ஒரு காதற்கதை எழுதினான். எந்த எண்ணத்தையும் எழுச்சியையும், நாடகபாணி

யில் எழுதும் வழக்கமல்லவா—அதுபோலவே, காதலில் ஏற்பட்ட தோல்வி பற்றியும் மனம் உருகும்படி சிறு கதை தீட்டிடலானான்—வரலாறு தீட்டும் வல்லமை கொண்டோன்.

மார்சேல்ஸ் நகர வணிகரின் மகள், வனப்புமிக்க டிசயரி என்பவளை மணம் செய்துகொள்ள விரும்பினான் நெப்போலியன். அவள் செல்வக் குமாரி—நெப்போலியன் போர் வீரன்—தளபதிகூட அல்ல—களத்திலே, மற்றவரின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு, இருக்கவேண்டியவன் இந்தத் துப்பாக்கி தூக்கிக்குத் தன் மகளைத் தருவதற்குப் பட்டாடை விற்பதால் பணம் திரட்டிய வணிகருக்கு விருப்பம் இல்லை.

நெப்போலியனுடைய அண்ணன் ஜோசப், ஒரு வணிகர் மகளை மணமுடித்துக் கொண்டு நிம்மதியாக வாழ்ந்து வந்தான்—அண்ணிக்கு உறவினள்தான் டிசயரி! நல் வார்த்தை பேசி இந்த மணத்தை முடித்து வைக்கவேண்டுமென்றுகூட, அண்ணனுக்குக் கடிதம் எழுதிப் பார்த்தான்; எனினும் நெப்போலியன் எண்ணம் ஈடேறவில்லை. காதலிலே தோல்வி கண்டான்; கதை பிறந்தது. கிளிசான்—யூஜினி— என்பது கதைத் தலைப்பு. கிளிசான், நெப்போலியன்! யூஜினி டிசயரி!! மனம் உடைந்து காதலனைப்பற்றி மட்டுமல்ல, அந்தக் காதலன் எப்படிப் பட்டவன், எதிலே திறமைமிக்கவன என்பதனையும் விளக்கினான், கதையில்.

கிளிசான், பிறவி வீரன்! குழந்தைப் பருவத்திலேயே, உலகப் பெருவீரர்களைப் பற்றி அறிந்து கொண்டிருந்தான். பள்ளிப் பருவத்திலே, மற்றவர்கள்போல் மனதை மையலில் அலையவிடாமல் போர்முறைகளை அறிவதிலும், புதுமுறைகள் வகுப்பதிலும் ஈடுபட்டான்—திறமை மிக்கவனானான். வெற்றிமேல் வெற்றி! விருதுகள் பலப்பல! நாட்டவர் போற்றினர், நமது பாதுகாவலன் இவனே என்று.

செயல்வீரனான கிளிசான் இலட்சியக் கனவுகள் கொண்டவனாகவும் இருந்துவந்தான். சில வேளைகளில், தனியாக உலவச் செல்வான்—சிந்தனையில் பல அரும்பும்—மலரும்.

ஓர்நாள், ஏரிக்கரை ஓரத்திலே எழில் மங்கை ஒருவளைக் கண்டான். அவள் பெயர் யூஜினி! காதல் கொள்கின்றனர்—கடிமணம் நடக்கிறது. கடமை அழைக்கிறது; களம் செல்கிறான்; சீறிப் போரிடுகிறான்; படுகாயமடைகிறான்.

நண்பன் ஒருவன் மூலமாக நிலைமையை, யூஜினிக்குச் சொல்லி அனுப்புகிறான்.

தூது சென்றவனோ அந்தத் தோகை மயிலாளைக் கண்டதும் காதலிக்கத் தொடங்கிவிடுகிறான்.

பாவை என்ன சொன்னாள், பதில் என்ன வரும் என்று படுகாயமுற்ற நிலையிலே வீரன் களத்திலே காத்துக் கிடக்கிறான். அங்கோ—தூது சென்றவனிடம் அந்தத் தூரத்தை கொஞ்சிக் கிடக்கிறாள்.

அது தெரிகிறது கிளிசானுக்கு. நடமாடும் நிலைபெறுகிறான். ஆனால் மனதிலே வேதனை கொட்டுகிறது. ஊர் திரும்பினானில்லை. மீண்டும் களம் நோக்கிப் பாய்கிறான்—மாற்றாரின் படை வரிசை மிகுதியாக உள்ள பக்கம் சென்று போரிடுகிறான்—உடலெங்கும் வடுக்கள்—ஓராயிரம் தாக்குதல்கள்—போரிட்டபடி மடிந்து போகிறான்.

காதலில் தோல்வி கண்டதும், கட்டாரியால் குத்திக் கொல்பவர்கள் அல்லது கட்டாரியால் குத்திக்கொண்டோ, கடுவிஷம் குடித்தோ தற்கொலை செய்து கொள்பவர்கள், காதலிலே துரோகம் இழைத்தவளை காரி உமிழ்ந்து அவளுடைய கயமைத்தனத்தை ஊரறியச் செய்பவர்கள்—இப்படியெல்லாம்தான் எழுதுவார்கள் கதை எழுதுவோர்.

நெப்போலியன் அவ்விதம் அல்ல! காதலிலே ஏற்பட்ட தோல்வி காரணமாக, வாழ்க்கை வெறுத்துப் போகுமானாலும், கடும்போரிட்டபடி, களத்திலே மாற்றாரைத் தாக்கியபடி, மாற்றாரின் தாக்குதலைப் பெற்றபடி, கடைசி மூச்சு இருக்கும் வரையில் போராடிக் களத்திலே மடிந்து விடவேண்டும் என்ற எண்ணம்தான் தோன்றுகிறது.

வெற்றி அல்லது வீரமரணம் என்ற எண்ணமே எந்தப் போர் வீரனுக்கும் ஏற்படும். நெப்போலியனுடைய கருத்தும் —களத்திலே கடும்போரிட்டுக் கொண்டிருக்கும் நிலையில் வீரமரணம் ஏற்படவேண்டும் என்பதுதான் என்று கதை மூலம் தெரிகிறது.

கண்டோர் கலங்கிடவும் கேட்டோர் திடுக்கிடவுமான பெரும் போர்களைக் கண்டான் நெப்போலியன்—களத்திலே கடும் புயலெனச் சுற்றிச் சுற்றி வருவது வழக்கம்.—ஆனால் அவனுக்குக் களத்திலே வீரமரணம் கிடைக்கவில்லை. எந்த மாற்றானுக்கும் அந்த ஆற்றல் இல்லை! பிடிபட்டு, அடைபட்டு, மனம் உடைந்த நிலையில், நோய் வாய்ப்பட்டு, கண்காணாத் தீவிலே இறந்துபட்டான். தீவிலே இருந்த போது பலமுறை, 'களத்திலே இறந்திருந்தால்...வீரமரணம் கிடைத்திருந்தால்...' என்று ஏக்கத்துடன் நெப்போலியன் பேசினான். அந்த அஞ்சா நெஞ்சனைக் கொல்லவரும் எந்த எதிரியும் தப்பித்துக்கொள்ள முடியாது என்பதால் போலும், நேருக்கு நேர் நின்று தாக்காமல், கண்ணுக்குத் தெரியாமல் மறைந்திருந்து, நோய்க்கிருமிகள், உடலிலே இடம் பிடித்துக் கொண்டு, நெப்போலியனைச் சிறுகச் சிறுகச் சிதைத்துச் சாகடித்தன.

இரண்டோர் முறை களத்திலே, நெப்போலியனுக்குக் குண்டடி பட்டதுண்டு. மிகச் சாதாரணமான காயம் ஒரு முறை கணுக்காலில் ஏற்பட்டது.

மற்றோர் முறை, களத்திலே போர் கடுமையாக நடந்து கொண்டிருந்த இடத்திலே நெப்போலியன் சென்றபோது மாற்றார் சூழ்ந்துகொண்டனர்—ஆனால் வீரத்திலும் தியாக உணர்விலும் மிக்க தோழன் ஒருவன், நெப்போலியன் மீது பாயவந்த குண்டுகளைத் தன்மீது விழச்செய்து கொண்டு இறந்தான்—நெப்போலியனைத் தன் உடலால் மறைத்துக் கொண்டான்.

நெப்போலியன் இறந்து படத்தக்க ஆபத்தான நிலை கிளம்பியபோதெல்லாம், அவன் தப்பித்துக் கொள்ளும் வாய்ப்பு எளிதாகக் கிடைத்தபடி இருந்தது.

கார்சிகா விடுதலைக்காக இளமைப் பருவத்திலே ஈடுபட்டபோது, பிரான்சுப் படையின் தாக்குதலால், நெப்போலியனுக்கு ஆபத்து ஏற்பட இருந்தது; ஆனால் தப்பித்துக் கொண்டான்.

பிரபு வம்சத்திலே பிறந்து, ஏழ்மையில் உழலும் குடும்பத்தினருக்கு இலவசமாகக் கல்வி கற்பித்துத் தரும் முறை பிரான்சு நாட்டிலே இருந்ததால், நெப்போலியன், கல்விக்கூடம் சென்றிட முடிந்தது. ஓயாமல் படிப்பதும், சிந்திப்பதுமாக இருந்துவந்த நெப்போலியன், முதல் மாணவனாக இல்லை என்றாலும், குறிப்பிடத்தக்க இடம் பெற்ற மாணவனானான். விடியற்காலை நான்கு மணிக்குத் துயிலெழுவதும், மற்ற எந்த அலுவலிலும் அதிக காலத்தைச் செலவிடாமல், படிப்பிலேயே கவனம் செலுத்துவதுமாக இருந்து வந்த நெப்போலியனைக் கண்டவர்கள், அப்போதே இவன் உள்ளம் ஒரு எரிமலையாகி ஒரு காலத்தில் நெருப்பைக் கக்கும் என்று கூறினர். நாளைக்கு ஒரு வேளைதான் உணவு! வாரத்துக்கு ஒருமுறைதான் உடை மாற்றுவது! கேளிக்கைக்கு நேரமும் கிடையாது. வசதியும் கிடையாது.

'ஏழை என்பதால் ஏளனம் செய்கிறார்கள்—இதைத் தாங்கித் தத்தளிக்க வேண்டி இருக்கிறது' என்று பாரிசில் இருந்து, ஊருக்கு நெப்போலியன் கடிதம் எழுதுவான். 'என்ன கஷ்டம் ஏற்படினும் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்துக்கொள் மகனே!' என்பாள் அன்னை. மிகச் சிறு வயதிலேயே பொறுப்பை மிக நன்றாக உணர்ந்திருந்தான், பல பெரிய பொறுப்புக்களைப் பிற்காலத்திலே ஏற்று நடத்த வேண்டிய நெப்போலியன்.

படிப்பது என்றால், மேலெழுந்தவாரியாக அல்ல—மிகுந்த அக்கறையுடன்—ஒன்றுவிடாமல் படிப்பதும், குறிப்புகள் எழுதுவதுமான முறையில் படித்துவந்தான்; பல அரிய ஏடுகளிலே இருந்து குறிப்புக்களை எடுத்துத் தொகுத்து எழுதி வைத்துக்கொண்டான்.

விந்தை நிறைந்த ஒரு செய்தி உளது, நெப்போலியன் படித்து எழுதி வைத்த குறிப்பேடுகளிலே கடைசிக் குறிப்பேட்டில்! கடைசியாக அவன் எழுதி இருப்பது எலினா தீவு பற்றிய தகவலைத்தான். அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள சிறு தீவு, செயின்ட் எலினா. பிரிட்டிஷாருடையது!!

எந்த எலினா தீவு பற்றி, மாணவன் நெப்போலியன் குறிப்பேட்டிலே எழுதிவைத்தானோ, அதே தீவுதான், நெப்போலியனுக்குச் சிறைக்கூடமாயிற்று; கல்லறை பூமியுமாயிற்று.

இருபதாண்டு நிரம்பப் பெற்ற நிலையிலேயே, நெப்போலியனுக்கு, கார்சிகாவை விடுதலை அடையச் செய்ய வேண்டும் என்பதற்கான செயலில் ஈடுபடும் துணிவு ஏற்பட்டுவிட்டது.

பிரான்சு நாடு, புரட்சியை வெற்றிகரமாக நடாத்தி, முடிதரித்த மன்னனை வெட்டுப்பாறையில் நிறுத்திக் கொன்றுவிட்டதுடன், குடி அரசு நாடாகி, கோல் காட்டுபவனுக்கெல்லாம் அஞ்சிக் கிடந்த சாமான்யர்களே கொற்றம் நடாத்தும் நிலைபெற்றிடச் செய்தது.

இதுவே, கார்சிகா விடுதலைக்கு ஏற்ற சமயம் என்று கருதிய நெப்போலியன், 1789—செப்டம்பர் திங்கள் பள்ளி விடுமுறையின்போது, தீவு சென்று விடுதலைப் படையினருடன் கூடிப் பணியாற்றினான்—வெற்றி கிட்டவில்லை. பிரான்சுக்கு எதிராகப் புரட்சி நடத்தியதற்காக, பிடித்திழுத்துச் சென்று சிறையில் அடைத்திடுவர் என்று பேசிக் கொள்ளப்பட்டது; ஆனால் அதற்கு இடம் கொடுக்காத முறையில், நெப்போலியன் பாரிஸ் திரும்பிவிட்டான். முதல் முயற்சியில் தோல்வி—காதலிலும் களத்திலும்!

திரும்பவும் பாரிஸ் நகர் வந்தபோது, நெப்போலியனுடன் தம்பி லூயியும் வந்தான். இருவரிடமும் சேர்ந்து இருந்தது 85 (பிராங்குகள்) வெள்ளி நாணயங்கள்! பாரிசில், எவ்வளவு சிக்கனமான வாழ்க்கை நடத்தினாலும், கடன்படாமல் இருக்க முடியவில்லை. கைக் கடிகாரத்தைக்கூட அடகு வைத்

துச் செலவுக்குப் பணம் தேடவேண்டியதாயிற்று. பிறகோர் நாள், பல்வேறு அரசுகளிலே இருந்த செல்வக் களஞ்சியங்களின் திறவுகோலுக்கு உரிமையாளனாகும் உயரிடம் பெற்றான் நெப்போலியன்.

கார்சிகா விடுதலைக்காகப் பாடுபடுபவர் என்பதால் எந்தப் பாயோலி என்பாரிடம், நெப்போலியன் மெத்த மதிப்பு வைத்திருந்தானோ, அதே தளபதியை நேரில் கண்டு, பழகி, உரையாடி, உள்ளப் பாங்கைத் தெரிந்து கொண்டபிறகு, மதிப்பு மங்கிவிட்டது—மிகச்சாதாரண ஆசாமி! விடுதலைக்கான போர் நடாத்தும் திறமையுள்ளவரல்ல என்ற எண்ணம் ஏற்பட்டது. இருவருக்கும் ஏற்பட்ட கருத்து வேற்றுமை பகைமூளும் அளவு வளர்ந்தது; ஊரார் பாயோலி பக்கம். எனவே நெப்போலியனுடைய வீட்டைத் தாக்கக் கிளம்பினர், ஆத்திரம் கொண்ட மக்கள்—கொள்ளையும் அடித்தனர்—தலை தப்பினால் போதும் என்று நெப்போலியன் குடும்பத்தாருடன் ஓடி ஒளிய நேரிட்டது.

பாரிசில், இந்த நிகழ்ச்சி நெப்போலியனுக்குச் சாதகமான நிலையை உண்டாக்கிற்று. கார்சிகாக்காரனாக இருந்தாலும், நெப்போலியன் குடியாட்சி கண்ட புரட்சி இயக்கத்திடம் பற்று மிகக் கொண்டவன், அதனால்தான் பிரான்சு சார்பில் நின்று பாயோலியை எதிர்த்திருக்கிறான் என்று, பிரான்சிலே அரசு நடத்துவோர் எண்ணிக் கொண்டனர். புதிய ஆதரவு கிடைத்திட இந்த எண்ணம் பயன்படுவது கண்டு, நெப்போலியன் தன் பழைய கருத்தை பிரான்சிடம் கொண்டிருந்த பகை உணர்ச்சியைக்கூட மாற்றிக் கொண்டான்.

பாயோலியை எதிர்க்க, நெப்போலியனையே ஒரு படைப் பிரிவுக்குத் தலைவனாக்குகிறது பிரான்சு அரசு.

எந்தக் கார்சிகாவின் விடுதலைக்காகச் சீறிப் போரிட்டானோ, அதே கார்சிகாவில் பிரான்சு ஆதிக்கம் நிலைத்திட, அதே நெப்போலியன், எந்தப் பாயோலியை விடுதலை வீரர் என்று கொண்டாடி வந்தானோ அதே தளபதியை எதிர்த்துப் போரிட முனைந்தான்.

இலட்சியப் பற்றுள்ளவரின் செயலாகுமா இது எனில், ஆகாது. நெப்போலியன் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் செயலில் ஈடுபட்டுவிட்டான் என்றுதான் கூற வேண்டும்—கூறுவர்—கூறினர். ஆனால் நெப்போலியனின் மனம் வேறு விதமாகப் பக்குவம் அடைந்ததின் விளைவுதான் இந்த நிலைமை மாற்றமேயன்றி, கேவலப் போக்கு அல்ல என்பதனை மிகக் கூர்ந்து கவனித்தால் மட்டுமே உணர முடியும்!

பிரான்சு, கொடுங்கோலரின் கொலு மண்டபம் அல்ல; புரட்சிப் பூங்காவாகிவிட்டது; எனவே, கார்சிகா, தன்னைப் பிரான்சு அடிமைப் படுத்திவிட்டதாக இனி எண்ணத் தேவையில்லை; புதிய கருத்துக்கள் பரவிட, புதிய ஆட்சி முறை மலர்ந்திட, பிரான்சு வழிகாட்டுகிறது என்று கொள்ள வேண்டும்; இனிப் பிரான்சு நாட்டுடைய வலிவு எந்த அளவு வளருகிறதோ அந்த அளவுக்குப் புரட்சியில் பூத்த புதுமைக் கருத்துக்களுக்கு வெற்றி கிட்டும். எனவே இனி நாம் பிரான்சின் பக்கம் நிற்கவேண்டும் என்று முடிவு செய்தான்—எதனையும் ஆய்ந்தறிந்து கணக்குப் போட்டுப் பார்க்கும் திறமை படைத்த நெப்போலியன்.

பாயோலியின் கோட்டையை இருமுறை தாக்கியும் பலன் ஏற்படவில்லை—அந்தத் தளபதியின் கை ஓங்கிவிடுகிறது—நெப்போலியன் நாட்டுத் துரோகி என்று அறிவிக்கப்பட்டு விடுகிறது. நெப்போலியன் தப்பினால் போதும் என்ற நிலை! குடும்பத்துடன், கார்சிகாவை விட்டு வெளி ஏறி விடுகிறான். அப்போதே சிக்கியிருந்தால், நெப்போலியனுடைய எதிர்காலம் இருண்டுபோய் விட்டிருக்கும்.

மார்சேல்ஸ் நகரில், ஒரு வீட்டின் நாலாவது மாடியில் தஞ்சமடைந்த இந்தக் குடும்பம் வாடுகிறது.

இந்தச் சமயத்தில்தான் நெப்போலியனுடைய அண்ணன் ஜோசப், வணிகர் மகளை மணமுடித்ததும், நெப்போலியன் டிசயரியைக் காதலித்துக் கைகூடாமற்போனதும்.

இதிலிருந்து, நெப்போலியன் கார்சிகன் என்ற நினைப்பை மாற்றிக் கொண்டு விடுகிறான்; நிலைமை மாறி விடுகிறது; பிரான்சுக்காரனாகி விடுகிறான்; பிரான்சு என் நாடு என்று கொள்கிறான்.

தனித்து இயங்க முடியாது—ஏதாவது ஒரு பக்கம் சேர்ந்துதான் வாழமுடியும் என்ற நிலை ஏற்படுமானால், எந்தப் பக்கம் ஆதிக்கம் செலுத்தும் வலிவுடையதோ அங்கு சேர்ந்துகொள்ள வேண்டியதுதான்! வீழ்த்தப்பட்டுப் போவதைக் காட்டிலும், வீழ்த்தும் வலிவு தேடிக் கொள்வது நல்லது—இது நெப்போலியன் கொண்டு விட்ட கொள்கை.

நிலைத்து நிற்பது கொள்கை; நேர்மையுடன் கொள்கையைக் கடைபிடிக்க வேண்டும்; வேளைக்கு ஒரு கொள்கை, நாளைக்கு ஒரு கட்சி என்று மாறுவது தவறு. அதிலும் சுயநலத்துக்காக மாறுவது, மிகக் கேவலம்.

எவரும் மறுக்கொணாத, எவருக்கும் எளிதிலே புரியத்தக்க, எவராலும் போற்றிப் பாராட்டத்தக்க, இந்தக் கருத்து, நெப்போலியனுக்குத் தெரியாதா? மிக நன்றாகத் தெரியும்! படித்த ஏடுகள் கொஞ்சமா! சிந்தித்த காலம்தான் குறைவா!!

கரு உருவில் இருந்து வந்த நோக்கம் பெரிதாக வளர்ந்து வளர்ச்சி காரணமாக வடிவத்திலே மாற்றம் கொண்டுவிட்டது என்று கூறுவதுதான், பொருத்தமாக இருக்கும். கோழைத்தனமும் சுயநலமும் நெப்போலியனை மாற்றிவிடவில்லை. கார்சிகா விடுதலை என்பது, துவக்கத்தில் மிகப் பெரிய சாதனை என்று அவன் மனதிலே தோன்றிற்று. காலம் மாறிற்று. கருத்தும் மாறிற்று! கார்சிகா, உள்ளங்கை அளவுள்ள தீவு! இதிலே ஆதிக்கம் பெற்றுத்தான் என்ன பலன்? உலகறியும் வீரனாகவா முடியும். வெற்றி பெற்றால், தீவின் தலைவனாகலாம்—எந்தச் சமயம் எந்த எதிரிக் கப்பல் வருகிறதோ என்ற திகிலுடன் இருக்கவேண்டும்; தோற்றுவிட்டால், பாரிசில், சந்தைச் சதுக்கத்தில், வெட்டுப் பாறையிலே வீழவேண்டும். இதற்கா, திரட்டி வைத்துள்ள ஆற்றல் பயன்படுவது. பிரான்சிலே பிடிதேடிப் பெற்றுக் கொள்ள வேண்டும்; பிறகு பிறநாடுகள்; பேரரசு; காலத்தை வெல்லும் கீர்த்தி பெறவேண்டும்—இது நெப்போலியனுடைய புதிய கோட்பாடாகிவிட்டது.

தன் ஆற்றலிலே அளவற்ற நம்பிக்கை; அந்த ஆற்றலை வெளிப்படுத்தி வீர வெற்றிகள் பெற்றாக வேண்டும் என்ற துடிப்பு—நெப்போலியனுக்கு.

ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்பதிலே, அத்துணை வெறி என்று குற்றம் சாட்டினர், பிற்காலத்தில். நெப்போலியன் சொன்னான். ''நான் ஆதிக்கம் பெற விரும்புகிறேன்—மறுக்கவில்லை. ஆனால் எந்த முறையில், எனக்கு அந்த ஆர்வம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். யாழ் வாசிப்பவனுக்கு, எப்படி, யாழிடம் தனக்கு நிகரற்ற ஆதிக்கம் இருக்கவேண்டும் என்று எண்ணம் இருக்குமோ, அப்படி எனக்கு ஆதிக்கத்தின்மீது ஆர்வம். யாழ் வல்லோன் எதற்கு விரும்புகிறான் ஆதிக்கத்தை? யாழினின்றும் எவரையும் மகிழ்விக்கவல்ல இனிய இசையை எழுப்ப! என் நோக்கமும் அஃதே போன்றதுதான். பல அரசுகளிலே ஆதிக்கம் பெற முனைகிறேன்—எதன் பொருட்டு? அமைதி நிலைத்திட, அரசு நிலைத்திட, வாழ்வு சிறந்திட, வளம் பெருகிட! மக்கள் வாழ்ந்திட!!''

இரத்தம் இருபது ஆண்டுகள் பொங்கிடும் விதமான போர் பல நடாத்தி, ஆட்சிகள் பலவற்றைக் கலைத்தும், கவிழ்த்தும், ஒரு பேரரசு அமைத்திட முனைந்தது! மக்களுக்கு நல்வாழ்வு பெற்றளிக்க என்று கூறுவதாலேயே, இருபது ஆண்டுகள் விளைந்த விபரீதங்களை விருந்தாக்கிக் கொண்டு விருது அளித்திட எவர் ஒப்புவர்!

நெப்போலியனுடைய ஆதிக்க வேட்டைக்கு ஒரு நோக்கம்கூட இருக்கலாம்—அந்த நோக்கம் நேர்த்தியானது என்று திறம்பட வாதிடவும் செய்யலாம். ஆனால் எத்தனை எத்தனை அழிவு, கொடுமை, இழப்பு, இடிபாடு, இடர்ப்பாடு! எல்லாம் கடைசியில் எதற்குப் பயன்பட்டது—ஒரு மாவீரன் மகத்தான வெற்றிகளை, திறமையால், உழைப்பால், திட்டமிடுவதால் பெறமுடிந்தது என்பதை வரலாற்றுச் சுவடியிலே இணைத்துக் காட்டத்தானே! மல்லிகையின் வெண்ணிறத்தை மாற்றிக் காட்டுகிறேன் என்று சூளுரைத்து, மதலையினைக் கொன்று, அந்தக் குருதியிலே மல்லிகையைக் கொட்டி,

செந்நிறமேற்றிக் காட்டுவதா! இரத்தம் பொங்கிடும் இருபது ஆண்டுகள், ஒரு இலட்சிய அடிப்படையிலே மேற்கொள்ளப் பட்ட புனிதப் பணி அல்லவே அல்ல! ஆற்றலை அளவுகடந்து பெற்றவன், அவனியை அழித்தேனும், வெற்றிப் புகழ்பெற முனைந்திடும் விபரீத விளையாட்டு அது. உலகவரலாற்றிலே பல நூற்றாண்டுகளுக்கு ஒருமுறை, ஏற்படும் பூகம்பம், எரிமலை, பெரும் புயல், பெரு வெள்ளம்.

துவக்கத்திலேயே, நெப்போலியனுடைய போக்கைக் கூர்ந்து கவனித்தவர்கள், 'தன்னால் முடியும் என்ற எண் ணம் தடித்துப்போன நிலை இந்த வீரனுக்கு இருக்கிறது. இது மிக ஆபத்தானது. இவன் ஆட்டிப் படைத்திட, ஆதிக்கம்கொண்டு அலைந்திட முனைவான். வருங்காலத் தினர், கொடுமையின் சின்னம், பயங்கர மனிதன் என்று கூறத்தக்க நிலைக்குச் செல்கிறான் இந்த நெப்போலியன்' என்று கூறினர்.

டோவ்லான் எனும் ஊரில், பிரிட்டிஷார் கோட்டை எழுப்பிக்கொண்டு, மன்னர் கட்சியை மீண்டும் பிரான்சில் புகுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த இடத்தைத் தாக்கிப் பிடித்திடுவதற்கேற்ற வழி இல்லை என்று பிரான்சுத் தளபதிகள் பலரும் கருதினர்.

நெப்போலியன், துணிவாகத் தாக்கி, டோவ்லானில் வெற்றி பெறமுடியும் என்று கூறி, அதற்கான திட்டம் தயா ரித்திருப்பதாகத் தெரிவித்தான். தயக்கத்துடன்தான், நெப்போலியனிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. என் றாலும், வியக்கத்தக்க வெற்றியைப் பெற்றான். அஞ்சாமல் தாக்குவது, விரைவாகச் செயலாற்றுவது எனும் போக்கின் காரணமாக அந்த வெற்றி கிடைத்தது. பிரிட்டிஷாரும் அவர்களை நம்பி அங்குக் குடியேறி இருந்த பல்லாயிரவரும் பதைபதைத்துப் போயினர்.

அந்தப் போரிலே பெரும் படைத்தலைவன், நெப் போலியன் அல்ல.

அந்தப் பதவியில் வேறொருவர் இருந்தார்—திட்டம் நெப்போலியனுடையது—வெற்றி பெற்றதற்குக் காரணம் திட்டம்தான் என்பது அனைவருக்கும் தெரியும்—பெரும்படைத் தலைவரும் அறிவித்தார்-நெப்போலியனைப் பாராட்டினார்.

நெப்போலியன் நடாத்திய புயல் வேகத் தாக்குதலால் நிலைகுலைந்து போனவர்கள், பீதியுற்று, பல்வகைக் கலங்களேறிக் கடல் வழியாகத் தப்பிச் செல்ல முனைந்தனர். பதினையாயிரவர், முதியவர் இளைஞர், ஆடவர் பெண்டிர், படுகாயமுற்றோர், நோய்வாய்ப்பட்டோர், பதறி ஓடுகிறார்கள் படகுகளை நோக்கி! படகுகளிலே ஏறுவதற்குப் போட்டி, சச்சரவு! படகுகள் கவிழ்ந்துவிட, பலர் பிணமாகி மிதக்கிறார்கள். இதற்குள் ஊரிலே ஆயுதக் கிடங்கு தீ பிடித்துக் கொள்கிறது. பெரு நெருப்பு பரவுகிறது. சிக்கினோர் கருகினர்! கட்டடங்கள் இடிபாடுகளாயின! பொருட்குவியல் சாம்பலாயிற்று! ஒருபுறம் கொந்தளிக்கும் கடல். மற்றோர் புறம் பெரு நெருப்பு—இடையிலே பீதிகொண்ட மக்கள்.

எதிர்பாராதிருந்த நேரத்தில் எவரும் எதிர்பார்த்திருக்க முடியாத முறையிலே தாக்குதலை நடத்தியதால் வெற்றி கிட்டியது மட்டுமல்ல, தோற்றவர்கள் நாசமாயினர். இரத்தம் பொங்கப்போகிறது, இனி இவன் நடாத்தும் போரினால் என்பதை அறிவிக்கும் எச்சரிக்கையாயிற்று டோவ்லான்.

நெப்போலியனுடைய புகழ் பாடலாயினர் பலரும்.

இடுப்பொடிந்தவர்கள் இருபது முப்பது தங்கப் பதக்கங்களை அணிந்து கொண்டு, பெரும் படைத் தலைவர்கள் எனும் பட்டம் சுமந்து கொண்டுள்ளனர்—இதோ ஓர் இளைஞன்—வீரதீரப் போர் புரிகிறான்—வெற்றிக்கான திட்டம் தருகிறான்—வெந்தழலாகிறான் எதிரிகளுக்கும்—இப்படிப் பட்டவர்கள் அல்லவோ படைகளை நடாத்திட வேண்டும்—என்று அங்காடியிலும் அலுவலகங்களிலும் பேசலாயினர். இனி, நெப்போலியனுக்காக, பரிந்து பேசி இடம் தேடிக் கொடுக்க, ஒருவரும் தேவை இல்லை. அவன் ஆணையின்

படி அஞ்சாது போரிட்டு வெற்றிபெற்ற படையினர் போதும், அவன் புகழ் பாட. புதிய விண்மீன் ஒளிவிடத் தொடங்கி விட்டது என்பதனைப் பலரும் உணர்ந்தனர். வாய்ப்பு அளிக்கப்பட்டால், வாகை சூடிடலாம் என்ற நம்பிக்கை பலப்பட்டது நெப்போலியனுக்கு.

ஆனால், அவனுக்கான முன்னேற்றப் பாதை, பள்ளம் படுகுழியற்றதாக அமைந்துவிடவில்லை. அவ்வளவு எளிதாகவும் ஒரு புதியவனுக்கு இடம் அளித்துவிடப் பலருக்கு மனம் ஒப்பவில்லை.

அரசு நடாத்துவோர் போர்க் கருவி பெறும் காரியமாக நெப்போலியனை, ஜெனோவா நகர் அனுப்பி வைத்தனர். அங்கு இருக்கும்போது, யாரோ மூட்டிவிட்ட கலகத்தால், அரசினர் நெப்போலியன்மீது ஐயம் கொண்டனர்—ஏதோ சதி நடத்துகிறான் என்று கூறி சிறைப்படுத்தினர்.

'வெற்றி! வெற்றி!' என்று முழக்கமிட்டான் இளைஞன் —பாபம் சிக்கிக் கொண்டான் வசமாக—காலமெல்லாம் சிறையோ அல்லது சுட்டுத் தள்ளிவிடுவார்களோ, என்ன கதியோ இவனுக்கு என்று ஏளனமாகச் சிலரும், இரக்கம் காட்டிப் பலரும் பேசினர்.

நெப்போலியன் மனம் வெகு பாடுபட்டிருக்க வேண்டும். தூய்மை பற்றி ஐயப்பாடு கிளப்பப்படும்போது, உள்ளம் வெதும்பத்தானே செய்யும். அவ்விதமான மன வேதனையின் போதெல்லாம், நெப்போலியன் வாழ்க்கையையே வெறுத்துப் பேசுவதும், தற்கொலை பற்றி எண்ணுவதும் வாடிக்கை.

என்ன வேலை இருக்கிறது இந்த உலகில். எப்படியும் சாகப் போகிறேன் ஓர்நாள்—என்னை நானே கொன்று கொள்வது சாலச்சிறந்ததல்லவா! அறுபது ஆண்டு முதியவனாகிவிட்டிருப்பின், பரவாயில்லை; இவ்வளவு காலம் இருந்ததுபோல் இன்னும் சிறிது காலம் இருந்துவிடலாம் என்றுகூட எண்ணிக் கொள்ளலாம். நான் முதியவனல்ல; தொல்லைகள், மனச்சங்கடங்கள் அடுக்கடுக்காக, எனக்கு. மகிழ்ச்சி திருப்தி

இல்லை. ஒருபலனுமற்ற இந்த வாழ்வு இருப்பானேன்—முடித்துக் கொண்டால் என்ன? இவ்விதமாக, மனம் வெதும்பி எண்ணுகிறான், நெப்போலியன்.

உள்ளத்தில் ஓராயிரம் எண்ணங்கள்—அவைகளைச் செயல்படுத்தும் வாய்ப்பு கிடைக்கவில்லை என்றால், எண்ணங்கள் நச்சரவுகளாகி இதயத்தை அல்லவா கடித்து, பிய்த்துத் தின்னத் தொடங்கும்? அந்த நிலை நெப்போலியனுக்கு.

அதிலும், துரோகிப் பட்டம் வேறா? செ! என்ன உலகம் இது!—என்று கூறிக் குமுறுகிறான். நண்பர்கள் சிலர், சிறையிலிருந்து தப்பி ஓடிவிடும்படிச் சொல்கிறார்கள். செவி சாய்க்க மறுக்கிறான்.

''நாட்டுக்குத் துரோகியாக என் தந்தையே மாறினாலும் அவரைக்கூடக் குத்திக் கொன்று போடுவேன். என்னைத் துரோகி என்று தூற்றுவதா! என் தளைகளை நீக்கி, நான் குற்றமற்றவன் என்பதை ஏற்றுக் கொண்டு விடுதலை அளியுங்கள். அடுத்த கணம், என்னைச் சாகச் சொல்லுங்கள் நாட்டுக்காக. தயார்! மகிழ்ச்சி! சாவுக்கு அஞ்சுபவன் நான் அல்ல! களத்திலே, மரணத்தின் பிடியில் பலமுறை சிக்கிக் கொண்டவன், நான்'' என்று நெப்போலியன் நண்பனுக்கு எழுதுகிறான்.

பெரியதோர் ஆபத்து, நெப்போலியனுக்கு ஒரு எதிர்காலம் இல்லாமற் செய்துவிடக் கூடிய பழி, எப்படியோ ஒரே வாரத்திலே துடைக்கப்பட்டு, நெப்போலியன் விடுதலை பெறுகிறான்.

நாடு பல காலடி வீழத்தக்க போர்த் திட்டங்களை உருவாக்கி வைத்துக் கொண்டு, உலவுகிறான் மாவீரன்—மதிப்பளித்து ஏற்றுக்கொள்வார்இல்லை. வாழ்க்கையிலே மகிழ்ச்சி யாவது உண்டா? இல்லை. பணமுடை! சோம்பிக்கிடக்க வேண்டிய நிலை! அண்ணன் ஜோசப் பரவாயில்லை—வணிகனின் மகளை மணந்துகொண்டு, சொத்து சுகம் பெற்று இருக்கிறான்—நெப்போலியனுக்கு? டிசயரியிடம் கொண்ட காதல் கைகூடவில்லை! பணத்தொல்லை! அண்ணனிடம் சிறிதளவு பொறாமைகூட ஏற்பட்டது.

நெடுங்காலம் அடைபட்டுக் கிடக்கும் பொன், என்றேனும் ஓர்நாள் வெளியே வந்திடுவது காண்கிறோம்—அதுபோலவே, மங்கிக் கிடக்கும் ஆற்றல், வெளிவர வாய்ப்புக் கிடைத்தது.

அரசாளும் குழுவினருக்கும் பாரிஸ் நகர மக்களுக்கும் பகை! குழுவினருக்குப் பாதுகாப்பு அளித்திடும் பொறுப்பு, நெப்போலியனிடம் ஒப்படைக்கப்பட்டது.

வேற்று நாட்டவரை வீழ்த்துவதிலேயே விருதுகள் கிடைக்கும்—இது உள்நாட்டிலேயே ஒருவரை ஒருவர் வெட்டி வீழ்த்திக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ளும் வேலை. இதுதானா, எனக்கு? மலை முகடு தாவி மாற்றானை வீழ்த்த வல்ல என்னை, காவல் காத்திடச் செய்கின்றனர்—கலாம் விளைவிக்கும் கும்பலை அடக்கச் சொல்லி, நாடாளும் பொறுப்பாளர் கூறுகின்றனர். நன்று! நன்று! நாடாளும் பொறுப்பாளர்களின் வீரம்!—என்று எண்ணி, உள்ளூற சிரிக்கிறான்; உலகாளும் ஆற்றலை உள்ளத்தில் அடக்கி வைத்துக் கொண்டுள்ள வீரன்.

பீதி கொண்ட ஆளும் குழுவினரிடம், ஆர்ப்பரித்து எழுந்து, அமளி மூட்டிடும், கும்பல் மோதிக் சொள்ள வந்த போது, நெப்போலியன், கலகக்காரர்கள்தானே, கைஒலி கேட்டாலே சிதறி ஓடுவர் என்று இருந்துவிடவில்லை—கடுமையாகத் தாக்கினான்—பலரைச் சுட்டு வீழ்த்தினான்! துணிவு! துரிதமான நடவடிக்கை!!

லூயி மன்னன், புரட்சிக்காரர்களால் பிடித்திழுத்துச் செல்லப்பட்ட நாட்களிலேயே, நெப்போலியன், நண்பர் சிலரிடம் மெல்லிய குரலில் கூறியிருக்கிறான். கண்டதைக் கையில் எடுத்துக் கொண்டு, காட்டுக் கூச்சலிடும் கும்பலின் முன்வரிசையிலே உள்ள சிலநூறு போர்வழிகளை, மன்னர் படையினர் சுட்டுத்தள்ளி இருந்தால், பின்வரிசை யாவும் பீதி அடைந்து, சிதறி ஓடி இருக்கும். தவறிவிட்டார்கள் மன்னர் தரப்பினர் என்றான்.

மன்னர்களின் மமதையும் சீமான்களின் செருக்கும் நெப்போலியன் மனதிலே வெறுப்பை மூட்டியதுபோலவே மக்களின் காட்டுப்போக்கும் கடுங்கோபத்தை மூட்டிற்று.

''மக்களாம், மக்கள்! என்ன தெரியும், அப்பாவிகளுக்கு? ஆயிரம் அறிவுரை பேசட்டும்; திருந்துவார்களா? அமைப்பு களை மேலும் மேலும் செம்மைப்படுத்தட்டும்; நல்வாழ்வு பெறுவார்களா? ஒருக்காலும் இல்லை. மக்களுக்குத் தேவைப் படுவது, தத்துவங்களுமல்ல, விதவிதமான அமைப்புகளிலே இடமும் அல்ல! அவர்களுக்குத் தேவை, அவர்கள் போற்றத் தக்க, புகழ்மிக்க ஒரு தலைவன்! பரம்பரை காட்டியோ பணத்தைக் காட்டியோ புகழ் பெற்றவர்களை அல்ல; ஆற்ற லைக்காட்டி, பெற்ற வெற்றிகளைக் காட்டி ஒரு தலைவன் புகழ் ஒளியுடன் நின்றால் போதும், மக்கள் அவன் ஏவல்படி நடந்திட போட்டியிட்டுக் கொண்டு வருவார்கள். இது நெப்போலியன் கொண்டிருந்த கருத்து. மக்களை மதியாத மாமன்னர்களை விரட்டி அடித்து, மக்களாட்சி அமைத்த நாட்கள்—அதே பிரான்சு—அங்கு மக்களை மரப்பாச்சிகள் என்று கணக்கிடும் போர்வீரன்—அவன் புகழ் பெறுகிறான்! பொருள் என்ன? மக்களாட்சி மறைகிறது. மாவீரன் காலடி வீழ்ந்து, அவன் கட்டளைப்படி நடக்கும் முறை வெளிவரு கிறது என்பதுதான்.

இந்தச் சம்பவம், நெப்போலியனுக்கு ஒரு புதிய இடம் பிடித்துக் கொடுத்திட மட்டும் பயன்படவில்லை. ஆட்சிக் குழுவில் அமர்ந்து அமுல் நடத்தும் பொறுப்பாளர்கள், எவ் வளவு கோழைகள், முதுகெலும்பு அற்றவர்கள் என்பதைத் தெளிவாக நெப்போலியன் உணர்ந்து கொள்ள வைத்தது.

பெரிய கூட்டமாம்! துப்பாக்கியுடன் வருகிறார்களாம்! —என்று பீதியுடன் பேசினர், நாடாள்வோர். என்ன நடுக் கம்! எத்துணைத் திகில்! இவ்வளவுதானா இவர்கள்—இது கள்! போரிடத் தெரியாத மக்கள், ஆயுதம் எடுத்து வந் தாலே, குலைநடுக்கம் எடுக்கும்போது, அஞ்சாநெஞ்சுடைத் தலைவனொருவன் ஆணையின்படி நடந்திடும் ஆற்றலுள்ள கட்டுப்பாடுமிக்க ஒரு படை இவர்களை எதிர்த்தால் என்ன ஆவார்கள்?—என்று எண்ணினான்—எதிர்காலமே அவன் கண்ணெதிரே தெரிகிறது.

ஒருவர் சொல்லியிருக்கிறார், ''நெப்போலியன், எரி நட்சத்திரம்போல! வளர வளர ஒளி அதிகமாகும்-வேறெந்த ஒளியையும் மிஞ்சும் அளவு. ஆனால் ஒளி மிகுந்திட மிகுந்திட, தன்னைத்தானே எரித்துக் கொண்டுவிடும்—எவ்வளவு அதிகமாக ஒளி காணப்படுகிறதோ அவ்வளவு அதிகமான நெருப்பு பிடித்துக் கொண்டது என்று பொருள்—எவ்வளவு வேகமாக ஒளி வருகிறதோ அவ்வளவு வேகமாக, பற்றி எரிந்து கொண்டு போகிறது என்று பொருள். இறுதி? கருகிப் போய் விடுகிறது. எரிநட்சத்திரம், நெப்போலியனுடைய வரலாறும் இதுதான்.''

இத்தாலி நோக்கிக் கிளம்பும்போது புகழ், புள்ளி அள வாகத்தான் இருந்தது.

பாரிஸ்—பள்ளி அறை—பளிங்குக் கண்ணாடி—எனக்குப் பின்னால். முன்னால் இருப்பது புகழ் தரும் வெற்றிகள்! என்று எண்ணியபடி, களம் நோக்கிச் செல்கிறான். வழியிலே, தங்குமிடங்களிலிருந்தெல்லாம், ஜோசபைனுக்குக் காதற் கடிதங்கள் தீட்டுகிறான். களம் வந்திராவிட்டால், என்னென்ன பேசி மகிழ்ந்திருப்பானோ, அவைகளை எல்லாம் கடித மூலம் அனுப்பி மகிழ்கிறான்—மகிழ்விப்பதாகவும் எண்ணிக் கொள்கிறான்.

இத்தாலி மீது படை எடுத்துச் சென்று பிடித்திடவேண்டும் என்பது அரசு ஆணை. ஆனால் அதற்கு ஏற்ற வலிவு மிக்க படை உண்டா? இல்லை! வசதிகள் உண்டா? கிடையாது! ஆனால் இவைகளைக் கூறித் தயக்கம் காட்டினானா என்றால் இல்லை. போரிலே ஈடுபட்டு பயிற்சி பெற்ற பொறியியல் அதிகாரி ஒருவர்கூடக் கிடையாது. வத்தலும் தொத்தலுமான நாலாயிரம் குதிரைகள்; உணவு போதுமான அளவு இல்லை; செலவுக்கான பணம் மிகக் குறைவு. ஆனால், உடன் சென்ற படையினரிடம் வீரம் நிரம்ப! அதனை அதிகமாக்கத்தக்க உணர்ச்சியை, உற்சாகத்தை ஊட்டவல்ல வீர உரை நிகழ்த்தினான் நெப்போலியன்.

இந்தப் போரிலே நெப்போலியன் காட்டிய துணிவும் மேற்கொண்ட முறைகளும், வல்லரசுகள் பலவற்றுக்குக் குலைநடுக்கத்தை ஏற்படுத்திவிட்டன.

இத்தாலியைத் தாக்க, மிக உயரமான, பனி நிரம்பிய, ஆல்ப்ஸ் மலையைக் கடந்தாக வேண்டும் என்று திட்டமிட்டான்—கேட்போர் மலைக்கத்தக்க திட்டம்.

ஆல்ப்ஸ் மலையை முன்பு அனிபால் எனும் இரணகளச் சூரன் கடந்ததுண்டு. உலகம் வியந்தது.

நெப்போலியன், வேறு எவராயினும் இதனைச் செய்திருப்பர் என்று கூறிடத்தக்க செயலை நடாத்திக் காட்டுவது போதாது என்ற எண்ணம் கொண்டவன். இதற்கு முன்பு இதுபோலச் செயலாற்றியவர் எவரும் இல்லை!—என்று எவரும் வியந்து கூறத்தக்க செயல்களைச் செய்வதிலேயே நாட்டம் மிகுதியும் கொண்டிருந்தான்.

எது நடைபெறாது என்று மாற்றார் நம்பிக் கொண்டிருக்கிறார்களோ, அதனை நடத்திக் காட்டுவது எதிரி முகாமைக் கிடுகிடுக்க வைத்துவிடும் என்பதனை நெப்போலியன் அறிவான். ஒவ்வொரு களத்திலும், இதனை நோக்கமாகக் கொண்டு, கேட்போர் திடுக்கிடத்தக்க செயலாற்றி, வீரக்காதை தீட்டியபடி இருந்தான்.

ஆல்ப்ஸ் மலையுச்சியைக் கடந்து படை வர இயலுமா? என்று எண்ணி ஏமாந்து கிடப்பர், மாற்றார்கள். மலையைக் கடந்து நம் படை எதிரே சென்று நின்றால் போதும், பீதி எதிரியின் வலிவிலே பாதியைச் சாகடித்துவிடும் என்று அறிந்து திட்டமிட்டான், வீரத்தளபதி.

ஆல்ப்ஸ் மலையைக் கடப்பதற்கான திட்டத்தை, மிகத் திறமையாக, தீரயோசித்து வகுத்தான். இயற்கை விளைவிக்கக்கூடிய கொடுமைகளையும் சமாளிக்க வேண்டும், எதிரிப்படைகளின் தொல்லைகளுக்கும் ஈடுகொடுக்க வேண்டும். படைவீரர்கள் மட்டுமல்ல, பீரங்கி வண்டிகளும் மலையைக் கடந்தாக வேண்டும். உணர்ச்சி ஊட்டத்தக்க தலைவனால் மட்டுமே, இத்தகைய மகத்தான செயலைச் செய்யும்படியான வீரத்தைப் படையினர் பெறச்செய்ய முடியும்! நெப்போலியன், தான்கொண்டிருந்த நம்பிக்கையைப் படையினர் அனைவரும் பெறத்தக்கவிதமாக நடந்து கொள்வான்.

பட்டாடைகளாலான கூடாரத்தில் ஓய்வாகச் சாய்ந்து கொண்டு, களியாட்டத்துக்கிடையே, கட்டளை பிறப்பித்துக் கொண்டுள்ள, படைத் தலைவன் அல்ல; குடும்பப்பெருமை காரணமாகவோ, கொலுமண்டபத்து தயவாலோ, படைத் தளபதியானவனல்லவே நெப்போலியன். ஓயாத உழைப்பி னால், மங்காத வீரத்தால், செயலாற்றும் திறத்தால், முன் னணி நிற்பவன். எனவே, தன் படைவரிசையிலும் வீரம் காட்டப்படும் போதெல்லாம் பாராட்ட, பரிசு வழங்க, பெரிய பதவிகள் அளித்திடத் தவறுவதில்லை. தமது வீரச் செயலைப் பாராட்ட, வாழ்த்த, தலைவன் முன்வருவது தெரிந்ததும், படைவீரர்கள் புதிய எழுச்சி பெறத்தானே செய்வர்.

நெப்போலியனிடம், படை வீரர்களுக்கு ஏற்பட்ட பாசம், மிக உன்னதமானது. அவன் ஆணை எதுவாயினும், முறை எது கூறினும், தட்டாமல் தயங்காமல் மட்டுமல்ல, மகிழ்ச்சியுடன் அவற்றின்படி நடப்பர்.

வெற்றி பெற்றுத்தரத்தக்க மாவீரன், நமது தலைவன் என்ற உணர்ச்சி, படையிலே, எப்போதும், எத்தகைய சூழ்நிலையிலும், நெப்போலியனுக்காக உயிரைக் கொடுக்க வும், போர்வீரர் காத்துக் கிடந்தனர். அரச குடும்பத்தினர், சீமான்கள் என்போர் மட்டுமே பெரிய பதவிகளைப் பெற்று வந்தனர் பட்டாளத்தில். நெப்போலியன் அப்படிப்பட்டவன் அல்ல. எளிய குடும்பம். உழைப்பால் உயர்ந்தவன். எனவே அவனிடம் எளியகுடும்பத்தினரான போர்வீரர்களுக்கு உயிர். சொந்தத்தோடும் பந்தத்தோடும் பழக முடிகிறது. செல்லப் பெயரிட்டு அழைத்து மகிழ முடிகிறது. எனவே வேறு எந்தக் காலத்திலும் ஏற்படாதவிதமான தீவிர எழுச்சி காட்டிப் போரிட்டனர், நெப்போலியன் தலைமையில் இருந்து வந்த போர்வீரர்கள்.

துணிகரமான போக்குடன், பெரிய ஆபத்துக்களைப் பற்றிக் கவலைப்படாமல் போரிடும் வீரமிக்க பல தளபதி கள் தோன்றினர். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் அள வில், நெப்போலியன்களாகவே விளங்கினர். எதிர்ப்படை

எத்துணை பெரிதாக இருப்பினும், தன்வசம் உள்ள படையைக் கொண்டு, எதிரிப் படைவரிசையில் ஏதேனும் ஓர் பகுதியை மிகவேகமாகத் தாக்கி, எதிரிப்படை வரிசையில் பிளவை ஏற்படுத்தி, சிதறவைத்து, நிலை குலைந்து அப் படை ஓட, துரத்திச் சென்று தாக்கி அழிப்பது, நெப்போலியன் கையாண்ட போர்முறை. இதற்கு அச்சமற்ற போக்கும், கணக்கிட்டபடி காரியமாற்றும் துரிதத் தன்மையும் வேண்டும்.

'களத்திலே பெறக்கூடிய சில வெற்றிகளை இழக்கக்கூட நான் சம்மதிப்பேன். ஆனால் காலம் வீணாக்கப்படுவதை, இழக்கப்படுவதை மட்டும் விரும்பவே மாட்டேன்' என்று நெப்போலியன் ஒருமுறை கூறினான்.

போர் நடைபெறும்போது நெப்போலியன் குதிரை மீதேறி களத்திலே எங்கெங்கு சென்று நேரிடையாகக் காரிய மாற்ற வேண்டுமோ அங்கெல்லாம் செல்வான்—காற்றெனச் சுற்றிச் சுற்றி வருவான். வேலை கடினமானது ஆக ஆக அவன் சுறுசுறுப்பு வளரும். நிலைமையில் ஆபத்து அதிகப் பட அதிகப்பட நெப்போலியனுடைய வீர உணர்ச்சி கொழுந்து விட்டு எரியும். பசி தூக்கம் மறந்து பம்பரமாகச் சுற்றுவான். களத்திலேயே ஓரிடத்தில் குதிரைமீது அமர்ந்தபடியே சில நிமிடங்கள் கண்களை மூடிக்கொள்வான்—தூக்கம்! உடனே விழித்துக் கொள்வான்—புது வேகம் பிறக்கும்.

செயலாற்றுவதற்கான வேகம், அளவிடமுடியாதபடி இருந்தது. இத்தனைக்கும், சில படைத் தலைவர்கள் போல, பார்க்கவே பயங்கரமாகத் தோற்றமளிக்கும் பேருருக்கொண்டவன் அல்ல. நாலடி பத்து அங்குல உயரம், நெப்போலியன்—ஐந்தடிக்கும் குறைவு. குதிரை மீது அமர்ந்திருக்கும் போது மட்டுமே கெம்பீரமான தோற்றம் இருக்கும். நேர்த்தியான உடற்கட்டு! களைப்பு சலிப்பு அவனைத் தீண்டுவதில்லை.

நினைத்தபோது தூங்கவும் முடியும்—விரும்பிய உடனே விழித்துக் கொள்ளவும் முடியும். பல நாட்கள் போதுமான அளவு தூங்காமலேயே, வேலைசெய்து கொண்டிருக்க இய

லும். விடிய விடிய வேலை செய்வதுண்டு—உடன் இருப்போர், களைத்துப்போய்க் கண் அயர்வர்; நெப்போலியன் துளியும் சோர்வின்றி காணப்படுவான். உணவு உட்கொள்வதிலும் நெப்போலியன் அதிகமான ஆர்வம்காட்டுவதில்லை. படாடோபமான முறையிலே, பத்துப் பன்னிரண்டு வகைகள் கொண்ட விருந்து உண்டிடுவதிலே விருப்பம் கொள்வதில்லை. பெரிய நிலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட பிறகு, பேரரசனான பிறகு ஏற்பாடு செய்யப்பட்ட ஆடம்பரமான விருந்திலேகூட அவன் மனம் ஈடுபட்டதில்லை. சீமான்கள் சீமாட்டிகளிடம் சிரித்துப் பேசிக்கொண்டே பல பண்டங்களைத் தொடுவதும் துண்டாடுவதும், சுவைப்பதும் சிதறவிடுவதுமான முறையில் நெடுநேரம் விருந்து சாப்பிடுவது சம்பிரதாயம். ஒருபுறம் இன்னிசை! எங்கும் மெல்லிய குரலிலே பேச்சு. விழியாலே மொழி பேசும் கலை! நடந்தவைகளை எண்ணிப் புன்னகை, நடக்க வேண்டியவைகளை நினைத்து ஏக்கப் பார்வை, பெருமூச்சு! இப்படி, மணிக்கணக்கிலே விருந்து நடைபெறும். நெப்போலியன் இதனைக் காலக்கேடு என்று கருதினான்—அரைமணி நேரத்திலே விருந்து வேலையை முடித்துக் கொண்டு, எழுந்துவிடுவான். மற்றவர்கள் பாடு திண்டாட்டமாகிவிடும். அவர்கள் அப்போதுதான், உள்ள பண்டங்களில் எதை உண்பது என்ற முடிவுக்கு வந்து, சிறிதளவு சுவைத்துக் கொண்டு இருப்பார்கள். நெப்போலியன் அதுபற்றிக் கவனம் செலுத்துவதில்லை—தன் வேலை முடிந்ததும் எழுந்துவிடுவான். மாமன்னன் எழுந்தான பிறகு, மற்றவர்களும் எழுந்தாக வேண்டுமே! விருந்து முடிந்துவிட்டதாகத்தானே பொருள். எனவே, எழுந்துவிடுவார்கள்—விருந்து கலைந்துவிடும். விதவிதமான பண்டங்கள் வீணாகிக் கிடக்கும்; பசித்த வயிறோடு பலரும் தத்தமது இடம் செல்வர்.

மாமன்னன் நெப்போலியன் நடத்தும் விருந்துக்குப் போவதானால், போகுமுன் வீட்டில் வயிறு நிரம்பச் சாப்பிட்டுவிட்டுத்தான் செல்லவேண்டும் என்று பலரும் பேசுவர். பானங்கள் பருகுவதிலும் நெப்போலியனுக்கு ஆர்வம் அதிகம்

கிடையாது. போதை தரும் பழச்சாறு பருகும்போதுகூட, இனிப்புக்காகவும் உடல் வலிவுக்காகவும்தான் பருகவேண்டுமே தவிர, உருண்டு கீழே விழவோ, உளறுமொழி பேசவோ அல்ல என்ற எண்ணத்தில் திராட்சை ரசத்தாலான போதை பானத்தில் நிரம்பத் தண்ணீர் கலந்துதான் பருகுவான்.

போரில் புதுமுறை காண்பவன் நெப்போலியன். எனவே, போர் இப்போதைக்கு இல்லை என்ற எண்ணத்தில், ஏற்பாடுகளைச் சரியாகச் செய்து கொள்ளாமல், மாரி கால விடுதிகளிலே ஓய்வாக எதிரிப்படைகள் இருப்பதனை அறிந்து தாக்கி திகைக்க வைத்து வெற்றி கொள்ள இதுவே தக்க சமயம் என்று துணிந்து திட்டமிட்டு இயற்கையுடன் போராடுவதால் களைத்துக் கிடந்த தன் வீரர்களுக்கு உற்சாகமூட்டி, முன்னேறச் செய்தான்.

''குதிரைகள் போதுமான அளவு இல்லையே'' என்பார் ஒரு தளபதி.

''நம்மிடம் இல்லை—சரி; ஆனால் வேறு எங்குமா குதிரைகள் இல்லை? எங்கு இருந்தாலும் சரி, குதிரைகளைப் பிடித்து வாருங்கள்'' என்று உத்திரவு கிளம்பும், நெப்போலியனிடமிருந்து.

உணவு பற்றாக்குறை, நோய்—இவைகளும் எதிரிகளே! பணிந்துவிடக்கூடாது, இவைகளிடமும். தாங்கிக் கொள்ளவேண்டும்; தாக்கக் கிளம்ப வேண்டும் என்பான் நெப்போலியன். அதுபோலக் கூறிவிட்டு அலங்கார வண்டியில் அமர்ந்துகொண்டு கேளிக்கைக்கூடம் சென்றுவிடுபவனா? இல்லை! முன்பு அப்படிப்பட்டவர்கள் பதவி வகித்தனர்—இவன் பிறவித் தளபதி! பதினெட்டு மணி நேரம் வேலை—களத்துக்கான எல்லாவிதமான ஏற்பாடுகளையும் கவனித்துக் கொள்கிறான்—வைரங்கள் இழைக்கப்பட்ட தங்கப்பதக்கங்கள நிரம்பிய பளபளப்பான பட்டாலான உடை அல்ல அணிந்திருப்பது, போர்த் தளபதி அணியும் உடைதான்—படாடோபம் துளியும் இல்லை. இரவெல்லாம் வேலைசெய்துவிட்டு, விடியும்போது படுத்திடுவான்—தூக்கம் வருவதற்குள்,

போர்முறை பற்றிய ஏதேனும் ஓர் புதிய எண்ணம் தோன்றும்—காலையில் பார்த்துக் கொள்வோம் என்று இருந்து விடுவதில்லை—உடனே கிளம்புவான், படையினருக்குக் கூற-புதிய ஏற்பாடுகளைக் கவனிக்க.

மகத்தான செயலை மேற்கொண்டிருக்கிறோம் என்ற உணர்வும், வெற்றி பெறத்தக்க ஆற்றலுமுள்ளவர்கள் நாம் என்ற நம்பிக்கையும், ஒரு படைக்கு வலிவான போர்க் கருவியாகும். அழிக்கும் வலிவுகொண்ட படைக்கலன்களை குவித்து வைத்துக் கொண்டிருக்கலாம், ஆனால் உறுதியும் நம்பிக்கையும் இல்லை என்றால் வெற்றி கிட்டாது. உறுதியும் உணர்ச்சியும் படையினர் பெறத்தக்கவிதமான செயல் வீரனாகவும் பேச்சுத்திறன் மிக்கவனாகவும் விளங்கினான் நெப்போலியன்.

''தொல்லைகள் பலவற்றைத் தாங்கிக் கொண்டீர்கள், வீரர்களே! அவைகளுக்கெல்லாம் ஒரு முடிவு கட்டத் தீர்மானித்துவிட்டேன். அதோ அந்த மலைகளுக்கு அப்பால், எல்லாம் இருக்கின்றன. உணவு, உடை, பாய்ந்திடும் புரவிகள், பொன், பொருள் யாவும். எல்லாம் நமக்காக! செல்வோம், வெல்வோம், அவைகளைக் கொள்வோம். எதிரிகளை நாம் சந்திக்கக் கிளம்புவோம்—இடையிலே உள்ள தடைகளைத் தகர்த்துவிட்டு முன்னேறி, நமது ஈட்டிமுனைகளை எதிரிகளின் மார்பில் பாய்ச்சுவோம்—புறப்படுக!''

மாவீரன் நெப்போலியன் இதுபோல எழுச்சியூட்டினான்? போர் வீரர்கள் எத்தகைய உணர்ச்சிவயப்பட்டிருப்பார்கள் என்பதனைக் கூறவும் வேண்டுமா? முன்னேறிச் சென்றனர்—மூடுபனிக்கு இடையே படைகள் பாய்ந்தன—எதிரிப்படை வரிசைகளைத் தாக்கினர்—நிலைகுலைந்தது—பிணம் குவிந்தது—இரத்தம் பொங்கிற்று—வெற்றி மலர்ந்தது.

நெப்போலியன் பெற்ற வெற்றி, அதைப் பெற அவன் தீட்டிய திட்டம், போர் வீரர்கள் வட்டத்திலேயே ஓர் புதிய கிளியைக் கிளப்பிவிட்டது.

எப்படி முடிந்தது இத்தனை மகத்தான வெற்றி பெற? —என்று கேட்டுக் கேட்டு வியந்தனர். பாரிசில் விழா! நெப்போலியனுடைய பெயர், ஒவ்வொருவர் பேச்சிலும். நெப்போலியன் நடத்திச் சென்ற படையிலிருந்தவர்களுக்கே பெரும் வியப்பு. முன்னேறித் தாக்கினால் வெற்றி பெற்றிடலாம் என்று நெப்போலியன் கூறியபோதுகூட, வழக்கமான பேச்சு இது என்றுதான் எண்ணிக் கொண்டனர்—நம்பிக்கை முழு அளவில் இல்லை. ஆனால் வாக்களித்தான்; வெற்றி கிடைத்துவிட்டதே! இவனன்றோ பெருந்தலைவன்! இவனை நம்பிச் செல்லலாம் எந்தக் களம் நோக்கியும்—என்ன ஆபத்துகள் குறுக்கிடினும்; கவலையின்றி! நம்மை வெற்றி நோக்கி அழைத்துச் செல்லும் வீரத் தலைவன் நெப்போலியன்—களம் செல்வது என்றால் இத்தகைய மாவீரன் தலைமையிலே செல்லவேண்டும். நெப்போலியன் காட்டிடும் வழி நடப்போம், வெற்றிபெற்றுப் புகழ்க் கொடி நாட்டுவோம்! —என்று கூறிக் கொண்டாடினர் போர் வீரர்கள். படையினருக்கும் நெப்போலியனுக்கும் முன்பே ஏற்பட்டிருந்த நேசம், பாசமாகிவிட்டது. இனி இது பிரான்சு நாட்டுப் படை மட்டுமல்ல, நெப்போலியனின் படை! வெற்றி பெற்றுக் காட்டிடும் வீரப்படை!!

விழாக்கள் நடத்திக் கொண்டு காலத்தை வீணாக்கவில்லை. ஒவ்வொரு எதிரி முகாமையும் சுற்றி வளைத்துக் கொண்டு தாக்கித் தகர்த்துவிட்டு, அவர்கள் சரண் அடையும் நிலையை ஏற்படுத்தும் வரையில் நெப்போலியன் ஓயவில்லை.

நெப்போலியன் நடத்திச் சென்ற படையிலே ஒரு தனித்தன்மை இருந்தது. வாலிப முறுக்கினர், போர்த்திறன் மிக்கவர்கள், தளபதிகளாக்கபட்டிருந்தனர். நரைத்த தலையினர், நாற்பதாண்டு கால போர்க்கள அனுபவம் பெற்றவர்கள். இத்தகைய முதியவர்களே,படைத்தலைமை ஏற்கவேண்டும் என்ற பழைய முறையை நெப்போலியன் மாற்றிவிட்டான். அவனே முப்பதாண்டினன்! எதிரிப் படைகளின் தலைவர்களோ பழங்கதைபேசிடும் பருவத்தினர்-ஆஸ்ட்ரியப்

படைத்தலைவருக்கு வயது 72. மற்றோர் படைதலைவருக்கு 60 வயது-காது செவிடு! கீல்வாதம்! வாலிப முறுக்கினர்களே பெரிதும் கொண்ட பிரான்சுப்படை, துணிச்சலாகப் பாயும் போது, அந்த முதியவர்கள் தலையை அசைத்தபடி, இலக்கணப்படி சரியல்லவே! சமரிடும் முறை இது அல்லவே—சாகத் துடித்துக் கொண்டு வருபவர் போலல்லவா வருகிறார்கள் என்று முணுமுணுத்தனர். இவர்கள் போர்முறை இலக்கணம் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது படைகளை முறியடித்தபடி வேறு பக்கம் பாய்ந்து கொண்டிருக்கும் நெப்போலியன் படை.

படையிலே இருக்கிறோம்; ஆகவே போரிடுகிறோம் என்று மட்டும் எண்ணம் கொண்டிருந்தால், ஒரு படை வீரப் படையாக, வெற்றிப் படையாக முடியாது. நாட்டின் பெருமைக்காகப் போரிடுகிறோம் என்ற உணர்ச்சி எழவேண்டும்; பெருமைப்படத்தக்கது நம்நாடு என்ற உணர்ச்சியும் மேலோங்கி இருக்கவேண்டும். எப்படி இருப்பினும் என் நாடு! எது செய்தாலும் என் நாடு செய்வதே எனக்கு நியாயமானது என்ற குருட்டுப் போக்கைவிட, என் நாடு ஏற்றம் பெற்றது, என் நாட்டின் நினைப்பும் நடவடிக்கையும் நியாயமானது என்ற நம்பிக்கை இருக்க வேண்டும். அப்போதுதான் போரிடும் ஆர்வம் கொழுந்துவிட்டு எரியும். நெப்போலியன் காலத்துப் படையினருக்கு, பிரான்சு நாடு பற்றி பெருமித உணர்ச்சி இருந்தது. பன்னெடுங் காலமாக கொட்டமடித்து வந்த பட்டத்தரசர்களின் ஏவலை நிறைவேற்றுவதற்காகக் கூலி பெற்றுவந்த கும்பல் என்ற இழிவைச் சுமந்து கொண்டு இருந்த படையினர், புரட்சி பூத்த பிறகு, புதுமுறை கண்டு பூரித்தனர்; பெருமை கொண்டனர். அது மட்டுமல்ல, புது முறைக்கு ஆபத்து ஏற்படாதபடி பார்த்துக் கொள்ளும் பொறுப்பு தம்முடையது என்று உணர்ந்தனர்; விரட்டப்பட்ட பிரான்சு மன்னர்கள்—போர்போன் வம்சத்தினர்—ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலே சதிக்கூடங்களை அமைத்திருந்தனர். பல்வேறு நாட்டு மன்னர்கள், மீண்டும் பிரான்சிலே போர்போன் வம்சத்தை முடிதரிக்கச்

செய்தால் மட்டுமே, முடியாட்சி முறை நிலைக்கும், தமது அரசுரிமையும் காப்பாற்றப்படும் என்று கருதி வேலை செய்து வந்தனர். எனவே, பிரான்சுப் படை, வேறு ஓர் நாட்டின் மீது படை எடுப்பதாக மட்டும், போர் அமையவில்லை; வெகு பாடுபட்டுக் கண்டெடுத்த குடியாட்சி முறையின் பகைவர்களை அழித்திடும் இலட்சியப் போராகவும் அமைந்தது.

குடியாட்சி முறை குறித்து நெப்போலியனுக்கு மதிப்பு அதிகம் கிடையாது. அவனுடைய திட்டம் திறமையாளர் அரசு நடத்த வேண்டும் என்பதுதான். எனினும், குடியாட்சி முறைக்குக் கேடு செய்வோரைச் சாடுகிறோம் என்று படையினர் இலட்சியம் கொள்வதால், வீரம் கொப்பளிக்கிறது என்பது அறிந்து அந்த உணர்ச்சியை வளரச் செய்தான்! பிரான்சு நாட்டுப்படை பிறர் பீதிகொள்ளத்தக்க துணிவுடன் போரிட்டதற்கு இது ஒரு காரணம். மற்றொன்று, வெற்றி பெற்றுத் தரத்தக்க படைத் தலைவனால் நடத்திச் செல்லப் படுகிறோம் என்ற உற்சாகம்.

''பீரங்கிகள் இல்லாமலேயே பெரும் போரில் வெற்றி பெற்றீர்கள்! பாலங்களின்றி ஆறுகளைக் கடந்தீர்கள், காலணியின்றி கடுவழி நடந்தீர்கள்; உணவு போதுமானது இல்லை. எனினும் நெடுவழி சென்றீர்கள், வீரர்காள்! எனது நன்றி, உங்கட்கு. நாடு, உம்மை வாழ்த்த, நன்றிகூறக் கடமைப் பட்டிருக்கிறது. வளமும் வாழ்வும் நாட்டுக்கு வழங்குபவர் நீங்களே!''

படைத் தலைவன் இதுபோலப் பேசிடக் கேட்கும்போது, பட்ட கஷ்டம் அத்தனையும் பறந்தோடிப் போகாதா! வடுக்கள் இருக்கும்; வலி மறைந்துவிடும்! புண் இருக்கும்; புகழ் அதைப் போக்கும் மாமருந்தாகிவிடும்.

இத்தகைய உற்சாகம், எழுச்சி, ஊட்டிட வல்லவன் நெப்போலியன். அவனிடம் பாராட்டுப்பெற ஒவ்வொரு படைப் பிரிவும் ஆவல்காட்டும். வீரம் காட்டத்தவறினாலோ நெப்போலியன் வெகுண்டுரைப்பான். அதைத் தாங்கிக் கொள்ள அஞ்சுவர்.

ஆஸ்ட்ரியப் படையின் தாக்குதலைக் கண்டு பீதி கொண்டு படைப் பிரிவுகளில் இரண்டு பின்வாங்கி ஓடின. நெப்போலியன், அந்தப் பிரிவினரை மற்றவர் முன்பு அணி வகுத்துச் செல்லச் செய்து கடுங்கோபத்துடன் கண்டித்து, அந்தப் பிரிவுகளின் கொடிகளிலே, ''இவர்கள் இத்தாலிய எதிர்ப்புப் படையினர் அல்ல—இனி—'' என்ற கண்டனத்தைப் பொறித்திடச் செய்தான். சுட்டுத் தள்ளுவது, கட்டி வைத்து அடிப்பது, கொட்டடியில் போட்டு அடைப்பது போன்றனவகளைவிட, இந்தக் கண்டனமுறை, வாட்டி வதைத்தது. இழிவைச் சுமக்கச் சொல்லி அல்லவா, தண்டனை! அப் பிரிவினர், 'மற்றோர் வாய்ப்பளியும் எமது வீரத்தை விளக்கிட' என்று கேட்டு மன்றாடினர்.

உள்ளத்தைத் தொடத்தக்க புதிய முறைகள் இது போலப் பலப்பல.

நெப்போலியன் இத்தாலியக் களத்திலே நடத்திய பல போர்களுக்கான செலவுக்காக, அவ்வப்போது பிரான்சிலிருந்து பணம் அனுப்பச் சொல்லிக் கேட்டுத் தொல்லை தரவில்லை. போர் செலவுக்கான பணத்தை, பெற்ற வெற்றிகளின் மூலமே திரட்டிக் கொண்டான். பிரான்சு அரசுக்கு, பெரும் செலவு இல்லாமலேயே, பல வெற்றிகள், பல நாடுகள் கிடைத்தன.

இத்தாலி நாடு, கலைக்கூடம் அல்லவா. அங்கிருந்து ஏராளமான கலை அழகுப் பொருள்களை, காலத்தை வெல்லும் கீர்த்தி மிக்க ஓவியங்களை, நெப்போலியன், பிரான்சு நாட்டுக்கு அனுப்பிவைத்தான்.

இத்தாலி நாட்டிலே, ரோம் அரசிலே, பெரும்படைத் தலைவனாக இருந்த ஜூலியஸ் சீசர் தான் வெற்றி பெற்ற நாடுகளிலிருந்து அரிய பொருள்களை ரோம் நகர மக்கள் கண்டு மகிழவும் பெருமைப்படவும் அனுப்பிவைத்தான்—முன்பு. இப்போது ஜூலியஸ் சீசர் வெற்றி நடை போட்ட வீரக் கோட்டத்திலிருந்து விதவிதமான கலைப் பொருள்களை, நெப்போலியன் பிரான்சுக்கு அனுப்பி வைத்தான்.

அந்தப் பொருள்கள் ஒவ்வொன்றும் நெப்போலியனுக்காகப் பரிந்து பேசி, செல்வாக்கைத் தேடித்தரும், தூதுவர் போன்றவை அல்லவா! எவரும், நெப்போலியனைப் பற்றியே பேசி வந்தனர். நெடுந் தொலைவில், ஆல்ப்ஸ் மலைக்கு அப்பால் இருக்கிறான், நெப்போலியன், ஆனால் ஒவ்வொரு பிரான்சுக்காரன் உள்ளத்திலும் உலவுகிறான்—எப்படி என் வீரம்? என்ன என் எதிர்காலம்? என்று கேட்டபடி.

வெற்றி, வெறி உணர்ச்சியைக் கிளப்பிவிடும். படைவீரர் தோற்ற மக்களைக்கொடுமைப்படுத்துவர்-கொள்ளை-கொலை—கற்பழித்தல் போன்றவைகள் தலைவிரித்தாடும். இதனால் வெறுப்பும் வேதனையும் பெருகும—எந்த நாட்டுப் படையினர் தீயசெயலைச் செய்கிறனரோ அந்த நாட்டின் மீது அடக்கொணா வெறுப்பு உலகினருக்கு ஏற்பட்டுவிடும். உலகமே கண்டு கிலிகொள்ளத்தக்க படை எடுப்புகள் நடத்திய செங்கிஸ்கான், ஷதமூர் போன்றவர்கள், தமது படையினர் எத்தகைய கொடுமை செய்திடவும் இடமளித்ததால் துடைக்கப்படமுடியாத இழிவும் பழியும் அவர்களின் பெயருடன் ஒட்டிக் கொண்டுவிட்டது. பெரும்போர் நடத்தும் முறை மட்டுமல்லாமல், பின் விளைவுகள் பற்றியும் நன்கு அறிந்திருந்த நெப்போலியன், வெற்றிக்குப் பிறகு, படையினர் சற்று கட்டுமீறி நடந்துகொண்டதைக் கண்டும் காணாததுபோல இருந்துவந்தான். பல நாட்களாகத் தொல்லைப் பட்டார்கள், சில நாள் களியாட்டம் தேடுகிறார்கள் என்று எண்ணிக் கொண்டான். ஆனால் கட்டு குலையும் முறையில், கெட்டபெயர் ஏற்படும் விதத்தில், நடந்து கொள்ள அவர்கள் முனைந்ததும், மிகக் கடுமையான எச்சரிக்கை பிறப்பித்தான்.

'வெற்றி, வெறியாகக் கூடாது; வீரர்கள், கொள்ளைக்காரர்களாகக் கூடாது; பெற்ற பெருமையைப் பாழ்படுத்தும் கெட்ட காரியத்தில் ஈடுபடுவோர் சுட்டுத் தள்ளப்படுவார்கள்' என்று கண்டிப்பான அறிவிப்பு வெளியிட்டு, படையினரைக் கட்டுக்குக் கொண்டு வந்தான். எனினும், படையினர் கொள்ளை அடிக்க நெப்போலியன் அனுமதி

அளித்தான்—இது ஒரு பெருந்தலைவனுக்கு இழுக்கு என்று சிலர் குற்றம் சாட்டினர்.

போர் நிறுத்தம் ஏற்பட்டது—சார்டினியா சமாதானமாகப் போகச் சொல்லி வேண்டிக் கொண்டது. பிரான்சு நாட்டு ஆட்சிக் குழுவினர், சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டு, அதனைக் களத்திலே இருந்த நெப்போலியனுக்கு அறிவித்தனர்.

''சார்டினியாவிடம் செய்துகொண்ட சமாதான ஒப்பந்தம் வரப்பெற்றேன். படை, அந்த ஒப்பந்தத்துக்கு ஒப்பம் அளிக்கிறது'' என்று நெப்போலியன், அரசுக் குழுவினருக்கு அறிவித்தான்.

நெப்போலியன் எழுதிய முறைகண்டு, அரசு நடாத்தும் பொறுப்பாளர்கள் அஞ்சினர்.

படை ஒப்பம் அளிக்கிறதாமே—கேட்டீர்களா இந்தப் பேச்சை—பார்த்தீர்களா இந்தப் போக்கை—புரிகிறதா இதனுடைய உட்பொருள்! நாம் அரசு நடாத்துகிறோம். நமது நாட்டுப் படைகளிலே ஒரு பிரிவை நடத்தச் சொல்லி நாம் வேலை கொடுத்தோம்—இவன் எழுதுகிறான், நமக்குப் படை ஒப்பம் அளிக்கிறது என்று. போர் தொடுக்க, போர் நிறுத்த, அரசு உரிமை பெற்றது—முழு உரிமை. அரசு பிறப்பிக்கும் ஆணைக்கு ஏற்றபடி, படை நடந்து கொள்ளவேண்டும். இதுதானே ஆட்சி, மக்களாட்சி! படை ஒப்பம் அளிக்கிறதாமே, ஆணை பிறப்பிக்கும் அரசுக்கு! இது என்ன முறை? படை ஒப்பம் அளிக்கவேண்டும் என்றா எழுதிக் கேட்டோம். ஏதோ நாம் எழுதிக்கேட்கக் கடமைப்பட்டவர்கள் போலவும், அதன்படியே, எழுதி அனுப்பியது போலவும், அரசு செய்து கொள்ளும் ஒப்பந்தத்தை மறுக்கும் உரிமைகூட படைக்கு இருப்பது போலவும், ஆனால் ஏதோ தயவு வைத்து ஒப்பம் அளிப்பது போலவும் அல்லவா இருக்கிறது, நெப்போலியன் பயன்படுத்தும் வார்த்தைகள்.

ஆணவப் பேச்சுக்காரன்! மக்களாட்சியை மதிக்காத மமதையாளன். இவனை வளர விடுவது ஆபத்து! பிடித் திழுத்து வந்து சுட்டுத் தள்ளவேண்டும்!—என்று ஆட்சிக் குழுவினர் சிலர் கொதிப்புடன் கூறினர்.

'ஆண்டவன் அருளால் அரசனானேன்'-என்று கூறிடும் மன்னர்கள் காலத்தில், மன்னர்களை மிஞ்சக்கூடிய திறமையும், மருட்டக்கூடிய வலிவும் பெற்று படைத்தலைவன் இருந் தாலும், ஆபத்து வராது—மன்னனை எதிர்ப்பது மாபாவம் என்ற பயத்தால் கட்டுண்டு கிடக்கும் மக்கள், மன்னனைக் கவிழ்க்க, படைத் தலைவன் கிளம்பினால் ஆதரிக்கமாட்டார் கள். மக்களாட்சிக் காலத்தில் அவ்விதமல்ல; தங்களைப் போன்ற சாமான்யர்கள், தங்கள் தயவை நாடி அரசாளும் உரிமையைப் பெற்றுள்ளனர்—நாட்டுக்குக் கீர்த்தியைத் தேடித் தரத்தக்க ஆற்றல்மிக்க ஒருபடைத் தலைவன் கிடைத் தால், அவனை அழைத்துக் கொலு வீற்றிருக்கச் செய்வதில், ஆட்சிப் பொறுப்பை அவனிடம் ஒப்படைப்பதிலே, பாவமு மில்லை, தவறுமில்லை என்ற எண்ணம்மக்களிடம் ஏற்படும். எனவே மக்களாட்சியினர், நெப்போலியன் வெற்றி பல பெற்று, மக்களின் பெருமதிப்புக்கு உரியவனாகியது கண்டு, கிலி கொண்டனர். நெப்போலியன் பேசும் போக்கு அவர் களின் பீதியை அதிகமாக்கிவிட்டது. தலை தப்பவேண்டு மானால் இவன் கொண்டுள்ள செருக்கைத் தடுத்தாக வேண்டும் என்று தீர்மானித்தனர்; அதற்கேற்ப நெப்போலிய னுடன் கூட்டாகப் பணியாற்றிட, படைத் தலைமையில் பங்கு பெற கெல்லர் மன் என்பானையும், போரின் விளை வாக எழக் கூடிய அரசியல் பிரச்சினைகளைக் கவனித்துக் கொள்ள செலிசிடி என்பானையும் நியமித்திருப்பதாகச் செய்தி அனுப்பி வைத்தனர், நெப்போலியனுக்கு. நெறித்த புருவத்தினனானான். தான் பெற்ற வெற்றிகளும், அதனால் கிடைத்துள்ள புகழும் செல்வாக்கும் புது வலிவும், நெப்போ லியனுக்கு நம்பிக்கையைத் தந்தன. அதிகாரத்தைக் கட் டுப்படுத்திக்கொள்ள முடியாது என்று கூறிவிட்டான்.

என்னிடம் முழு நம்பிக்கை வைப்பதாக இருந்தால் படைத் தலைவனாகக் கொள்ளுங்கள்; இல்லையேல் தள்ளுங்கள்; ஆனால் கூட்டுத் தலைமை மட்டும் வேண்டாம். நிலைமைக்கேற்றப்படி, நானே முடிவெடுத்து திட்டமிட்டுப் போர் நடாத்தினால் மட்டுமே வெற்றிகள் கிட்டும்—எதற்கும் இருவர் கூடிப் பேசி, கருத்துக்களிலே ஒன்றுபட்ட தன்மையை ஏற்படுத்திக் கொண்டுதான், போரினை நடத்திட வேண்டும் என்றால், வெற்றி பல பெற்றளிக்க முடியாது. எனவே, என் போக்கைத் தடுக்கும் ஓர் தடையைப் புகுத்த வேண்டாம். நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று நெப்போலியன் கண்டிப்பாகத் தெரிவித்தான்—செய்திகொண்டு வந்தவனைத் திருப்பி அனுப்பிவிட்டான்.

கடுங்கோபம் எழுந்து என்ன பயன்? நெப்போலியனுடைய மறுப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்க இயலா நிலை, அரசாளும் பொறுப்பேற்றுக் கொண்டோர்களுக்கு.

ஒரே ஆண்டில், நெப்போலியன் ஆஸ்ட்ரியாவையும் அதற்குத் துணை நின்ற நாடுகளையும் லோடி, அர்கோலி, ரிவோலி எனும் களங்களிலே தாக்கி வெற்றிபெற்று, காம்ப்போ பார்மியோ என்னும் இடத்திலே, சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டான். வியக்கத்தக்க வெற்றிகளைப் பெற்று, தன் சுட்டுவிரல் காட்டும் வழி நடக்கத் துடித்திடும் பெரும் படையுடன் போர்க்கோலப் பொலிவுடன் விளங்கும் நெப்போலியனை வாதிடுவதிலே வல்லவர்களான ஆட்சிப் பொறுப்பினர், தட்டிக் கேட்கக்கூடத் தயக்கம் காட்டினர்.

எதிரிப் படைகள் தோற்று சின்னாபின்னமானதுடன் 150,000 பேர்கள், நெப்போலியனிடம் பிடிபட்டனர். இத்தகைய வீர வெற்றிகளைப் பெற்றவனை, விரட்டிவிட முடியுமா, குழுகூடி ஆணை பிறப்பிப்பதன் மூலம்! முகத்திலே கரி பூசுவது போன்றதுதான், நெப்போலியன் செய்கை —என்ன செய்வது. ஆட்சிக் குழுவினர், வெளியே தெரியாம

லிருந்தால் போதும் என்று, தங்கள் முகத்தைத் துடைத்துக் கொண்டு, மக்களுடன் கூடிக் கொண்டு, குதூகலம் காட்டிக் கொண்டனர்.

பாரீஸ் விழாக்கோலம் பூண்டது. வீர வெற்றிகளைக் கொண்டாடிக் கொண்டிருந்தது.

நெப்போலியன் ஊர் திரும்பவில்லை—ஜோசபைனுக்குக் கொண்டாட்டம். ஏனெனில், அவனுக்கு அளிக்க வேண்டிய வரவேற்புகள் — வாழ்த்துகள் — பாராட்டுகள் — யாவும் தேவிக்கல்லவா கிடைத்தன!

ஒரு சாதாரண சிப்பாயை மணம் செய்து கொள்கிறாளே, சிற்றரசனுக்கு ஏற்ற இந்தச் சீமாட்டி! இவளுடைய உடைக்கு ஆகும் செலவுக்கான பணம் திரட்டக்கூட முடியாதே, நெப்போலியனால்!—என்று கேலி பேசியவர்களெல்லாம், இப்போது ஜோசபைன், 'கொடுத்து வைததவள்' என்று பேசிக் கொள்கிறார்கள், அவள் இல்லா இடத்தில்; எதிரிலே அவள் இருந்தாலோ, 'எல்லாம் உன்னைத் தொட்டதால் கிடைத்த வெற்றிகள்' என்று புகழ் சொரிகின்றனர். பாரிஸ் நகரத்து நெடுஞ்சாலைகளிலே, அலங்கார வண்டியில் அமர்ந்து, புன்னகை பூத்த முகத்தழகி செல்கிறாள்; போர் நிறுத்தப்பட்ட பிறகு ஓய்வுகொள்ளும் நிலை ஏற்பட்டதால் மனதிலே சிறிதளவு வாட்டம் கொண்ட நிலையில், மிலான் நகர் அருகே கொலுவிருக்கிறான் நெப்போலியன, ஒரு கோட்டையில்.

அரசர்கள் அடிபணிந்திட, சீமான்கள் கட்டியம் கூறிட, சீமாட்டிகள் நடை உடை அழகு காட்டிடக் கொலுவிருக்கிறான நெப்போலியன். மணிமாடம்! ஆடம்பரப் பொருள் கள்! அவன் படுத்துறங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'மஞ் சம்', மன்னர் காலத்தது; மலரணை போதுமா, தூக்கம் பெற. தூக்கம் வரவில்லை. எல்லாம் இருக்கிறது; அவள் இல்லையே! அவள் விரும்பும் சூழ்நிலை; பளபளப்பு, மினு

மினுப்பு, செல்வம்! ஆனால் அவ்வளவும் அவள் இல்லாத தால் உயிரற்ற நிலையில் உள்ளனவே!

அழைப்பு செல்கிறது ஜோசபைனுக்கு! அகமகிழ்ச்சி யுடன் மிலான் வருகிறாள்! நெப்போலியன் பெற்றுள்ள பெருமைமிகு செல்வச் சூழ்நிலையைக் காண்கிறாள்! அழகு மலர் பூத்திடும் பூங்காவும், அதற்கருகே இசை எழுப்பிடும் அருவியும் கண்டால், புள்ளிமான் எவ்வளவு மகிழ்ச்சியாய்த் துள்ளி விளையாடும்! ஜோசபைன் அதுபோலானாள்.

'போர்வீரன்தானே! களத்திலே ஏற்பட்ட வடுக்களைத் தான் காட்டுவான்'—என்று முன்பு எண்ணிடுவாள்;—இப் போது, அவன் காட்டுபவை?—அதோ அந்த இருக்கை, சார்டினியா மன்னன் தந்த காணிக்கை, தங்கத்தாலான கோப்பை ஆஸ்ட்ரிய நாட்டவர் அனுப்பி வைத்தது என்று ஆடம்பரப் பொருட் குவியலையல்லவா காட்டுகிறான். வெற்றி, புகழ், செல்வம் இவைகளை அவன் அவளுக்கு அளிக் கிறான். ஆனால் அவள் அளித்ததற்கு இவை ஈடாகா என்று எண்ணுகிறான். அவள் அதுபோல் நினைத்திடத்தக்கதாக, அந்த ஆரணங்கு அவனுக்கு அளித்தது என்ன? புதிதாக! அளித்தாள், அவன் அகமகிழத்தக்க ஒரு சுவைமிகு செய்தி! 'தாயாகப் போகிறேன்' என்றாள் தழதழத்த குரலில்! 'தந்தையாகிறேனா, தத்தை மொழியாளே! உன் தய வால்!' என்று கேட்கிறான் விழியால்.

மான்ட்டிபெல்லோ கோட்டையில், 'தாபார்' நடத் தப்படுகிறது, ஜோசபைன் அங்கு வந்த பிறகு. பொன்னொளி வீசுகிறது அங்கு. அங்கு காணப்பட்ட நிலையைக் கவனித்த ஒருவர் சொன்னார்:

'இன்னும் நாலு ஆண்டுகளில் இவன் களத்திலே இறந்து படாமலிருந்தால், நாடு கடத்தப்படுவான் அல்லது அரியா சனம் அமருவான்.'

பாரிஸ் செல்கிறான் நெப்போலியன்—வெற்றி உலா நடைபெறுகிறது. மக்கள் அவனைக் கண்டு களிநடமிடுகிறார்கள். ஆட்சிக் குழுவினர் ஆரத்தழுவிக் கொள்கிறார்கள். மரியாதைக் குண்டுகள் முழங்குகின்றன.

'வீரவெற்றிகள் பல பெற்ற இந்த மாவீரன், ஒரு துளியாவதுபடாடோபம்காட்டுகிறானாபாருங்கள்' என்று பாமர மக்கள் பேசிப் பாராட்டும் விதமாக நெப்போலியன் நடந்து கொள்கிறான். பட்டாளத் தலைவன் உடைகூட அணிவதில்லை. மிகச் சாதாரணமான வீடு! அலங்காரமற்றவண்டி! நாடகக் கொட்டகையில் இவனைக் கண்டு மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் காட்டும்போது, கூச்சப்படுவது, கோலாகல விருந்துகள் கொண்டாட்டங்கள் கிடையாது. வீட்டல், பல்வேறு துறைகளிலே உள்ள விற்பன்னர்களை வரவேற்று உரையாடி அறிவுக்கு விருந்து பெறுவதிலே நாட்டம் காட்டினான.

நாட்டுக்குக் கீர்த்தி பெற்றளிக்கும் கடமையை மேற்கொண்டேன்—செய்து முடித்துவிட்டேன் என்று கூறுவது போலிருந்தது அவன் போக்கு.

அறிவு வளர்ச்சிக்காக பாரிசில் ஒரு கழகம் அமைக்கப்பட்டிருந்தது; அதிலே உறுப்பினனாகி அறிவாளர்களுடன் அளவளாவினான். படைத்தலைவன் என்றால் கொல்லும் தொழிலை மேற்கொள்பவன்தானே! அவனுக்குஅறிவுத்துறையிலே அக்கரை ஏற்பட முடியாதே! ஆனால் இந்த அதிசய மனிதனைப்பாருங்கள்! கற்றறிவாளருடன் உரையாடுவதைக் கேளுங்கள்! எத்தகைய மனப்பாங்கு, எத்தகைய நுண்ணறிவு, எதிலும் வல்லவனாக அல்லவா இருக்கிறான்! என்று பலரும் பாராட்டினர்.

பாரிஸ் நகரப் பத்திரிகைகள் நெப்போலியனுடைய அன்றாட நடவடிக்கைகளை விவரமாக எழுதின—பாராட்டுகளுடன். என்ன உண்கிறான், என்ன உடுத்துகிறான், எங்கு உலவச் செல்கிறான், யாராருடன் உரையாடுகிறான், எவரி

டம் சிரித்து மகிழ்கிறான் என்பது பற்றி எல்லாம் விளக்கமாக இதழ்கள் வெளியிட்டன. பிரான்சு, ஒவ்வொரு நாளும், நெப்போலியனைப் பற்றிய பாராட்டத்தக்க செய்தி ஏதாவ தொன்று படித்தபடி இருந்தது. ஒவ்வொரு இல்லத்திலும், அவனைப் பற்றிய பேச்சு! வாலிபர்கள் அவன் காட்டிய வீரத்தைப் பாராட்டினர்! முதியவர்கள் அவனுடைய அறிவுத் தெளிவைப் புகழ்ந்தனர்! மங்கையர் அவனுடைய காதல் மேம்பாடு பற்றி சசிந்துருகிப் பேசினர். நெப்போலியன் பிரான்சு நாட்டுப் பொதுச் சொத்து ஆகிவிட்டான். இதனை நெப்போலியன் நன்கு உணர்ந்திருந்தான்—எதிர்காலத்துக்கான திட்டம் அரும்பாக இருந்தது—மலரும் நாளை எதிர் பார்த்தபடி இருந்து வந்தான். கைகளைப் பின்புறம் கட்டிக் கொண்டு, வீட்டுத் தோட்டத்திலே உலவியபடி, ஏதேதோ எண்ணியபடி இருந்தான்.

''உன்னைக் காணத் திரள் திரளாக மக்கள் எவ்வளவு ஆர்வத்துடன் ஓடி வருகிறார்கள். பார்த்தனையா?'' என்று கேட்பார்கள், சிலர். ''இதைக் கண்டு மகிழ்ச்சிப் பெருக்கெடுக்கிறதல்லவா என்றுதானே கேட்கிறீர்கள். இதிலே என்ன பொருள் இருக்கிறது, மக்கள் காட்டும் ஆரவத்தில்! என்னைத் தூக்கில்போட ஏற்பாடு செய்யட்டும்—அதை வேடிக்கை பார்க்க இதைவிடப் பெரிய கூட்டம் கூடிவிடும்.'' என்று கூறுவான். மக்கள் காட்டும் ஆர்வத்தை மட்டும் நம்பி திட்டமிடக் கூடாது என்பது அவன் எண்ணம். ஆனால் மக்களின் ஆர்வத்தைப் பெறவேண்டும்; ஆர்வம் அவர்களுக்கு ஏற்படுவதற்காக வேலை செய்யவேண்டும்; தூண்ட வேண்டும் என்பதிலே கவனம் செலுத்தத் தவறவில்லை. பிரச்சாரம் மிக வலிவுள்ள ஆயுதம் என்பதை உணர்ந்திருந்தான்.

நெப்போலியன், இங்கிலாந்தின் மீது படை எடுத்து அந்த நாட்டை அழிக்க வேண்டும் என்று திட்டம் வகுத்த போது, படைகளை வரிசைப்படுத்துவதற்கு முன்பே, பிரச்சார யந்திரத்தைத்தான் ஏவினான். இங்கிலாந்திடம் அலட்சியம், வெறுப்பு, பகை உணர்ச்சி ஏற்படத் தக்கபடி

பிரான்சு நாட்டுப் பத்திரிகைகளிலே கட்டுரைகள், கதைகள், கவிதைகள், கேலிச் சித்திரங்கள் இப்படிஇப்படி வரவேண்டும் என்று, உள்துறை அமைச்சர் மூலம், யோசனைகள் என்ற பெயரால் புதிய கட்டளைகள் பிறப்பித்தான், நாடாளும் நாயகனான பிறகு. பல்வேறு அரசியல் பிரச்சினைகளுக்கு இடையில், பத்திரிகை மூலம் என்னென்ன கருத்துகள் மக்களிடம் பரப்பப்படுகின்றன என்பதை கவனிக்காமலில்லை. இங்கிலாந்து நாட்டிடம் பிரான்சு மக்களுக்கு வெறுப்பு எழ வேண்டும். அப்போதுதான் போரார்வம் எழும். ஆனால் அந்த வெறுப்பும் பகை உணர்ச்சியும் எங்ஙனம் மூட்டப்பட வேண்டும்? இது தெரியாதா, பத்திரிகை நடத்துபவர்களுக்கு என்று நெப்போலியன் இருந்து விடவில்லை. அயர்லாந்து நாட்டினை அடிமை கொண்டு அவதி மூட்டுவதுபற்றி, தீப் பொறி பறக்க எழுதுங்கள். அயர்லாந்து நாட்டு கத்தோலிக்கர்களை, இங்கிலாந்து நாட்டு மதப் பிரிவினர் கொடுமை செய்வதை எடுத்துக் காட்டுங்கள்—பிராடெஸ்டெண்டுகள் கத்தோலிக்கர்களைக் கொடுமை செய்கிறார்கள் என்று பொதுப்படையாக எழுதாதீர்கள்—ஏனெனில் பிரான்சிலே உள்ள பிராடெஸ்டெண்டுகளுக்கு மனச்சங்கடம் ஏற்படும்! இங்கிலாந்து நாட்டிலே உள்ள மதப் பிரிவினர் என்று எழுதி, அவர்களைத் தாக்குங்கள்!—என்று நெப்போலியன் இதழ் நடத்துபவர்களுக்கு எடுத்துக்கூறினான் என்றால், எவ்வளவு நுணுக்கமான முறையில், பிரச்சினைகளை அலசிப் பார்த்திருக்கிறான் என்பது விளங்குகிறதல்லவா?

இத்தனை அறிவாற்றலையும் பயன்படுத்த வாய்ப்பு எழவில்லை—எழத்தான் போகிறது என்பதிலே ஐயமில்லை—எப்போது, எந்த முறையில் என்பது பற்றி எண்ணியபடி இருந்துவந்தான்.

கார்சிகா தீவு விழா நடத்திற்று, வரவேற்பு வைபவம்! துரோகிகள் என்று முன்பு கண்டனக் குரலெழுப்பி, குத்திக் குடலெடுப்போம் என்று கொக்கரித்தார்கள் அல்லவா, நெப்போலியனுடைய வீட்டைச் சூழ்ந்துகொண்டு, அதே

மக்கள், அவன் புகழ் பாடுகிறார்கள். பிரான்சு நாடு கொண்டாடும் மாவீரன், இங்கல்லவா பிறந்தான்! என்று சொந்தம் கொண்டாடுகிறது. நெப்போலியனை வரவேற்றா? இல்லை! அவன் வரவில்லை. தாயார் லெடிசா அம்மையார் வந்திருந்தனர்; அந்த வருகை, விழாவாயிற்று.

எங்கும் நெப்போலியனைப் பற்றியே பேச்சு இருந்து வந்தது—என்ன செய்யப் போகிறான் இப்போது? அரசு என்ன பணியினைச் செய்யும்படிக் கூறப்போகிறது? எந்த நாட்டின்மீது படை எடுக்கப் போகிறான்? என்ன திட்டமிட்டுக் கொண்டிருக்கிறான் என்றெல்லாம்.

ஏன், நெப்போலியனே நாட்டை ஆளக்கூடாதா?

ஆற்றல்மிக்கோன் அரசாளாமல் வேறு எவர் ஆட்சி நடத்துவது?

ஆமாம்! அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

நெப்போலியன் கண் காட்டினால் போதும், காலடியில் வந்து விழும் மணிமகுடம்!

அவனுக்காக உயிரையே கொடுத்திட உறுதி கொண்டுள்ள படைவீரர்கள் இலட்சக்கணக்கினர் உளர்.

அவர்களுடன் நெப்போலியன் தொடர்பு கொண்டிருக்கிறான்—திட்டம் தயாரிக்கப்படுகிறது—ஆட்சியைக் கைப்பற்ற.

ஆட்சி மன்றத்தை அவன் படையினர் சுற்றி வளைத்துக் கொள்வர்-ஆட்சிப்பொறுப்பில் உள்ளோருக்கு ஆணை பிறப்பிக்கப்படும், துப்பாக்கி முனையில், ''வீரன் வருகிறான்; விலகி நில்லுங்கள்!'' என்று.

இவ்விதமான பேச்சு உல்லாச விடுதிகளில், தங்குமிடங்களில், உணவு விடுதிகளில், கேளிக்கைக் கூடங்களில்.

துரைத்தனத்தாரின் ஒற்றர்கள் இதுபோன்ற செய்திகளைத் திரட்டிக் கொடுத்தனர் ஆட்சிக் குழுவினரிடம். அவர்கள் அந்தத் தகவல்களை நெப்போலியனிடமே கொடுத்தனர்—அவ்வளவு நம்பிக்கை அவனிடம், அவன் அக்ரமம் ஏதும் செய்யமாட்டான், மக்களாட்சி முறையைக் கெடுக்க மாட்டான், ஆதிக்கம் பெற அலையமாட்டான் என்பதிலே! நெப்போலியனும், இந்தத் தகவல்கள் தரப்பட்டபோது பதறவுமில்லை; மறுக்கவுமில்லை; புருவத்தை நெறிக்கவுமில்லை; பொறிபறக்கப் பேசவில்லை; புன்னகை மட்டும் செய்தான்.

ஆல்ப்ஸ் மலையைக் கடந்து சென்று ஆஸ்ட்ரியப் படைகளை முறியடித்து இத்தாலியை அடிபணிய வைத்தவன் எத்தனை காலத்துக்கு பாரிஸ் பட்டினத்திலே, காட்சிப் பொருளாக இருந்து கொண்டிருக்க முடியும், வேறு புதிய வீரச்செயலில் ஈடுபடாமல். கஞ்சன் கரத்தில் சிக்கிய தங்கக் கட்டிபோல, இத்தனை ஆற்றல் மிக்கவன் கிடைத்தான் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாத ஆட்சிக்குழுவினரிடம். வானத்திலே வட்டமிடவேண்டிய வானம்பாடி இவன், பட்டு நூலால் கட்டப்பட்டு சிறார்கள் பறக்கவிட்டு வேடிக்கை பார்த்திடும் பொன்வண்டு அல்ல! சந்தனம் கிடைத்தும், அதை அறைத்தெடுக்கத் தெரியாமல் குளிர்போக்கிக்கொள்ள மூட்டப்படும் நெருப்புக்கு விறகாக்கப் பார்க்கிறார்கள், விவரமறியாதவர்கள்—என்று பலவிதமாக எண்ணத் தலைப்பட்டனர். வீரத்தலைவனுக்கு ஏற்றவேலை தரப்படவில்லை என்ற பழிக்கு அஞ்சி, ஆட்சிக்குழுவினர், நெப்போலியனை, இங்கிலாந்து நாட்டைத் தாக்கத் தளபதி ஆக்கினர்.

நெடுங்காலமாக இருந்துவரும் ஆவல் இது—கடலிலே கட்டப்பட்ட கோட்டை என விளங்கிவரும் இங்கிலாந்தைப் பிடித்தாளவேண்டும் என்பது. அளவிலே சிறியது என்றாலும் புகழ்மிக்க வரலாறுபெற்றிருந்த இங்கிலாந்து, வாணிபத்தில்

சிறந்து, பொருள்மிக ஈட்டி, வீழ்ச்சியறியாத கப்பற்படையுடன், வீரக் கோட்டமாக விளங்கிவருவதுடன், ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலேயும் செல்வாக்கு பெற்றுத் திகழ்கிறது. இது ஒழிக்கப்பட்டாக வேண்டும். இங்கிலாந்து வீழ்த்தப்பட்டால், அதன் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரப் பட்டிருக்கும், கீழைப்பக்க நாடுகள் பலவும், பொன் விளையும் பூமி நமது கரம் சிக்கும். சிக்கினால்...!

இந்த இன்பக் கனவு காணாத பிரான்சுக்காரன் இல்லை. எனவே நெப்போலியன், இங்கிலாந்தைத் தாக்கும் படைக்குத் தலைவனாக்கப்பட்டது வரவேற்கப்பட்டது. நெப்போலியனும், தன்னிடம் ஒப்படைக்கப்படும் வேலையை வெற்றியுடன் முடித்திட யாது செய்திட வேண்டும் என்பதற்கான எண்ணங்களை ஆராய்ந்தான். ஒரு பேருண்மையைக் கண்டறிந்தான்—கப்பற்படை வலிவுடன் அமைந்திருந்தாலொழிய இங்கிலாந்து நாட்டை வீழ்த்த முடியாது என்ற பேருண்மையை மறுக்க முடியாத மற்றோர் உண்மை அனைவருக்கும் தெரியும்! பிரான்சிடம், தரமான கப்பற்படை இல்லை!

எனவே நிலைமை முற்றிலும் திருத்தி அமைக்கப்பட்டாலொழிய, இங்கிலாந்தைத் தாக்கும் திட்டத்தை மேற்கொள்வதற்கில்லை என்ற முடிவுக்கு வந்தான். பெரும் பறவை கணைகளால் வீழாது—முதலில் பறவையின் பெரும் சிறகுகளை வெட்டிச் சாய்த்திட வேண்டும். சிறகு வெட்டுண்ட நிலையில், பறவை, விண் நோக்கிப் பறந்து, கணைக்குத் தப்பவும் முடியாது; மின்னல் வேகத்தில் பாய்ந்து வந்து தாக்கவும் முடியாது. இங்கிலாந்து நாட்டை வீழ்த்த, இங்கிலாந்தை உடனடியாகத் தாக்கிப் பயனில்லை; கீழை நாடுகளைக் கைப்பற்றி எங்கிருந்து இங்கிலாந்து வலிவுகளைப் பெறுகிறதோ அந்த இடங்களைத் தகர்த்துவிடவேண்டும், முதலில்! அப்போது சிறகிழந்த பெரும் பறவையாகிவிடும் இங்கிலாந்து. இந்த நோக்கத்துடன், நெப்போலியன், புதிய திட்டம் எடுத்துரைத்தான்—எகிப்து நாட்டின்மீது பாய்வது என்ற போர்த் திட்டத்தை.

எகிப்து! பரோவா மன்னர்கள்—கடவுளின் பிம்பங்கள் ஆண்ட எழில்மிகு நாடு—நைல் நதியால் வளர்க்கப்பட்டு நானிலத்தின் நளினமிகு நாரீமணி என்று புகழப்பட்டு விளங்கும் நாடு! காவியமும் கலையும் கட்டடச் சிறப்பும் மிகுதியும் கொண்டது. உலகிலே வேறு எங்கும் காண முடியாத, பிரமிட் கோபுரங்கள் கொண்ட நாடு. பாலைவனமும் நீர் ஊற்றும் ஆங்கு உண்டு—எகிப்து காட்டும் கோபம், பாலைவன வெப்பம்—எகிப்து காட்டும் நேசம், குளிர்ந்த இனிய நீர் ஊற்று!! எத்தனையோ வீரச் செயல்கள் நிகழ்ந்திருக்கின்றன, அந்த நாட்டில். கடவுள்களை கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வரச் செய்ய வல்லவர்கள் என்று விருது பெற்ற மாந்திரீகர்கள், மன்னனை மகேசனாக்க முடியும் என்று கூறி வந்த இடம்! சல்லாபிகள் புடைசூழ உல்லாசப் படகேறி ஓய்வுச் சுவை பெற்று வந்த செல்வர்கள், அங்கு ஆதிக்கம் பெற்றிருந்தனர். அடிமைகள், கூட்டம் கூட்டமாக—உழைக்க உயிர்விட, பிரமிட் எழுப்ப, உழுது பயிரிட்டு கோதுமை அறுத்தெடுத்துக் களஞ்சியத்தில் கொண்டுவந்து சேர்த்திட. விண்ணகத்தில் ஏதுமில்லை; யாவற்றையும் இந்த மண்ணகத்தே கொண்டு வந்து சேர்த்துவிட்டோம் என்று கூறி இறுமாந்து கிடந்தனர் எகிப்தில். பொன்னும் பொருளும் மிகுதியாக. மணியும் நவநிதியும் ஏராளம். காதலும் கவிதையும் கைகோர்த்து விளையாடிய பூங்கா! அதேபோது வீரமறியா நாடு அல்ல; வெற்றி காணா நாடும் அல்ல! எகிப்திலே, பல சிற்றரசர்கள், அரசிகள், பேரரசுக்குக் கட்டுப்பட்டு இருந்து வந்தனர். விந்தைப் பூமி, எகிப்து! அழகும் ஆற்றலும் ஒன்றை ஒன்று தழுவிக் கொள்ளும்; அதுவே விரும்பத்தக்கமுறை என்று உலகுக்கு உரைத்திடுவதுபோலே, இங்குதானே வெற்றி வீரன் ஜுலியஸ் சீசரும், கண்ணாலே கொல்லும் கட்டழகி கிளியோ பாட்ராவும் காதற்களியாட்டம் நடத்தி, காலத்தை வெல்லும் காவியமும் ஓவியமும் உலகு பெற்றிடச் செய்தனர். ஆற்றலிலே, வெற்றி பல பெறுவதிலே அவனுக்கு நிகர் இல்லை என்ற விருது, சீசருக்கு! அவள் விரும்பி, அதரத்தைச் சிறிதளவு பிரித்து, பவளமும் முத்தும் இந்தப் பொற்கொடியில் பார்! என்று காட்டி,

கண்வலை வீசினால், சிக்காதவன் இல்லை—மேக மண்டலங்களால் தம்மை மறைத்துக் கொண்டதால் விண்ணகத்து வீராதி வீரர்கள் தப்பினார்கள் போலும்; இந்த மண்ணகத்திலே அவளுடைய பார்வை பெற்று வீழாதார் இருக்க முடியாது என்று கற்பனை மிகுதியுடன், ஆனால் கருப்பொருளாக உண்மையை அமைத்துக் கொண்டு கவிகள் களிப்புடன் பாடியது, கிளியோபாட்ரா பற்றி!! அழகும் ஆற்றலும்—அவளும் அவனும்—கொடியும் தருவும்—குழைவும் குலைவும்—தாக்குதலும் தளர்வும்!

அந்த எகிப்திலே, சீசருக்கும் முன்னாலே, பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, மற்றோர் மாவீரன், கிரேக்கத்தில் பிறந்து அந்த நாட்களிலே குறிப்பிடத்தக்க நாடுகளிலே எல்லாம் நுழைந்து வெற்றிக் கொடி நாட்டிய மாவீரன் அலெக்சாண்டர் உலவி இருக்கிறான். அவன் அமைத்துச் சென்ற அரசில், கிரேக்க வீரமும் எகிப்திய எழிலும் இணைந்ததால் விளைந்த பொலிவுமிகு மலராளே, கிளியோபாட்ரா!

நாலாயிரம் ஆண்டுகளாக நானிலம் வியந்து பேசிக் கொண்டு வருகிறது, எகிப்து பற்றி.

அங்கு செல்கிறான் நெப்போலியன்—கப்பல்களிலே படை வீரர்களை ஏற்றிக் கொண்டு.

சென்றேன்—கண்டேன்—வென்றேன் என்று கூறினவனல்லவா, ஜூலியஸ் சீசர்—ஆனால் பாவம், அந்த வரலாற்றை, வந்தான்—வீழ்ந்தான்—என்று முடித்துவிட்டாள் வடிவழகி கிளியோபாட்ரா!

நல்லவேளையாக, நெப்போலியன் செல்லும் நாட்களில் மான்விழி மாதர் மையலூட்டி வீரர்களை வீழ்த்தும் நிலை இல்லை—ஆனால் பாய்ந்து தாக்கிப் பயங்கரப் போரிடும் மறவர் கூட்டம் மிகுந்திருந்தது. சீசருக்கு ஏற்பட்ட விசித்திர

அனுபவம் நெப்போலியனுக்கு ஏற்பட்டிருந்தால்.! அவனை மயக்க ஒரு கிளியோபாட்ரா அங்கு இருந்திருந்தால்...!

அங்கு இல்லை; ஆனால் அவன் சென்ற கப்பலிலேயே கிளியோபாட்ரா ஆகவேண்டும் என்ற நினைப்புடன் ஒரு மங்கை இருந்தாள்—ஆண் உடையில். அவள், கிளியோ பாட்ரா அல்ல; ஆகையினாலே, கன்னம் கிள்ளி விளையாட, அன்னம் சொர்ணம் என்று உரையாட மட்டுமே அவளை நெப்போலியன் பயன்படுத்திக் கொண்டான். எப்படியும் நெப்போலியனுடைய நேசத்தைப் பெறவேண்டும் என்ற நினைப்பு, இந்தப் பெண்ணை ஒருவருக்கும் தெரியாமல், ஒயிலை ஆணுடையால் மறைத்துக்கொண்டு, கப்பலேறச் செய்தது. இரகசியம் வெளிப்பட்டது; நெப்போலியன், கடற் பயணத்தின்போது குளிர்காற்றைப் பெற்று இன்புறுதல் போல, இவள் நேசம் பெற்று மகிழ்ந்தான்.

வீரம் போரிடக் கிளம்பியபோதா, விளையாட்டு! அவ்வளவு சபலமா என்று கேட்கத் தோன்றும். அந்தக் காலத்திலே அவ்விதமான 'விளையாட்டு'களில் மேல்மட்டத் தவர் ஈடுபடுவது, சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு முறையாகிக் கிடந்தது. அனைவருமே அப்படித்தான் என்ற நிலையும் அல்ல; அந்த நிலை, மேன்மைக்குச் சான்று என்ற கருத்தும் நிலைத்துவிடவில்லை; ஆனால் கண்டு கண் சிமிட்டுவர், இவனுக்கு இப்படி ஒரு பழக்கம்! என்று கோபம் குறைவாகவும் வேடிக்கை மிகுதியாகவும் கலந்து குரலொலி யில்.

'முறையா, சரியா என்பதுகூட இருக்கட்டும்; பழம் பெரும் நாட்டின் மீது படை எடுக்கச் செல்லும்போது உல்லாசியை உடனழைத்துச் செல்வதா?' என்று கேட்கத் தோன்றும். நெப்போலியன், தன் உடன் அழைத்துச் சென்ற வர்கள், கேளிக்கை மூட்டிடும் கோல மயில்களை அல்ல; பொறியியலார், வான நூலறிவினர், மருத்துவர், புலவர், மண்வள ஆராய்ச்சியாளர், புதை பொருள் நுணுக்கம் உணர்

வோர், அச்சுப் பொறி இயக்குவோர், ஆடை அணிமுறை அறிவோர், வரலாற்றுத் துறை ஆய்வாளர்கள், கலைஞர் கள், கவிஞர்கள், இவர்கள் உடன் வருகின்றனர். படிப்பகம் கூட உண்டு. ஒரு பல்கலைக் கழகமே இந்தப் படைத் தலைவ னுடன் பயணமாகிறது. உல்லாசி ஒருவள் வந்திருந்தாளே அவளுடனே ஆடிப்பாடியபடிதான் இருந்தான் போலும் வழிநெடுக என்று எண்ணத் தோன்றும்! அவ்விதம் இல்லை. எப்போதுமே, மெல்லியலாரிடம் நெப்போலியன் தன்னைப் பறிகொடுத்துவிடுவதில்லை. தேன், துளிகள்தானே தேவை —குடம் குடமாகவா!!

கப்பலில் மேல்தட்டிலே படுத்துக் கொள்கிறான் நெப் போலியன் இரவுக் காலங்களில்--விண்மீன்கள் மேலே மின்னு கின்றன—அவனைச் சூழ விற்பன்னர்கள் அமர்ந்து கொண்டு உரையாடுகின்றனர், உலக அமைப்பு பற்றிய விஷயத்தி லிருந்து ஊராளும் முறை வரையில்!

மேலே காணப்படும் கோள்களின் தன்மை எப்படிப் பட்டது, ஆங்கு உயிரினங்கள் இருக்க முடியுமா? அங்கெல் லாம் சென்றுவரும் அறிவாற்றலை மக்கள் பெற முடியுமா என்பது பற்றிக் கூடப்பேசுகின்றனர்.

போரிடச் செல்கிறோம்! வெற்றியோ தோல்வியோ, யார் கண்டார்கள் என்ற எண்ணம் எழவில்லை. ஆற்றலில் அளவற்ற நம்பிக்கை நெப்போலியனுக்கு. வெற்றி பெறப் போகிறோம், நிச்சயமாக; ஆனால் வெற்றிக்குப் பிறகு...! அதுபற்றித் திட்டமிடுகிறான். எகிப்து பழம்பெரும் நாடு— நாலு ஆயிரம் ஆண்டுகளாக அங்கு பல துறைகளிலே வெற்றி கண்டுள்ளனர். ஆகவே அங்கு கண்டறிந்து திரட்டி எடுத் துச் செல்ல வேண்டிய கருத்துக் கருவூலங்கள் நிரம்ப இருக் கும். நாட்டை அடிமைகொண்டு, இவற்றை இழந்து என்ன பயன்? என்று எண்ணித்தான், வெற்றிக்குப் பிறகு, எகிப்து நாட்டிலே பல்வேறு துறைகளிலும் ஆராய்ச்சி நடத்திப்

பயன்பெற ஒரு பல்கலைக் கழகத்தையே உடன் அழைத்துச் செல்கிறான்.

எகிப்து போகும் வழியிலேயே, மால்ட்டா தீவு சிக்கு கிறது அவன் கரத்தில், தொல்லை அதிகம் இல்லாமலேயே!

அங்கு சில நாள் தங்கி, அமைதியையும் ஒழுங்கையும் ஏற்படுத்துகிறான்.

நெப்போலியன் அழைத்துச் செல்லும் கப்பற் படையை வழியிலேயே மடக்கி அழித்திட, பிரிட்டிஷ் கடற்படைத் தளபதி நெல்சன், காத்துக் கொண்டிருக்கிறான்—நெப் போலியன் சிக்கவில்லை—காற்றைத் துரத்திப் பிடித்துக் கைக்குள் அடக்க முடிகிறதா! எகிப்து செல்கிறது எதிர்ப் போரை முறியடிக்கும் ஆற்றல்படை. வீரமிக்க எதிர்ப்பு—பயங்கரச் சண்டை—இரத்தம் பொங்கி வழிகிறது—நெப் போலியன் வெற்றி பெறுகிறான் — எகிப்து பிரான்சுக்குப் பணிகிறது.

அடிமை கொள்ள வரவில்லை; அக்ரமக்காரர்களிட மிருந்து மக்களை விடுவிக்க வந்திருக்கிறேன். நாடு பிடிக்கும் எண்ணத்துடன் வரவில்லை; நாட்டைத் தமது களி நடனக் காடாக்கிக் கொண்டுள்ள மாமூலூக்குகளின்—செருக்கு மிக்க சீமான்களின்—கொட்டத்தை அடக்கி—மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க வந்திருக்கிறேன்—என்று அராபிய மொழி யில் அச்சடித்த அறிக்கைகளை எகிப்திலே பரப்பி, பாமர மக்களிடமிருந்து எதிர்ப்பு எழாதபடி பார்த்துக் கொள்கி றான். மதநம்பிக்கை கொண்ட மக்களை தன்வயப்படுத்து வதற்காக, எகிப்து நாட்டிலே உள்ள முஸ்லீம் மார்க்கத்தைப் போற்றுகிறான்—நெப்போலியன் முஸ்லீமாக மாறிவிட்டான் என்று வதந்தியே பரவுமளவுக்கு; பிறகோர் சமயம் நெப் போலியன் இந்தப் போக்கை விளக்கினான். 'எந்த நாட்டிலே நான் ஆதிக்கம் பெற நடமாடுகிறேனோ, அந்த நாட்டு மக்

கள் எந்த மதத்தை மேற்கொண்டிருக்கிறார்களோ, அந்த மதம், அந்தச் சமயம், என் மதம்' என்று.

அலெக்சாண்டிரியா பிடிபட்டது. கெய்ரோவுக்குள் நுழைந்தாயிற்று! நெப்போலியன் கொண்டிருந்த நீண்ட காலத்துக் கனவு நிறைவேறிவிட்டது.

இதற்கிடையில், நெப்போலியனுடைய கப்பல்கள் பிரிட்டிஷ் தாக்குதலால், சிதறிச் சின்னாபின்னமாயின. எனவே பிரான்சுக்கும், நெப்போலியனுக்கும் தொடர்பு அறுபட்டுப் போய்விட்டது. ஐந்து திங்களாகச் செய்தியே கிடைக்கவில்லை, பாரிசிலிருந்து. நெப்போலியனுக்குச் சங்கடமும் சலிப்பும் ஏற்பட்டுவிட்டது. தவறி அவனிடம் கிடைத்த ஒரு தகவல், அவன் நெஞ்சிலே தீ மூட்டிவிட்டது! ஆடிப்பாடிக் களிக்கிறாள் புதுக் காதலனோடு, உன்னுடைய ஜோசபைன் என்பது சேதி.

'வெற்றியாம்! விருதுகளாம்! விழாவாம்! மகிழ்வாம்! புகழாரமாம் எனக்கு. செ! என்ன இருக்கிறது இவைகளில், வீண் ஆரவாரம்! நான் தனிமையை விரும்புகிறேன். கீர்த்தியே எனக்குச் சுமையாகிவிட்டது.'

—என்று சலிப்புடன் பேசுகிறான் நெப்போலியன். வயது முப்பதுக்கு ஓராண்டு குறைவு.

தனக்குச் சலிப்பு ஏற்படலாம். ஆனால் போர் வீரர்களுக்கு ஏற்படக்கூடாதே. ஏக்கம் வளர்ந்தால், வீடு திரும்பும் துடிப்பு எழும்; அதற்கு வழி இல்லை என்று தெரிந்தால், திகைப்பு ஏற்படும். எதிர்ப்புக் குணம் ஏற்படும்; பிறகு...?

புரட்சி!—படைத் தலைமையை எதிர்த்து. மாவீரன் அலெக்சாண்டருக்கே இந்தத் தொல்லை ஏற்பட்டிருக்கிறதே. இதை அறிந்திருந்ததால், நெப்போலியன் தனக்கு ஏற்பட்டிருந்த சங்கடத்தையும் தாங்கிக் கொண்டு, போர் வீரர்களுக்குக் கவலை மேலெழாதிருக்க என்னென்ன செய்வது என்று திட்டமிட்டான். கேளிக்கைக் கூடங்கள்—சூதாடும் அரங்குகள்—நாடக மன்றங்கள்—நாட்டியக் கொட்டகைகள்—உல்லாசத் தோட்டங்கள்—இவைகளை அமைத்து, வீரர்கள் மகிழ்ச்சி பெறச் செய்தான்.

படமெடுத்தாடும் பாம்பு முன் குழலூதி ஆட வைப்போன் பாம்பென நெளிந்தாடும் பாவையர் மேனி அழகை முற்றிலும் மறைத்திடாத முறையில் இருந்த நேர்த்திமிகு மேலாடைகளையும் பந்தயப் பொருளாக ஏற்றுக் கொள்ளும் கழலாடுமிடங்கள், இசைபாடி மகிழ்விப்போர்,—இப்படிப் பலவகை.

இதுமட்டும் போதாது என்பதை உணர்ந்த நெப்போலியன், வீரருக்கு விருப்பமான பொழுதுபோக்கு, போர் என்ற முறைக்கு ஏற்ப, சிரியா மீது போர் தொடுத்தான். வேலை வந்தது; விசாரம் தொலைந்தது என்று எண்ணிப் படையினர் கிளம்பினர். ஆனால் சிரியாவின் கோட்டை நகரை முற்றுகையிட்டு மும்முரமாகப் போரிட்டும் வெற்றி கிட்டவில்லை—பிரிட்டிஷ் தளபதி ஒருவன் பீரங்கிப் படையை அமைத்துக் கொடுத்ததால், சிரியா, தாக்குப் பிடித்தது மட்டுமல்ல, நெப்போலியன் படையை விரட்டித் தாக்கவும் முடிந்தது.

சிரியாக்காரரின் தாக்குதலைவிடக் கொடுமையாக பிளேக் காய்ச்சல் நோய் தாக்கிற்று. பலர் மாண்டனர்; பலர் குற்றுயிராயினர். படை முற்றுகையிட்டுப் பலன் காணா

மல் திரும்பிற்று—வழியெல்லாம் பிணம்! நடந்து கொண்டே இருப்பர்! கீழே விழுவர்! ஒரு முனகல், ஒரு இழுப்பு, பிண மாவர். பிளேக் தொத்து நோய் என்பதால், அந்தக் காய்ச் சல் கொண்டவர்களை, உடனழைத்துச் செல்லப் பயந்து கொண்டு, அங்கங்கே விட்டுவிட்டுப் போக நேரிட்டது. குற்றுயிராகிக் கிடந்தவர்களை வெட்டி வீழ்த்திக் கொக்கரித் தது வெறி கொண்ட கும்பல்! எங்கும் பீதி, அவதி. நெப் போலியன் கூடுமான மட்டும் அவர்களுக்கு ஆறுதல் அளித் துப் பார்த்தான்; முடியவில்லை. அழிவைத் தடுத்திட இயல வில்லை. எகிப்திலே பெற்ற வெற்றியால் கிடைத்த களிப்பு கருகியே போய்விட்டது. 'பாலைவனத்துக்குப் பலியாகி றோம்; பாரிசில் உலவிக் கொண்டிருந்த நாங்கள்' என்று கூறிக் கதறினர்.

பலப்பல நூற்றுக்கணக்கானவர்கள், நோயினால் வேதனைப்பட்டபோது, மருந்து கொடுத்து குணப்படுத்தா மல், அதிக அளவு அபினி கொடுத்து அவர்களை நெப்போலி யன் சாகடித்தான் என்று ஓர் குற்றம் சாட்டப்படுகிறது— முற்றிலும் ஆதாரமற்றது அல்ல.

செயின்ட் எலினா தீவிலே நெப்போலியன் அடைபட்டுக் கிடந்தபோது, இப்படி நடைபெற்றது என்று ஒப்புக் கொண் டான். ஆனால் வேறு வழியில்லை என்று வாதாடினான். மருந்து இல்லை; அவர்களின் வேதனை வளர்ந்தது! சித்திர வதைக்கு ஆளாகிச் சாவதைவிட, எதிரிகளிடம் சிக்கிச் சிதைக் கப்படுவதைவிட, நிம்மதியான முறையிலே சாவு தேடிக் கொள்ளட்டும் என்பதனால்தான், அபின் கொடுக்கச் செய் தேன் என்று விளக்கம் அளித்தான். விளக்கம், நிலைமை என்ன என்பதனைத் தெரிந்து கொள்ளப் பயன்படுகிறது என்றா

லும், நெப்போலியன் மீது படரும் குற்றம் நீங்கிவிட்டது என்று கூறமுடியாது.

என்போன்ற படைத்தலைவர்கள், பலர் கொல்லப் படுவது குறித்து மிகுதியாகக் கவலைப்படுவதற்கில்லை. பலி பல தந்துதான் வெற்றி பெற்றாக வேண்டி இருக்கிறது என்று வேறோர் முறை நெப்போலியன் கருத்தறிவித்தான்.

இங்கு இது; அங்கு பாரிசில், நெப்போலியனுக்கு எதி ராக ஒரு சதி உருவாகிறது; அது வளருமுன் வெளிப்பட்டு விடுகிறது. அதில் ஈடுபட்டோர், சுட்டுக் கொல்லப் படுகின்றனர்.

எகிப்துப் படை எடுப்பு பேரிழப்பாகிவிட்டது என்ற செய்தி, பிரான்சிலே பரவி, தன் மதிப்பு மங்கி, வெறுப்பும் எதிர்ப்பும் மூண்டுவிடா முன்பு, தானே நேரிலே சென்று அங்கு நிலைமையைச் சீர்படுத்தியாக வேண்டும் என்று தோன்றிற்று. எனவே, படையினரை எகிப்தில் விட்டு விட்டு பாரிஸ் பயணமானான் நெப்போலியன். வழியிலே பிரிட் டிஷ் கடற்படை வீசிய வலையிலே விழாமல் தப்பினான்—பாரிஸ் வந்தடைந்தான்—கண்டதும் மக்கள் மகத்தான வரவேற்பு அளித்தனர். சிரியாவிலே நேரிட்ட சீரழிவு பற்றிய செய்தி எட்டவில்லை அதுவரையில்—எகிப்து பிடிபட்டது—பிரான்சுக்கு அடிபணிந்தது என்ற செய்தி மட்டுமே எட்டி இருந்தது. எனவே, இதோ எமது அலெக்சாண்டர்; இவர் எமது சீசர்—என்று களிப்புடன் கூவினர், கொண்டாடினர், கோலாகல விழா நடாத்தினர் பாரிஸ் மக்கள்.

நெப்போலியன் எகிப்து சென்று திரும்புவதற்குள், இத்தாலிய களத்திலும் ஆஸ்ட்ரியப் போரிலும் நெப்போலி

யன் ஈட்டிய பெருமைகள் அத்தனையும் பாழ்படும்படியான தோல்விகள் பிரான்சுப் படைகளுக்கு அங்கெல்லாம் ஏற்பட்டு, பிரான்சின் மதிப்பு குன்றிக் கிடந்தது. வெற்றிமேல் வெற்றி பெற்றுத்தர அந்த ஒரு நெப்போலியனால் மட்டுந்தான் முடியும்; மற்றவர்கள் வெறும் ஆடம்பர உருவாரங்கள் என்று மக்கள் மனம் நொந்து பேசிக் கொண்டனர். இந்தச் சூழ்நிலையைப் பக்குவமாகப் பயன்படுத்திக் கொண்டு சய்யீஸ், டூகோஸ், பாராஸ், கோசியர், மோலீன் எனும் ஐவர் பொறுப்பாளர்களாக இருந்து நடத்திவந்த ஆட்சிக் குழுவை உருட்டி மிரட்டி, இடம் தனக்குக் கிடைக்கும்படியாகவும், குழுவை ஆட்டிப்படைக்கும் நிலை தனக்கு ஏற்படும்படியாகவும் நெப்போலியன் செய்து கொண்டான்.

ஐந்நூறு உறுப்பினர்கள் கொண்ட ஆட்சி மன்றத்தில், நெப்போலியனுடைய உடன்பிறந்தான் லூசியன் அவைத் தலைவராக இருந்தது, வாய்ப்பாகிவிட்டது.

இரத்தம் சிந்தாதமுறையில், காற்றடித்துக் கனி காலடி வீழ்வதுபோல, ஆட்சி செய்யும் அதிகாரம் தன்னிடம் வந்து சேரத்தக்க சூழ்நிலையை உண்டாக்கினான்.

சர்வாதிகாரத்துக்குப் பணியமாட்டோம்! அரசியல் சட்டத்துக்கு வேட்டு வைப்பதைச் சகித்துக் கொள்ளமாட்டோம்! என்றெல்லாம், இலட்சிய முழக்கம் எழுப்பிப் பார்த்தனர் ஆட்சிமன்றத்தினர். நெப்போலியன் நடத்திய நேர்த்தியான நாடகம் அனைவர் மனதையும் கவர்ந்துவிட்டது.

படைவீரர்களும் ஆர்வம் கொந்தளிக்கும் மனத்தினரான மக்களும் நெப்போலியன் பக்கம். பொறுப்பாளர் பாராஸ் தமது செயலாளரை அனுப்பி இருந்தார், நிலைமைக்கான

விளக்கத்தைக் கேட்டுவரும்படி, நெப்போலியனிடம். எதிரே கூடி இருந்தோர் உள்ளம் புல்லரித்துப் போயிற்று, நெப்போலியன் அப்போது நிகழ்த்திய உரை. பாராஸ் அனுப்பிய ஆசாமியின் கரத்தைப் பிடித்துக் கொண்டு, மிகவும் உருக்கமான குரலில்,

''கீர்த்திமிக்க நிலையில் உங்களிடம் நான் ஒப்புவித்து விட்டுப் போன பிரான்சு நாட்டை என்ன செய்தீர்கள்? அமைதியை ஏற்படுத்திவிட்டுச் சென்றேன்; வந்து காண்கிறேன், அமளியை! வெற்றி வீரர்களாக்கிவிட்டுச் சென்றேன்; இப்போது தோல்வி தாக்குகிறது; இத்தாலியிலிருந்து கொண்டு வந்த பெரும் பொருளைத் தந்துவிட்டுச் சென்றேன்—இப்போது தவிப்பு, பிற்போக்குத்தனம், தொல்லைகளைக் காண்கிறேன். கீர்த்திமிக்க போர்களிலே என் உடனிருந்த ஆயிரமாயிரம் ஆற்றல் மறவர்கள்—இத்தாலிய களங்களிலே வெற்றி தேடித்தந்த வீரப் புதல்வர்கள் எங்கே கொல்லப் பட்டுப் போயினர்?''—என்று நெப்போலியன் பேசினான்—அந்தப் பேச்சு, பிரான்சு நாட்டை ஆளும் பொறுப்பினை அவனுக்குப் பெற்றுத் தந்துவிட்டது என்று கூறலாம். உயர் தரமான கருப்புக் குதிரைமீது அமர்ந்தபடி நெப்போலியன் ஆற்றிய இந்த வீர உரை கேட்டவர்கள் நாடு நெப்போலியனிடம் ஒப்படைக்கப்பட்டாலன்றி இழிவு துடைக்கப்பட முடியாது என்ற முடிவுக்கு வந்தனர். இழிவு துடைக்கப்பட வேண்டும், இரத்தம் கொண்டு கழுவினால் மட்டுமே, இழிவு போகும் என்றான் நெப்போலியன். சரி! தயார்! என்றனர் வீரர்கள். இரத்தம் பொங்கிற்று!—மேலும் மேலும்; வெற்றிகள் கிடைத்தன, ஒன்றன்பின் ஒன்றாக.

கிளம்பிய எதிர்ப்புணர்ச்சிகளை முறியடிக்க, படை நெப்போலியன் பக்கம் திரண்டுவிட்டது. ஆட்சி மன்றத்தின்

அவைத் தலைவராக இருந்த லூசியன் உடன்பிறந்தானுக்காக உன்னதமான நாடகம் வேறு நடத்தினான். 'நெப்போலியன் ஆட்சி நடத்தும் பொறுப்பு ஏற்கவேண்டியதுதான். ஆனால், என்று கூறியபடி, வாளை உருவினான் லூசியன். நெப் போலியனுடைய மார்புக்கு நேராக அதை வைத்தபடி பேசி னான்; ''ஆனால், மக்களின் உரிமையை அழிக்க இந்த நெப்போலியன் முயன்றால், கூர்வாளைப் பாய்ச்சுவேன், கொடியோன் மார்பில்;கொன்று போடுவேன், உடன் பிறந்த வன் என்ற எண்ணம் துளியுமின்றி'' என்று பேசினான். இதனைக் கண்ட மக்களின் கண்களிலே நீர் துளிர்த்தது.

லூசியனும் நெப்போலியனும் நடாத்திய நாடகம் வெற்றி பெற்றது, சய்யீஸ், டுகோஸ், நெப்போலியன் எனும் மூவரிடம் ஆட்சிப் பொறுப்பு தரப்பட்டது-அதிலே முதலிடம் நெப்போலியனுக்கு. பிறகு செய்து முடித்த அரசியல் திட்டங்களின் பயனாக முதலிடம், முழு இடமாகிவிட்டது. நெப்போலியன், ஈடு எதிர்ப்பற்ற நிலை பெற்றான்.

ஆட்சி மன்றங்கள் எதற்கும் நெப்போலியனைக் கட்டுப் படுத்தும் அதிகாரம் கிடையாது—ஆட்சி மன்றங்களுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதும், மறைமுக வாக் கெடுப்பின் மூலம்! இப்படிப்பட்ட மாறுதல் புகுத்தப்பட்டது. அரண்மனையிலே அடைபட்டுக் கிடக்கும் அதிகாரங்களை மக்களிடம் கொண்டு வந்து சேர்த்திடத்தான் மாபெரும் புரட்சி நடந்தது; ஆனால் இப்போது, மாமன்னரிடமிருந்து பறிக்கப்பட்ட அதிகாரம் அனைத்தும் மாவீரனிடம் ஒப்ப டைக்கப்பட்டுவிட்டது. பட்டம் சூட்டிக் கொள்ளவில்லையே தவிர, பட்டத்தரசர்களுக்கெல்லாம் கிட்டாத அதிகார பல மும், மக்கள் ஒப்புதலும் நெப்போலியனுக்குக் கிடைத்தது.

புதிய மாறுதலுக்கு இசைவு 'தந்து 3,011,007 மக்கள் வாக்களித்தனர்; மறுத்தவர் தொகை 1,562.

பத்து ஆண்டுகள் பதவிக் காலம் என்று அறிவிக்கப் பட்டது.

1799ம் ஆண்டு இந்த நிலை கிடைத்தது, நெப்போலி யனுக்கு.

1800ம் ஆண்டு, ஆல்ப்ஸ் மலையைக் கடக்கிறான், ஆஸ்ட்ரியாவைச் செம்மையாகப் புடைத்து மாராங்கோ எனும் களத்தில் வெற்றி பெறுகிறான்.

இழிவு துடைக்கப்பட்டது என்ற எக்களிப்பு, மக்களுக்கு. இத்தகைய வெற்றி பெற்றளிக்கத்தக்கவனை பத்து ஆண்டு களா, அவன் உயிருள்ள மட்டும், அதிபனாகக் கொள்ள லாமே! என்றனர் மக்கள் ஆர்வத்துடன்.

தோற்கடிக்கப்பட்ட ஆஸ்ட்ரியாவுடன் தொடர்ந்து பகை கொண்டால், மற்ற களங்களிலே கவனம் செலுத்த இயலாது என்பதால், 1801—ல் ஆஸ்ட்ரியாவுடன் சமாதானம் செய்து கொண்டான். போப்பாண்டவருடன் மூண்டுகிடந்த பூச லையும் விட்டொழித்து, சமரசம் ஏற்படுத்திக் கொண்டான். 1802ம் ஆண்டு இங்கிலாந்துடன் நேச ஒப்பந்தம் செய்து கொண்டது நீடிக்கவில்லை; மறு ஆண்டே போரிடவேண்டி நேரிட்டது.

இதற்கிடையில், விரண்டோடிய போர்போன் வம்ச மன்னர் குடும்பத்தினரும், இங்கிலாந்து போன்ற பகை நாடு களும் மூட்டிவிட்ட கூட்டுச் சதியால், நெப்போலியனைக் கொல்ல முயற்சி செய்யப்பட்டது. தப்பித்துக் கொண்டான்.

ஆபத்து நீங்கியது மட்டுமல்ல, அதே ஆபத்தைக் காரணம் காட்டி, நெப்போலியனுடைய நிலையை மேலும் பாதுகாப்புள்ளதாக உயர்த்திவிட வேண்டும் என்ற திட்டமும் ஏற்பட்டது.

1804ஆம் ஆண்டு ஏழாவது பயஸ் எனும் போப்பாண்டவர், நெப்போலியனுக்கு முடிசூட்டுவிழா நடத்தினார்; ஆற்றலால் அதிபனானான்; இப்போது அருளும் கிடைத்துவிட்டது. எட்டுக் குழந்தைகள் கொண்ட எளிய குடும்பத்தில் பிறந்து, கடினமாக உழைத்து, களம் பல சுற்றிப் போரிட்ட நெப்போலியன் அரசர்க்கரசன் ஆனான்—ஆக்கப்பட்டான். மன்னன் வேண்டாம்; அப்படி ஒருவனை உயர்த்திவிடுவது மக்களின் உரிமைக்கு உலை வைக்கிறது என்று கூறி புரட்சி நடத்திய பிரான்சு நாட்டிலே மன்னனுக்குப் பதிலாக மாமன்னன் அரசோச்சலானான்!

1805ம் ஆண்டு, இத்தாலி நாட்டுக்கு மன்னன் ஆனான்—அதற்கும் ஒரு தனி முடிசூட்டு விழா.

நெப்போலியனுடன் ஜோசபைனுக்கும் முடிசூட்டு விழா நடந்தது. முதற் கணவன், சீமான் என்பதற்காக வெட்டிக் கொல்லப்பட்டான், புரட்சி அரசினால். மூன்று மாதம் ஜோசபைனையும் சிறையில் அடைத்து வைத்திருந்தார்கள். இப்போது அவள் மணிமுடி தரித்துக் கொண்ட மகாராணி! எச்சிற்கலம் என்று ஏளனம் பேசினோர் என்ன ஆயினர்? மகாராணிமுன் மண்டியிடுகிறார்கள்!! உடன் பிறந்தார்கள், உற்றார், உறவினர் அனைவருக்கும், மணிமுடிகள்.

பிற்காலத்திலே நெப்போலியன், தனக்குற்ற நண்பர்களுக்கு, தங்கத்தாலானதும் தந்தத்தாலானதுமான பொடி

டப்பாக்களைப் பரிசளித்தான்—மாமன்னனான காலத்தில், வேண்டியவர்களுக்கெல்லாம் மணிமுடிகளைப் பரிசளித்தான்.

ஆலந்துக்கு அதிபன் ஜோசப், நேப்பிள்ஸ் நாட்டு மன்னன் லூயி, வெஸ்ட்பேலியா வேந்தனானான் ஜெரோம்!—இரண்டு ஆண்டுகளானதும் ஜோசப், ஸ்பெயின் நாட்டுக்கு மன்னனாக்கப்பட்டான். மணிமுடிகள், நெப்போலியனிடம் பூப்பந்துகளாயின!

ஆஸ்ட்ரியா, பிரஷ்யா, ரஷ்யா—இந்த மூன்று நாடுகளும், நெப்போலியனுடைய கண்களை உறுத்திக் கொண்டிருந்தன. கருத்தை மருட்டிக் கொண்டிருந்தன. தனித் தனியாக இவைகளைத் தீர்த்துக்கட்ட முனைவான் ஒரு முறை; இவைகளுக்குள் கிலேசம் ஏற்படுத்தி வலிவைப் பிளந்திட நினைக்கிறான் ஒருமுறை! ஒவ்வொரு முறையிலும் வெற்றி கிட்டுகிறது. ஆனால் நிலைக்கவில்லை; நிலைகுலைந்துக் கீழே வீழ்ந்துவிட்டது போலத் தெரிகிறது. ஆனால் மீண்டும் தலைதூக்கிப் போரிட முனைகின்றன இந்த நாடுகள்.

பேரரசு அமைக்க நான் எண்ணியதற்குக் காரணமே, அப்போதுதான் அமைதி ஏற்பட்டு, ஒழுங்கு நிலைநாட்டப்பட்டு, மக்கள் வளம் நிரம்பிய வாழ்வு பெறுவர் என்று நெப்போலியன் தத்துவம் பேசினான்—ஓரரசு—பேரரசு—ஆற்றலரசு—என் அரசு—என்று எழுச்சியுடன் முழக்கமிட்டான். ஆனால், ஒவ்வோர் இடத்து இன, தேசீய உணர்ச்சிகளை அழித்து ஒழித்துத்தான் இப்படி ஒரு பேரரசு அமைக்க முடியும்; தத்தமது இன, தேசீய உணர்ச்சிகளை மாய்த்துக் கொள்ள, மன்னர்கள் மட்டுமல்ல, எந்த நாட்டு மக்களும் ஒப்புவதில்லை. சில வேளைகளிலே தாங்கமுடியாத தாக்கு

தல் காரணமாக, தமது உணர்ச்சிகளை மறைத்துக் கொள்ளக் கூடும், ஆனால் அவை அடியோடு மாய்ந்துவிடுவதில்லை—ஏனெனில் அந்த உணர்ச்சி ஊனில் உயிரில் கலந்து விட்டிருக்கிறது. தலைமுறை தலைமுறையாகப் பையப் பைய வளர்ந்தது அந்த உணர்ச்சி. காவியத்திலும் ஓவியத்திலும் கலந்து நிற்கிறது. மொழி, அதற்கான வழி காட்டுகிறது. இத்தகைய உணர்ச்சியை உருக்குலைக்க முனைவானேன்? பல தனித்தனி வடிவங்களைப் பொடிப் பொடியாக்கி, புதிய கலவை முறை கண்டுபிடித்து, பேருரு அமைப்பானேன்? நெப்போலியன் இதற்கான விளக்கம் தரவில்லை. பேரரசு அமைக்க வேண்டும் என்று கூறினான்—தக்க பொருள் அமைந்த காரணம் காட்ட முடியவில்லை.

ஐரோப்பாவிலே அமளியற்ற நிலை ஏற்பட்டுவிட்டால், பிறகு, இங்கிலாந்தை ஒழித்துக்கட்ட எளிதாக முடியும் என்பது அவன் எண்ணம்.

இங்கிலாந்து பிற்போக்காளர்களின் பிறப்பிடம்; பிரபுக்களின் கொலுக்கூடம் என்பது நெப்போலியன் கொண்ட கருத்து. சுரண்டிப் பிழைப்பதும் சுகபோகம் அனுபவிப்பதும், இதற்குச் சூதுமுறைகளை மேற்கொள்வதும், இங்கிலாந்து நாட்டுப் பரம்பரைக் குணம் என்று கண்டிப்பது வாடிக்கை.

வீரதீர மிக்கவர்கள் அல்ல, இங்கிலாந்து நாட்டவர்; பெட்டிக் கடைக்காரர்கள் அந்நாட்டு மக்கள் என்று ஏளனம் செய்வான்.

அங்கிருந்து கிளம்பிய வெலிங்டன்தான், தன்னை இறுதியாக வீழ்த்தப் போகிறான் என்று நெப்போலியன் துளிகூட எண்ணவில்லை.

இங்கிலாந்திடம் ரஷியாவோ, ஆஸ்ட்ரியாவோ, தன்னைப்போலவே பகை கொண்டுவிட்டால், திட்டம் எளிதாக வெற்றிபெறும் என்ற எண்ணம்கொண்டு, ஒவ்வோர் சமயம் ஒவ்வொரு நாட்டுடன் நேச உறவு ஏற்படுத்திக் கொள்ள முனைந்தான்.

ரஷியா, பிரஷ்யா, ஆஸ்ட்ரியா எனும் இம் மூன்று அரசுகளும் கூட்டுச் சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும், அதேபோது இவை ஒவ்வொன்றும், பிரான்சு நாட்டின் ஆதிக்கத்தை மறுக்கக்கூடாது; இங்கிலாந்திடம் நேசத் தொடர்பு கொள்ளக்கூடாது—இது நெப்போலியன் நடத்திக் காட்ட விரும்பிய திட்டம்.

கூட்டாகிப் பணியாற்றினால் மட்டுமே, நெப்போலியனைச் சமாளிக்க முடியும் என்ற எண்ணம் ஏற்பட்டதற்குக் காரணம், அச்சமூட்டத்தக்க விதமான வெற்றிகளை, நெப்போலியன் பெற்றதுதான். 1805-1806-1807 ஆண்டுகளில் நெப்போலியன், இந்த மூன்று நாடுகளையும், ஆஸ்ட்டர், லிட்ஸ், ஜீனா, பிரயிட்லாண்டு எனும் களங்களில் திட்டமிட்டு முறியடித்தான். ஏராளமான இரத்தம் பொங்கிற்று. ஆனால் நெப்போலியனுடைய புகழ் உலகெங்கும் எதிரொலித்தது.

டில்சிட் என்ற இடத்தில் ரஷிய அதிபருடன் நெப்போலியன் நேச உறவு கொண்டான்; அது ஒரு விழாவாக, வெற்றி வைபவமாகக் கொண்டாடப்பட்டது. ''ஐரோப்பாவின் இப்புறத்தில் நான், அப்புறத்தில் தாங்கள். ரஷிய அதிபரே! நமக்குள் நேசக் கூட்டுறவு நிலைத்துவிடுகிறது. இங்கிலாந்து நாடு இனி என்ன செய்யும்? தீர்த்துக்கட்டி விடுகிறேன். உலகிலே கீழை நாடுகளிலே இங்கிலாந்து பெற்றுள்ள பூபாகங்

களை நமக்குள் பங்கிட்டுக் கொள்வோம்.'' என்று பூரிப்புடன் நெப்போலியன் கூறினான். புகை வெளியே தெரிய விடாமல் நெருப்பை மூட்டத்தக்க தந்திரம் கொண்ட ரஷிய அதிபர், அலெக்சாண்டர், சொல்ல வேண்டுமா! தெரியாதா! என்பன போன்ற இருபொருள், மறைபொருள் பேச்சுப் பேசி நெப்போலியனை ஏமாளியாக்கினான்.

ஆற்றல் அளவு கடந்தது, கட்டுக்கடங்காத ஆவல்—எனவே நெப்போலியன் மனதிலே, அலை அலையாக எண்ணங்கள், விதவிதமான திட்டங்கள் குமுறி எழுந்தவண்ணம் இருந்தன.

இங்கிலாந்தைத் தாக்கவேண்டும் என்ற திட்டம் வெற்றி பெறுவதற்கே வெகுபாடு படவேண்டும்; ஆற்றல் அனைத்தையும் செலவிட வேண்டும். இங்கிலாந்திலே என் படை இறங்கினால், சிலமணி நேரம் போதும், அந்நாட்டவரை நையப் புடைத்து வீழ்த்த என்று இறுமாந்து பேசினான் நெப்போலியன்—வீரன், ஐயமில்லை; வெற்றி பெற்றுமிருப்பான், மறுத்திட இயலாதுதான். ஆனால் இங்கிலாந்து நாட்டிலே படைகள் இறங்க வேண்டுமே! இடையே உள்ள கடலில், பிரிட்டிஷ் கப்பற்படை விழிப்புடன் இருக்கிறது. எத்தனையோ களங்களில் வெற்றிபெற்ற பிரான்சு, கடற்போரில் இங்கிலாந்திடம் டிரபால்கர் எனும் போரில் தோற்றுத்தானே இருக்கிறது.

இதனை எண்ணும்போது நெப்போலியனுக்கு எரிச்சல் மேலிட்டது; அச்சம் எழவில்லை.

சரி, இங்கிலாந்தைத் தாக்குவதையே ஒரே குறிக்கோளாகவாவது கொண்டு செயலாற்ற முடிந்ததா என்றால் இல்லை—இடையில் பல இடங்களில் பகை மூள்கிறது.

1807ல் போர்ச்சுகல் மீது படை எடுப்பு.

1808ல் ஸ்பெயினைத் தாக்கிப் பிடிக்கிறது பிரான்சுப் படை; ஜோசப் மன்னனாக்கப்படுகிறான்.

ஸ்பெயின், இங்கிலாந்தின் துணைநாடிப் பெறுகிறது; அங்கு இருந்துகொண்டு, வெலிங்டன் ஆறு ஆண்டுகள் போர் நடத்துகிறான்—வாடர்லூவுக்கு ஒத்திகை நடத்துவதுபோல் 1808 முதல் 1814 வரையில், ஸ்பெயினுக்காக நடைபெற்ற போரில், பிரான்சு மிக அதிக அளவிலே இரத்தம் கொட்டி தோற்றது.

நேச உறவு கொண்டிருந்த அலெக்சாண்டர், கெக்கலி செய்யாதிருப்பாரா? நையப் புடைத்த பிறகுதானே, நெப்போலியன் அவரிடம் நேசக்கரம் நீட்டினான். இப்போது பிரான்சின் புகழ் பாழ்படும்படி ஸ்பெயினிலே தோல்வி ஏற்பட்டது கண்டதால், இனி நெப்போலியனுக்கு இறங்குமுகம் கண்டுவிட்டது என்று எண்ணி, எதிர்ப்புக் காட்டலானான், அதிபன். நேச உறவு கெடாதபடி பார்த்துக் கொள்ள, ரஷிய அதிபருடன் நெப்போலியன் எர்பட் எனும் இடத்தில் பேசுகிறான்—பாவனைதான் அதிகம், உண்மைப் பாசம் எழவில்லை.

1809ல், வாக்ராம் எனும் களத்தில், மறுபடியும் ஆஸ்ட்ரியாவை முறியடித்து நெப்போலியன் தன் புகழை நிலைநாட்டுகிறான்.

ஒரு இடத்திலே தோல்வி ஏற்பட்டால், இழிவு உண்டாகிறது. உடனே அதனைத் துடைத்தாக வேண்டும். இல்லையென்றால், உள் நாட்டிலே மதிப்பு மங்கிவிடும்,

எனவே வேறு ஓர் களம் ஏற்படுத்திக் கொண்டாகிலும் வெற்றி பெற்றுக் காட்டித் தீரவேண்டி ஏற்படுகிறது.

நெப்போலியன் சில நிலைமைகளை உண்டாக்கி விட்டான் முதலில்; பிறகு அந்த நிலைமைகள் அவனை ஆட்டிப் படைக்கலாயின.

''பரம்பரை மன்னர்கள் பலமுறை தோற்கலாம்; பாதகமில்லை! மக்கள் மன்னனிடம் கொண்டுள்ள மதிப்பைக் குறைத்துக் கொள்ள மாட்டார்கள்; அந்த மதிப்பு பக்தியாகி விட்டிருக்கிறது; என் நிலை அப்படிப்பட்டது அல்ல; 'ராஜ பக்தி' எனும் அடிப்படைமீது நான் நின்று கொண்டில்லை; ஆற்றலால் அரசாளும் நிலை பெற்றேன்; அந்த ஆற்றல் குறைகிறது, குலைகிறது என்றால், களத்திலே தோல்விகள் கண்டால், போற்றுவோர் தூற்றத் தொடங்குவர்; வாழ்த்தி நிற்போர் வசை பாடுவர்; அடங்கிக் கிடப்போர் ஆர்ப்பரிப்பர்; ஆபத்து ஏற்படும் என் பதவிக்கு.'' — என்று நெப்போலியன் ஒருமுறை கூறினான். முற்றிலும் உண்மைதான்! ஆனால், பல இலட்சக்கணக்கானவர்களைக் கொன்று குவித்து, இரத்தம் பொங்கச்செய்து வெற்றிகளைப் பெற்று ஒரு தனிமனிதனின் நிலையை, பதவியைக் காப்பாற்றிக் கொள்வதால், அவனைத் தாங்கி நிற்கும் நாட்டுக்கும், பின்பற்றும் மக்களுக்கும் என்ன பலன் கிடைக்கிறது. வெற்றி! வெற்றி! மகத்தான வெற்றி! என்ற முழக்கம்தானே அவர்கள் கண்ட பலன். உரிமைகள் அழிகின்றன; வாழ்வு ஆபத்து சூழ்ந்ததாகிறது. பொருள் பாழாகிறது; மக்களிடம் மிருககுணம் மேலோங்கி விடுகிறது; தேவைதானா?

களங்களிலே இந்த நிலை எனில் பிரான்சு நாட்டு அரசியலிலேயும் பல புதிய சிக்கல்கள்!

நெப்போலியனைக் கொல்லச் சதிகள்! எதிர்க்க ஏற்பாடுகள்! விரட்ட திட்டங்கள், அவ்வப்போது எழுகின்றன. திறமைமிக்க போலீசுப் படையும் உளவாளரும் இருப்பதாலும், அவர்களைவிடத் திறமையாக நெப்போலியன் எந்தக் காரியத்தையும் கவனித்துக் கொள்வதாலும், சதிகாரர் வெற்றி பெறவில்லை.

நண்பர்கள் கூறுகிறார்கள், 'வாரிசு இல்லாதவராகத் தாங்கள் இருப்பதால்தான், சதிகாரர்கள் தங்களைத் தீர்த்து கட்டிவிட்டால் பழைய மன்னர் ஆட்சியை ஏற்படுத்தலாம் என்று எண்ணுகிறார்கள். ஆகையால்...'

''என்ன செய்ய வேண்டும்!''

''நாட்டுக்கு ஒரு இளவரசன் வேண்டும்; மகன் வேண்டும்.''

''ஜோசபைன் தாயாக வேண்டும்.''

''ஆகக்காணோமே, அறிகுறியும் இல்லையே...''

''அவள் அழகும் என் ஆற்றலும் கலந்து ஒரு குழந்தை பிறந்தால்...''

''நாடே கொண்டாடும். ஆனால், எதிர்பார்த்து ஏமாற்றம்தான் காண்கிறோம். ஆகவே...''

''ஆகவே...?''

''தாங்கள் வேறோர் திருமணம் செய்து கொள்ள வேண்டும்...''

''ஜோசபைன் இருக்கும்போதா! என் காதலரசி இருக்கும்போதா?''

''இன்றுபோல் என்றும் ஜோசபைன், காதல் அரசியாக இருக்கட்டும்! பட்டத்தரசியாக வேறோர் பாவையைத் தேடித் திருமணம் முடித்துக் கொள்ளவேண்டும். அவர்கள் நாட்டுக்கு ஒரு இளவரசனைப் பெற்றளித்தால், பேராபத்து யாவும் மடிந்தொழியும்.''

துவக்கத்தில் துளியும் இணங்கவில்லை நெப்போலியன். இறுதியில் பெண் தேடும் படலம் ஆரம்பமாயிற்று. ஜோசபைன் விவாக விடுதலைக்கு இணங்கவேண்டி நேரிட்டது, கண்ணீர் பொழிந்து, காலடி வீழ்ந்து பார்த்துப் பலன் ஏற்படாததால்.

1810ல், ஆஸ்ட்ரிய நாட்டு அரசிளங்குமரி, மேரி லூயியை மணம் செய்து கொள்கிறான்—அரச வம்சத்துடன் கலப்பு!!

அடுத்த ஆண்டு மகன் பிறக்கிறான்! குழந்தை ரோமாபுரி அரசன் என்ற பட்டம் பெற்றுவிடுகிறது; பரம்பரை ஏற்பட்டு விட்டது!!

கணக்குப் பாடத்திலே வல்லவன் நெப்போலியன்—ஆனால் ரஷிய நாட்டைப் பற்றிச் சரியான கணக்குப்போட மட்டும் தெரியாமலே போய்விட்டது.

பகை கக்கியபடி இருந்த ஆஸ்ட்ரியா, சம்பந்தி நாடாகி விட்டது. புதிய பலம் என்று தப்புக் கணக்குப் போட்டான்

நெப்போலியன். ரஷியாவுடன் போர் தொடுக்க முனைந் தான்—மிகத் தவறான திட்டம்—மிகத் திறமை கெட்ட முறையிலே திட்டத்தை நடத்த முற்பட்டான்.

ரஷியா, விரிந்து பரந்து கிடக்கும் பூபாகம்—அந்த ஒரு இடத்திலே எல்லாவிதமான தட்ப வெட்ப நிலைகளும் உள்ளன—அதுபோலவே, எல்லாவிதமான போர்த்திறன் படைத்தவர்களும் இருக்கின்றனர். தாக்கிடும் போர் நடத்து வோரும், மறைந்திருந்து தாக்குவோரும் உளர். இதுமட்டு மல்லாமல், ஓரிரு களங்களிலே வெற்றி பெற்று விடுவதால் மட்டும் ரஷியாவைச் சரண் அடையச் செய்ய முடியாது—களம் மாறிக்கொண்டே போகும்; மேலே மேலே, ரஷியா வுக்கு உள்ளே உள்ளே பாயும் படை புக வேண்டும்.

எந்த இடத்திலே நின்று போரிட்டால் நல்லது என்பது ரஷியாவில் உள்ளவர்களுக்குத்தான் தெரியும்—படை எடுப்பு நடத்தும் பிரான்சுக்காரருக்குத் தெரியாது.

எல்லாவற்றையும்விட மேலாக மற்றொன்று இருந்தது—ரஷிய அதிபர் அலெக்சாண்டர் போரிட மறுக்கிறார்!—

'சரண் அடையவும் முடியாது. போரிடவும் போவ தில்லை. பாய்ந்து பாய்ந்து ஓயட்டும்-மாயட்டும் பிரான்சுப் படை' என்கிறார் அலெக்சாண்டர். 'உள்ளே பாய்வார்களே' என்கிறார்கள் தளபதிகள்; 'பாயட்டும், அவர்கள் நுழையும் இடத்தைவிட்டு நாம் வெளியேறிவிடுவோம். வேறு இடம் சென்று முகாமிடுவோம்' என்கிறார் ரஷிய அதிபர். 'அங்கும்

தானே வரும் எதிரிப் படை?' என்கிறார்கள். 'வரட்டும்! நாம் அவர்கள் வருகிறபோது அங்கு இருக்கமாட்டோம். முகாம் மாறும்' என்கிறார் அலெக்சாண்டர். 'எதுவரையில்?' என்று கேட்கிறார்கள் தளபதிகள். 'நாம் பின்வாங்கிச்செல்ல இடம் இருக்கும் வரையில்' என்கிறார். 'இடையில் சிக்கிய இடங்களை எல்லாம் எதிரிகள் அழிப்பார்களே' என்று கலக்கத்துடன்கேட்கிறார்கள்.'அழிக்கும் உரிமை அவர்களுக்கு இல்லை. நாமே அழிப்போம். நாசமாக்குவோம். அவர்கள் நுழையும் இடத்தை, நாம் வெளி ஏறி வேறிடம் செல்லு முன்பு' என்று போர்முறை கூறுகிறார் அலெக்சாண்டர். திகைக்கிறார்கள் தளபதிகள்; விளக்கமளிக்கிறார் அதிபர்.

''நமது நாட்டிலே நுழையும் எதிரிப் படை, பொன்னும் பொருளும் கிடைக்கும். உணவும் உறையுளும் கிடைக்கும். போரிட்ட அலுப்புத் தீரும்; புதிய வலிவு பெற்றுக் கொண்டு மேலும் தாக்குதலை நடத்தலாம் என்று எண்ணுவார்கள். அதுபோலத்தான் போரிலே நடைபெற்று வருகிறது. நாம் புதுமை முறை மேற்கொள்வோம். தாக்கத் துடிப்பார்கள்; சிக்கமாட்டோம்! உள்ளே நுழைவார்கள்; வெற்றிடமாகி விட்டிருக்கும். செல்வத் திருநகர்கள், பாதைகள் இடிபாடு களாகிவிடும்; பாலங்கள் தகர்க்கப்பட்டிருக்கும்! வீடுகள் தங்குமிடமாக இரா! களஞ்சியம் கருகிக் கிடக்கும்! கடைகள் சாம்பலாகிக் கிடக்கும். ஆறு குளம் குட்டைகள் சேறும் சகதியுமாகிவிடும்; வயல்கள் வெடித்துக் கிடக்கும்; ஆடு மாடு கோழி பன்றி மருந்துக்கும் கிடைக்காது. புல் பூண்டுகூடக் கிடைக்காது அவர்களுக்கு. அந்த விதத்தில் எல்லாவற்றையும் பொசுக்கி விடுவோம். எதிரியிடம் எதுவும் சிக்கலாகாது!''

கடைசியில், 'எதிரிகளைத் தாக்குவதுதான் யார்?' என்று கேட்கிறார்கள் தளபதிகள். ரஷிய அதிபர் கூறுகிறார், ''நாம் போரிடத் தேவையில்லை! கடுங்குளிரும் பனி மழையும் அவர்களைத் தாக்கி அழிக்கும். நமது பலமிக்க படை அவை!'' என்று கூறுகிறார்.

ரஷிய அதிபர் கூறியது போலத்தான் நடைபெறுகிறது.

1812–ம் ஆண்டில் துவக்கப்பட்ட ரஷியப்படை எடுப்பு, நெப்போலியனைத் திகைக்கச் செய்துவிட்டது. தேடித் தேடிப் பார்க்கிறான். ரஷியப் படையைக் காணோம். ஊரூராகப் பாய்கிறது பிரான்சுப் படை; போரிடத் துடிக்கிறது; ரஷியப்படை இல்லை!

'வில்னா பிடிபட்டது; விட்பெஸ்க் பிடிபட்டது; ஸ்மலான்ஸ்க் பிடிபட்டது!' என்று பாரிசுக்குச் செய்திகள் செல்கின்றன. ஆனால் ஒரு இடத்திலாவது எதிரியைத் தாக்கி அல்ல! எதிரி இருப்பதில்லை; எதுவும் இருப்பதில்லை.

இடையிடையே, ரஷிய காசாக் குதிரை வீரர்கள், பிரான்சுப் படையை பக்கவாட்டத்தில் தாக்கிவிட்டு, முகாம்களை அழித்துவிட்டு, பாய்ந்தோடி விடுவார்கள்.

அலையும் அலையும் மோதுதல்போல், மலையும் மலையும் தாக்குதல் நடத்திக் கொள்வதுபோல, இருபெரும் படைகள் ஒன்றை ஒன்று எதிர்த்து நின்று போரிடுவதுதான் அதுவரை நெப்போலியன் கண்ட போர் முறை. இது விந்தையாக இருக்கிறது!

பிரான்சு நாட்டை விட்டு நெடுந்தொலைவு வந்தாகி விட்டது; இனி அங்கிருந்து படைக்குத்தேவைப்படும்பொருள் ஏதும் பெற முடியாது. எல்லாம் ரஷியாவிலேதான் தேடிப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் இங்குதான் ஏதும் இல்லையே! எல்லாம் கருகிக் கிடக்கின்றன. சாம்பலாகிக் கிடக்கின்றன. உணவுத் தட்டுப்பாடு; நோய் வேறு பரவுகிறது; படை படாதபாடு படுகிறது.

குடுசாவ் எனும் ரஷியத் தளபதி, ஒற்றைக்கண்ணன்; பொரோடினோ எனும் இடத்தில் படையுடன் இருந்தான்—போரிட்டாக வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. பெருத்த மகிழ்ச்சி, பிரான்சுப் படையினருக்கு,

''வந்தது வீரர்களே! நீங்கள் மிக ஆவலுடன் எதிர்பார்த் திருந்த வாய்ப்பு. வல்லமையைக் காட்டும் வாய்ப்பு. உமது வீரத்தைப் பொறுத்திருக்கிறது வெற்றி. வெற்றி பெற்றால், எல்லாம் நமக்கு—மாரி காலத் தங்குமிடம்—வாழ்க்கை வசதிகள்—விருதுடன் வீடு திரும்பும் வழிவகை...''

வழக்கப்படி உற்சாகமூட்டுகிறான் நெப்போலியன். பயங்கரமான போர் மூண்டுவிடுகிறது. இருதரப்பிலும் பலத்த சேதம். நிலைமை, மணிக்கு மணி மாறியபடி இருக்கிறது. பிணத்தின் மீது நடக்க வேண்டி இருக்கிறது—ரஷியப்படை விரட்டப்படுகிறது!!

மாஸ்கோ! அதோ பொன்மயமாக விளங்கும் கட்டடம் நிறைந்த ரஷிய தலைநகரம்.

ஒரு முகடுமீதேறி, பிரான்சுப் படை, தொலைவிலே தெரியும், மாஸ்கோ நகரைக் கண்டு களிக்கிறது.

உள்ளே செல்கிறது படை! போரிடுவாரும் இல்லை; சரணடைந்தோம் என்று கூறுவாரும் இல்லை. ஆள் அரவமே இல்லை. மாஸ்கோ காலிசெய்யப்பட்டுவிட்டிருக்கிறது. கடுங்கோபம் பிரான்சுப் படையினருக்கு. ஆனால் யார் மீது காட்டுவது? கட்டடங்கள் மீது; அங்கு கிடந்த விலையுயர்ந்த பொருட்களின் மீது! போரிட வந்த படை கொள்ளை அடிக்கிறது—வேறு வேலை? மாளிகைகளிலும் மாதா கோயில்களிலும் பொன்னும் பொருளும் விலையுயர்ந்த கலைக் கருவூலங்களும் கிடைக்கின்றன. பத்திரப்படுத்திக் கொள்கிறார்கள், பாரிசுக்கு எடுத்துச் செல்ல! பளிங்காலான கோப்பைகள், பட்டாலான அங்கிகள், வைரம் இழைத்த சிலுவைகள், வண்ணம் நிறைந்த கிண்ணங்கள், தங்க நகைகள், கண்கவரும் வனப்புள்ள ஓவியங்கள்!!

காலமெல்லாம் காட்டிக் காட்டி மகிழலாம்—தலைமுறை தலைமுறையாக இல்லத்தில் இருக்கும்,பெருமை தரும் பொருளாக என்று எண்ணி எடுத்துவைத்துக் கொள்கிறார்கள். எத்தனை விருப்பத்துடன் ரஷியர்கள் இந்தப் பொருட்களைச் சேர்த்து வைத்திருந்தனரோ, பாவம். அவ்வளவு பிரான்சுக்கு! மாஸ்கோவுக்குப் பொலிவளித்த பொருள் அத்தனையும் பாரிசுக்கு—என்று நினைக்கின்றனர். முன்பு எடுத்துச் செல்லவில்லையா,இத்தாலியிலிருந்து; அதுபோலத்தான் என்ற எண்ணம். ஆனால், இத்தாலியா, ரஷியா!! ஒரு பொருளும் போய்ச் சேரவில்லை பாரிசுக்கு! பொருளைக்

களவாடிய வீரர்களிலேயே மிகப் பெரும்பாலோர் வீடு திரும்பவில்லையே, பொருள் எப்படிப் பாரிஸ் போகும்? பொருள் மாஸ்கோவுக்குச் சொந்தம். அதனைச் சூறையாடிய வன் உடல் மாஸ்கோ மண்ணுக்கு உரம் என்றாகிவிட்டது.

எந்த இடத்தை இழக்கச் சம்மதித்தாலும் மாஸ்கோவை இழக்க மனம் வராதே! எப்படியும் படையுடன் வருவார் ரஷிய அதிபர் என்றெண்ணினர்—ரஷியப் படையைக் காணவில்லை. ஆனால் அவர்கள் மூட்டிவிட்டுச் சென்ற தீ மாஸ்கோவில் பரவிவிட்டது—நகரம் நெருப்பு மயம்—நாசம் நர்த்தனமாடுகிறது! ரஷியப் படையுடன் போரிடலாம். வாய்ப்புக் கிடைத்தால்! நெருப்புடன் எப்படிப் போரிடுவது! கட்டடங்கள் சரிகின்றன. பொருள்கள் சாம்பலாகின்றன. மாஸ்கோ அழிகிறது. வளையை அழித்தால் அதிலே பதுங்கி இருக்கும் பாம்பு என்ன செய்ய முடியும்—நெளியும் சில நேரம்—பிறகு? வேறு இடம் தேடும். அதுபோலத்தான், பொறுத்திருந்து பார்த்தாகிவிட்டது. இனி ஊர்ப்போய்ச் சேரலாம் என்று பிரான்சுப் படை பின்வாங்கத் தொடங் கிற்று. ரஷியப்படை பக்கவாட்டத்திலே தாக்கும் முறையை மேற்கொண்டது; பாதைகளும் பாலங்களும் பாழாக்கப்பட்ட தால், படை நடைபோட இயலவில்லை. இந்தச் சமயம் பார்த்துத்தான் புதிய பகைவன், கிளம்பினான்—மாரி! பனி பெய்யத்தொடங்கிற்று. கடுங்குளிர்! ஊர்களே உறைந்து போகின்றன! நடக்கக் கால் வரவில்லை! நின்றால் பனி கொல் லுகிறது! உண்ண உணவில்லை; போகும் வழி அடைபட்டு விடுகிறது; கண் பூத்துப் போகிறது; எப்பக்கம் நோக்கினா

லும் வெள்ளை வெளேரென்ற பனிக்கட்டிகள்!! பிரான்சுப் படையினரில் பல்லாயிரவர் செத்து கீழே சுருண்டு சுருண்டு விழுந்தனர். எவ்வளவு பயங்கரச் சண்டையென்றாலும், இத்துணை கோரமான பிணக்குவியல்களைக் காணமுடியாது. அழைத்துச் சென்ற வீரர்களில் மிகப்பெரும்பகுதியை இழந்து, துக்கம் துளைத்திட, வெட்கம் வேலாகிக் குத்த, நெப்போலி யன் பாரிசு திரும்பினான். பயத்தால் வெளுத்த முகம், பனி யால் ஏற்பட்ட வெடிப்புகள், நடமாடும் வேதனையானான்! நாடு பல பிடித்து, விருதுகளுடன் வீடு திரும்பி விழா காண் பவன். ரஷியர்கள் பழி தீர்த்துக் கொண்டனர். எந்தப் பகைவனாலும் சாதிக்க முடியாததை, ரஷியப் பனிமழை சாதித்துவிட்டது. விரண்டோடாத நெப்போலியன் படை சுருண்டு வீழ்ந்தது. நெப்போலியனுக்கு இனிப் புகழ் தரும் எதிர்காலம் இல்லை; அது உறைபனியிலே புதையுண்டுவிட் டது!

மின்ஸ்க், ஸ்மாலன்ஸ்க், மாஸ்கோ ஆகிய நகர்களிலே, நாற்றமடித்துக் கொண்டிருந்த பிணக் குவியலைக் கொளுத் திக் கொண்டிருந்தார்கள்—142,000 பிணங்கள்!!

இந்த அழிவைத் தொடர்ந்து, ரஷியா, பிரஷ்யா, ஆஸ்ட்ரியா, இங்கிலாந்து, ஸ்வீடன், இத்தாலி எனும் நாடு கள் கூட்டுக் கழகம் அமைத்துக் கொண்டு, லிப்சிக் எனும் களத்தில் நெப்போலியன் படைகளை முறியடித்தன. இனி நேச நாட்டுப் படைகள், பாரிஸ் நோக்கிச் செல்ல வேண்டி யதுதான்.

இழந்த கீர்த்தியை திரும்பப்பெற ஏதேதோ முயற்சிகள்—ஆட்சிமன்ற உறுப்பினர்களிடம் மன்றாடுகிறான்—புள்ளி விவரம் காட்டுகிறான்—புதிய போர்த் திட்டம் கூறுகிறான்—ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள். படமுடியாதினித் துயரம்; பட்டதெல்லாம் போதும் என்று கூறிவிடுகிறார்கள்—பட்டம் துறந்துவிடத்தான் வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது.

டோவ்லான், ரிவோலி ஆஸ்ட்டர்லிட்ஸ், ஜீனா — எத்தனை எத்தனை வியப்பூட்டும் வெற்றிகள்! எத்தனை நாடுகள் அடிபணிந்தன! எத்தனை மன்னர்கள் மண்டியிட்டனர்! அப்படிப்பட்ட நெப்போலியனுக்கு என்ன நிலை நேரிட்டது! 1814-ல் முடி பறிபோகிறது; நாடு நெப்போலியனுடைய பிடியில் இருக்க மறுக்கிறது. பழைய மன்னர் வம்சத்துக்கு அரசாள அழைப்பு செல்கிறது—எல்பா தீவுக்கு அழைத்துச் செல்லப்படுகிறான், எதிர்ப்புக்களைக் கண்டதுண்டமாக்கிய மாவீரன்.

எல்பா தீவு! ஈட்டியாலும் வேலாலும் குத்தி அடக்கி, வேங்கையைக் கூண்டிலிட்டு வைப்பதுபோல நெப்போலியனை எல்பா தீவிலே சிறை வைத்தனர். ஐரோப்பாவில் பல அரண்மனைகளிலே உலவியவன், எல்பா தீவிலே அடைபட்டுக் கிடக்கிறான்.

எத்தனை ஆண்டுகளாகப் போரிடுவது! எவ்வளவு இரத்தம் கொட்டுவது! எங்கெங்கிருந்தெல்லாம் பகை மூண்டுவிடுவது! போதுமப்பா, போதும்! புகழ் நாடி அழிவினைத் தேடிக் கொண்டது போதும்! இனியேனும், புண்களுக்கு

மருந்திட்டு, புகையைப் போக்கி, வாழ்வைக் கவனிக்கலாம்! இத்தனை ஆண்டுகளாக இரத்தம் பொங்கியது போதும்; இனியாவது நிம்மதி பெறலாம் என்று எண்ணினர், பிரான்சு மக்கள். விடவில்லை நெப்போலியன்! கூண்டுக் கம்பிகளைப் பெயர்த்துக் கொண்டு, புறப்பட்டு விட்டது புலி. எல்பாவிலிருந்து தப்பித்துக் கொண்டு கிளம்பிவிட்டான் நெப்போலியன்.

நாசம் கண்டு நடுநடுங்கி இனித் தாங்கிக் கொள்ள முடியாது என்று திகிலடைந்து, நெப்போலியனை விரட்டினார்கள். ஆனால் இலட்சக்கணக்கான பிரான்சுக்காரர் நெஞ்சிலே அவனைப் பற்றிய நினைவு இருந்தபடி இருந்தது. அவன் வீரன்! வீரன்தான்! என்று உள்ளம் உருகிப் பாராட்டப் பலப்பலர் இருந்தனர். அவர்களெல்லாம், திரண்டெழுந்து நின்றனர், நெப்போலியனுக்கு ஆதரவு காட்ட.

மன்னன் ஓடோடிப்போய் ஒளிந்து கொண்டான், பழையபடி; பாரிசில் நெப்போலியன் படை சேர்த்தான்; பகைவர்களைச் சந்தித்தான். அதுதான் கடைசி சந்திப்பாகி விட்டது.

நேச நாடுகளின் படைகளின் தலைமை, வெலிங்டனிடம்.

போர் முறையிலும், திறத்திலும் வெலிங்டன் யாருக்கும் இளைத்தவனல்ல; களம் நின்று காரியமாற்றவும் சளைக்கவில்லை.

நெப்போலியன் எப்போதும்போல் வீரம் காட்டினான். ஆனால் ஏற்கனவே ஏற்பட்ட வடுக்கள். செயலிலே ஒரு தரக்குறைவைத் தன்னாலே ஏற்படுத்திவிட்டது. தயக்கம், குழப்பம், திகைப்பு மேலிட்டது, செயலாற்றுவதில். கணக்குத் தவறுவதில்லை, களம் பற்றிய திட்டமிடும்போது. வாடர்லூ களத்திலே, கணக்கிடுவதிலும் தவறு நேரிட்டு விட்டது. தன் படையின் ஒரு பலமான பிரிவு உடன இல்லா திருந்த சமயத்தில், எதிர்ப்படைகள் யாவும் ஓரணியாகி விட்ட நிலையில், போரைத் துவக்கினான்—தாக்குதல் திகில் கொள்ளத்தக்க வகையில். ரஷியாவில் பேரிழப்பு, லிப்சிக்கில் பெருந்தோல்வி! இப்போது மட்டும் என்ன என்று எக்களிப் புடன் நேசநாட்டுப் படைகள் போரிட்டன. இறுதி முயற்சி என்ற நினைப்புடன் நெப்போலியன். வாடர்லூவிலே வெலிங் டன் வாகை சூடினான்—நெப்போலியன் நொந்த நிலையில், வெந்த உள்ளத்துடன் களம்விட்டுச் சென்றான், மீண்டும் முடிதுறந்திட! என் கதை முடிந்துவிட்டது; என் முயற்சி தோற்றுவிட்டது! என்று கூறவேண்டியதாகிவிட்டது. நெப் போலியனை, நேச நாட்டினர், செயின்ட் எலினா தீவிலே சிறை வைத்தனர்.

இருபது ஆண்டுகள் இரத்தம் பொங்கிற்று இணையில்லா இந்த வீரன் நடாத்திய போர்களினால்.

பலன் என்ன கண்டான்? தாயும் இல்லை. மனைவி மக னும் இல்லை; தத்தளித்தான் எலினா தீவில்!

நாடு கண்ட பலனாவது உண்டா? இல்லை! பூத்த புரட்சி பொசுங்கிக் கிடந்தது. போரிட்டதாலே நாட்டுவளம் பொருளியல் பாழானது.

எல்லைகளை அழித்தான், போரிட்டுப் போரிட்டு—ஆனால் இயற்கையான எல்லைக்கோடு மீண்டும் அமைந்து விட்டது.

மண்டிலங்களை அடிமைகொண்டான்—ஆனால் அவை மண்டியிட்டனவேயன்றி மடிந்துபோய்விடவில்லை; சமயம் கிடைத்ததும், சரிந்தது சீரமைப்பு பெற்றது. சாய்ந்தது, நிமிர்ந்தது.

நாட்டுப்பற்று, இனப்பற்று, தேசீய உணர்ச்சி—இவைகளை அழித்தொழிக்க, படைகளால் இயலாது. பயங்கரச் சண்டைகளால் இயலாது! பார் மெச்சும் போர்த்திறன் கொண்ட நெப்போலியன் போன்றவர்கள், இருபதாண்டுகள் இரத்தம் பொங்கிடும் போர் நடாத்தினாலும், இயற்கை நீதியை அழித்திட முடியாது என்பது விளக்கப்படுகிறது.

நாடுகளுக்குள்ளே நேசம் இருக்கலாம்—இருக்கவேண்டும்—ஆனால் ஒன்றுக்கு மற்றொன்று அடிமை என்ற நிலை இருத்தல் ஆகாது. அந்த நிலையை எவர் புகுத்தினாலும், வெற்றி கிட்டாது என்பதனை, இருபது ஆண்டுகள் இரத்தம் பொங்கிட நெப்போலியன் நடாத்திய போர் காட்டுகிறது.

அளவிலே, வளத்திலே, வரலாற்றுச் சிறப்பிலே, வெவ்வேறு அளவுள்ள அரசுகள் பல இருக்கலாம்—இருக்கின்றன—அவைகளை, வலிவுமிச்க ஒரு நாடோ வல்லமை மிக்க ஒரு நெப்போலியனோ, தாக்கித் தழுவி, ஒரு பேரரசு காண விரும்பினால், அது சிலகாலம் வெற்றியாகத் தெரியுமே தவிர, இறுதியில் இயற்கை எல்லையும் தேசியமுமே வெற்றி பெறும் என்ற பாடம் கிடைத்திருக்கிறது.

கொள்வன கொண்டு, கொடுப்பன கொடுத்து, கூட்டுப் பணியாற்றி, மனிதகுல ஏற்றத்துக்குப் பல நாடுகள் பணியாற்ற வேண்டுமேயன்றி, ஓரரசு, பேரரசு, வல்லரசு, என் அரசு என்ற கொள்கை கொண்டு போரிடுவது, இரத்தம் பொங்கிடத்தான் வழிகாட்டுமே அல்லாமல், சுவையும் பயனும் உள்ள பலனைத் தராது. வையகம் இவனைப்போல் ஆற்றல் மிக்கவனைக் கண்டதுமில்லை; அவன் நடத்திய இருபதாண்டுப் போரில் பொங்கிய அளவு இரத்தம் எப்போதும் பொங்கியதுமில்லை. அவனுடைய வீரம் பயனற்றுப் போனதுபோல வேறெதுவும் இல்லை. மாவீரன் நெப்போலியன் நடாத்திக் காட்டிய வாழ்க்கை, மனித குலத்துக்குக் காலம் காட்டும் ஒரு பயங்கர எச்சரிக்கை. நடமாடும் எரிமலையாக இருந்துவந்தான் நெப்போலியன். தீவிலே பிறந்தான், தீவிலே இறந்தான்! இடையிலே திக்கெட்டும் புகழ் முழக்கினான்—ஆனால் அந்த முழக்கம், நாடு பலவற்றிலே இரத்தம் பொங்கவும், எலும்புக் கூடுகள் நிரம்பிடவும்தான் பயன்பட்டது.

வாழ்த்த முடியவில்லை; வசைபாட மனம் இடம் கொடுக்கவில்லை; நீர் துளிர்க்கும் கண்களுடன், அவன் கல்லறைமுன் வியப்புடன் நிற்கத் தோன்றுகிறது.

அவன் கல்லறை புகுந்தான். ஆனால் அவன் கொண்டிருந்த ஓரரசு, பேரரசு, வல்லரசு, என் அரசு எனும் விபரீத எண்ணம் கல்லறைக்கு அனுப்பப்படவில்லை. அனுப்பிவிட வேண்டும் என்று பாடம் புகட்டத்தான், அந்த மாவீரனின் கல்லறை காட்சிப் பொருளாகி நிற்கிறது.

★

---

இரும்பு முள்வேலி — 1966 காஞ்சி ஆண்டு மலர்.

இதயம் இரும்பானால் — 1962 திராவிடநாடு பொங்கல் மலர்.

இரத்தம் பொங்கிய இருபது ஆண்டுகள் — 1963 திராவிடநாடு பொங்கல் மலர்.

# இரு பரம்பரைகள்
*(சிறுகதைகள்)*

**பேரறிஞர் டாக்டர் சி.என். அண்ணாதுரை**

*சமூகத்தில் இன்றளவும் தீர்க்கப்பட முடியாமல் இருக்கின்ற பல்வேறு பிரச்னைகளை அடையாளம் காட்டுவது அல்லது அவைகளை நீக்குவதற்கான பரிகாரம் காண்பது என்பது எல்லோராலும் முடியாத ஒன்று. அதுவும், 'சிறுகதை'யின் வாயிலாகத் தெரியப்படுத்துவது அல்லது அதைப் படிப்போரைத் தெளிய வைப்பதென்பது அவ்வளவு சுலபமான விஷயமல்ல; மிகப் பெரிய ஒரு கலையாகும்.*

*அந்தக் கலையில் புதுவழி கண்ட பெருமை பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு நிரம்ப உண்டு. 'சட்'டென்று கிளம்பி, 'பொட்'டென்று தளரும் இக்கால வெறியுணர்ச்சிக் கதைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட முத்தான—முகம் பார்க்கும் கண்ணாடிபோல் பயன்படும் சத்தான கதைகளின் தொகுப்பு நூல் இது.*

**விலை ரு. 5.90**

**பூம்புகார் வெளியீடு**

# செவ்வாழை

*(சிறுகதைகள்)*

**பேரறிஞர் டாக்டர் சி.என். அண்ணாதுரை**

*மனிதன் மறைவான். ஆனால் மனிதருள் மாணிக்கமாகத் திகழும் மேதைகள் படைத்த இலக்கியம் என்றுமே மறைவதில்லை.*

*அது சாகாவரம் பெற்றது. வாழையடி வாழை யென வரும் திருக்கூட்டம் செய்யும் தவறைத் திருத்தும் பணியைத் தொடர்ந்து செய்துகொண் டிருக்கும் சக்தி அதற்குண்டு.*

*அமரர் அண்ணாவின் பொற்காலக் கதை இலக்கியமும் அத்தகையதே.*

*'செவ்வாழை' கதையோடு கைகோர்த்து வரும் ஒவ்வொரு கதையும் நாட்டுக்குத் திறவு கோல் போன்றது.*

*எனவே—*

*சமூகத்தில் நெறியோடு வாழக் கற்றுக் கொடுக் கும் அண்ணாவின் சிறுகதையாம் நறுங்கனியை நீங்களும் சுவையுங்கள்; மற்றவர்களையும் சுவைக் கச் செய்யுங்கள்.*

**விலை ரூ. 5.90**


**பூம்புகார் பிரசுரம் பிரஸ்**

**63, பிராட்வே, சென்னை-1.**